- ✓ ஒரு குழந்தையைப் பற்றி, ஒரு சமுதாயத்தப் பற்றி, ஒரு இனத்தைப் பற்றி, ஒரு நாட்டைப் பற்றி, ஒரு குடும்பத்தைப் பற்றி, ஒரு மன்றத்தைப் பற்றி, ஒரு வாலிபக் குழுவைப் பற்றிய ஆய்வே தனியாள் ஆய்வு எனப்படும்.
- ✓ வகைத்தன்மையுடைய ஒருவரை ஆழமாக ஆராய்ந்தறிதலுக்குத் தனியாள் வகை ஆய்வு எனப் பெயர்.
- ✓ இது மருத்துவ முறை, தனியலகு ஆய்வு முறை, தனியாள் வரலாறு முறை, நீண்ட திரள் பதிவேட்டு ஆய்வுமுறை என்றும் அழைக்கப்படுகிறது.
- ✓ மனநோயாளிகளின் ஆளுமைப் பிரச்சினைகளை தனியாள்வகை ஆய்வின் மூலம் தீர்த்தவர்--**ஃப்ராய்ட்**

SURYA TRB COACHING
www.PadasalaiNet

Contact: 81246 02428, 94435 64713, 75983 02428

- ✓ சிறு குழந்தைகளின் அறிவுப் புல வளர்ச்சியை தனியாள்வகை ஆய்வின் மூலம் தீர்த்தவர்-- பியாஜே

தனியாள் ஆய்வு முறையின் படிநிலைகள்:

- பிரச்சினைக்குரிய அலகைத் தெரிவு செய்தல்
- தேர்ந்தெடுத்த அலகு குறித்த தகவல்களைப் பல்வேறு வழிகளிலும் திரட்டுதல்
- பிரச்சினைக்கான காரணங்களை ஊகித்தல்
- பிரச்சினையை சீர்செய்யும் முறைகளை வகுத்தல்
- தொடர்பணி

தனியாள் ஆய்வு முறையில் கவனிக்க வேண்டியவை:

1.செய்திக்குறிப்புகள் முழுமையாக இருக்க வேண்டும்.
2.செய்திக் குறிப்புகள் நியாயமாக இருக்க வேண்டும்.
3.செய்திக் குறிப்புகளை இரகசியமாக வைத்திருக்க வேண்டும்.

8). பேட்டி முறை (நேர்முகம்) (Interview Method)

- ✓ வாயால் கேட்கப்படும் வினாத்தொகுப்பு
- ✓ கேள்வி கேட்பவர்--நேர்முகம் காண்பவர்
- ✓ பதில் அளிப்பவர்--நேர்முகம் காணப்படுபவர்

பேட்டியின் வகைகள்:

வ.எண்	திட்டமிட்ட பேட்டி	திட்டமிடாத பேட்டி
1	வரையறுத்த நேர்முகம்	வரையறையிலா நேர்முகம்
2	மூடிய கேள்வியமைப்புகளைக் கொண்டது.	திறந்த கேள்வியமைப்புகளைக் கொண்டது.
3	(எ.கா):- 1). உனக்குக் கணக்குப் பாடம் பிடிக்குமா? ஆம்/இல்லை 2). உனக்குப் பிடிக்காத பாடம் எது? அ). கணக்கு ஆ). ஆங்கிலம் இ).அறிவியல் ஈ).தமிழ்	(எ.கா):- 1). உனக்குப் பிடிக்காத பாடம் எது?ஏன்? 2). நீ ஓய்வு நேரத்தில் என்ன செய்ய விரும்புவாய்?

9). வினாவரிசை முறை: (Questionnaire)

- ✓ வினா வரிசை முறையை முதன்முதலில் உளவியல் ஆராய்ச்சிக்குப் பயன்படுத்தியவர்-- ***சர்.ப்ரான்சிஸ் கால்டன்***
- ✓ வாக்கெடுப்பு ஒரு வகையான வினா வரிசை முறை.

10). திரள் பதிவேடு முறை (Cummulative Record)

- ✓ ஒரு மாணவரின் கல்வி வரலாற்றைப் பற்றியது.
- ✓ இது அட்டையாகவோ அல்லது உறையாகவோ அல்லது சிறு புத்தக வடிவிலோ இருக்கலாம்.

உளவியலின் பிரிவுகள் (Fields or Branches of Psychology)

அடிப்படை உளவியல் (Pure Psychology)

பொது உளவியல் (General Psychology)
வளர்ச்சி உளவியல் (Developmental Psychology)
குழந்தை உளவியல் (Child Psychology)
நெறிபிறழ் உளவியல் (Abnormal Psychology)
உடற்கூறு உளவியல் (Physiological Psychology)
ஒப்பீட்டு உளவியல் (Comparative Psychology)
சமூக உளவியல் (Social Psychology)
பரிசோதனை உளவியல் (Experimental Psychology)
பாரா உளவியல் (Parapsychology)
புவி உளவியல் (Geopsychology)

Spl.TET-II_2014

பயன்பாட்டு (நடைமுறை) உளவியல் (Applied Psychology)

கல்வி உளவியல் (Educational Psychology)
மருத்துவ உளவியல் (Clinical Psychology)
தொழில் உளவியல் (Industrial Psychology)
விளம்பர உளவியல் (Psychology of Advertising)
குற்றவியல் உளவியல் (Crime Psychology)
மானிட உளவியல் (Humanistic Psychology)
சட்ட உளவியல் (Legal Psychology)
இராணுவ உளவியல் (Military Psychology)
அரசியல் உளவியல் (Political Psychology)

SURYA TRB COACHING
www.Padasalai.Net

Contact: 81246 02428, 94435 64713, 75983 02428

அமைப்பியல் கோட்பாடு (Structuralism)

- ✓ இக்கோட்பாட்டை உருவாக்கியவர்கள் - ***வில்லியம் ஜேம்ஸ், வில்ஹெல்ம் உண்ட்***
- ✓ அமைப்பியல் கோட்பாட்டினர் ஒருவரின் அனுபவங்களை ஆராயப் பயன்படுத்திய முறை - அகநோக்கியறிதல் முறை

நடத்தையியல் (Behaviourism)

- ✓ இக்கோட்பாட்டினை வழங்கியவர் - ***ஜான் பி.வாட்சன் (1930)***
- ✓ நடத்தைக் கோட்பாட்டினர் - "ஒருவர் தான் இருக்கும் சூழ்நிலையில் நிகழும் தூண்டலுக்கு ஏற்ப தன் நடத்தைகளை வெளிப்படுத்துகிறார்"
- ✓ ***பாவ்லோ, ஸ்கின்னர்*** - "ஒருவரின் நடத்தையை அவர் இருக்கும் சூழலைக் கட்டுப்படுத்துவதால் மாற்ற முடியும்"
- ✓ மிதம் மீறிய திரும்பக் கூறும் பயிற்சி கற்றலுக்கு உதவாது என அமைப்பியல் கோட்பாடு கூறுகிறது. **(Spl.TET-II-2015)**
- ✓ நடத்தைகள் என்பவை உற்றுநோக்கி அளவிடப்படக் கூடியவை; பயிற்றுவிக்கக்கூடியவை; மாற்றியமைக்கப்படக்கூடியவை.
- ✓ ஒருவருடைய நடத்தையில் தாக்கத்தை ஏற்படுத்துவதிலும் ஆளுமையை வடிவமைப்பதிலும் சுற்றுச்சூழல் சக்திகளே முழுமையான காரணிகள் என அழுத்தமாக கருதுகின்ற உளவியல் பிரிவு- நடத்தையியல் **(Spl.TET-II-2014)**
- ✓ வாட்சன் எழுதிய புத்தகத்தின் பெயர்-- ***நடத்தையியலாளர்களின் நோக்கில் உளவியல்*** (Psychology as Behaviourist Views it).
- ✓ நடத்தைக் கோட்பாட்டின் படி, அனைத்து மனித மற்றும் விலங்கு நடத்தைகளின் அடிப்படை அலகு 'மறிவினை' (Reflex) அல்லது 'தூண்டல்-துலங்கல் இணைப்பு' (Stimulus -- Response Connection).
- ✓ சிந்தனை விளைவால் பேசுகிறோம் என்று கூறியவர்கள்--அறிவுசார் கோட்பாட்டினர்.
- ✓ சிந்தனை என்பது உள்ளத்தின் செயல் என்பதை மறுத்தவர் - ***வாட்சன்***
- ✓ நாக்கின் அசைவினாலேயே பேசுகிறோம் என்று கூறியவர்கள்- நடத்தைக் கோட்பாட்டினர்.
- ✓ மரபுக் கொள்கையை ஏற்றுக் கொள்ளாதவர்கள் -- நடத்தைக் கோட்பாட்டினர் அல்லது நடத்தைவாதிகள்.
- ✓ சூழ்நிலையே மனிதனை உருவாக்குகிறது என்று கூறியவர்கள் -- நடத்தைக் கோட்பாட்டினர்.
- ✓ சூழ்நிலையே ஒருவரது நடத்தை மாற்றத்திற்கு பெரிதும் காரணம் - ***பர்னார்டு*** (சூழ்நிலைவாதி)
- ✓ மக்டூகலின் இயல்பூக்கக் கொள்கையினை மறுத்தவர்கள் -- நடத்தைக் கோட்பாட்டினர்
- ✓ **J.B.வாட்சன்** -- "எந்தக் குடும்பத்தையும் சேர்ந்த சின்னஞ்சிறு குழந்தைகளை என்னிடம் ஒப்படைத்தாலும், அவர்களில் நீங்கள் குறிப்பிடும் குழந்தையை வக்கீலாகவோ, டாக்டராகவோ, கலைஞனாகவோ, திருடனாகவோ, பிச்சைக்காரனாகவோ என்னால் உருவாக்கிக் காட்டிடமுடியும்."
- ✓ நடத்தைக் கோட்பாட்டிற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் கோட்பாடு - கெஸ்டால்ட் கோட்பாடு (1912)

நடத்தைக் கோட்பாட்டினை ஆதரிப்பவர்கள்:

i. J.B.வாட்சன்	ii. டோல்மன்	iii. ஹல்
iv. ஸ்கின்னர்	v. தார்ண்டைக்	vi. பாவ்லாவ்

முழுமைக் காட்சிக் கோட்பாடு (Gestalt theory)

- ✓ இக்கோட்பாட்டை உருவாக்கியவர் - மாக்ஸ் வெர்திமர் (1912), ஜெர்மனி
- ✓ கெஸ்டால்ட் என்னும் சொல்லுக்குப் பொருள் - வடிவம், தோற்றம்
- ✓ இக்கோட்பாட்டின் மையக் கருத்து - "மனிதர்களும் விலங்குகளும் புற உலகை ஓர் ஒழுங்கு வடிவிலமைந்ததாகவே காணுகின்றனர். தனிப்பட்ட புலனுணர்வுகளாக உலகைக் காண்பதில்லை"
- ✓ எ.கா: திரைப்படம்

மனிதநேயவியல்: (Humanism)

1950-களில் நடத்தையியல் மற்றும் உளப்பகுப்பாய்வியலுக்கு மாற்றாக தோன்றியது-- மனிதநேயவியல் அல்லது மனித நேய உளவியல் (Humanistic Psychology)

மனித நேய உளவியளாலர்கள்:

PG TRB-2004

i. ஆப்ரஹாம் மாஸ்லோ	iv. ரோலோ மே
ii. கார்ல் ரோஜர்ஸ்	v. எரிக் ஃப்ரோம்
iii. அர்தர் ஹோம்ப்	vi. கோர்டான் ஆல்போர்ட்

SURYA TRB COACHING

Contact: 81246 02428, 94435 64713, 75983 02428

தன்னுணர்வு கடந்த உளவியல் (Transpersonal Psychology)

- ✓ இதன் வேறு பெயர் - மனித வெளி உளவியல்
- ✓ ***கென் வில்பர்*** என்பவர் தனது நூலில் 'transpersonal' என்னும் சொல்லை 'personal plus' என வரையறை செய்கிறார்.
- ✓ 'தன்னுணர்வு கடந்த உளவியல்' என்னும் சொல்லை முதன்முதலில் அறிமுகப்படுத்தியவர்கள்-- ***ஆப்ரஹாம் மாஸ்லோ, விக்டர் ஃப்ரான்கில் (Victor Frankl) (1960)***
- ✓ உளவியல் முறைகளையும் கோட்பாடுகளையும் பயன்படுத்தி ஆன்மீக அனுபவங்களை ஆராய முற்படுவதே 'தன்னுணர்வு கடந்த உளவியல்' எனப்படும்.
- ✓ தன்னுணர்வு கடந்த உளவியல் சங்கம் தொடங்கப்பட்ட ஆண்டு--1971
- ✓ இதன் வேர்கள் (அடிப்படைக் கருத்துக்கள்) 1960-க்கு முன்பே வில்லியம் ஜேம்ஸ், கார்ல் யுங் ஆகியோரின் கருத்துகளில் உள்ளன.

உளப்பகுப்பாய்வியல் (Psycho - Analysis)

PG TRB-2004,
PG TRB-2007

- ✓ உளப்பகுப்பாய்வுக் கோட்பாட்டை உருவாக்கியவர் - சிக்மண்ட் ஃப்ராய்டு
- ✓ சிக்மண்ட் ஃப்ராய்ட் -- நரம்பியல் மருத்துவர்
- ✓ சிக்மண்ட் ஃப்ராய்ட் -- "மனித மனம் மூன்று நிலைகளில் இயங்குவதாகவும், மூன்று உள்ளமைப்புகளை கொண்டுள்ளதாகவும் கருதினார்."

மனம் செயல்படும் மூன்று நிலைகள்:

வ. எண்	நனவு நிலை (Conscious level)	துணை நனவு நிலை (அ) இடைமன நிலை (Subconscious level)	நனவிலி நிலை (Unconscious level)
1	மனத்தின் மூன்று பகுதிகளில் மிகச் சிறியது.		மனத்தில் பெரும்பகுதி.
2	உடனே உணர முடியும்	தேவைப்படும் பொழுது நனவு நிலைக்கு உயர்த்தி உணர முடியும்	இவற்றை நேரடியாக உணர முடியாது. மறைமுகமாக உணர முடியும்.

- ✓ நனவிலி நிலையின் இயக்க சக்தி பற்றி பல உண்மைகளை வெளியிட்டுள்ள உளவியலறிஞர் -- ***சிக்மண்ட் ஃப்ராய்ட்***
- ✓ **மனதின் உள் அமைப்புகள்:**

வ.எண்	இட்	ஈகோ	சூப்பர் ஈகோ
1	வேறு பெயர்கள் -- ஆழ்நிலை மனம், விலங்கியல் மனம், தாழ்நிலை மனம், அடிநிலை மனம்	வேறு பெயர் -- தன்னுணர்வு நிலை, நனவுநிலை மனம்	வேறு பெயர் -- மேனிலை மனம்
2	இது சின்னஞ்சிறு குழந்தைகளிடமும் உள்ளது.	இது தொடக்கத்திலேயே தோன்றுவதில்லை.	இது சுமார் 6 வயதில் எழத் தொடங்கும்.
3	இதுவே ஆளுமையின் அடித்தளம். இதிலிருந்து பின்னர் 'ஈகோ' மற்றும் 'சூப்பர் ஈகோ' எழுகின்றன.	ஈகோ என்பது 'இட்'-டின் நடவடிக்கைகளைக் கண்காணிக்கும் ஒரு காவற்காரன். எனவே இது ***'ஆளுமை நிர்வாகி'*** என அழைக்கப்படுகிறது.	இதன் கூறுகள்-- 1). மனசாட்சி 2). வாழ்க்கைக் குறிக்கோள்கள்
4	இட் -- எப்போதும் நனவிலி நிலையிலேயே செயல்படும். ஈகோ உறக்க நிலையில் இருந்தால் இட் துணை நனவுநிலையில் செயல்படும்.	'ஈகோ'-- துடிப்பாக செயல்படும் போது நனவுநிலையிலும், உறக்க நிலையில் இருக்கும் போது துணை நனவு நிலையிலும் செயல்படும்.	'சூப்பர் ஈகோ' -- மூன்று நிலைகளிலும் விரவிக் காணப்பட்டாலும், அதன் செயல்பாடு நனவு நிலையிலேயே பெரும்பாலும் நிகழ்கிறது.

- ✓ இட்-டின் - பிற மனநிலைகளின் இயக்கத்துக்குத் தேவைப்படும் சக்தி -- லிபிடோ
- ✓ மேனிலை மனம் வலுவற்றுப்போய், 'இட்' டின் ஆதிக்கம் தலைதூக்கினால், நெறிபிறழ் நடத்தை தோன்றுகிறது.

SURYA TRB COACHING
www.Padasalai.Net

Contact: 81246 02428, 94435 64713, 75983 02428

- ✓ இட், ஈகோ, சூப்பர் ஈகோ ஆகிய மூன்றும் இணைந்து செயலாற்றினால்தான் ஆளுமைச் சமநிலையும் பொருத்தப்பாடுடைய நடத்தையும் ஒருவனிடத்தில் தோன்றும்.

RETET-II-2012

மனித நடத்தையின் கூறுகள்:

1). நனவு அனுபவங்கள் (Conscious Experiences)

- ✓ நனவு அனுபங்களை மட்டுமே ஏற்றுக் கொள்பவர்கள் -- நடத்தைக் கோட்பாட்டினர்
  (எ.கா): பசி, வலி, காயமடைதல், பொருள் வாங்குதல், பணம் கொடுத்தல் போன்றவை.

2). நனவிலி அனுபவங்கள் (Unconscious Experiences)

- ✓ நனவிலி அனுபவங்களுக்கு அதிகம் முக்கியத்துவம் அளிப்பவர்கள்-- உளப்பகுப்பாய்வினர்
  (எ.கா): சிலரிடம் காரணமின்றி கோபப்படுதல், சிலரிடம் உடனே நட்பு கொள்ளுதல் போன்றவை.

புதிய ஃப்ராய்டியன் கோட்பாடுகள் (Neo-Freudian Theories)

- ✓ சிக்மண்ட் ஃப்ராய்டின் கருத்துக்களை முழுமையாக ஏற்காதவர்கள்--***கார்ல் யுங் மற்றும் ஆல்ஃபிரட் ஆட்லர்***
- ✓ கார்ல் யுங் (Carl Jung) மற்றும் ஆல்ஃபிரட் ஆட்லர் (Alfrd Adler) இவர்களின் கோட்பாடுகள் ***'புதிய ஃப்ராய்டியன் கோட்பாடுகள்'*** எனப்படும்.

ஆல்ஃபிரட் ஆட்லர் -- தனிநபர் உளவியல் (Adler's Individual Psychology)

- ✓ ஃப்ராய்டின் தொடக்க கால நண்பர்களிலே முதன்முதலில் அவரோடு கருத்து வேறுபாடு கொண்டு பிரிந்தவர்-- ***ஆல்ஃபிரட் ஆட்லர்***

TET-II-2012

- ✓ 'தாழ்வுச் சிக்கல்' என்னும் கருத்தைத் தோற்றுவித்தவரும் இவரே.
- ✓ இவரின் கருத்துப் படி, ஒவ்வொருவரும் குழந்தையாக இருக்கும் போது, பிறரைச் சார்ந்தே இருக்க வேண்டிய தாழ்நிலையில் வாழ்க்கையைத் தொடங்குகிறோம். குறிப்பாக தாயைச் சார்ந்தே இருக்கிறது.
- ✓ ஒவ்வொரு குழந்தையும் தனக்கு உகந்தவாறு தனித்தன்மையுடன் உயர்நிலையடைய முயற்சித்தலையே, அவரது 'வாழ்க்கை முறை' அல்லது 'அவரது பாணி' என்று அழைக்கிறோம்.
- ✓ குழந்தையின் பிறப்பு வரிசை நிலையும் ஒருவரது ஆளுமையை உருவாக்கும் காரணியாக ஆட்லர் குறிப்பிடுகிறார்.

கார்ல் யுங் -- பகுப்பாய்வு உளவியல் (Carl Jung's Analytical Psychology)

- ✓ ***கார்ல் யுங்*** " --ஃப்ராய்டின் கருத்துக்களில் இருந்து இரு முக்கிய நிலைகளில் வேறுபடுகிறார்.
- ✓ மனித ஆளுமை வகைபாடுகள்--'அகமுகத்தான்', 'புறமுகத்தான்'
- ✓ ***ஃப்ராய்ட்*** --மனித ஆளுமை வளர்ச்சிக்குக் காரணமாக இளம் பருவ அனுபவங்களைக் குறிப்பிடுகிறார்.
- ✓ ***யுங்***-- மனித ஆளுமை வளர்ச்சிக்கு தற்போதைய அனுபவங்களுக்கே முதலிடம் தருகிறார்.

கல்வி உளவியல் (Educational Psychology)

கல்வி உளவியல் -- வரையறைகள் (Definitions of Educational Psychology)

- ➢ **கோலெஸ்னிக்** --"கல்வி உளவியல் என்பது கல்வியில் மேற்கொள்ளப்படும் செயல்முறைகளிலும், பின்பற்றப்படும் வழிமுறைகளிலும், உளவியல் கோட்பாடுகளையும், விதிகளையும் புகுத்தி, கற்றல்-கற்பித்தலை மேம்படுத்துதலே ஆகும்"
- ➢ **ப்ளேர், ஜோன்ஸ், சிம்ப்சன்**--"கல்வி தத்துவ இயல் எதைக் கற்பிக்க வேண்டும் என்பதைச் சுட்டிக் காட்ட, கல்வி உளவியல் அதை எப்படிக் கற்பிக்க வேண்டும் என்று இயம்புகிறது."
- ➢ **குரோ மற்றும் குரோ** --"பிறப்பிலிருந்து முதுமை வரைக்கும் ஒருவரது கற்றல் அனுபவங்களை விவரிப்பது தான் கல்வி உளவியல் ஆகும்."
- ➢ **ஸ்கின்னர்**-"கல்வி உளவியல் என்பது கல்வியுடன் சம்பந்தப்பட்ட நடத்தை மற்றும் ஆளுமைத்திறனின் முழு அளவையும் உள்ளடக்கியது."
- ➢ **E.A.பீல்**-"கல்வி உளவியல் என்பது கற்றலின் தன்மை மனித ஆளுமை வளர்ச்சி தனியாள் வேற்றுமைகள், மனித நடத்தையைச் சமூக சூழலின் அடிப்படையில் ஆராய்தல் ஆகியவற்றை ஆராய்கின்றது."
- ➢ **S. சந்தானம்**-"பொது உளவியலின் கருத்துக்களையும், கண்டுபிடிப்புகளையும் கற்றல்-கற்பித்தலில் எடுத்தாள்வது கல்வி உளவியல் எனப்படும்."

கல்வி உளவியலின் குறிக்கோள்கள்: (Aims of Educational Psychology)

- ✓ **கேஜ், பெர்லினர் (1975)**
  - i. நடத்தைகளைப் புரிந்து கொள்ளுதல்
  - ii. நடத்தையைக் கணித்தல்
  - iii. நடத்தையைக் கட்டுப்படுத்துதல்

SURYA TRB COACHING
www.Padasalai.Net

Contact: 81246 02428, 94435 64713, 75983 02428

கல்வி உளவியலின் வரம்பு (RETET-II-2012, PG TRB-2015)
(Scope of Educational Psychology)

வ.எண்	கோலஸ்னிக்	H.C.லிண்ட்கிரேன்	காரிசானும் அவரது சகாக்களும்
1	தனியாள் வேறுபாடுகள்	கற்பவர் (மாணவர்)	குழந்தையும் அதன் வளர்ச்சியும்
2	ஊக்கம்	கற்கும் முறைகள்	கற்கும்-கற்பிக்கும் முறைகள்
3	கற்பித்தல் முறைகள்	கற்கும் அனுபவங்கள்	மாணாக்கரது வளர்ச்சியை மதிப்பிடுதல்
4	மதிப்பிடும் முறைகளும் அவற்றின் நிறை-குறைகளும்	கற்கும் சூழ்நிலைகள்	குழந்தைக்கு வழிகாட்டுதல்
5	வகுப்பறை மேலாண்மை	கற்பிப்பவர்(ஆசிரியர்)	
6	மனநலம்		
7	ஒழுக்கத்தை உருவாக்குதல்		

மனித வளர்ச்சியும் முன்னேற்றமும் (Human Growth and Development)

வளர்ச்சி :- (Growth)

- ✓ இதன் வேறு பெயர் - உருப்பெருக்கம்
- ✓ ஒரு உயிரியின் உருவ அளவு மற்றும் எடை அதிகரித்தலை '***வளர்ச்சி***' என்பர்.
- ✓ கருவுற்ற நிலை முதல் பிறப்பு வரையில் எடை 11,00,000 மடங்கு அதிகரிக்கின்றது.
- ✓ பிறந்த குழந்தையின் எடை :- 3.25kg & உயரம் : 50cm
- ✓ வளர்ச்சியின் எல்லை - முதிர்ச்சி.
- ✓ வளர்ச்சி அல்லது உருப்பெருக்கம் வாழ்க்கையில் ஒரு குறிப்பிட்ட காலகட்டம் வரைதான் நிகழும். வாழ்நாள் முழுவதும் நீடிக்காது.
- ✓ 19 to 20 அல்லது 21 வருடங்களில் வளர்ச்சி நின்று விடும்.
- ✓ மூளை வளர்ச்சி - 6 வயது.
- ✓ இனப்பெருக்க உறுப்பு வளர்ச்சி - 6 to 12 வயது.
- ✓ பொது அறிவு வளர்ச்சி - 15 வயது.

வளர்ச்சியின் இயல்புகள் (Nature of Growth)

- ✓ வளர்ச்சியானது மரபு மற்றும் சூழ்நிலை இவற்றின் விளைவாகும்.
- ✓ வளர்ச்சியால் முன்னேற்றம் ஏற்படவோ, ஏற்படாமலோ போகலாம்.
- ✓ ஒரு குழந்தையின் வளர்ச்சி, பிற குழந்தைகளின் வளர்ச்சியிலிருந்து வேறுபட்டுக் காணப்படுகிறது.
- ✓ உடலின் வெவ்வேறு பாகங்கள் வெவ்வேறு விகிதத்தில் வளர்ச்சி பெறுகின்றன.
- ✓ குழந்தைகளின் சிக்கல் தீர்க்கும் திறன் வயது சார்ந்து வளர்ச்சி அடையும்.
- ✓ குழந்தைகளின் இவ்வளர்ச்சி வேகம் மற்றும் துல்லியம் இவை இரண்டிலும் அமையும்.
- ✓ நரம்பு மண்டலம், உடல் உறுப்புகள், இனப்பெருக்க மண்டலம் ஆகியவற்றின் வளர்ச்சியை ஒப்பிட்டு பார்க்கும் போது 'நரம்பு மண்டலம்' மிக வேகமாக வளர்ச்சி அடைகின்றன.
- ✓ உடல் உறுப்புகள் மற்றும் இனப்பெருக்க உறுப்புகள் மெதுவாக வளர்ச்சி அடைகின்றன.
- ✓ தொடக்கக் கல்வி பயில பள்ளிக்கு வரும்போது குழந்தையின் நரம்பு மண்டலம் 90% வளர்ச்சி அடைகின்றன.
- ✓ உடல் உறுப்புகள் 40% வளர்ச்சி அடைகின்றன.

i) Cephalo – Caudal Sequence:-

- ✓ தலையிலிருந்து உடலின் மற்ற பாகங்களின் வளர்ச்சி.

ii) Proximo – distal sequence:-

- ✓ முதுகெலும்பு வளர்ச்சி நடைபெற்ற பின்னர் உடலின் மற்ற பகுதிகள் வளர்ச்சி அடையும்.

முன்னேற்றம் (Development)

- ✓ இதன் வேறு பெயர் - மேம்பாடு
- ✓ ***ஹர்லாக்*** எழுதிய நூலில் (***வளர் உளவியல்***) 'முன்னேற்றம் என்பது தொடர்ச்சியாக ஏற்படும் மாற்றங்கள், ஒழுங்கான முறையில் முதிர்ச்சியை நோக்கி ஏற்படும் மாற்றங்கள்" என்று குறிப்பிடுகிறார்.

SURYA TRB COACHING
www.Padasalai.Net

Contact: 81246 02428, 94435 64713, 75983 02428

- ✓ ஓர் உயிரியின் உருவத்திலோ அல்லது அமைப்பிலோ ஏற்படும் மாற்றங்களையும், அது இயங்கும் விதத்தில் ஏற்படும் மேம்பாடுகளையும் ஒட்டுமொத்தமாகக் குறிப்பதே 'முன்னேற்றம்' ஆகும்.
- ✓ ஓர் உயிரியின் செயல்பாட்டுத் தரத்தைக் குறிப்பது முன்னேற்றம்.

வளர்ச்சி + முதிர்ச்சி + கற்றல் = முன்னேற்றம்

முன்னேற்றத்தின் இயல்புகள் (Nature of Development)

- ✓ வளர்ச்சியில்லாமலும் முன்னேற்றம் ஏற்பட வாய்ப்பு உண்டு.
- ✓ முன்னேற்றம் என்பது முதிர்ச்சியின் அடிப்படையில் ஏற்படுகிறது.
- ✓ முன்னேற்றம் என்பது பொதுவானவற்றிலிருந்து குறிப்பிட்டவற்றிற்குச் செல்லுதல்.

முதிர்ச்சி (Maturation)

- ✓ இது ஒரு இயற்கையான செயல்பாடு.
- ✓ உயிரியல் மரபினால் பெறப்பட்ட பண்புகளும், இயல்புகளும் முதிர்ந்து மலர்வதே முதிர்ச்சி.
- ✓ இது பயிற்சி, அனுபவம், கற்றல் இவற்றால் விளைவது அல்ல.
- ✓ உடல் சார்ந்த ஒரு செயலினைச் செய்வதற்குரிய பக்குவமான உடல் வளர்ச்சியே முதிர்ச்சி எனப்படும்.
- ✓ வளர்ச்சியின் பெரும் எல்லைக்கு - முதிர்ச்சி.
- ✓ ***கேட்டல்*** - "முதிர்ச்சி என்பது ஆற்றல் மற்றும் தகுதியின் வளர்ச்சி எனப்படும்" **PG TRB-2007**
- ✓ ***மெக்கிரா*** - இரட்டையர் கட்டுப்பாட்டுச் சோதனை - "முதிர்ச்சியின்றிப் பயிற்சி மட்டும் பெரும் பயனளிக்காது".
- ✓ குழந்தைத் திருமணங்கள் அரசினால் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை ஏனெனில் தம்பதிகள் சட்டப்பூர்வமான முதிர்ச்சி அடையவில்லை.
- ✓ சட்டப்பூர்வமான முதிர்ச்சி **TET-II-2013**

ஆண் - 21 வயது பெண் - 18 வயது

எண்	வளர்ச்சி (Growth)	எண்	முன்னேற்றம் (Development)
1	கண்ணால் காண முடியும்.	1	கண்ணால் காண முடியாது
2	துல்லியமாக அளக்க முடியும்.	2	துல்லியமாக அளக்க முடியாது. கணிக்க (யூகிக்க) முடியும்.
3	வாழ்நாள் முழுவதும் வளர்ச்சி தொடர்வதில்லை	3	தொடர்ந்து ஏற்படும்.
4	முன்னேற்றத்தின் ஓர் உட்கூறுதான் வளர்ச்சி.	4	முன்னேற்றம் சிக்கலான செயல்பாடாகும். பன்முகம் கொண்டது.
5	குறிப்பிட்ட திசையைக் கோண்டது அல்ல	5	வரிசைக் கிரமம் உடையது.திசை கொண்டது
6	வளர்ச்சி விகிதம் சீராக இருப்பதில்லை.	6	முன்னேற்ற விகிதம் சீராக இருப்பதில்லை.
7	தனியாள் வேற்றுமைகள் உண்டு	7	தனியாள் வேற்றுமைகள் உண்டு
8	மரபு தீர்மானிக்கிறது.	8	கற்றலும், அனுபவமும் தீர்மானிக்கிறது
9	தலை முதல் கால் நோக்கியும், மையம் முதல் விளிம்பு நோக்கியும் அமையும்.	9	நேர்கோடாக இல்லாமல் சுருள் வடிவில் உள்ளது.

- ✓ குழந்தையின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்திற்கான அகக்காரணிகள் - உயிரியல் காரணி, நுண்ணறிவு, மனவெழுச்சி காரணி போன்றவை
- ✓ குழந்தையின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்திற்கான புறக்காரணிகள் - பள்ளி, குடும்பம், சமூகம், தாயின் கருவறைச் சூழல்
- ✓ மனித வளர்ச்சியும் முன்னேற்றமும் பிறப்பதற்கு முந்தைய நிலையிலிருந்து ஆரம்பமாகிறது.

கற்றல் (Learning)

- ✓ ஓர் உயிரியின் நடத்தையில் ஏற்படும் மேம்பாட்டைக் ***கற்றல்*** என்கிறோம்.
- ✓ கற்றலைக் கண்ணால் பார்க்க முடியாது.
- ✓ கற்றல் நிகழ ஆயத்தம் அவசியம்.

SURYA TRB COACHING
www.Padasalai.Net

Contact: 81246 02428, 94435 64713, 75983 02428

- ✓ நடுவண் அரசும், மாநில அரசும் 14 ஆண்டுகள் வரை உள்ள அனைத்துக் குழந்தைகளுக்கும் கட்டாய இலவசக் கல்வி (UEE - Universalization of Elementary Education)அளிக்க வேண்டும் என்று செயல் பட்டு வருகின்றன.

முதிர்ச்சி, கற்றல், முன்னேற்றம் இவற்றிற்கு இடையேயுள்ள தொடர்பை விளக்கும் சோதனைகள்:

i) W.N.கெல்லாக், L.A.கெல்லாக் சோதனை

- ✓ சோதனையில் இடம் பெற்றவை -- மனிதக் குரங்கு , குழந்தை, ஒரே சூழலில் வளர்த்தல்

ii) கீஸல், தாம்சன் ஆகியோரின் ஒரு கரு இரட்டையர் சோதனை

- ✓ சோதனையில் இடம் பெற்றது - 2 குழந்தைகள்.

மனித வளர்ச்சியின் முக்கியத் துறைகள் அல்லது அம்சங்கள்:

i) உடல் வளர்ச்சி
ii) அறிவு வளர்ச்சி
iii) மனவெழுச்சி வளர்ச்சி
iv) சமூக வளர்ச்சி
v) ஒழுக்க வளர்ச்சி

i) உடல் வளர்ச்சி (Physical Development)

- ✓ உடல் வளர்ச்சி என்பது உடலிலுள்ள செல்கள் மற்றும் திசுக்களின் பெருக்கத்தால் ஏற்படும் உயரம் , எடை அதிகரித்தலே ஆகும்.
- ✓ இதில் இரண்டு கூறுகள் உள்ளன-- உடற்கூறு வளர்ச்சி, உடலியல் வளர்ச்சி

a). உடற்கூறு வளர்ச்சி

- ✓ எலும்புக் கூட்டின் வளர்ச்சி, எலும்பின் தன்மையில் வளர்ச்சி, உடலின் உயரம், எடை ஆகியவற்றில் மாற்றம்.
- ✓ உடல் எலும்புகளின் முதிர்ச்சியும், நிலையான பற்கள் முளைப்பதும் உடற்கூறு வளர்ச்சியைக் காட்டும் சின்னங்களாகக் கருதப்படுகின்றன.
- ✓ குழந்தைக்கு 2 வயதில் பால் பற்கள் தோன்றுகின்றன.
- ✓ 6 வயதில் நிலையான பற்கள் தோன்றுகின்றன.

b). உடலியல் வளர்ச்சி

- ✓ இரத்த ஓட்டப் பகுதி, நரம்பு மண்டலம், சுவாச மண்டலம், தசைகளின் தொகுதி போன்றவற்றில் எழும் மாற்றங்கள்.
- ✓ அறிவு வளர்ச்சிக்கு உடலியக்கங்களின் வளர்ச்சி அடிப்படையாகும்.
- ✓ குழந்தை பிறந்த முதல் ஆண்டில் - 50% வளர்ச்சி உடல் வளர்ச்சி ஏற்படும்.
- ✓ அடுத்த 2 ஆண்டுகளில் - 70% வளர்ச்சி உடல் வளர்ச்சி ஏற்படும்.
- ✓ 11-வயது வரை பையனும், 11-வயதுக்கு மேல் பெண்களும் வேகமாக வளர்கிறார்கள்.
- ✓ குழந்தை பிறந்தவுடன் சுமார் 50 செ.மீ. நீளமும், 3.5 கிலோகிராம் எடையும் இருக்கும்.
- ✓ முதலாமாண்டு முடிவில் 75 செ.மீ. உயரமும் 6 கிலோகிராம் எடையுமாக இருக்கும்.
- ✓ அடுத்த ஆறு மாதங்களில் அதன் எடை 9 கிலோகிராம் அளவு உயரக் கூடும்.
- ✓ குழந்தையின் தலைக்கும் உடம்புக்கும் உள்ள விகிதம் 1/4 லிருந்து 1/8 என்று மாறும்.
- ✓ 4 முதல் 6 வயதுக்குள் மூளையின் எடை வளர்ந்த மனித மூளையின் எடையில் 80% ஐ எட்டுகிறது.
- ✓ 8-வது வயதிற்குள் அது 93% ஆக மாறுகிறது.
- ✓ குமரப் பருவ தொடக்கத்தில் ஆண்களின் சராசரி உயரமும், எடையும் பெண்களை விட அதிகமாக இருக்கும்.
- ✓ ஆனால் 13 வயதில் மாதப்பெருக்கு தொடங்கிய உடன் பெண்களின் எடை ஆண்களின் எடையை விட மிகுந்து காணப்படும்.
- ✓ ஒரு சிறந்த குழந்தை சாதாரண குழந்தையை விட 1 1/2 ஆண்டுகள் முன்னோக்கி இருக்கும்

PG TRB-2012

ii) அறிவு வளர்ச்சி (Cognitive Development)

- ✓ இதன் வேறுபெயர் - **மனவளர்ச்சி**
- ✓ குழந்தை தன் தாயை 3 அல்லது 4 மாதங்களுக்குப் பின்னரே அடையாளம் கண்டு சிரிக்கும்.
- ✓ மனவளர்ச்சி 15 முதல் 17 வயதிற்குள் உச்சகட்ட வளர்ச்சியைப் பெறும்.
- ✓ குழந்தையின் அறிவு வளர்ச்சியுடன் தொடர்புடையது - நரம்பு மண்டலத்தின் வளர்ச்சி

PG TRB-2005

இதன் உட்கூறுகள்:

a).கற்பனை செய்தல் (Imagination)
b).சிந்தித்தல் (Thinking)
e).நினைவிலிருத்தல் (Remembering)
f).வேறுபடுத்துதல் (Discrimination)

SURYA TRB COACHING
www.Padasalai.Net

Contact: 81246 02428, 94435 64713, 75983 02428

c).ஆராய்ந்தறிதல் (Reasoning) g).பொதுமைப்படுத்துதல் (Generalisation)
d).புலன்காட்சி (Perception) h).தொடர்புபடுத்துதல் (Association)

- ✓ 2 வயதில் நினைவாற்றல் ஏற்படத் தொடங்குகிறது.
- ✓ 3 வயதில் கற்பனைத் திறன் உருவாகி, விளையாட்டுகளில் பிரதிபலிக்கத் தொடங்குகிறது.

அறிதிறன்: (Cognitive Ability)

- ✓ ***நெய்சா*** -- "புலன் உறுப்புகள் மூலம் பெறப்படும் செய்திகளைத் தொகுத்தல், சுருக்கியமைத்தல், விரிவுபடுத்துதல், நினைவு கூர்தல் என்ற உளச்செயல்களின் அடிப்படையில் ஆராய்ந்து அவை பற்றி அறிந்து கொள்ளுதல் ***அறிதிறன்*** எனப்படும்."
- ✓ வெளி உலகத்தைப் பற்றி தெரிந்து கொள்ள உதவும் உளச்செயல்களே "***அறிதிறன் செயல்கள்***" (Cognitive Process) எனப்படும்.

iii.மனவெழுச்சி வளர்ச்சி

- ✓ ***மார்க்ரெட் மீட்*** (Margaret Mead) - "மனவெழுச்சி வெளிப்பாடு சமுதாயத்துக்குச் சமுதாயம் வேறுபடுகிறது."
- ✓ ***ஃப்ராய்டு*** - "குழவிப்பருவத்திலும் முன்பிள்ளைப்பருவத்திலும், மனவெழுச்சிகளில் ஓர் ***இருமுகப்போக்கு நிலை*** தோன்றுகிறது."
- ✓ மனவெழுச்சி என்பது உணர்ச்சிகள் மேலோங்கி நிற்கும் நனவு நிலையாகும்.
- ✓ மனவெழுச்சி என்பது மனதின் தூண்டப்பெற்ற அல்லது சலனமடைந்த நிலை ஆகும். **(PG TRB-2005)**
- ✓ மனவெழுச்சி தூண்டல்கள் தாக்கும் மூளையின் ஒரு பகுதி - ***ஹைப்போதலாமஸ்*** **(TET-II-2012)**
- ✓ ***மக்டூகலின்*** எண்ணப்படி, மனித மனவெழுச்சிகள் இயல்பூக்கங்களிலிருந்து உருவாகுபவையாகும்.
- ✓ இயல்பூக்க நடத்தை என்பது மூன்று கூறுகளைக் கொண்டது.
  1.அறிவு (Cognition)
  2.உணர்வு (Affection) **TET-I-2012**
  3.உடலியக்கம் (Conation)

மனவெழுச்சியின் இயல்புகள்: (Nature of Emotions)

- ✓ குறிப்பிட்ட ஓர் எல்லை வரை மனவெழுச்சி அதிகரித்தல், சாதனையைத் தூண்டி அதிகரிக்கச் செய்யும். அதற்கு மேல் அது சாதனையில் குறுக்கிடும். இதனை '***எர்க்ஸ் - பிட்சன் விதி***' என்பர். இது வகுப்பறை நிலைமைகளுக்கும் பொருந்தும்.
- ✓ நியாயமான சிந்தனையைப் பாதிக்கக் கூடியது - ***மனவெழுச்சிகள் (PG TRB-2005)***
- ✓ மனவெழுச்சிகள் குழந்தைப் பருவம் முதல் கிழட்டுப் பருவம் வரை எவ்வயதிலும் மனிதரிடம் காணப்படும்.
- ✓ மனவெழுச்சியை உருவாக்கும் தூண்டுதல் திரள் விளைவு உடையது. **(TET-II-2013)**
- ✓ ஒரு மனவெழுச்சி, அது எழுவதற்கான காரணம் மறைந்த பின்னரும் தொடர்ந்து செயல்படுகிறது. இதனை '***மனவெழுச்சி நீட்சி***' (Mood) எனலாம்.
- ✓ மனவெழுச்சி காதர்ஸிஸ் என்பது மனவெழுச்சி வெளியீடு ஆகும். RETET - 2012

மனவெழுச்சியின் பல்வேறு பிரிவுகள்:

- ✓ ***ஹெரால்டு ஷால்ஸ்பர்க்*** என்பாரது கருத்துப்படி "மனவெழுச்சிகள் மூன்று பரிமாணங்களில் பரவிக் காணப்படுகின்றன. இவை ஒவ்வொன்றும் இருமுனைகளை (Bipolar)கொண்டவை."
  1).மகிழ்ச்சி - மகிழ்ச்சியின்மை 3).செயலுறுநிலை - செயலற்றநிலை
  2).கவனித்தல் - புறக்கணித்தல் 4).எளிமை - சிக்கல் **TET-I-2013**

மனவெழுச்சிகளின் வகைகள்: (Types of Emotions)

வ.எண்	மனவெழுச்சிகளின் வகைகள்	பண்புகள்
1	அடிப்படை மனவெழுச்சிகள்	சினம், மகிழ்ச்சி, துயரம், அச்சம்
2	புலன் உணர்ச்சிகளால் தூண்டப்படும் மனவெழுச்சிகள்	வலி, அருவருப்பு, உற்சாகம்
3	தற்கருத்து, அவாவு நிலை ஆகியவற்றுடன் இணைந்தவை	பெருமிதம், அவமானம், குற்ற உணர்வு
4	பிறரைச் சார்ந்து எழும் மனவெழுச்சிகள்	அன்பு, பொறாமை, பரிதாபம்
5	பாராட்டுத் தொடர்பான மனவெழுச்சிகள்	ஆச்சரியம், மரியாதை

- ✓ பிறக்கும்போதே குழந்தைகளிடம் காணப்படும் மனவெழுச்சிகள் '***அடிப்படை மனவெழுச்சிகள்***' (Primary Emotions) எனப்படும்.
- ✓ ***வாட்சன்*** – "சினம், அச்சம், அன்பு என்னும் மூன்றே அடிப்படை மனவெழுச்சிகளாகும்."

SURYA TRB COACHING

Contact: 81246 02428, 94435 64713, 75983 02428

- ✓ ***ரீபோ, மக்டூகல், ஹாலிங்வொர்த்*** – "நான்கினுக்கும் மேற்பட்ட அடிப்படை மனவெழுச்சிகளைச் சுட்டிகாட்டுகின்றனர்."
- ✓ ***பிரிட்ஜஸ்*** - "பிறந்த குழந்தையிடம் பொதுப்படையான உள்ளக்கிளர்ச்சி (Undifferentiated Excitement) மட்டுமே காணப்படும்". இது குழந்தை வளர வளர 'மகிழ்ச்சி'(Delight), 'துயரம்'(Distress) என்னும் இரு பெருங்கிளைகளாகப் பிரிகிறது.

பொதுப்படையான உள்ளக்கிளர்ச்சி

மகிழ்ச்சி	துயரம்
i).உற்சாகம் (Elation)	i). சினம் (Anger)
ii).பரிவு (Affection)	ii). அருவருப்பு (Disgust)
iii).களிப்பு (Joy)	iii). அச்சம் (Fear)
	iv). பெருங்கோபம் (Rage)

எண்	உடன்பாட்டு மனவெழுச்சிகள்	எண்	எதிர்மறை மனவெழுச்சிகள்
1	மகிழ்ச்சி தரக் கூடிய மனவெழுச்சிகள்	1	மகிழ்ச்சியற்ற நிலையை உண்டாக்கும் மனவெழுச்சிகள்
2	மனநலம் மேம்படும்	2	மனநலம் பாதிக்கப்படும்
3	செயல் திறனும் அதிகரிக்கும்	3	செயல்திறன் அதிகரிக்காது

- ✓ குழந்தைகளுக்கு இளம் வயது முதலே மனவெழுச்சிகளைக் கட்டுப்படுத்துதலில் பயிற்சியளித்து மனவெழுச்சி முதிர்ச்சியடையச் செய்தல் பெற்றோர் மற்றும் ஆசிரியர்களின் பெருங்கடமையாகும். இதனையே "மனவெழுச்சிகளைப் பண்படுத்துதல்" என்று குறிப்பிடுகிறோம்.

மனவெழுச்சியைப் பாதிக்கும் காரணிகள்: TET-I-2013

a).குடும்பச் சூழ்நிலை
b).பள்ளிச் சூழ்நிலை
c).உடல் வளர்ச்சியும், உடல் நலமும்
d).நுண்ணறிவு
e).சமூகம்

- ✓ பள்ளிப்பருவ குழந்தைகளிடம் மனவெழுச்சி வளர்ச்சியினை அதிகமாக பாதிப்பது - ***நண்பர்கள்***
- ✓ மனவெழுச்சிகள் கட்டுக்கடங்காமற் போயின் மனவெழுச்சிப் போராட்டங்கள் (Emotional Conflicts) எழக்கூடும். பல்வேறு நெறிபிறழ்ந்த, அசாதாரண (Abnormal) நடத்தைக் கோலங்களுக்கு இவையே காரணிகளாக அமைகின்றன என்று உளவியலாளர்கள் கருதுகின்றனர்.
- ✓ பொருத்தமான நேரத்தில் பொருத்தமான வகையில் வெளிப்படுத்தக் கற்று, உணர்ச்சிகளை கட்டுக்குள் வைத்திருக்கும் மனவெழுச்சி முதிர்ச்சி நிலையை அடைதலே மனவெழுச்சி வளர்ச்சி ஆகும்.
- ✓ மனவெழுச்சி வளர்ச்சியின் இறுதி எல்லை ***மனவெழுச்சி முதிர்ச்சி*** ஆகும்.
- ✓ எந்தவொரு விசயத்தையும் அதன் உண்மை நிலையிலேயே பார்ப்பவர் மனவெழுச்சி முதிர்ச்சி உடையவர் ஆவர். **(TET-II-2013)**

iv.சமூக வளர்ச்சி (Social Development)

- ✓ தனது சமூக மரபின் தன்மையை உணர்ந்து அதற்கேற்ப தனது நடத்தையை உருவாக்கிக் கொள்ள திட்டமிட்ட முறையில் செயலாற்றுவது '***சமூக வளர்ச்சி***' எனப்படும்.
- ✓ ***ஹர்லாக்*** -- "சமூக வளர்ச்சி என்பது சமூகத் தொடர்புகளில் முதிர்ச்சி பெறுதல் என்பதாகும்". **(TET-II-2013)**
- ✓ குழந்தையின் மனவெழுச்சி வளர்ச்சியானது சமூக வளர்ச்சியுடன் நேர்மறை ஒட்டுறவுத் தன்மையை கொண்டு அமைகிறது. **(PG TRB-2015)**
- ✓ குழந்தை 3 வயதில் தன்னலமுடன் காணப்படுகிறது.
- ✓ குழந்தைகளிடம் சமூகவியல்பு வளர்ச்சியை ஏற்படுத்துதலையே '***சமூக நெறிப்படுத்தும் செயல்முறை'*** (Process of socialisation)' என்பர்.

SURYA TRB COACHING
www.Padasalai.Net

Contact: 81246 02428, 94435 64713, 75983 02428

எரிக்சனின் உள சமுக வளர்ச்சிக் கொள்கை: (RETET-II-2012, Spl.TET-II-2014, RETET-I-2012, PG TRB-2005)

எண்	நிலை	பிரச்சினைகள்	முக்கிய நிகழ்வுகள்	சமூக செல்வாக்குகள்
1	குழவிப்பருவம் (பிறப்பு முதல் 2 வயது வரை)	நம்பிக்கை வைத்தல்/ நம்பிக்கையின்மை	உணவூட்டுதல்	தாய்/ செவிலியர்
2	முன்பிள்ளைப் பருவம் (2 முதல் 3 வயது வரை)	சுதந்திரமாக இயங்குதல் / வெட்கப்படுதல்	கழிவறைப் பயிற்சி	பெற்றோர்
3	பள்ளிக்கு செல்வதற்கு முந்தைய நிலை (3 முதல் 5 வயது வரை)	தானே முற்பட்டு செயலாற்றுதல்/குற்ற உணர்வு	சுற்றுப்புறத்தை ஆராய்தல்	ஆதாரக் குடும்பம்
4	பள்ளி செல்லும் நிலை (6 வயது முதல் பால் உறுப்புகள் வளர்ச்சி பெறும் வரை)	உற்சாகமாக உழைத்தல்/ தாழ்வுணர்வு	சுற்றுப்புறம், பள்ளி	பள்ளி
5	குமரப் பருவம் (13 முதல் 19 வயது வரை)	தன்னைப் பற்றிய நிலையான கருத்து/ தன்னைப் பற்றிய தெளிவற்ற குழப்பமான கருத்து	சமூக உறவுகள்	ஒப்பார் குழு
6	முன்முதிர் பருவம் (19 முதல் 40 வயது வரை)	நெருக்கமான உறவும் ஒருமைப்பாட்டு உணர்வும்/ தனிப்பட்ட நிலைமை	உறவுகள்	நண்பர்கள், பால் தொடர்பு உறுப்பினர்கள், ஒத்துழைக்கும்/போட்டியிடும் குழுக்கள்
7	நடுமுதிர் பருவம் (40 முதல் 65 வயது வரை)	தாராள மனப்பான்மை/ தன்னுள் ஒடுங்கி செயல்படுதல்	பணி மற்றும் பெற்றோராதல்	பொறுப்புகளையும் குடும்ப கடமைகளையும் தன்னுடன் பகிர்ந்து கொள்வோர்
8	பின்முதிர்பருவம் (65 வயதுக்குப் பின்)	நேர்மை/ முழுமையான நம்பிக்கை இழப்பு	தன் வாழ்வு பற்றிய ஆய்வு சிந்தனை	மனித இனம்/நம் இனம்

சமூக வளர்ச்சியில் அடங்கியுள்ள முக்கிய நிலைகள்

1.சமூக உணர்வு பெற்றுத் திகழ்தல் 2.சமூகச் செயல்களில் பொறுப்புடன் பங்கேற்றல்

அறிவு வளர்ச்சி + மனவெழுச்சி வளர்ச்சி + சமூக வளர்ச்சி = இசைவான ஆளுமை

v.ஒழுக்க வளர்ச்சி (Moral Development)

- ✓ இதன் வேறு பெயர் - ***நன்னடத்தை வளர்ச்சி, அறநெறி வளர்ச்சி***
- ✓ சமூக அறநெறிகளை அறிந்து அதன்படி ஒட்ட ஒழுகல், ***ஒழுக்க வளர்ச்சி*** எனப்படும்.
- ✓ சரி, தவறு என்று பிரித்தறியும் திறனைப் பெற்று தனக்கென ஒழுக்கக் கோட்பாட்டை அமைத்துக் கொள்வதையே ஒழுக்க வளர்ச்சி குறிப்பிடுகிறது.
- ✓ ஒருவரின் இலட்சியம் நல்லொழுக்கத்தின் அடிப்படையில் அமைய வேண்டும்.
- ✓ சமூக வளர்ச்சியும், ஒழுக்க வளர்ச்சியும் இணைந்தவை.

பியாஜேயின் ஒழுக்கவளர்ச்சிக் கொள்கை (Piaget's Theory of Moral Development)

- ✓ நல்லவை மற்றும் தீயவை பற்றிய குழந்தைகளது கருத்துக்கள் முதியவர்களின் கருத்துகளினின்றும் எவ்வாறு மாறுபடுகிறது என்பதை விளக்கியவர் -- ***ஜீன் பியாஜே (1932)***
- ✓ ஒழுக்கம் பற்றிய இயல்பான நோக்கம், ஒழுக்கம் பற்றிய சார்பு நோக்கம் ஆகியவற்றைப் பற்றி விளக்கியவர் -- ***ஜீன் பியாஜே***

பியாஜேயின் ஒழுக்க வளர்ச்சிப் படிநிலைகள்:

1.பட்டறி நிலை (Anomy) 2.ஆதிக்க நிலை (Authority / Hetronomy)
3.சமூக நிலை (Reciprocity) 4.தனித்தியங்கும் நிலை (Autonomy)

SURYA TRB COACHING
www.Padasalai.Net

Contact: 81246 02428, 94435 64713, 75983 02428

1). பட்டறி நிலை (Anomy) (பிறப்பு முதல் 5 வயது வரை)

- ✓ இந்நிலையில் குழந்தை ஒழுக்கம் பற்றிய அறிவு பெற்றிராது. நல்லது எது, தீயது எது என்பதை அறிந்து நடந்து கொள்ளாது.
- ✓ மகிழ்ச்சி தரும் செயல்களில் குழந்தைகள் ஈடுபடுவர்.
- ✓ தொல்லைதரக் கூடிய செயல்களைத் தவிர்ப்பர்.

2). ஆதிக்க நிலை (Authority / Hetronomy) (5 முதல் 8 வயது வரை)

- ✓ இதன் வேறு பெயர் - ஆளப்படு நிலை
- ✓ பரிசுகளையும் தண்டனைகளையும் பயன்படுத்தி அதிகாரம் படைத்தவர்கள் குழந்தையை கட்டுப்படுத்துவதால் இந்நிலை 'ஆதிக்க நிலை' அல்லது 'ஆளப்படு நிலை' எனப்படும்.

3). சமூக நிலை (Reciprocity) (9 முதல் 13 வயது வரை)

- ✓ குழந்தைகள் சமூகத்தில் தன் வயது ஒத்தோருடன் ஒத்துழைப்புடன் நடந்து கொள்ளும்.

4). தனித்தியங்கும் நிலை (Autonomy) (13 முதல் 18 வயது வரை)

- ✓ இதன் வேறு பெயர் - தனித்த நிலை
- ✓ இந்நிலையிலுள்ளவன் தன் நடத்தைக்கு தானே முழு பொறுப்பேற்பதுடன், சமூகமே திரண்டு வந்து எதிர்த்த போதிலும் தான் உறுதியாக நம்பும் அறநெறிகளினின்றும் பிறழ மாட்டான்.

கோல்பர்க்கின் ஒழுக்க வளர்ச்சிக் கொள்கை (RETET-I-2012)

- ✓ ***கோல்பர்க்*** -"நல்லொழுக்க வளர்ச்சியானது குழந்தைப் பருவத்திலேயே தொடங்கி விடுகிறது"
- ✓ குழந்தைகளிடம் 'அறநெறி சார்ந்த ஆய்வுத்திறன்' எவ்வாறு வளர்ச்சி அடைகின்றது என்பதை கண்டறிந்தவர் - ***கோல்பர்க்***
- ✓ சுமார் 11-12 வயதை அடையும் போது ஒழுக்கம் பற்றிய சார்பு நோக்கத்தை இவர்கள் அடைகிறார்கள்.
- ✓ ஆனால் 12 வயதிற்கு மேற்பட்ட நிலையில் சமரசப் போக்கு, மன்னிக்கும் பண்பு போன்றன அதிக அளவில் காணப்படும்.
- ✓ கோல்பர்க் என்பாரது விளக்கம் பியாஜேவின் கருத்துகளுடன் தொடர்பு கொண்டதாகும்.
- ✓ அறிவு வளர்ச்சியில் பியாஜே குறிப்பிடும் செயல்களான தன்வயப்படுதல், பொருந்திப்போதல் ஆகிய இரண்டும் ஒழுக்க வளர்ச்சியிலும் காணப்படுவதாக கோல்பர்க் கருதுகிறார்.
- ✓ கோல்பர்க் குழந்தைகளின் ஒழுக்க வளர்ச்சியில் 3 நிலைகளைக் குறிப்பிடுகிறார். இவை ஒவ்வொன்றிலும் இரண்டு படிகள் என மொத்தம் 6 படிநிலைகள் உள்ளன.

I).மரபுக்கு முற்பட்ட நிலை (Pre-Conventional Stage) - 4 முதல் 10 வயது வரை

TET-II-2012, Spl.TET-II-2014, RETET-I-2012

- ✓ இந்நிலையில் மூத்தோர்களால் வகுக்கப்பட்ட விதிகள் பின்பற்றப்படும்.
  - ***a). தண்டனைக்கு அஞ்சி பணிந்து நடக்கும் போக்கு***
  - ***b). தேவை நிறைவேற்றம் மற்றும் மகிழ்வுறுதல் சார்ந்த நோக்கு***

II). மரபு நிலை (Conventional Stage) 10 முதல் 13 வயது வரை

- ✓ பரிசுகள் பெறவும் பிறரது பாராட்டுக்களைப் பெறவும் விருப்ப மிகுதியால் குழந்தைகள் ஒழுக்க நெறிகளுடன் நடந்து கொள்வர்.
  - ***a). பிறர் அங்கீகாரத்தைப் பெறும் நோக்கு***
  - ***b). சட்ட ஒழுங்கு நோக்கு***

III). மரபுக்கு பிந்திய நிலை: (Post Conventional Stage)- 13 வயதுக்கு மேல்

- ✓ இந்நிலையில் விழுமங்களை வரையறுத்துக் கொளவர்.
  - ***a). சமூக ஒப்பந்த நோக்கு***
  - ***b). உலகளாவிய அறநெறிகள் இருத்தலை ஒப்புக் கொள்ளும் நோக்கு***
- ✓ ***பியாஜே*** குறிப்பிடுவது போன்ற ஒழுக்க வளர்ச்சிக்கும் முதிர்ச்சி பெறுதலுக்கும் தொடர்பு உண்டு என்று ***கோல்பர்க்*** கருதுகிறார்.
- ✓ எக்காலத்துக்கும் பொருந்தக்கூடிய சில அறநெறிகள் இருத்தலை ***கோல்பர்க்*** ஏற்கிறார்.

ஃப்ராய்டின் உளப்பாலுறுக்க வளர்ச்சிக் கொள்கை: (Freud's Theory of Psycho - Sexual Development)

- ✓ ***சிக்மண்ட் ஃப்ராய்டு*** - "பாலுணர்வு என்பது வெட்கப்பட வேண்டிய அழுக்கான அல்லது கெட்ட செயல் என்பதற்கு பதிலாக இயற்கையான, அவசியமான, உயிரியல் செயல்பாடு ஆகும்" **(TET-II-2013)**
- ✓ ஆண் குழந்தைகள் தமது தாயிடம் அதிக ஈர்ப்புக் கொள்ளும் தன்மை -- ***ஓடிப்பஸ் சிக்கல் (Oedipus Complex)*** **(TET-I-2013)**
- ✓ பெண் குழந்தைகள் தமது தந்தையிடம் அதிக ஈர்ப்புக் கொள்ளும் தன்மை -- ***எலெக்ட்ரா சிக்கல் (Electra Complex)***

SURYA TRB COACHING
www.Padasalai.Net

Contact: 81246 02428, 94435 64713, 75983 02428

ஃப்ராய்டின் ஐந்து பாலூக்க வளர்ச்சிப் படிநிலைகள்:

1. வாயினால் சுவைத்தல் நிலை (பிறப்பு முதல் 18 மாதங்கள் வரை) (Oral stage)
2. குத நிலை (18 மாதங்கள் முதல் மூன்று வயது வரை) (Anal stage)
3. பாலின உறுப்புகளில் ஈடுபாடு கொள்ளும் நிலை (3 வயது முதல் 6 வயது வரை) (Phallic stage)
4. புதை நிலை (6 வயது முதல் பூப்பெய்துவதுவரை) (Latency stage)
5. பிறப்புறுப்பு நிலை (பூப்பெய்துவது முதல் குமரப் பருவம் வரை) (Genital stage)

✓ *ஃப்ராய்டு* -- "மனித ஆளுமை வளர்ச்சி என்பது பாலூக்க வளர்ச்சியினால் ஏற்படுவது என்பதேயாகும்."

மனித வளர்ச்சியில் மரபும், சூழ்நிலையும்
(Role of Nature and Nurture in Human Development)

மரபு: (Heredity)

✓ மரபு என்பது ஒருவனிடம் இடம்பெற்றுள்ள, பிறப்பால் தோன்றிய தனித்த தன்மைகளின் ஒட்டுமொத்த நிலைதனைக் குறிப்பிடுகிறது.

✓ பிறப்பின்போது ஒரு குழந்தை தனது பெற்றோர்களிடமிருந்து பெறுகின்ற உடற்கூறு பண்புகள் அனைத்தும் மரபு நிலைக்கு உட்பட்டதாகும்.

✓ குழந்தைகள் பெற்றோரை ஒத்திருப்பதற்கு மரபுவழிக் காரணிகளே (Hereditary Factors) காரணமாக அமைகின்றன.

சூழ்நிலை: (Environment)

✓ ஒருவனுடைய சூழ்நிலை என்பது அவன் பிறந்தது முதல் இறக்கும் வரை அவனைச் சுற்றியிருக்கும் பல்வேறு விதமான தூண்டல்களின் தொகுப்பாகும்.

✓ சாதகமான சூழ்நிலையில் வளரும் குழந்தைகளின் உள்ளார்ந்த திறன்களும், ஆற்றல்களும் முழுமையாக மலர்கின்றன.

✓ மாறாக பாதகமான சூழ்நிலையில் வளரும் குழந்தைகளின் சிந்தனை, வளர்ச்சி, திறன் உயர்வு, நுண்ணறிவு மேம்பாடு, ஆளுமை வளர்ச்சி ஆகியவை பெரிதும் பாதிக்கப்பட்டு, பின்தங்கிய நிலைக்குத் தள்ளப்படுகின்றன.

✓ சூழ்நிலைவாதிகளின் கருத்து -- "ஒருவனால் செய்து முடிக்கப்படும் செயல்களை, தக்க வாய்ப்புகளும் ஊக்குவிக்கும் சூழ்நிலைகளும் தரப்பட்டால், வேறு எந்த ஒருவனாலும் செய்து முடிக்க இயலும்".

✓ *வாட்சன்* -- "என்னிடம் உடல்நலமுள்ள சில குழந்தைகளை ஒப்படையுங்கள்; எத்தன்மையுள்ளவர்களாக அவர்கள் வளர வேண்டும் என்று முன்கூட்டியே சொல்லி விடுங்கள்; இக்குழந்தைகளின் மரபுநிலையைப் பற்றி எனக்குச் சற்றும் கவலையில்லை. சூழ்நிலையின் உதவி கொண்டே பேரறிஞர்களாகவோ, பெருங்குற்றவாளிகளாகவோ அவர்கள் உருவாகும்படி செய்து காட்டுகிறேன்".

வ.எண்	மரபு	வ.எண்	சூழ்நிலை
1	வேறு பெயர் - இயற்கை, குலமை	1	வேறு பெயர் - செயற்கை
2	உடற்கூறு அமைப்பு	2	உளக்கூறு அமைப்பு
3	பிறப்பின் போது அமைவது	3	பிறப்பிற்குப் பின் அமைவது
4	மரபுக்காரணிகளான ஜீன்கள் ஒருவனுக்கு உள்ளே இடம்பெற்றுள்ளன	4	சூழ்நிலை என்பது ஒருவனுக்கு வெளியே அமைந்துள்ளது
5	மிகக் குறுகிய காலமே மனித வளர்ச்சியில் இடம் பெறுகிறது	5	மிக நீண்ட காலம் மனித வளர்ச்சியில் இடம்பெறுகிறது
6	மரபு நிலையை மாற்றி அமைக்க முடியாது	6	சூழ்நிலையை மாற்றி அமைக்க முடியும்
7	கட்டுப்படுத்த முடிவதில்லை	7	கட்டுப்படுத்தலாம்
8	மரபு நிலையைத் தவிர்க்க முடியாது	8	சூழ்நிலையைத் தவிர்க்கலாம்
9	பெற்றோர் - குழந்தைகளின் ஒற்றுமைக்குக் காரணமாக அமைகின்றது	9	பெற்றோர் - குழந்தைகளின் வேற்றுமைக்குக் காரணமாக அமைகின்றது

மரபுக் கூறுகள் கடத்தப்படும் விதம் (Transmission Mechanism of Heredity)

✓ ஆணின் உயிரணு -- விந்து (Sperm)

✓ பெண்ணின் உயிரணு -- சினை முட்டை (Ovum)

✓ இவ்விரு வகை உயிரணுக்களும் கலப்பதால் 'கருவுறுதல்' நிகழ்ந்து கருமுட்டை (சைகோட்) உருவாகின்றது.

✓ விந்தணு மிகவும் நுண்மையானது. சினைமுட்டை விந்தணுவைப் போன்று ***8500 மடங்கு*** பெரியது.

✓ கருமுட்டையின் அளவோ ஒரு குண்டூசியின் தலையை விடக் குறைவானது.

✓ கருமுட்டையில் காணப்படும் நீர்மப்பொருள் - சைட்டோபிளாசம்

PG TRB-2012

SURYA TRB COACHING

Contact: 81246 02428, 94435 64713, 75983 02428

- ✓ சைட்டோபிளாசத்தின் உள்ளே உட்கரு உள்ளது.
- ✓ ஒவ்வொரு உயிரணுவிலும் ***23 ஜோடி (46)*** குச்சி போன்ற பொருட்கள் காணப்படுகின்றன. இவற்றிற்கு ***குரோமோசோம்கள்*** என்று பெயர்.
- ✓ ஒவ்வொரு குரோமோசோமிலும் ***20,000 முதல் 42,000*** எண்ணிக்கையாலான பாசிமணி போன்ற அமைப்புகள் காணப்படுகின்றன. இவற்றிற்கு 'ஜீன்கள் ' என்று பெயர்.
- ✓ இந்த ஜீன்களே மரபுக் கூறுகளை கடத்துகின்றன. **(PG TRB-2005)**
- ✓ பெண்ணின் உயிரணுவில் உள்ள 23 ஜோடி குரோமோசோம்களும் '***XX***' என்ற ஒரே வகையைச் சார்ந்தவை.
- ✓ ஆனால் ஆணின் உயிரணுவில் கடைசி ஜோடியான 23 வது ஜோடியில் 'XY' என்ற இருவகை குரோமோசோம்கள் காணப்படுகின்றன.
- ✓ எனவே மனித செல்லில் 23 வது ஜோடி குரோமோசோம்கள் ஒரே வகையாய் (XX) என்று அமைந்தால் பெண்ணாகவும் (XY) என்று இருவகையாகவும் அமைந்தால் ஆணாகவும் இருக்கும்.
- ✓ ஒவ்வொரு மனித செல்லிலும் ***23 ஜோடி அல்லது 46*** குரோமோசோம்கள் உள்ளன.
- ✓ ஆணின் உயிரணுவான விந்தணுவும், பெண்ணின் கருமுட்டையும் கலந்து கருவுறுதல் நிகழ்ந்து, புதிய செல் அல்லது உயிரணு ஏற்படும்போது 46+46=92 குரோமோசோம்கள் இருக்க வேண்டும் என்று நாம் நினைக்கக் கூடும். ஆனால் உண்மையில் அவ்வாறு நிகழ்வதில்லை. கருமுட்டை செல்லிலும் 23 ஜோடி அல்லது 46 குரோமோசோம்களே அமைகின்றன. இது "***குரோமோசோம்கள் குறைப்பு***" என்ற முறையில் ஏற்படுகிறது.
- ✓ கருவுறுதலில் பெண் செல்லின் எந்த 23 குரோமோசோம்கள் ஆண் செல்லின் எந்த 23 குரோமோசோம்களோடு இணைகின்றன என்பது "***வாய்ப்புக் கோட்பாடு***" அடிப்படையில் நிகழ்கிறது.
- ✓ ஒரே பெற்றோருக்குப் பிறக்கக் கூடிய எந்த இரண்டு குழந்தைகளும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை (ஒரு கரு இரட்டையர்களைத் தவிர).
- ✓ ஒவ்வொரு குழந்தையும் தனது தாயின் சினைமுட்டை செல்லிலிருந்து சரிபாதி குரோமோசோம்களையும் (23), தந்தையின் விந்தணு செல்லிலிருந்து மறுபாதி குரோமோசோம்களையும் (23) பெற்று உருவாவதால், அக்குழந்தையின் குண்நலன்கள் தாய்-தந்தையை ஒத்திருக்கின்றன.
- ✓ ஒரு குழந்தையின் குணநலன்களில் அதன் 8 தலை முறை மூதாதையர்களின் தாக்கம் ஏற்பட வாய்ப்புள்ளது.
- ✓ கருப்பை ஆணின் விந்தணுவை எதிர்பார்த்து சுமார் ***15 நாட்கள்*** காத்திருக்கும்.
- ✓ 1 க.செ.மீ. விந்தில் சுமார் ***15000 முதல் 20000*** விந்தணுக்கள் இருக்கும்.

எண்	ஒரு கரு இரட்டையர்கள் (Co-twins or *Identical Twins*	எண்	இரு கரு இரட்டையர்கள் (Fraternal Twins)
1	ஒரே ஒரு சினைமுட்டையுடன் ஒரு விந்தணு கூடி, கருவுறுதல் நிகழ்ந்து கருமுட்டை தோன்றி சில நாட்களுக்குப் பிறகு இரண்டாகப் பிளந்து, ஒவ்வொன்றும் தனியான முழுமைக் கருவாக மாறி இரட்டைக் குழந்தைகள் பிறக்கின்றன.	1	பெண்ணின் சினைப்பையிலிருந்து ஒரே சமயத்தில் சினை முட்டைகள் வெளிவந்து கருப்பையை அடைகிறது. இந்த சினை முட்டைகள் முன்னேறி வரக்கூடிய இரண்டு விந்தணுக்களால் தனித்தனியாக கருவுறுகின்றன. கருவுறுதலின் முடிவில் கருமுட்டை உருவாகி இரட்டைக் குழந்தைகள் பிறக்கின்றன.
2	ஒரே பாலினத்தைச் சேர்ந்தவராயிருப்பர்	2	ஒரே பாலினத்தைச் சார்ந்திருக்க வேண்டிய அவசியமில்லை
3	மரபு முற்றிலும் சமமாக இருக்கும்	3	செயல்திறன் அதிகரிக்காது
4	இவர்கள் ஒத்த குணநலங்களோடு திகழ்வர்	4	மரபு முற்றிலும் ஒன்றாக இருக்காது
5	கருமுட்டை வழக்கத்தை விடப் பெரிய அளவாக இருக்கும்		

மரபு நிலையின் விதிகள்

"ஒத்த இயல்பு ஒத்த இயல்பினையே உருவாக்கும்" - ***கிரிகோர் ஜான் மெண்டல்***

1.ஒத்திருக்கும் விதி
2.வேற்றுமை விதி
3.பின்னோக்க விதி
4.மரபு நிலைப் பகுப்பு விதி - ***கால்டன்***

குழந்தையின் மரபுத் தன்மை ....,

- ➢ பெற்றோர்களிடமிருந்து - 1/2 பங்கு
- ➢ தாத்தா, பாட்டியிடமிருந்து - 1/4 பங்கு

SURYA TRB COACHING

Contact: 81246 02428, 94435 64713, 75983 02428

- முப்பாட்டன், முப்பாட்டியிடமிருந்து - 1/8 பங்கு
- முந்தைய தலைமுறை முன்னோர்களிடமிருந்து - 1/16 பங்கு

மரபின் முக்கியத்துவத்தை உணர்த்திய ஆய்வுகள்:

- ✓ ஒட்டுரக செடிகளை உருவாக்கும் சோதனைகள், கலப்பின விலங்குகளை உருவாக்கும் சோதனை.
- ➢ ***கால்டன் ஆய்வு*** - 800 ஆங்கிலக் குடும்பங்களிலிருந்து 977 மேதைகள் கண்டறியப்பட்டு அவர்களின் உறவினர்களை ஆராய்ந்த போது அவர்களில் 537 பேர் புகழ் மிக்கவர்களாகவும், திறன் வாய்ந்தவர்களாகவும் இருந்தனர். ஆனால் ஒப்பீடு செய்யும் வகையில் 977 சராசரி நபர்களை தேர்ந்தெடுத்து அவர்களின் உறவினர்களை ஆராய்ந்த போது, 4 பேர் மட்டுமே புகழ்மிக்கவர்களாக இருப்பது தெரியவந்தது. எனவே மேதைகள் மேதைகளிடமிருந்து தோன்றுவது போல் தெரிகின்றது.
- ➢ ***H.H.கட்டார்டு ஆய்வு (1912)*** - இவர் மனவளர்ச்சி குன்றிய ஒரு மனைவியையும், சாதாரண பெண் ஒருத்தியை மற்றொரு மனைவியாகவும் கொண்ட காலிகாக் என்ற போர்வீரனின் பரம்பரை வழித்தோன்றல்களை ஆராய்ந்தார். மனவளர்ச்சிக் குன்றிய மனைவியின் நேரடி வழித்தோன்றல்கள் 480 பேரில் 48 பேர்களே (10%) சாதாரணமாகவும், 432 பேர் குடிகாரர்களாகவும், குற்றவாளிகளாகவும், பரத்தைகளாகவும், மனவளர்ச்சிக் குன்றியவர்களாகவும் இருந்தனர். ஆனால் சாதாரண மனைவியின் வழித்தோன்றல்களில் 496 பேரில் 49% பேர் சாதாரணமான ஆண்களாகவும், பெண்களாகவும் இருந்தனர்."
- ➢ **ஜூக் குடும்ப ஆய்வு** - ஆராய்ச்சி செய்தது - டக்டேல் (1877). கார்ல் பியர்சன் - "குற்றம் புரியும் இயல்பு பரம்பரைப் பண்பாகும்". ஜூக் - மீன் பிடிப்பவர், மீன் வியாபாரி. இவர் கீழ்த்தரமான நடத்தை உடைய பெண்ணை திருமணம் செய்தார். இதன் விளைவாக 5 தலைமுறையினர் ஏழ்மையாகவும் தண்டனை அடைந்தவர்களாகவும் இருந்தனர்.
- ➢ ***பர்ட் -- நுண்ணறிவுத் தொடர்பு ஆய்வுகள்:***

இரத்த உறவு அளவு	நுண்ணறிவின் ஒத்ததன்மை (%)
எவ்வித உறவும் இல்லாதவர்கள் இடையே	0
தாய் வழி அல்லது தந்தைவழி முதல் நிலை உறவினர்கள் இடையே	12.5
ஒருவரது மாமா, அத்தை அல்லது அவர்களின் வாரிசுகளுக்கும் அவருக்குமிடையே	25
பேரக்குழந்தைகளுக்கும், தாத்தா அல்லது பாட்டிக்கும் இடையே	25
பெற்றோருக்கும், குழந்தைகளுக்கும் இடையே	50
உடன்பிறப்புகளுக்கு இடையே	50
இருகரு இரட்டையர்களிடையே	50
ஒத்த இரட்டையர்களிடையே	90

- ✓ மதி நுட்ப சோதனைகளில் மதிப்பீடுகளின் பிணைமுறை குணகத்தின் மிக உயர்ந்த மதிப்பு பெறப்படுவது - ஒரு கரு இரட்டையர்கள் (ஒரே மாதிரியான சகோதரர்கள்)

சூழ்நிலையின் முக்கியத்துவத்தை உணர்த்தும் ஆய்வுகள்:

- ✓ மனித வளர்ச்சியில் சூழ்நிலை முக்கியப் பங்கு வகிக்கிறது- ஸ்கோடாக்
- ✓ உறை குளிர் பெட்டியில் வைக்கப்பட்ட மீன் கருமுட்டை வளர்ந்து, நடுப்பாகத்தில் ஒரே ஒரு கண்ணோடு கூடிய மீனாக உருவாகிறது.
- ✓ இதே போன்று ஆர்டிக் துருவ பிரதேச முயல்கள் இருட்டறையில் வளர்க்கப்பட்டபோது அவற்றின் வெள்ளை நிற முடிகள் கொண்ட தோல், கருமையாக மாறத் தொடங்கியது.
- ✓ அமெரிக்காவின் கலிபோர்னியா கடற்கரையோரம் பல தலைமுறைகளாக வாழ்ந்து வரும் சீனர்கள் தங்களுக்கிடையே மட்டும் திருமண உறவு கொண்டு வாழ்ந்த போதிலும் அவர்களின் சராசரி உயரம், சீனாவில் வாழும் சீனர்களின் சராசரி உயரத்தை விட அதிகமாகவே காணப்படுகிறது.
- ➢ **அமலா, கமலா கதை (1920)** - வங்காளத்தில் ஓநாயால் கடத்திச் செல்லப்பட்டு வளர்க்கப்பட்ட அமலா, கமலா என்னும் பெண் குழந்தைகள் மீட்கப்பட்டு மனித சூழ்நிலைக்கு திரும்பிய பின்னரும் கூட ஓநாய்கள் போன்றே நான்கு கால்களால் நடந்தும், பற்களால் உணவுப் பொட்டலத்தை கிழித்து உட்கொண்டும் வந்தனர்.

SURYA TRB COACHING
www.Padasalai.Net

Contact: 81246 02428, 94435 64713, 75983 02428

- **அயோவா பல்கலைக்கழகச் சோதனை** - ஒரே மரபைப் பெற்றுள்ள ஒருகரு இரட்டையர்கள் ஒருவருக்கு நர்சரி பள்ளிக் கல்வி அளிக்கப்பட்டது. மற்றொரு குழந்தைக்கு அவ்வித பயிற்சி ஏதும் அளிக்கப்படாத போது, பயிற்சி பெற்ற குழந்தையே கல்வி அடைவில் தேர்ச்சி பெற்றுத் திகழ்ந்தது.
- குறவர் இனக் குழந்தைகள் மீது நடத்தப்பட்ட சோதனைகள் மூலம் நுண்ணறிவுக்கும், சமூக கலாச்சார சூழ்நிலைக்கும் இடையே நிலவும் நேரிடைத் தொடர்பு வெளிப்பட்டது.
- ***ஸிரில்பர்ட்*** முதலான மேலை நாட்டு அறிஞர்களும், இந்தியாவில் டில்லியைச் சேர்ந்த ***சங்கர்*** என்பவரும் நடத்திய ஆய்வுகள் இளங்குற்றவாளிகளுக்கும் அவர்கள் வளர்ந்த சூழ்நிலைகளுக்கும் உள்ள நேரிடைத் தொடர்பை வெளிப்படுத்துகின்றன.
- **ராமுவின் கதை** - ராமு என்ற பையன் ஓநாயால் அடித்துச் செல்லப்பட்டதன் விளைவாக ஓநாய் மாதிரியே செல்லுதல், சாப்பிடுதல், கத்துதல் போன்ற செயல்களைச் செய்தான்.
- **லிப்டன்** - "ஓர் ஆய்வில் 14 அனாதைக் குழந்தைகளை நல்ல சூழலில் வளர்த்த போது அவர்களது நுண்ணறிவு ஈவு கூடியது"
- **காண்டல் ஆராய்ச்சி** - "ஐரோப்பாவில் 500 அறிவியல் அறிஞர்களை ஆராய்ச்சி செய்து சூழ்நிலையே அறிவியல் அறிஞர்களை உருவாக்குவதில் முக்கியப் பங்கு வகிக்கிறது"
- ஒரு கரு இரட்டையர்களை ஒரே சூழலில் வளர்க்கும் போது நுண்ணறிவு ஈவு உறவு (r) =0.87
- ஒரு கரு இரட்டையர்களை வெவ்வேறு சூழலில் வளர்க்கும் போது நுண்ணறிவு ஈவு உறவு (r) = 0.75
- சமவயதுள்ள எந்த வகையிலும் உறவில்லாத குழந்தைகளை ஒரே சூழலில் வளர்க்கும் போது நுண்ணறிவு ஈவு உறவு (r) = 0.25
- சமவயதுள்ள எந்த வகையிலும் உறவில்லாத குழந்தைகளை வெவ்வேறு சூழலில் வளர்க்கும் போது நுண்ணறிவு ஈவு உறவு (r) = 0 (உறவு இல்லை)

மனித வளர்ச்சி = மரபுக் காரணிகள் + சூழ்நிலைக் காரணிகள்

PG TRB-2006


- ***மக்கைவர் மற்றும் பேஜ்*** -- "வாழ்க்கையின் ஒவ்வொரு நிலையும், நிகழ்ச்சியும் மரபு, சூழ்நிலை ஆகிய இரண்டின் இணைந்த செயல்பாட்டிலேயே அமைகிறது"

சில முக்கிய மனித வளர்ச்சிப் பருவங்களும் அவற்றின் இயல்புகளும்

- பிறப்பு முதல் இறப்பு வரை தொடர்ச்சியாக பல மாறுதல்களை மனிதன் அடைந்துகொண்டே போகிறான். இவற்றை '***வளர்ச்சிப் பருவங்கள்***' அல்லது '***வளர்ச்சி நிலைகள்***' (Developmental Stages) என்று உளவியல் அறிஞர்கள் குறிப்பிடுவர்.
- **ஆண்டர்ஸன்** - "படிப்படியாக சுதந்திரத்துடனும், கட்டுப்பாட்டுடனும் செயற்படுதல் வளர்ச்சியின் அறிகுறி "
- **ஆண்டர்ஸன்** - "மனித வளர்ச்சியில் ஐந்து வித முன்னேற்றங்கள் காணப்படுகின்றன என்றும், இவை ஒன்றோடொன்று இணைந்தவை என்றும் குறிப்பிடுகிறார்".

முக்கிய வளர்ச்சிப் பருவங்கள் (Important Developmental Stages)

- மனித வளர்ச்சிப் பருவங்களை இரண்டு முக்கிய நிலைகளாகப் பிரித்துக் கூறியவர்- ***E.B.ஹர்லாக்***



SURYA TRB COACHING
www.Padasalai.Net

Contact: 81246 02428, 94435 64713, 75983 02428

II.பிறப்புக்குப் பிந்தைய நிலைகள் (Postnatal Stage)

வ.எண்	பருவ நிலைகள்	வயது நிலை
1	குழவிப்பருவம் (Infancy) / சிறு குழந்தைப் பருவம்	பிறப்பு முதல் 2 வயது வரை
2	குழந்தைப் பருவம் / பிள்ளைப் பருவம் (Childhood)	3 முதல் 10 வயது வரை
	முன் குழந்தைப் பருவம்	3 முதல் 6 வயது வரை
	பின் குழந்தைப் பருவம்	7 முதல் 10 வயது வரை
3	குமரப் பருவம் (Adolescence)	11 முதல் 19 வரை
	முன்குமரப்பருவம்	11 முதல் 13 வரை
	குமரப் பருவம்	13 முதல் 15 வயது வரை
	பின் குமரப் பருவம்	16 முதல் 19 வயது வரை
4	முதிர்பருவம் (Adulthood)	20 முதல் 50 வயது வரை
	முன்முதிர் பருவம்	20 முதல் 29 வயது வரை
	பின்முதிர்பருவம் அல்லது நடுவயது	30 முதல் 50 வயது வரை
5	தளர்வுப் பருவம்	50 முதல் 60 வயது வரை
6	முதுமைப் பருவம்	60 வயதிலிருந்து இறப்பு வரை

- ✓ பிள்ளைப்பருவத்திற்குப் பின் குழந்தைகளால் கருத்துக்களை உருவாக்க இயலும்.

வளர்ச்சிசார் செயல்கள் (Developmental Tasks)

- ✓ ***ஹேவிகர்ஸ்ட்*** -- "சமூக எதிர்பார்ப்புகளுடன் கூடிய, பல்வேறு வயதுகளுக்கான வளர்ச்சியினைக் குறிக்கும் நடத்தைகளும் செயல்களும் வளர்ச்சிசார் செயல்கள் எனப்படும்." **(PG-TRB-2015, TET-I-2012, PG TRB-2007)**
- ✓ ***ஹேவிகர்ஸ்ட்*** - "ஒருவனுடைய வாழ்க்கையில் ஒரு குறிப்பிட்ட பருவத்தில் அல்லது வயதில் வளர்ச்சிசார் செயல்கள் ஏற்படுகின்றன. இச்செயல்கள் வெற்றிகரமாக இருக்குமாயின் மகிழ்ச்சியையும் பின்னர் வரப்போகும் செயல்களில் வெற்றியையும் அளிக்கும்.இச்செயல்களில் தோல்வி ஏற்பட்டால் மகிழ்ச்சியின்மையும் அடுத்து எழும் செயல்களில் தோல்வியும் கிட்டும்"
- ✓ உதாரணமாக குழந்தைப்பருவம் முடிவதற்குள் தங்களது குழந்தைகள் படிக்க, பேச, எழுதக் கற்பது எல்லா சமுதாயத்திலும் எதிர்பார்க்கப்படுகிறது. **(PG TRB-2005)**
  - i). முதிர்ச்சியடைதலின் விளைவாக - (எ.கா): சிறு குழந்தை நடக்கக் கற்றல்
  - ii). பண்பாட்டுச் செல்வாக்குக் - (எ.கா): படிக்க, எழுதக் கற்றல்
  - iii). தனிப்பட்டோரின் மதிப்புகள், அவாக்கள் - (எ.கா): வாழ்க்கைத் தொழிலைத் தேர்ந்தெடுத்தல்

கவனம் (Attention)

கவனம்- பொருள் (Meaning)

- ✓ நமது நனவுப் பரப்பில் உள்ள பல்வேறு தூண்டல்களில், ஒரு குறிப்பிட்ட சமயத்தில் நமது தேவையுடன் இணைந்த ஒன்றினைத் தேர்ந்தெடுத்து புலன்காட்சி செயலுக்கு ஆட்படுத்துவதையே 'கவனித்தல்' என்கிறோம்.
- ✓ உலகத்தில் உள்ள எல்லாப் பொருட்களின் மீதும் நனவுகளை குவிப்பதை விட ஒரே ஒரு பொருளின் மீது நனவைக் குவிப்பது 'கவனம்' எனப்படும்.
- ✓ கவனம் என்பது தனிமனிதன் ஏதாவது ஒன்றைச் செய்வதற்கான தயார்நிலையை அல்லது மனப்பான்மையைக் குறிக்கிறது.
- ✓ மனமானது ஒன்றில் நிலைப்பட்டு விட்ட பிறகு வேறு எந்தச் சூழலிலும் மனம் ஈடுபாடு கொள்ளாத நிலையில் ஆழ்ந்திருக்கும் நினைவலைக்கு கவனம் என்று பெயர்.
- ✓ ஒரே ஒரு பொருளைப் பற்றிய தெளிவான கருத்துக்களை மனதின் முன் வைப்பது கவனம் ஆகும்.
- ✓ குழந்தைகளின் கவனத்தை மிக விரைவாக ஈர்ப்பதற்கு ஆசிரியர் நகரும் பொருட்களை அதிக அளவில் பயன்படுத்த வேண்டும். **(TET-I-2013)**

SURYA TRB COACHING
www.Padasalai.Net

Contact: 81246 02428, 94435 64713, 75983 02428

கவனம் - வரையறை (Definition)

- ***மக்டூகல்*** - "ஒரு பொருளைத் தெளிவாக அறியச் செய்யப்படும் முயற்சியே கவனம் ஆகும்"
- ***மக்டூகல்*** -"கவர்ச்சி அல்லது அக்கறை மறைமுகக் கவனம் ஆகும்; கவர்ச்சி செயற்படும்போது கவனம் தோன்றுகிறது"
- ***ரூபின்*** -"நம் நனவு நிலைப்பரப்பிலுள்ள பொருட்களை உரு, பின்னணி கொண்டு நம் கவனத்துக்கு உட்படுத்துகிறோம்"
- ***உட்வொர்த்*** - "கவனம் என்பது இராணுவ வீரர் சில செயல்களைச் செய்வதற்கு தயார்நிலையில் இருக்கிறார் என்பது பொருள்"
- ***வாலென்டைன்*** - "கவனம் என்பது மனசக்தியைக் குறிப்பது அல்ல. இது மனப்பான்மையை அல்லது மனதின் செயல்களைக் குறிக்கிறது"
- ***ராஸ்*** - "கவனம் என்பது ஒரு பொருளைப் பற்றிய தெளிவான கருத்துக்களை அடையும் முறையை மனதின் முன் வைப்பது ஆகும்"

Spl.TET-II-2014

கவனத்தின் பண்புகள் (Characteristics of Attention)

- ✓ இது தேர்ந்தெடுக்கப்பட்ட செயலாகும்.
- ✓ இது அறிதல், உணர்தல், விருப்பம் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது.
- ✓ இது குறுகிய பரப்பெல்லைகளைக் கொண்டுள்ளது.
- ✓ இது ஊசலாடும் தன்மை கொண்டது.
- ✓ இது புதிய பொருட்களினால் எப்பொழுதும் கவரப்படுகிறது.
- ✓ இது ஒத்துப்போகக் கூடிய தன்மையை உருவாக்குகிறது.
- ✓ இது புலன்காட்சிக்கு அடிப்படை ஆகும்.
- ✓ கவனத்திற்கு அடிப்படை ஆர்வமாகும்.
- ✓ ஒரு பொருளின் மீது 10 வினாடிகளுக்கு மேல் கவனம் செலுத்த முடியாது.

கவனத்திற்கும் ஆர்வத்திற்கும் இடையேயுள்ள தொடர்பு

- ***ராஸ்*** - "கவனமும் ஆர்வமும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போன்றதாகும். ஆர்வம் என்பது மனதின் விஷேச குணம்.கவனம் என்பது மனதின் செயல்முறை.ஆர்வமே கவனத்தை எங்கே செலுத்த வேண்டும் என நிர்ணயிக்கின்றது. ஆர்வமே கவனத்தை வழினடத்தும் சர்வாதிகாரி"
- ***மக்டூகல்*** - "ஆர்வம் என்பது மறைந்திருக்கும் கவனம். கவனம் ஆர்வத்தின் செயல் வடிவம்"

கவன வகைகள்

RETET –II - 2012

- முயற்சிசார் கவனம் (இச்சைக்குட்பட்ட கவனம்)
  - தொகுமுயற்சிசார் கவனம்
  - வெளிப்படை முயற்சிசார் கவனம்
- முயற்சியற்ற கவனம் (இச்சைக்குட்படாத கவனம்)
- பழக்கக் கவனம்

1. முயற்சிசார் கவனம் (Voluntary or Volitional Attention)

- ✓ இதன் வேறு பெயர் - விருப்பமுள்ள கவனம், இயற்கையான கவனம், செயலின்றி கவனித்தல்
- ✓ ஒரு குழந்தையானது கடினமான பகுதியை மனத்திறனோடு புரிந்து கொள்ள முயற்சி செய்தால் அவனுடைய கவனமானது முயற்சிசார் கவனம் ஆகும்.
- ✓ முயற்சிசார் கவனம் அகக்காரணிகளால் தோற்றுவிக்கப்படுகின்றன.
- ✓ ***எ.கா:*** தேர்வு அறையில் மாணவரின் கவனமானது வினாத்தாளில் மட்டுமே இருக்கும். மேற்பார்வையாளரின் நடவடிக்கை போன்ற இடையூறுகளிலிருந்து அவனுடைய கவனமானது விலகி இருக்கும்.

2. முயற்சியற்ற கவனம் (Involuntary or Non-Volitional Attention)

- ✓ இதன் வேறு பெயர் - விருப்பமற்ற கவனம், செயற்கையான கவனம், செயலோடு கவனித்தல்
- ✓ இது தானாகவே இருக்கக் கூடியது. தனியொருவரின் முயற்சி இதற்கு தேவைப்படாது. நம்முடைய கவனத்தை ஒரு பொருள் தானாகவே ஈர்க்கும்
- ✓ இச்சைக்குட்படாத கவனம் புறக்காரணிகளால் தோற்றுவிக்கப்படுபவை. இத்தகைய கவனத்திற்கு அதிக அளவு முயற்சி தேவையில்லை.

SURYA TRB COACHING

Contact: 81246 02428, 94435 64713, 75983 02428

- ✓ *எ.கா:* நாம் புத்தகம் வாசித்துக் கொண்டிருக்கும் போது பக்கத்து வீட்டில் பாட்டு ஒலித்தால் நம்முடைய கவனம் இசையின் பக்கம் தானாகவே செல்லும். மேலும் அழும் குழந்தையின் குரலைக்கேட்டு ஓடிவரும் தாய் இதற்கு உதாரணமாகக் கூறலாம்.

3. பழக்கக் கவனம் (Habitual Attention)

- ✓ இது ஓரளவு முயற்சியற்ற கவனம் ஆகும்.
- ✓ முயற்சியற்ற இயல்பான கவனம் பழக்கத்தின் விளைவாக ஒரு பொருளிலோ, செயலிலோ நிலைத்து நிற்றலை நாம் பழக்கக் கவனம் எனலாம்.

கவனித்தலின் அடிப்படைக் கோட்பாடுகள் (Theories of Attention)

1. தேர்வு செய்தல் கோட்பாடு (Selection Theory)

- ✓ நமது நனவு நிலைக்குள் இன்னமும் நுழையாத விவரங்களில் (தூண்டல்களில்), சிலவற்றைத் தேர்ந்தெடுத்து நனவிற்குள் நுழைய அனுமதிப்பதும், வேறு சிலவற்றை புறக்கணிப்பதும் கவனித்தலின் தன்மை எனப்படுகிறது.
- ✓ இது தேர்வு செய்தல் முறையின் விளைவாக ஏற்படுகிறது.

2.ஹெப் (Hebb) என்பாரது கோட்பாடு

- ✓ ஹெப் என்பவர் கவனித்தலை பெருமூளையின் செயலாகக் கருதுகிறார்.

3.பிராட்பென்ட் (Broadbent) என்பாரது கோட்பாடு

- ✓ பிராட்பென்ட் தற்காலச் செய்திக் கோட்பாட்டின் அடிப்படையில், கவனித்தலை விளக்க முற்பட்டுள்ளார்.
- ✓ 'உட்புகும் தூண்டல்கள்', 'குறுகிய கால சேமிப்பு', 'வடிகட்டுதல்', 'குறிப்பிட்ட அளவு விவரங்களை மட்டும் கடத்தும் திறன்', 'அளவுக்கு அதிகமான பளுவினைத் தவிர்த்தல்', 'வெளிப்படும் துலங்கள்' போன்ற செய்திக் கோட்பாட்டோடு தொடர்புடைய பல்வேறு கருத்துகளின் அடிப்படையில், கவனித்தலை இவர் உருவகப்படுத்தியுள்ளார்.

கவனித்தலைத் தீர்மானிக்கும் காரணிகள்

அகக்காரணிகள்	*புறக்காரணிகள்*
ஆர்வம்	உருவ அளவு
தேவை	அடர்த்தி (அ) செறிவு
ஆயத்த நிலை	மாற்றம்
மன நிலை	வேறுபாடு
உடல் நிலை	புதுமை
மனவெழுச்சி	இயக்கம் (அ) அசைவு
பழக்கவழக்கம்	திரும்பத் திரும்பத் தோன்றுதல்
மரபு	முழுமை பெற்ற உருவம்
இயல்பூக்கம்	

RETET – II – 2012

A. அகக் காரணிகள் (Internal Factors)

- ✓ நமக்குள் இருந்து கவனத்தினை நிர்ணயிக்க காரணமாக அமையும் காரணிகளை 'அகக் காரணிகள்' என்பர்.
- ✓ அகக் காரணிகளின் வேறு பெயர் - தனி ஒருவனிடம் இருக்கும் காரணிகள்(Subjective Factors)

1.ஆர்வம் (Interest)

எ.கா:

- ✓ வயலின் வித்துவான் கடைத் தெருவில் செல்லும்போது, வயலின் விற்கும் கடை அவரது கவனத்தை ஈர்க்கிறது.
- ✓ கல்லூரியில் ஒரு மாணவன் சேரும்போது, தனது ஆர்வத்தின் அடிப்படையிலையே தனது பாடத் துறையைத் தெரிவு செய்கிறான்.
- ✓ கணினித்திறன், தொழில் திறன், விஷயங்களை அறிந்து கொள்ளுதல் யாவும் ஆர்வத்தின் அடிப்படையிலையே அமைகிறது.

2. தேவை (Need)

எ.கா:

- ✓ குறிப்பிட்ட பேருந்திற்காக பேருந்து நிலையத்தில் காத்திருக்கும் ஒருவருக்கு அந்த எண் கொண்ட பேருந்தைப் பார்ப்பதிலையே கவனம் இருக்கும்.

SURYA TRB COACHING
www.Padasalai.Net

- ✓ அதே போன்று பசியோடு இருக்கும் ஒருவன் கடைத்தெரு பக்கம் சென்றால் உணவு விடுதியின் பெயர் பலகை, சிறியதாக இருந்தாலும் கூட அவன் கவனத்தில் பளிச்சிடுகிறது.
- ✓ ஆனால் பக்கத்தில் உள்ள புத்தகக் கடையின் விளம்பரப் பலகை அவன் கண்ணில் படாது.

3.ஆயத்த நிலை (Preparation)

எ.கா:

- ✓ இரயில் நிலையத்தில், நண்பரை வரவேற்க செல்லும் ஒருவர், அதிலேயே குறியாக இருப்பதால் அவரைச் சுற்றியிருக்கும் யாரையும் கவனிப்பதில்லை; கூப்பிட்டாலும் காதில் விழுவதில்லை; மாறாக இரயிலில் வந்து இறங்கும் நண்பரை கூட்டத்தினிடையே வெகு எளிதாகக் கண்டு பிடித்து வரவேற்பார்.
- ✓ ஆயத்த நிலையுடன் தொடர்புடைய கூற்று- Preparatory stage of the Lesson

4.மன நிலை (Mood)

எ.கா:

- ✓ ஆசிரியர் சில சமயங்களில், தான் பாடம் நடத்தும் மனநிலையில் இல்லை என்று சொல்வதும், மாணவன் நான் பாடத்தைக் கவனிக்கும் மன நிலையில் இல்லை என்று சொல்வதையும் நாம் கேட்க நேரிடுகிறது.
- ✓ தேர்வு நெருங்கும்போது மாணவன் மனநிலை தேர்வுக்கான பாடங்களைப் பற்றி இருக்கும். எனவே தேர்வுப் பாடங்களை அவன் ஆர்வமுடன் கவனிக்க முற்படுகிறான்.

5.உடல் நிலை (Physiological Condition)

எ.கா:

- ✓ தலைவலி, வயிற்று வலி, காய்ச்சல் போன்ற உடல் நிலை பாதிக்கப்பட்ட நிலையில் ஒருவரால் எந்த ஒரு செயலிலும் அதிக கவனம் செலுத்த முடியாது.

6. மனவெழுச்சி (Emotion)

எ.கா:

- ✓ ஒரு குழந்தையானது சோகமான சூழலில் இருப்பதை விட மகிழ்ச்சியான மனநிலையில் இருக்கும் போது மிகவும் சுறுசுறுப்புடன் காணப்படும்.

7. பழக்கவழக்கம் (Habit)

எ.கா:

- ✓ நல்ல பழக்கவழக்கமுள்ள குழந்தைகள் மிகவும் கவனத்துடன் இருக்கும்.

8. மரபு (Heredity)

எ.கா:

- ✓ இசையை இரசிப்பது குழந்தையானது பிறந்ததிலிருந்தே அத்தகைய பண்பைப் பெற்றிருக்கும். இசையும், இசைக் கருவிகளையும் அவன் விரும்புவான்.

9. உள்ளுணர்ச்சி அல்லது இயல்பூக்கம் (Instinct)

எ.கா:

- ✓ ஒரு குழந்தையானது பசியாய் இருக்கும்பொழுது குழந்தையின் கவனமானது ரொட்டியிலும் , உணவிலும் தான் இருக்கும்.

B.புறக்காரணிகள் (External Factors)

- ✓ கவனிப்பவனுக்கு வெளியேயிருந்து செயல்படும் காரணிகளை 'புறக்காரணிகள்' என்பர்.
- ✓ புறக் காரணிகளின் வேறு பெயர் - பொருள்களின் காரணிகள்(Objective Factors)

1.உருவ அளவு (Size)

எ.கா:

- ✓ செய்தித் தாள்களில் வரும் விளம்பரங்களில் முழுபக்க அளவிலானதொரு விளம்பரம், அளவில் சிறிய கால்பக்க அளவுள்ள விளம்பரத்தைக் காட்டிலும், வெகுவாக நம் கவனத்தை ஈர்க்கிறது.
- ✓ பலரும் சாலையோரங்களில் பெரிய பெரிய விளம்பரப் பலகைகள் வைப்பதிலும், அரசியல் தலைவர்களின் உருவத்தட்டிகளை பெரிய அளவில் நிறுவுவதற்கும் போட்டி போடுகின்றனர்.
- ✓ கரும்பலகையில் பெரிய பெரிய எழுத்துக்களில் எழுத வேண்டும்.
- ✓ வகுப்பில் அதிக உயரமான மாணவன் ஆசிரியரின் கவனத்தை வெகுவாக ஈர்க்கிறான்.

2.செறிவு (அ) அடர்த்தி (Intensity)

எ.கா:

- ✓ பெருத்த ஓசை, செறிவுமிக்க வண்ணங்கள், தீவிரமான மணம் போன்றவை நம் கவனத்தை ஈர்ப்பதில் வெற்றி பெறுகின்றன.

SURYA TRB COACHING
www.Padasalai.Net

Contact: 81246 02428, 94435 64713, 75983 02428

- ✓ வகுப்பறையில் பாடம் நடத்தும் போது, சாலையில் செல்லும் மோட்டார் வாகனங்கள், பறவைகளின் சப்தம், சாலையில் செல்வோர் பேசும் சப்தம் எனப் பலத் தூண்டல்கள் மாண்வனை பாதித்தாலும், அந்த சப்தங்களை விட ஆசிரியர் உரத்த குரலில் பேசி பாடம் நடத்தினால் மாணவர்களது கவனத்தை தன்பால் நிலைப்படுத்த முடியும்.
- ✓ ஆசிரியரின் உயர்ந்த குரலானது அவரது மெல்லிய குரலை விட அதிக கவனத்தை மாணவரிடம் கொண்டு வருகிறது.
- ✓ அதிக சப்தம், பிரகாசமான நிறங்கள் போன்றவை நம்முடைய கவனத்தை எளிதாக கவரும். ஆனால் குறைந்த செறிவு உடையவை நம்முடைய கவனத்தைக் கவராது.

3.மாற்றம் (Change)

எ.கா:

- ✓ அறையில் சுற்றிக் கொண்டிருக்கும் மின் விசிறியைக் கவனிக்காத நாம், திடீரென மின் விசிறியின் இயக்கம் நின்று போனால், உடனே மின்விசிறியின்பால் நம் கவனம் செல்கிறது.
- ✓ வகுப்பறையில் கண் அயரும் மாணவன், திடீரென நிசப்தம் தோன்றும்போது, என்னவோ ஏதோவென்று நினைத்து கண் விழித்துக் கொள்கிறான்.
- ✓ நமது வீட்டினுள் நுழையும் போது, மேஜை நாற்காலிகள் இடம் மாறியிருந்தால், அது நம் கவனத்தைக் கவர்கின்றது.
- ✓ பள்ளியில் தொடர்ச்சியான சப்தம் இருந்தால் மற்றவர்களால் அது கவனிக்கப்படமாட்டாது. ஆனால் அமைதியான நேரத்தில் குண்டூசி விழும் சப்தம் அல்லது காதைச் செவிடாக்கும் சப்தம் இருந்தால் அது மற்றவர்களுடைய கவனத்தை கட்டாயம் ஈர்க்கும்.

4.வேறுபாடு (Contrast)

எ.கா:

- ✓ ஒருவர் அணிந்திருக்கும் வெள்ளைச் சட்டையில் கருப்பு மை சிறிதே தெளித்திருந்தாலும் நன்கு புலப்படும்.
- ✓ தார் ரோட்டின் மையத்தில் அமைந்திருக்கும் கோடு மஞ்சள் வண்ணத்தில் இருப்பதற்கும், ஆண்கள் ஆழ்கலர் பேண்ட் அணிந்து வெளிநிற சட்டை அணிவதற்கும், கரும்பலகையில் வெள்ளை வண்ண சுண்ணக்கட்டியால் எழுதுவதற்கும் காரணம் வேறுபாடு மூலம் கவனத்தை ஈர்ப்பதே.
- ✓ குண்டான பெண்ணுடன் செல்லும் அவளுடைய ஒல்லியான கணவனை வீதியில் எல்லோரும் வெறித்துப் பார்ப்பர்.
- ✓ உயரமான குழந்தையின் அருகில் குட்டையான குழந்தை மற்றும் வெள்ளை ஆடையின் மீது கருப்புப் புள்ளி போன்றவை நம்முடைய கவனத்தை எளிதில் கவரும்.

5.புதுமை (Novelty)

எ.கா:

- ✓ எங்கும் "உள்ளே வர அனுமதியில்லை" என்ற வாசகத்தைப் பார்த்து பழகிய நமக்கு, "அனுமதி பெற்று உள்ளே வரவும்" என்று எழுதப்பட்டிருப்பது நம் நினைவில் என்றும் தங்கும்.
- ✓ லாரிகளின் பின் பொதுவாக எழுதப்பட்டிருக்கும்,"ஒலியெழுப்புக" என்பதற்குப் பதில் , "ஒலி எனக்கு, வழி உனக்கு" என்று எழுதினால் நிச்சயம் கவனத்தை ஈர்க்க முடியும்.
- ✓ குழந்தையானது புதிய விளையாட்டுப் பொருளால் ஈர்க்கப்படுகிறது.

6.அசைவு (Movement)

எ.கா:

- ✓ அழும் குழந்தையின் கவனத்தை திசை திருப்ப, தாய் அசையும் பொருட்களான பறக்கும் காக்கை, நகர்ந்து செல்லும் வாகனங்கள் ஆகியவற்றையே சுட்டிக் காட்டுகிறாள்.
- ✓ விளம்பரப் பலகைகள் பார்ப்போரின் கவனத்தை எளிதில் கவர்வதற்கு ஒளிவிளக்குகள் மாறி மாறி அணைந்து ஒளிர்விடும் வகையில், அமைக்கப்பட்டு அசைவது போன்ற தோற்றம் ஏற்படுத்தப்படுகிறது.
- ✓ வகுப்பறையில் ஆசிரியர் அங்கும் இங்கும் நகர்ந்தும், சைகைகளைப் பயன்படுத்தியும் கற்பித்தலின் போது மாணவர்கள் கவனத்தை தன்பால் நிலைப்படுத்த முடியும்.

7.திரும்பத் திரும்ப தோன்றுதல் (Repetation)

எ.கா:

- ✓ தொலைக்காட்சி, வானொலி வணிக விளம்பரங்கள் பலமுறை திரும்பத் திரும்ப தோன்றுமாறு அமைந்திடுவதற்கு இதுவே காரணம்.
- ✓ நீதி மன்றப் பணியாளர் வழக்குத் தொடர்புடையோரை கூவி கூவி மூன்று முறை அழைப்பது.

SURYA TRB COACHING

Contact: 81246 02428, 94435 64713, 75983 02428

- ✓ ஆசிரியர் ஒரு பாடத்தைத் திரும்பத் திரும்ப பலமுறை நடத்தும்போது மாணவர்களின் கவனம் அதிகரிக்கின்றது.

8.முழுமை பெற்ற உருவம் (Systematic Form)

எ.கா:

- ✓ அரைகுறையாக விடுபட்டு இருப்பவற்றைவிட, முழுமையடைந்த காட்சிக் கோலங்களை நம் கவனத்தை ஈர்த்து, மனதில் நிலைத்து நிற்பவை.

கவனமின்மை (Inattention)

- ✓ கவனமின்மை என்பது எந்தவொரு குறிப்பிட்ட தூண்டலையும் கவனிக்காத நிலையினைக் குறிப்பிடும்.
- ✓ கவனிக்க வேண்டிய பொருளை கவனிக்காமல் வேறொரு பொருளை கவனிப்பது கவனமின்மை எனப்படும்.
- ✓ கவனத்தில் ஈடுபாடின்மை கவனமின்மை ஆகும்.
- ✓ ஆர்வமின்மை, மனநிலை சரியின்மை, களைப்பு, கவனச் சிதறல் போனறவை கவனமின்மைக்குக் காரணங்களாக அமைகின்றன.
- ✓ ஒரு மாணவனுக்கு படிப்பில் ஆர்வம் இல்லையென்றால் அவன் வகுப்பறையில் ஆசிரியர் பாடம் நடத்துகையில் கவனம் செலுத்த மாட்டான்.

கவனமின்மையின் வகைகள் (Types of Inattention)

1.முழுமையான கவனமின்மை
2.பாதியளவு (பகுதி) கவனமின்மை

கவனக்குலைவு (Distraction)

- ✓ இதன் வேறு பெயர் - கவனச் சிதைவு, கவனச் சிதறல்
- ✓ நாம் மேற்கொண்டுள்ள காரியத்தில் இருந்து நமது கவனம் விலகி, நமக்குத் தேவையற்ற பயன்படாத தூண்டலின்பால் செல்கின்ற வினையினை 'கவனக் குலைவு' என்பர்.
- ✓ நாம் கவனம் செலுத்தும் பொருளினின்றும் நம் கவனத்தை வேறு பக்கம் இழுத்து இடையூறு செய்பவை கவனக்குலைப்பான்கள் (Distractors) ஆகும்.
- ✓ வகுப்பறைக்கு வெளியே எழும் சப்தங்கள், வெகு தொலைவிலிருந்து கேட்கும் இசையொலி, அசாதராண வெப்பநிலை, போதிய வெளிச்சமின்மை, சரியான இருக்கைகள் இல்லாதிருத்தல் போன்றவற்றால் மாணவர்களின் கவனம் குலையக்கூடும்.
- ✓ *எ.கா:* வகுப்பறையில் மாணவன் புத்தகத்தைப் படித்துக் கொண்டிருக்கும் பொழுது, வெளியிலிருந்து வரும் சப்தமானது மாணவனின் கவனத்தைச் சிதறடிக்கிறது.

கவனப்பிரிவு (Division of Attention)

- ✓ இதன் வேறு பெயர் -கவனப் பகுப்பு
- ✓ இரு தனித்தனிச்செயல்களை ஒரே சமயத்தில் செய்யும்போது நமது கவனம் பிரிக்கப்படுகிறது.இதையே கவனப் பிரிவு எனலாம்.
- ✓ ஒரே சமயத்தில் இரு செயல்களைக் கவனத்துடன் செய்ய முடியாது என்று உளவியல் அறிஞர்கள் கருதுகின்றனர்.
- ✓ *எ.கா:* அடுத்தவரிடம் பேசிக்கொண்டே கம்பளிச் சட்டை பின்னுதல், சாப்பிட்டுக் கொண்டே செய்தித் தாள் படிப்பது.

கவனப் பிரிவின் சோதனைகள்:

- ✓ 1. இரு உடல் சார் செயல்களை ஒரே சமயத்தில் செய்யும் பொழுது நிகழும் கவனப்பிரிவு
- ✓ 2.இரு உளச்சார் செயல்களை ஒரே சமயத்தில் செய்யும்பொழுது நிகழும் கவனப்பிரிவு
- ✓ 3.ஒரு உடல் சார் செயல், ஒரு உளச் சார் செயல் ஒரே சமயத்தில் செய்யும்பொழுது நிகழும் கவனப்பிரிவு

கவன மாற்றம் (அ) கவன ஊசல் (Shifting of Attention or Fluctuation of Attention)

- ✓ தொடர்ந்து ஒரு பொருளின் மீது 10 வினாடிகளுக்கு மேல் நாம் கவனம் செலுத்த முடியாது.
- ✓ ஏனெனில் நமது கவனம் ஊசலாடும் தன்மையுடையது.
- ✓ ஒரு பொருளிலிருந்து மற்றொன்றிற்கு அது தாவிக் கொண்டே இருக்கும்.
- ✓ *எ.கா:* ஆசிரியர், வகுப்பறையில் நடத்தும் பாடத்தில் கவனம் செலுத்திக் கொண்டு வரும் மாணவனின் கவனம் அவ்வப்போது வகுப்பறைக்கு வெளியே நிகழும் நிகழ்ச்சிகள், போவோர், வருவோர் பக்கம் சென்று திரும்பவும் ஆசிரியரின் பாடத்திற்கே வருகிறது.
- ✓ பார்வை கவனத்தில் ஏற்படும் மாறுதல்களைச் (கவன ஊசல்) சோதனை மூலம் கண்டறிய உதவும் கருவி - *மேசன்ஸ் தட்டு (Masson's Disc)*

TET-I-2012, RE-TET - I-2012

TET - II -2012. PG TRB - 2015

SURYA TRB COACHING

Contact: 81246 02428, 94435 64713, 75983 02428

கவன வீச்சு (Span of Attention)

- ✓ கவன வீச்சின் வேறு பெயர்கள் - புலன்காட்சி வீச்சு, பார்வை கவன வீச்சு
- ✓ ஒரே பார்வையில், மிகக் குறுகிய நேரத்தில், எத்தனைப் பொருட்களை அல்லது தூண்டல்களை ஒருவன் உணர்ந்து அறிகிறான் என்பதே அவனது கவன வீச்சு எனப்படும்.
- ✓ கவன வீச்சின் அளவு நமது நனவுப் பரப்பின் குவிமையத்தில் ஒரே சமயத்தில் எத்தனை பொருட்கள் இடம்பெறக்கூடும் என்பதைப் பொறுத்தது.
- ✓ கவன வீச்சை அளவிடப் பயன்படும் கருவி - ***கவன வீச்சு செறிவுக் கருவி (Tachistoscope)***
- ✓ டாசிஸ்டாஸ்கோப் என்னும் கருவியை கண்டுபிடித்தவர் - ***R.B.கேட்டல்***

PG TRB (2001, 2003, 2012)

- ✓ கவன வீச்சில் அதிக அளவு தனியாள் வேறுபாடுகள் உள்ளன.
- ✓ கவன வீச்சுத் திறன் ஆளுக்கு ஆள் மாறுபாட்டு அமைகிறது.
- ✓ பளிங்குக் கற்களின் மீது சோதனை செய்து கவன வீச்சினைக் கண்டறிந்தவர் - ***ஜென்சன் (1870)***
- ✓ முதிர்ச்சி அடைந்த ஒருவனின் கவன வீச்சு 6 அல்லது 7 ஆக இருக்கும்.
- ✓ ***எ.கா:*** மிக விரைவாகச் செல்லும் வாகனங்களுக்கு 4 முதல் 6 வரையிலான எண்கள் தரப்படுகிறது.இதேபோன்று தொலைப்பேசிக் கருவிகளுக்கும் அதிக அளவு 7 அல்லது 8 எண்களே தரப்படுகிறது.
- ✓ மிக அதிக அளவிலான எண்கள் இருந்தால் நாம் கவனத்தில் கொள்ள முடியாது.

புலன் உணர்வும் புலன் காட்சியும் (Sensation & Perception)

புலன் உணர்வு (Sensation)- பொருள்

- ✓ மனிதனின் புலன் உறுப்புகள் 'அறிவின் வாயில்கள்' (Gateways of Knowledge) என அழைக்கப்படுகின்றன.

வ.எண்	*புலன் உறுப்பு*	*புலன் உணர்வு*	*புலன் காட்சி*	*புலனுணர்ச்சி அனுபவம்*
1	கண்கள்	பார்வைத் தூண்டல்கள்	பார்வை	நிறம்,ஒளி,உருவம்
2	காதுகள்	கேட்டல் தூண்டல்கள்	கேட்டல்	பலவிதமான ஒலிகள்
3	மூக்கு	வாசனைத் தூண்டல்கள்	வாசனை	நறுமணம், கெட்ட வாசனை
4	நாக்கு	சுவைத் தூண்டல்	சுவைத்தல்	இனிப்பு, புளிப்பு, காரம்
5.	தோல்	தொடுதல் தூண்டல்	தொடுதல்	சூடு, குளிர், வலி, அழுத்தம்

- ✓ புலன் உணர்வு என்பது ஆக்கப்பூர்வமான, அறிவுப்பூர்வமான அனுபவத்திற்குக் காரணமாக உள்ளது.
- ✓ வெளி உலக விபரங்களை அறிந்து கொள்ள வழிவகுப்பது புலன் உணர்வுகளே ஆகும் - ***மர்பி***

புலன் காட்சி (Perception)- பொருள்

- ✓ புலன் உறுப்புகள் வாயிலாகப் பெற்ற புலன் உணர்விற்கு நாம் ஏற்கனவே பெற்றிருக்கும் அனுபவங்களின் அடிப்படையில் பொருள் ஊட்டி தூண்டல் பொருளின் தன்மையை அறிதலே புலன் காட்சி என்கிறோம்.
- ✓ புலன் காட்சி என்பது புலன் தூண்டல்களைப் புரிந்து கொள்ளும் நிலையினைக் குறிக்கும்.
- ✓ வார்த்தைகள் மற்றும் எண்களை வேகத்துடனும் துல்லியமாகவும் பதிவு செய்யும் திறன் - ***புலன் காட்சித் திறன்***

TET – II - 2013

- ✓ புலன் காட்சிக்கு அடிப்படை புலன் உறுப்புகள்.

புலன் காட்சி = புலன் உணர்வு + பொருள்

PG TRB 2013, PG TRB 2015

புலன்காட்சி - வரையறை

- ➢ ***மோஸ்கோ விட்ஸ்*** மற்றும் ***ஆர்கெல்*** - "புலன் காட்சி என்பது ஒரு தூண்டலுக்கோ அல்லது தூண்டல் தொகுதிக்கோ ஒரு பரந்த வீச்சுத் துலங்கலாக இருந்து அந்தத் தூண்டலில் அடங்கியுள்ள செய்தியை ஒருமைப்படுத்துகின்ற செயல் முறையாகும். முன் அனுபவங்களிலிருந்து பெறப்பட்ட ஏனைய பிற தூண்டல்களின் பொருளும் இதனுடன் சேர்க்கப்பட வேண்டிய ஒன்றேயாகும்"
- ➢ ***விக்கென்ஸ்*** மற்றும் ***மேயர்*** - "ஒரு நிகழ்ச்சியை மாற்றியமைக்கத்தக்க வகையில் புலன் காண்பவரை எதிர்வினை கொள்ள செய்யுமாறு தூண்டல்களுக்கு முக்கியத்துவம் அளிக்கச் செய்யும் ஓர் செயல்முறையே புலன் காட்சி ஆகும்"
- ➢ ***மர்பி*** - "ஒரு சில முக்கியப் பகுதிகளை கீழும் மேலும் தாழ்த்தவும், உயர்த்தவும் செய்தலின் சூழ்நிலையுடன் இணக்கம் கொள்ளும் ஒரு வழியே புலன் காட்சியாகும்."

SURYA TRB COACHING
www.Padasalai.Net

Contact: 81246 02428, 94435 64713, 75983 02428

- ***ஸ்டேக்னர்*** மற்றும் ***கார்வொஸ்கி*** - "புலன் களின் வழியே புறத்தேயுள்ள பொருட்கள், நிகழ்ச்சிகள் ஆகியவற்றைப் பற்றிய அறிவினைப் பெறும் செயல் முறையே புலன் காட்சியாகும்"
- ***ஹென்றி ஜி.கேரட்*** - "நம்மைச் சுற்றியுள்ள பொருட்களை நாம் உணர்ந்து கொள்வதற்கான அமைப்புச் செயல்முறையே புலன் காட்சியாகும்"
- ***மோரி கோலிம்*** மற்றும் ***ஜேம்ஸ் ட்ரேவர்*** - "புலனுணர்வால் எந்தவொரு புலனோ அல்லது புலன்களோ தாக்குறுவதால் ஒரு பொருளை அல்லது நிலைமையைப் புரிந்து கொள்வதாகும்"

புலன் காட்சியின் பண்புகள் (Characteristics of Perception)

- ✓ புலன் காட்சியானது அர்த்தமுள்ளது.
- ✓ புலன் காட்சியானது தேர்ந்தெடுக்கப்பட்ட செயலாகும்.
- ✓ நமது கடந்த கால அனுபவங்கள், புலன் காட்சியின் இயற்கைத் தன்மையை நிர்ணயிக்கின்றன.
- ✓ புலன் காட்சி ஒரு தொகுக்கப்பட்ட நடவடிக்கையாகும்.
- ✓ புலன் காட்சியில் பகுத்தாராய்தலுக்கும் இடம் உண்டு.
- ✓ பகுத்தல், தொகுத்தல் இரண்டும் ஒரே நேரத்தில் உருவாகக் கூடியது.
- ✓ புலன் காட்சியே ஆய்தலின் அடிப்படை
- ✓ புலன் காட்சியின்றி நினைவும், கற்பனையும் எழாது
- ✓ புலன் காட்சி கவனத்துடன் இணைந்தது.

புலன் காட்சியைப் பாதிக்கும் காரணிகள்

அகக் காரணிகள் (தூண்டலால் எழுந்த உணர்வுக்குப் பொருள் கொள்ளுதல்)
- மனநிலை
- கவர்ச்சி
- தேவை
- மனப்பான்மை
- கருத்தேற்றம்
- எதிர்பார்ப்பு

புறக்காரணிகள் (தூண்டல்களைத் தோற்றுவிக்கும் புறப்பொருள்)

புலன் காட்சியின் கூறுகள் - மர்பி
1. புலன் உணர்வு
2. நரம்பு மண்டலம்
3. நமது முந்தைய அனுபவங்கள்
4. மனநிலை

புலன் காட்சி பற்றிய கோட்பாடுகள்

1.புறவயக் கொள்கை (Objective Theory) - ***ஏமிஸ்***
2.அகவயக் கொள்கை (Subjective Theory) - ***ஹெப், முர்பி, புரூணர்***
3.இடைவினைக் கொள்கை (Interaction Theory) - ***பியாஜே, வெர்னர்***


புலன் உணர்வும் புலன் காட்சியும் (Sensation & Perception)

- ✓ வெளியிலிருந்து வரும் தூண்டல்கள் புலன் களைத் தீண்டும் நரம்புகள் உணர்வுக் கிளர்ச்சிக்கு உள்ளாகிறது. இந்த உணர்வுக் கிளர்ச்சிக்குப் புலன் உணர்வு என்று பெயர்.
- ✓ புலன் உணர்வின் தூண்டல்கள் நரம்பு மண்டலங்கள் மூலம் மூளைக்கு அனுப்படுகிறது. மூளையானது அவ்வுணர்வுகளை உணர்ந்து வெளித்தூண்டல்களால் ஏற்பட்ட உணர்வுகளின் கருப்பொருளுக்கு விளக்கம் அளிக்கிறது. இந்நிலைக்குப் புலன் காட்சி என்று பெயர்.

புலன் காட்சியின் விதிகள்

- ✓ புலன் காட்சிக்கு உருவமும் பின்னணியும் ஓர் அடிப்படை நியதியாகும்.
- ✓ புலன் காட்சி என்பது உணர்ச்சி மிகுந்தது.
- ✓ புலன் காட்சி முறையின் வேறு பெயர்கள் - புலன் காட்சி கூட்டு முறை, புலன் காட்சி ஒருங்கமைந்த முறை

1.முழுமைக் காட்சி விதி (Law or Pr



SURYA TRB COACHING
www.Padasalai.Net


2.அண்மை விதி (Law of Proximity)



3.தொடர்ச்சி விதி (Law of Continuity)


.....

4.ஒப்புமை விதி (Law of Similarity)



5.பூர்த்தி செய்தல் விதி (Law of Closure)

- ✓ இதன் வேறு பெயர் - மூட்ட விதி



புலன் காட்சியில் ஏற்படும் பிழைகள் (Errors in Perception)

1.திரிபுக் காட்சி (Illusion)

- ➢ *உட்வொர்த்* - "புலன் காட்சியின் பிழையே திரிபுக் காட்சியாகும்"
- ➢ *உட்வொர்த்* - "திரிபுக் காட்சி ஏற்பட இரண்டு வகையான காரணங்கள் உள்ளான"
- ➢ *கெண்ட்லர்* - "இயற்பியல் அளவீட்டிற்கும் உள அளவீட்டிற்கும் இடையேயுள்ள வேறுபாடினையே திரிபுக் காட்சி சுட்டி நிற்கிறது"
- ✓ திரிபுக் காட்சி என்பது தவறான புலன் காட்சியினைக் குறிக்கும். Spl. TET –II 2014
- ✓ உண்மை நிலையோடு ஒத்துப் போகாத புலன் காட்சியினைத் திரிபுக் காட்சி என்பர்.
- ✓ தூண்டல் தவறாகப் புரிந்து கொள்ளப்படுமேயானால் அதனைத் திரிபுக் காட்சி என்கிறோம்.
- ✓ ஒரு பொருளை வேறொரு பொருளாக உணர்வதை திரிபுக் காட்சி என்கிறோம்.
- ✓ *எ.கா:*
  - இரவு நேரத்தில் கிணற்றடியில் கிடக்கும் கயிற்றை மிதித்து விட்டு அச்சம் காரணமாக பாம்பு என எண்ணுவது (பார்வைத் திரிபுக் காட்சி)
  - தொலைந்த உலோக நாணயத்தைத் தேடுபவனுக்குக் கீழே கிடக்கும் பளபளப்பான தகடு கூட காசு போல தோன்றும். (பார்வைத் திரிபுக் காட்சி)
  - பக்கத்து அறையில் யாரோ ஒருவரது பேச்சுக்குரல் கேட்கும்போது, அதை நமது நண்பரின் பேச்சுக் குரல் என உணர்தல் (கேட்டல் திரிபுக் காட்சி)
  - நிலவு தொடுவானத்தில் எழும் போது மிகப் பெரியதாகவும் நடுவானில் உள்ளபோது மிகச் சிறியதாயும் தோன்றுகிறது (நிலவுத் திரிபுக் காட்சி)
  - இரயிலில் செல்லும் போது மரங்கள் ஓடுவது போல தோன்றுவது
  - நமது இரயில் நின்றிருக்கும் போது அதன் அருகேயுள்ள ஒரு இரயில் நகரத் தொடங்கியதும், நமது இரயில் நகர்வது போல தோன்றுவது

திரிபுக் காட்சியின் வகைகள்

A.இயக்கத் திரிபுக் காட்சிகள்

- ✓ உண்மையில் நிலைத்திருக்கும் ஒரு ஒளித்தூண்டல் தானே நகர்வது போல தோன்றுவது


B.பார்வைக் கோணத் திரிபுக் காட்சிகள்

SURYA TRB COACHING
www.Padasalai.Net

Contact: 81246 02428, 94435 64713, 75983 02428

✓ இரு இணைகோடுகள் தொலைவில் ஒன்று சேர்வது போல தோன்றுவது

C.முல்லர் - லயர்,ஜோல்னர் திரிபுக் காட்சி



D.படுக்கை - நேர்கோடு திரிபுக் காட்சி



E. மாற்றுத் தோற்றங்கள்

2.இல்பொருள் காட்சி (Hallucination)


- ✓ எந்தவிதத் தூண்டலும் இல்லாமல், ஏதோ ஒரு தூண்டல் இருப்பதாக உணர்வது இல்பொருள் காட்சி ஆகும்.
- ✓ இல்லாத ஒன்றினை இருப்பதாகக் காண்பது இல்பொருள் காட்சி ஆகும்.
- ✓ நமது உள்ளத்தில் காணப்படும் அச்சங்கள், போராட்டங்கள், ஆர்வங்கள் போன்றனவே இல்பொருள் காட்சிக்கு அடிப்படைகளாக அமைகின்றன.
- ✓ இல்பொருள்காட்சி அடிக்கடி ஏற்படுவதற்கு போதைப் பொருட்களால் ஏற்படும் மயக்க நிலையும், தீவிர மனக்கோளாறுக்குட்பட்ட நிலையுமே காரணமாகும்.
- ✓ *எ.கா:*
  - ஒருவனுடைய அறையில் ஒருவரும் அங்கு இல்லையென்றாலும் யாரேனும் ஒருவர் இருப்பதைப் போன்று பார்த்தல்.
  - பாலைவனத்துக்கானல் நீர்
  - யாரும் அறைக் கதவைத் தட்டாத போதும் தட்டியது போல உணர்தல்
  - புளிய மரத்தின் மீது பேய்கள் நடனமாடுவது போல எண்ணுதல்
  - நடுநிசியில் பேய்களின் சலங்கை ஓசையைக் கேட்டல்

பொதுமைக் கருத்து (Concept)

- ✓ மொழியிலுள்ள பொதுப்பெயர்களுக்கு ஈடாக நம் மனத்திலுள்ள கருத்துகள் 'பொதுமைக் கருத்துகள்' ஆகும்.
  (எ.கா): புத்தகம், மனிதன், ஆறு, கடல், மலை, இரயில், பென்சில், பஸ், பள்ளிக்கூடம்

பொதுமைக் கருத்து வகைகள் (Types of Concept)

- ✓ மிகப் பரந்த பொருளுள்ள கருத்து படத்தின்மேல் பகுதியிலும், மற்றவை அடுத்தடுத்து கீழ்ப்பகுதியிலும் இடம் பெறும்.
- ✓ மிகக் குறுகிய பொருளுள்ள பொதுமைக் க ருத்து படத்தின் அடியில் இடம் பெறும்.



i). எளிமையான பொதுமைக் கருத்து (Simple Concept)

- ✓ ஒரே ஒரு பொதுப்பண்பை மட்டும் கொண்டவை எளிமையான பொதுமைக் கருத்து.
  (எ.கா): நீலநிறம், சதுரம், முக்கோணம்

SURYA TRB COACHING
www.Padasalai.Net

Contact: 81246 02428, 94435 64713, 75983 02428

ii). சிக்கலான பொதுமைக் கருத்து (Complex Concept)

- ✓ இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பண்புகளைக் கொண்டவை சிக்கலான பொதுமைக்கருத்து.

(எ.கா): சிறிய நீலநிற சதுரக்கட்டை, கால்பந்தாட்டக் குழு, குடியரசு, திருமணம்

iii). பொருட்கள் பற்றியவை (Concept of Object)

(எ.கா): புத்தகம், வீடு, கார்

iv). பொருள்களின் கூறுகள் பற்றியவை (Concept of Aspects)

a). பொருட்களின் பண்புகள் பற்றியவை:

(எ.கா): நேர்மை, எளிமை, சொரசொரப்பு

b). பொருட்களின் தொடர்புகள் பற்றியவை

(எ.கா): இதை விடப் பெரிய (bigger than), அதை விட உயரமான (higher than)

v). கற்பனைப் பொருள்கள் பற்றியவை

- ✓ உலகில் உள்ளனவற்றைப்பற்றி மட்டுமின்றி, கற்பனைப் பொருள்கள் பற்றிய பொதுக்கருத்துக்களையும், நம்மால் தோற்றுவிக்க முடியும்.

(எ.கா): சொர்க்கம், நரகம், அணு, வான்வீதி

சிக்கலான பொதுமைக் கருத்தின் வகைகள் (Types of Complex Concept)

- ✓ சிக்கலான பொதுமைக்கருத்துக்களை *புரூணர்* மூவகையாகப் பிரிக்கிறார்.

RETET-I-2012

1). இணைப் பொதுமைக்கருத்துகள் (conjuctive Concepts)

- ✓ கணிதத்திலும் அறிவியலிலும் பயன்படுத்தப்படுவது இணைப்பொதுமைக் கருத்தேயாகும்.

(எ.கா): பசு, வீடு

2). முக்கியப் பண்புகள் ஏதேனும் ஒன்றை மட்டும் கொண்ட பொதுமைக் கருத்து (Disjunctive Concept)

(எ.கா): a).இரண்டு சிவப்பு வட்டங்கள் அல்லது இரண்டு நீல சதுரங்கள்
b).காபி அல்லது டீ
c).குளிர்பானம் அல்லது சூடான பானம்

3). தொடர்பினைக் குறிக்கும் பொதுமைக் கருத்துக்கள் (Relational Concepts)

(எ.கா): a).ஒரே மாதிரியான உருவங்கள், ஒரே எண்ணிக்கையில் கொண்ட அட்டைகள்
b).அட்டைகளின் ஓரத்தில் காணப்படும் கோடுகளின் எண்ணிக்கையை விட அதிக எண்ணிக்கையிலான உருவங்களைக் கொண்டவை.
c).இரு புள்ளிகளுக்கிடையேயான தொலைவு.
d).திசைவேகம், விசை போன்றவை.

பொதுமைக் கருத்துகள் உருவாகும் முறைகள்

1.பல புலன்கட்சி அனுபவங்களைப் பெறுதல்
2.அனுபவங்களை ஒப்பிட்டு நோக்கல்
3.பொதுமைப் பிரித்தல்
4.பொதுமைப்படுத்துதல்
5.பொதுமைக் கருத்து

- ✓ பொதுமைக் கருத்துகள் உருவாதல் (Concept Formation), பொதுமைக் கருத்துகளின் பொருள் விரிவடைதல் (Assimilation) என்ற இரு இணைந்த செயல்களை விளக்கி, வேறுபடுத்திக் காட்டியவர் - **ஆசுபெல் (Ausubel)** **(DIET TRB)**

புரூணரின் பொதுமைக்கருத்து உருவாகும் படிநிலைக் கோட்பாடு:

I. செயல்படு நிலை (Enactive Stage) - பிறப்பு முதல் 2 வயது வரை
II. உருவக நிலை (படிம நிலை) (Iconic Stage)- 3 முதல் 7 வயது வரை
III. குறியீட்டு நிலை (symbolic Stage) - 8 முதல் 14 வயது வரை

- ✓ குழந்தைகள் தங்கள் வயதுக்கேற்ற அனுபவங்கள் மூலம் தாமாகவே எல்லாவற்றையும் கண்டறியும் முறையே (Heuristic Method or Discovery approach) சிறந்த கற்றல் முறை ஆகும்.
- ✓ Heuristic முறை செய்து கற்றலை அடிப்படையாகக் கொண்டது.
- ✓ புரூணரின் கொள்கைப்படி, தொடக்கநிலைப் பள்ளி அளவில் குழந்தைகள் தாமாகவே எல்லாவற்றையும் செய்து நேரடி அனுபவங்கள் (Direct Experience) மூலம் கற்க வேண்டும்.
- ✓ இடைநிலைப் பள்ளி அளவில் படங்கள் (Pictures), மாதிரிகள் (Models), செய்து காட்டல்கள் (Demonstrations) மூலம் கற்க முடியும்.
- ✓ உயர்நிலைப் பள்ளி அளவில்தான் குறியீடுகளை அதிகம் பயன்படுத்தும் விரிவுரை முறை (Lecture Method) கையாளப்பட வேண்டும்.

கிளவுஸ் மெயிர் (Klaus Meir) படிநிலைகள்:

1).புலனீடான நிலை (Concrete Level)
2).மீண்டும் உணரும் நிலை (Identity Level)
3).வகைப்படுத்தும் நிலை (classifactory Level)
4).முறையான (அ) கருத்தியல் நிலை (Formal Level)

SURYA TRB COACHING

Contact: 81246 02428, 94435 64713, 75983 02428

- ✓ இவரது கருத்து ஆங்கிலத்தில் ***CLD (Concept Learning and Development)*** எனப்படும்.
- ✓ பொதுமைக்கருத்து கற்பித்தலுக்கான வழிமுறைகளை உருவாக்கியவர்-டீ **செக்கோ**

தற்கருத்து (Self-Concept)

- ✓ தற்கருத்து என்ற சொல் முதன்முதலில் ***லெக்கி*** (Lecky) என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்டு, பின்பு ***கார்ல் ரோஜர்ஸின்*** நெறிசாரா அறிவுரை பகர்தல் மூலம் பரவலாக அறியப்பட்டது.
- ✓ தன்னைப் பற்றி ஒருவன் கொண்டுள்ள மனப்பான்மைகள், உணர்ச்சிகள் போன்றவற்றின் தொகுப்பே தற்கருத்து எனப்படும்.
- ✓ ***ஆசுபெல்*** (Ausubell) -- "குடும்பத்தில் பெற்றோர்களது மனப்பான்மை, அவர்கள் குழந்தையிடம் காட்டும் பரிவு, அதன்மேல் விரும்பியோ, விரும்பாமலோ அவர்கள் அமர்த்தும் பொறுப்புகள் போன்றன யாவும் குழந்தையின் ஆளுமை வளர்ச்சியிலும், தற்கருத்தின் அமைப்பிலும் மாற்றமுடியாத செல்வாக்கினைப் பெறுபவையாகும்".

பியாஜேயின் அறிதிறன் வளர்ச்சிக் கொள்கை (Jean Piaget's Theory of Cognitive Development)

- ✓ ஜீன் பியாஜே -- ***சுவிட்ஸர்லாந்து*** நாட்டு உளவியல் அறிஞர்.

அறிதிறன் வளர்ச்சி செயல்பாட்டின் உட்கூறுகள்:

I.தன்வயப்படுத்துதல் II.பொருத்துதல்
III.இணங்குதல் IV.ஒருங்கமைத்தல்

TET-II-2013

- ✓ ஸ்கீமா (Schema) அல்லது அறிதிறன் கட்டமைப்பை விளக்கியவர் -- ***ஜீன் பியாஜே***

பியாஜேயின் அறிதிறன் வளர்ச்சிப் படிநிலைகள்:

- ✓ குழந்தையின் அறிதிறன் வளர்ச்சி அடைய அடைய 'ஸ்கீமா' என்னும் 'அறிதிறன் கட்டமைப்பு' உடலியக்க சார்பு நிலையிலிருந்து மனவியக்க சார்புநிலை அல்லது கருத்தியல் நிலைக்கு மாறுகிறது.
  1. புலனியக்க நிலை (0 முதல்2 வயது வரை)
  2. செயலுக்கு முற்பட்ட நிலை (2 முதல் 7 வயது வரை)
  3. புலனீடான செயல் நிலை (7 முதல் 11 வயது வரை)
  4. கருத்தியல் நிலை (11 வயதுக்கு மேல்)
- ✓ பியாஜே இந்த 4 அறிவுப்புல வளர்ச்சி நிலைகளை 'இயற்கை வளர்ச்சியின் அட்டவணை' என்று கூறுகிறார்.

1).புலனியக்க நிலை (0 முதல் 2 வயது வரை) (Sensory Motor Stage)

PG TRB-2004

- ✓ இதன் வேறு பெயர் - தொட்டு உணரும் பருவம்
- ✓ குழந்தை பிறந்த 4 மாதத்தில் பொருள்களின் நிலைத்த தன்மை (Object Perfo... அறியாது.
- ✓ பிறந்து 10 மாதங்கள் சென்ற பின் பொருள்களின் நிலைத்த தன்மை பற்றி குழந்தை அறிகிறது.
- ✓ 2 வயதில் அடிப்படை நினைவு தோன்ற ஆரம்பிக்கிறது.
- ✓ எதையும் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வமும் முயன்றி தவறிக் கற்றல் மூலம் சூழ்நிலையைப் புரிந்து கொள்ளும் தன்மையும் காணப்படும்.
- ✓ தற்கருத்து தோன்ற ஆரம்பிக்கிறது.
- ✓ மொழியைப் பயன்படுத்தவோ, குறியீடுகளை உபயோகிக்கும் ஆற்றலையோ பெற்றிருக்காது.

2).செயலுக்கு முற்பட்ட நிலை (2 முதல் 7 வயது வரை) (Pre-Operational Stage)

- ✓ இதன் வேறு பெயர்கள் - முன் செயல்பாட்டு நிலை, முற்சிந்தனை வளர்ச்சி
- ✓ உயிர்ற்ற ஜடப் பொருள்களையும் உயிருள்ளவையாக பாவித்தல் (Animism)
- ✓ பொருட்களின் உருவம், இடம் மாறினாலும் அவற்றின் அளவு குறையாது என்னும் கருத்து உணரப்படாது.
- ✓ தான் என்ற எண்ணம் உருவாகிறது. (Ego-Centric)
- ✓ முன்பின் மாற்றம் இருக்காது. (Reversibility)

TET-I-2012, PG TRB-2007

- ✓ தாய் தந்தையரை சர்வ வல்லமை படைத்தவர்களாகவும், எங்கும் நிறைந்திருப்பவர்களாகவும் கருதுகின்றனர்.
- ✓ விதிகளை முழுமையாகப் பின்பற்றி எந்த விளையாட்டையும் விளையாடத் தெரியாமை.

3).புலனீடான செயல் நிலை (7 முதல் 11 வயது வரை) (Concrete Operational Stage)

- ✓ இதன் வேறு பெயர்கள் - கண்கூடாகப் பார்ப்பதைக் கொண்டு சிந்திக்கும் பருவம், திட்டமிட்ட செயல் நிலை, பருப்பொருள் நிலை
- ✓ பொருட்களின் மாறாத் தன்மையை அறிந்து கொள்ள முடிகிறது.
- ✓ முன்-பின் மாற்றங்களை நன்கு உணர முடிகிறது.
- ✓ எந்த விளையாட்டையும் அதற்குரிய விதிகளைப் பின்பற்றி விளையாட முடிகிறது.

RETET-I-2012

SURYA TRB COACHING
www.PadasalaiNet

Contact: 81246 02428, 94435 64713, 75983 02428

4).கருத்தியல் நிலை (11 வயதுக்கு மேல்) (Formal Operational Stage)

- ✓ இதன் வேறு பெயர்கள் - முழுச்செயல் நிலை, முறையான செயல்நிலை
- ✓ எதிர் காலத்தில் ஏற்படக் கூடியவை பற்றி சிந்திக்க இயலும்.
- ✓ விஞ்ஞானிகளைப் போன்றே செய்ய வேண்டியவை பற்றியும், செய்து முடித்தவை பற்றியும் பதிவு செய்து, பரிசோதனைகள் செய்வர்.
- ✓ தேவைக்கு தகுந்தவாறு விதிமுறைகளை மாற்றியமைக்க முயலுவர்.
- ✓ எந்தக் கருத்தையும் பிறர் நோக்கிலிருந்தும் சிந்திக்க இயலும்.
- ✓ குறியீடுகளையும் சமன்பாடுகளையும் புரிந்து கொள்ள இயலும்.


RETET-II-2012

கற்பனை (Imagination)

கற்பனை (Imagination)- பொருள்

- ✓ மனப்பிம்பங்களை தொடர்ச்சியாகவும் ஓர் ஒழுங்கு முறையிலும் அமைத்து ஒரு நிகழ்வு, அனுபவம் அல்லது பிரச்சினையை பல கோணங்களில் அலசி ஆராய்வது 'கற்பனை செய்தல்' எனப்படும்.
- ✓ கற்பனை செய்தலோடு நெருங்கிய தொடர்பு கொண்டதே 'சிந்தித்தல்' எனப்படும்.
- ✓ கற்பனை, சிந்தித்தல் ஆகிய இரண்டிற்குமே மூலப்பொருள் மனப்பிம்பங்களாகும்.
- ✓ சிந்தனை என்னும் செயலின் உயர் நிலைகளே ஆய்ந்தறிதல் மற்றும் பிரச்சினைகளைத் தீர்க்கும் திறன் ஆகியவையாகும்.
- ✓ புலன் காட்சியறிவு தான் கற்பனைக்கு முக்கிய அடிப்படை
- ✓ குழந்தைகளின் பாவனை விளையாட்டுகளில் கற்பனை எழுச்சி புலப்படும்
- ✓ மனதில் நிழலாடும் மனப்பிம்பங்களை பல்வேறு வடிவமைப்புகளில் இணைத்து, அவற்றிற்கு இடையே காணக்கூடிய உறவுகளைக் கண்டறியக் கூடிய முயற்சியே கற்பனை செய்தலாகும்

கற்பனை - வகைகள்



மீள் ஆக்கக் கற்பனை (Reproductive Imagination)

- ✓ கற்பனையின் விளைவு, நாம் முன்னர் புலன் காட்சியின் வழியே அறிந்த ஒன்றன் பிரதியாக இருப்பின் நம் கற்பனை 'மீள் ஆக்கக் கற்பனை' ஆகும்.
- ✓ முன்னர் அனுபவித்த ஒரு நிகழ்ச்சியை மீண்டும் நம் மனக்கண் முன் கொணர்ந்து இருத்தி, அதை உணர்தல் இவ்வகைக் கற்பனையாகும்.
- ✓ இதை 'நினைவு' என்றும் அழைக்கலாம்.

ஆக்கக் கற்பனை (Productive Imagination)

- ✓ பழைய புலன்காட்சியிலிருந்து பெறப்பட்ட சாயல்களையும் அவற்றினின்றும் பெறப்பட்ட எண்ணங்களையும் புதிய முறையில் அமைத்தலே ஆக்கக் கற்பனையாகும்.
- ✓ எ.கா: ஒரு கதாசிரியர் தனது நேரடி அல்லது மறைமுக அனுபவங்களை அப்படியே வெளிப்படுத்தாமல் அவற்றைப் புதிய கோணத்தில் அல்லது முறையில் கோர்வையாக அமைக்கும் போதுதான் அது சிறு கதையாக தோற்றம் கொள்கிறது. இத்திறனையே 'ஆக்கக் கற்பனை' என் கிறோம்.
- ✓ இலக்கியமும், நுண்கலைகளும், அறிவியலில் தோன்றும் புதுக் கோட்பாடுகளும் ஆக்கக் கற்பனையின் விளைவுகளே.

SURYA TRB COACHING
www.Padasalai.Net

Contact: 81246 02428, 94435 64713, 75983 02428

பின்பற்றும் ஆக்கக் கற்பனை (Imitative Imagination)

- ✓ வேறொருவரின் கற்பனைப் படைப்பை நாம் பெற்று உணர்ந்து அனுபவித்தல் 'பின்பற்றும் ஆக்கக் கற்பனை' ஆகும்.
- ✓ உதாரணமாக புலவன் ஒருவனது கவிதையைப் படித்து அதன் நயத்தை உணர்கையில், அக்கவிஞனை நாம் அவனது படைப்புலகில் பின்பற்றுகிறோம்.
- ✓ இதன் விளைவாக நம் மனத்தில் புதுக் கருத்துகளும், சீரிய மனவெழுச்சிகளும் தோன்றுகின்றன.
- ✓ ஆனால் இவற்றின் தோற்றம் நம் படைப்புத் திறனால் ஏற்பட்டது அன்று.

படைப்புக் கற்பனை (Creative Imagination)

- ✓ நம் கற்பனையின் உதவி கொண்டு நாமே ஒரு சிறுகதை அல்லது கவிதையைப் படைத்தாலோ ஓர் ஓவியத்தைத் தீட்டினாலோ அக்கற்பனையை 'படைப்புக் கற்பனை' என்கிறோம்.
- ✓ படைப்புக் கற்பனை பயன்வழிக் கற்பனையாகவோ, அழகுணர் கற்பனையாகவோ இருக்கலாம்.

பயன்வழிக் கற்பனை (Pragmatic Imagination)

- ✓ பயன்வழிக் கற்பனை சில கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டது.
- ✓ குறிபிட்ட ஓர் இலக்கையடைய ஒரு புது வழியைக் கண்டுபிடிப்பதே இவ்வகைக் கற்பனையின் நோக்கமாகும்.
- ✓ அறிவியல்களில் பயன்படுத்தப்படும் கற்பனை இவ்வகையைச் சார்ந்ததாகும்.
- ✓ கற்பனையின் அடிப்படை அனுமானித்தல் ஆகும்.
- ✓ பொறியியல் வல்லுநர் ஓர் ஆற்றைக் கடக்க எத்தகைய பாலம் அமைக்கலாம் என்று சிந்திக்கும் போது பயன்வழிக் கற்பனைகளையே உபயோகிக்கிறார். அவர் கற்பனையின் போக்கு அறிவியல் விதிகளுக்கு உட்பட்டதாகவே இருத்தல் வேண்டும்.

அழகுணர் கற்பனை (Aesthetic Imagination)

- ✓ அழகுணர் கற்பனையில் இத்தகைய கட்டுப்பாடுகள் இல்லை.
- ✓ இக்கற்பனை எத்திசையிலும், எம்முறையிலும் செல்லலாம்.
- ✓ இக்கற்பனையினின்று எழும் படைப்பு அழகுணர்ச்சியைத் தூண்டக்கூடியதாகவும், மகிழ்ச்சியை அளிப்பதாகவும் இருக்கும்.
- ✓ பொதுவாக கற்பனை என்று சொல்லும் போது அழகுணர் கற்பனையையே குறிக்கிறோம்.

அழகுணர் கற்பனையின் வளர்ச்சி நிலைகள்

1.பாவனை நிலை (Make believe Stage) - 3 முதல் 6 வயது வரை
2.துணிவு நிலை (Adventures Stage) - 8 வயது முதல் 12 அல்லது 13 வயது வரை
3.குறிக்கோள் நிலை (Idealistic Stage) - 14 முதல் 18 அல்லது 19 வயது வரை

சிந்தனை (Thinking)

சிந்தனை (Thinking)- பொருள்

- ✓ ஒரு பிரச்சினைக்குரிய தீர்வைக் காண்பதற்காக, அப்பிரச்சினையைச் சுற்றி பல்வேறு கோணங்களில் கற்பனையை செலுத்துவதே சிந்தனை (Thinking) ஆகும்.

சிந்தனை (Thinking) - வகைகள்

1.குவி சிந்தனை (Convergent Thinking)

- ✓ ஒரு குறிப்பிட்ட துலங்கலைப் பெற பல்வேறு தூண்டல்கள் இணைந்து ஒருமுகமாகச் செயல்பட்டால் அங்கு குவி சிந்தனை வளர்க்கப்படுகின்றது. அதாவது பல தூண்டல்களுக்கு ஒரே ஒரு துலங்கல் கிடைக்கும். அதற்கு 'குவி சிந்தனை' என்று பெயர்.
- ✓ எ.கா: புத்தகம், பேனா, மேசை நாற்காலி ஆகிய மூன்று தூண்டல்கள் தரப்பட்டால் அவை சம்பந்தப்பட்ட துலங்கலாக 'மாணவர்' என்ற பதில் தோன்றுகிறது.

2.விரி சிந்தனை (Divergent Thinking)

- ✓ இதன் வேறு பெயர் - ***ஆக்கச் சிந்தனை***
- ✓ தரப்பட்ட ஒரு தூண்டல் பல்வேறு, ஒன்றோடொன்று சம்பந்தப்பட்ட துலங்கல்களை வெளிக்கொண்டு வரும்போது அந்தச் சிந்தனை 'விரி சிந்தனை' ஆகும்.
- ✓ அதாவது ஒரு தூண்டலுக்குப் பல துலங்கல்கள் கிடைக்கும்.
- ✓ எ.கா: மாணவர் என்னும் தூண்டல் புத்தகம், மேஜை மற்றும் வகுப்பறை ஆகிய மூன்று துலங்கல்களை அளிக்கிறது.

SURYA TRB COACHING
www.Padasalai.Net

Contact: 81246 02428, 94435 64713, 75983 02428

- ✓ ஆகாயத்தில் நிலவு இல்லை என்றால் என்ன நிகழும்?
  - இரவில் இருள் சூழ்ந்திருக்கும்.
  - சந்திரகிரகணம் நிகழாது.
  - தாய் குழந்தைக்கு நிலவைக் காண்பித்து உணவு ஊட்ட இயலாது

3.பக்கவாட்டுச் சிந்தனை (Lateral Thinking)

- ✓ பக்கவாட்டுச் சிந்தனை என்ற கருத்தை முதன்முதலில் பயன்படுத்தியவர் - ***டிபொனே***
- ✓ பக்கவாட்டுச் சிந்தனை என்பது உடனே வெளிப்படையாகத் தெரியாத ஒரு பகுத்தறிவு சிந்தனையாகும்.

4.புலக்காட்சி சிந்தனை (Perceptual Thinking)

- ✓ இதன் வேறு பெயர் - ***மனச் சாயல்கள் கொண்டு சிந்தித்தல்*** ,***பருப்பொருள் சிந்தனை (Concrete Thinking)***
- ✓ இச்சிந்தனைக்கு அடிப்படையாக அமைவது புலக்காட்சியாகும்.
- ✓ உண்மையான பொருட்கள் அல்லது நிகழ்வுகள் வாயிலாக இச்சிந்தனை நிகழ்கிறது.
- ✓ இது மனச் சாயல்கள் கொண்டு சிந்தித்தலை விட உயர்நிலைப்பட்டதாகும்
- ✓ எ.கா: வானத்தில் மேகங்கள் தவழ்ந்து செல்லும்போது நம் உள்ளத்தில் தோன்றும் சிந்தனை

5.கருத்தியல் சிந்தனை (Coceptual or Abstract Thinking)

- ✓ பொதுக்கருத்துகள் அடிப்படையில் அல்லது மொழி அடிப்படையில் எழும் சிந்தனையை இத்தகைய சிந்தனையில் அடக்கலாம்.
- ✓ எ.கா: சிறிய குடும்பம் என்ற கருத்தின் அடிப்படையில் ஒருவரிடம் எழும் சிந்தனை

6.பிரதிபலிப்பு சிந்தனை (Reflective Thinking)

- ✓ இதன் வேறு பெயர் - **துழாவிப் பார்க்கும் சிந்தனை**
- ➢ ***ஜான் டீயி (1937)*** -"துழாவிப்பார்க்கும் சிந்தனை என்பது தொடர்ந்து துடிப்புடன் இயங்கிடும் எண்ணங்கள்/கருத்துகள் துணை கொண்டு மேன்மேலும் இயங்கி புதிய முடிவுகளைப் பெற்றிட முயலுதல் ஆகும்"
- ✓ துருவிப்பார்க்கும் சிந்தனை என்பது பரவலான பலவகை சிந்திக்கும் திறன்களையும், உத்திகளையும் உள்ளடக்கி விரும்பத்தகு விளைபயனை எய்திட முயலும் அறிவார்ந்த செயலாகும்.
- ✓ துழாவிப்பார்க்கும் சிந்தனை என்பது ஏற்கனவே நிகழ்ந்தவை பற்றி, முடிவுகளை மேற்கொள்ளும் அறிவார்ந்த செயலாகும்.
- ✓ சிக்கலான பிரச்சினைகளுக்கு தீர்வு காண முயற்சிக்கும் கற்றல் சூழ்நிலையில் துழாவிப்பார்க்கும் சிந்தனை பெரிதும் தேவைப்படுகிறது.
- ✓ கடினமான பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் உண்மைகளை ஒழுங்குபடுத்திப் பார்க்கும் ஒரு அகச் செயல் முறையை பிரதிபலிப்புச் சிந்தனை என அழைக்கிறோம்.
- ✓ எ.கா: பொது வாழ்வில் ஊழலை ஒழிக்க முடியுமா என்ற வினாவுக்கு விடை காண்பதில் எழும் சிந்தனை.

7.ஆக்கச் சிந்தனை (Creative Thinking)

- ✓ பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் புதுமையான அசாதாரணமான சிந்தனையை இது குறிக்கிறது.
- ✓ இத்தகைய சிந்தனையால் புதிய பொருட்களை உருவாக்கவோ அல்லது கண்டுபிடிக்கவோ முடியும்.
- ✓ எ.கா:பெட்ரோலில் இயங்கும் கார்களை சூரிய ஒளியில் இயக்குவதற்கு தேவைப்படும் சிந்தனை

8. விமர்சனச் சிந்தனை / திறனாய்வுச் சிந்தனை (Critical Thinking)

- ✓ இதன் வேறு பெயர் - ***நெறிப்படுத்தப்பட்ட சிந்தனை, துருவிப் பார்க்கும் சிந்தனை***
- ➢ ***ஹல்பர்ன் (1996)*** -"விரும்பத்தகு விளைபயனை எட்டிடும் வாய்ப்பை அதிகரிப்பதற்கு உரிய அறிதிறன்களையோ உத்திகளையோ எண்ணங்களில் பயன்படுத்துதலே 'துருவிப் பார்க்கும் சிந்தனை' எனப்படும்"
- ✓ திரட்டப்பட்ட கருத்துகளையோ அல்லது தகவல்களையோ பகுத்தாய்வு செய்து மதிப்பிட்டு முடிவுகளை எட்ட உதவும் சிந்தனையை 'விமர்சனச் சிந்தனை' என்று அழைக்கிறோம்.
- ✓ எ.கா: மத்திய அரசின் மும்மொழிக் கொள்கை அனைத்து மாநிலங்களுக்கும் ஏற்புடையதா? எவ்வாறு? போன்ற வினாக்களுக்கு விடை காணும் சிந்தனை.

9.கற்பனைச் சிந்தனை (Artistic Thinking)

- ✓ ஒருவனின் தனிப்பட்ட சிந்தனையைக் 'கற்பனைச் சிந்தனை' என்று குறிப்பிடுகிறோம்.
- ✓ எ.கா: கனவுகள்

SURYA TRB COACHING
www.Padasalai.Net

Contact: 81246 02428, 94435 64713, 75983 02428

10. செயல்படுத்தும் சிந்தனை (Directed Thinking)

- ✓ சில சமயங்களில் சிந்தனையானது பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு மேலும் ஆக்கச் சிந்தனையாகவும் அமைகிறது. இத்தகைய சிந்தனையைச் 'செயல்படுத்தும் சிந்தனை' என்று குறிப்பிடுகிறோம்.

மாணவர்களின் சிந்தனையைப் பாதிக்கும் காரணிகள்

1.போதிய பொதுக்கருத்துகளைப் பெற்றிராமை
2.நுண்ணறிவின் குறைந்த அளவு
3.தவறாக சிந்திக்கும் பழக்கம்
4.சொற்களஞ்சிய அளவு குறைந்து காணப்படல்
5.ஆசிரியரது கற்பித்தல் மாணவர்களது சிந்தனையைத் தூண்டும் வகையில் அமையாமை
6.சிந்தித்து தீர்வு காண வேண்டிய பிரச்சனையின் முக்கியத்துவத்தையும் நடைமுறைப்பயனையும்மாணவர்கள் உணர்ந்திராமை
7.சார்பெண்ணங்கள் சிந்தனையில் குறுக்கிடல்
8.சுதந்திரமாகச் சிந்தித்து முடிவெடுக்க மாணவர்களுக்குப் பள்ளிகளில் போதிய வாய்ப்பின்மை.

காரண - காரியங்களை ஆராய்ந்தறிதல் (Reasoning)

காரண - காரியங்களை ஆராய்ந்தறிதல் - வரையறை

- ➢ ***N.E.மன்*** - "ஏற்கனவே உள்ள தீர்வுகளைப் பயன்படுத்தி தீர்க்கப்படாத ஒரு பிரச்சினையை கடந்த கால அனுபவங்களை ஒன்றிணைத்து தீர்க்கும் திறன் காரண- காரியங்களை ஆராய்ந்தறியும் திறனாகும்."

காரண - காரியங்களை ஆராய்ந்தறிதல் - வகைகள்

1.தொகுத்தறியும் திறன் (Inductive Reasoning) (7 முதல் 11 வயது)

- ✓ இதன் வேறு பெயர் - ***விதி காணும் சிந்தனை***
- ✓ இம்முறையில் ஒரு குறிப்பிட்ட பிரச்சினையிலிருந்து ஒரு பொது முடிவுக்கு வருவதாகும். பிரச்சினைகளை அலசி, ஆராய்ந்து ஒரு பொதுக்கருத்தை உருவாக்குவது இதன் வழியாகும்.
- ✓ எ.கா:
  ராமர் இறக்கிறார்
  அக்பர் இறக்கிறார்
  அந்தோணி இறக்கிறார்
- ✓ எனவே எல்லா மனிதர்களும் இறக்கக்கூடியவர்கள் தான் என்ற பொது முடிவுக்கு வருவதுதான் இம்முறையாகும்.

2.பகுத்தறியும் திறன் (Deductive Reasoning) (11 முதல் 15 வயது)

- ✓ இதன் வேறு பெயர் - ***விதியைப் பயன்படுத்தும் சிந்தனை***
- ✓ ஏற்கனவே கண்டுபிடித்த அல்லது ஒப்புக் கொண்ட முடிவை ஒரு குறிப்பிட்ட பிரச்சினைக்குக் கையாளுவதாகும்.
- ✓ எ.கா:
  எல்லா மனிதர்களும் இறக்கக்கூடியவர்கள்
  எனவே ராமரும் இறக்கக் கூடியவர்தான்
  அக்பரும் இறக்கக் கூடியவர் தான்
  அந்தோணியும் இறக்கக் கூடியவர் தான்
- ✓ இம்முறையில் நாம் ஏற்கனவே ஒப்புக்கொண்டு அல்லது உலகம் முழுவதும் ஒப்புக்கொண்ட ஒரு உண்மையை ஒரு குறிப்பிட்ட பிரச்சினைக்குப் பயன்படுத்துகிறோம்.

பிரச்சனையைத் தீர்த்தல் (Problem Solving)

- ✓ ஓர் இலக்கை அடைய முயலும் ஒருவனுக்கு அவ்விலக்கை அடைய முடியாதபடி அவனுக்கெதிரே சில தடைகள் குறுக்கிடுமானால் ஒரு புதிர் அல்லது பிரச்சனை அவனை எதிர்நோக்கியுள்ளது என்கிறோம்.
- ✓ புதிர் நிலையை 'கிளை வழி நிலை' என்று ***ஜான் டூயி*** அழைக்கிறார்.

ஜான் டூயின் படி நிலைகள்

1.புதிர்/பிரச்சனை அறிதல்
2.செய்திகளைத் தொகுத்தல்
3.கருதுகோள்களை உருவாக்குதல்
4.சரிபார்த்தல்
5.பயன்படுத்துதல்

1.புதிர்/பிரச்சனை அறிதல்

- ✓ ஆய்வு தானாகவே எழாது. ஒரு பிரச்சனை அல்லது புதிர் நிலையே ஆய்வு தோன்ற இன்றியமையாத தூண்டலாகும்.
- ✓ நியூட்டன் என்ற அறிஞர் காலத்துக்கு முன்னும், ஆப்பிள் மரத்திலிருந்து உதிர்ந்து கீழ்நோக்கி தரையைச் சென்று அடைந்தது. ஆனால் யாரும் அதைப் பற்றி கவலைப்படவில்லை. நியூட்டன் மட்டும் ஏன் ஆப்பிள் மரத்திலிருந்து கீழ்நோக்கியே வர வேண்டும்/ ஏன் மேலே எழும்பிச் செல்லக் கூடாது? என்று சிந்திக்கத் தொடங்கிய போது இது அவருக்கு ஒரு முக்கிய ஆய்வுக்குரிய பிரச்சனையாக மாறியது.

SURYA TRB COACHING
www.Padasalai.Net

Contact: 81246 02428, 94435 64713, 75983 02428

2.தகவல்களைத் தேடித் தொகுத்தல்

- ✓ ஒன்றைப் புதிர் என்று அறிந்த பின் அதைத் தீர்க்க நமக்கு எத்தகைய செய்திகளும் கருத்துக்களும் உதவுமோ அவை யாவற்றையும் தேடித் தொகுக்க முயல்கிறோம்.

3.கருதுகோள் அமைத்தல்

- ✓ நம்மிடமுள்ள விவரங்களிலிருந்து புதிய தொடர்புகளைக் கண்டுபிடித்தலே கருதுகோள் அமைத்தலாகும். இப்புதுத் தொடர்புகள் பற்றிய அறிவு ஏற்படுவதற்கு 'உட்காட்சி' பயன்படுகிறது.

4.சரிபார்த்தல்

- ✓ கருதுகோளைச் சோதித்து உண்மை என்று அறியப்பட்டால் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். பிற கருதுகோள்கள் தள்ளுபடி செய்யப்படும்.

5.பயன்படுத்துதல்

- ✓ உண்மையென நாம் அறிந்த கருத்துகளை வேறு புது நிலைகளில் அல்லது சந்தர்ப்பங்களில் பயன்படுத்தலாகும்.

எடுத்துக்காட்டு:

- ✓ கலிலியோ என்னும் விஞ்ஞானி தண்ணீரைத் தண்ணீர் இயந்திரங்களினால் 33 அடி உயரத்திற்கே கொண்டு செல்ல முடிவதைக் கவனித்தார். ஏன் இந்த உயரத்திற்கு மேல் எந்திரங்களினால் நீரைக் கொண்டு செல்ல முடிவதில்லை என்று சிந்திக்கத் தொடங்கினார். இது ஆய்வின் முதல் கட்டமான, பிரச்சனை அறிதலாகும்.
- ✓ இவருக்குப் பின் வந்த பாஸ்கல் என்னும் விஞ்ஞானி இப்பிரச்சனை பற்றி தொடர்ந்து ஆராய்ந்து இது பற்றிய விவரங்களை தொகுத்தறிந்து தண்ணீர் 33 அடி உயரமே எழுவதற்கு வாயு மண்டலத்தின் அழுத்தமே காரணமாகும் என்ற கருதுகோளை வெளியிட்டார்.
- ✓ இக்கருதுகோளைப் பாஸ்கலுக்குப் பின் வந்த டாரிசெல்லி என்பவர் சரிபார்த்து 33 அடி தண்ணீர் எழக் காரணமாயிருப்பின், தண்ணீரை விட 13 மடங்கு அதிக கனமான பாதரசத்தை வாயு மண்டல அழுத்தம் சுமார் 30 அங்குல உயரமே எழும்படிச் செய்ய வேண்டும் என ஊகித்தார். டார்செல்லி ஒரு சோதனை நடத்தி இவ்வாறே நிகழ்வதைக் கண்டார்.
- ✓ பின்னர் இவ்வுண்மையைப் பயன்படுத்தி பாராமீட்டர் என்னும் காற்றழுத்தமானி கண்டுபிடிக்கப்பட்டது.
- ✓ அறிதலை அறிந்துணர்தல் (Meta Cognition) என்ற கருத்தை முதன்முதலில் அறிமுகப்படுத்தியவர் - *ஜான் ஃபிளேவல் (1979)*

மொழி (Language)

மொழி (Language) - பொருள்

- ✓ மொழி என்பது எண்ணங்களை வெளிப்படுத்த மனிதனால் வகுக்கப்பட்ட குறியீடுகளாகும்.
- ✓ மொழிக் குறியீடுகள் வாய்மொழிக் குறியீடுகளாகவோ எழுதப்படும் குறியீடுகளாகவோ இருக்கலாம்.

குழந்தைகளின் மொழி வளர்ச்சி

- ✓ சுமார் ஒரு வயதில் குழந்தைகள் தங்கள் முதல் சொல்லை பேசத் தொடங்கும்.எனினும் இதற்கு முன்பே அழுகை, பல்வேறு ஒலிகளை எழுப்புதல், தலையைத் திருப்புதல், சிரித்தல், சைகைகள் போன்றவை மூலம் சிறு குழந்தைகள் தங்கள் தேவைகளைப் பிறருக்குத் தெரிவிக்க முற்படுகின்றனர். இது 'பேச்சுக்கு முந்தைய நிலை' எனப்படும்.
- ✓ குழந்தைகளின் பேச்சுத் திறமை அதிகரிக்க, அதிகரிக்க சைகைகளின் பங்கு குறையத் தொடங்குகின்றது.
- ✓ ஆனாலும் கூட தான் கூறுவதை வலிமைப்படுத்த பேச்சோடு சைகைகளும் பயன்படுத்தப்படும்.
- ✓ சுமார் 18 மாதம் அடையும் போது குழந்தை சராசரியாக 10 முதல் 12 சிறு எளிய சொற்களைப் பயன்படுத்துகிறது.
- ✓ அடுத்த 3,4 மாதங்களில் அதன் சொற்களஞ்சியத் தொகை வேகமாக அதிகரிக்கத் தொடங்குகிறது.
- ✓ 12 வயதில் இது சாதாரணமாக 10,000க்கும் அதிகமான சொற்களை அடக்கி காணப்படலாம்.
- ✓ இம்மாதிரியே 2-3 வயதில் சிறு வாக்கியங்களை உருவாக்குதல், பன்மைச் சொற்களையும், மறு பெயர்களையும் பயன்படுத்துதல், இறந்த காலம் பற்றி பேசுதல் ஆகியன குழந்தைகளிடத்தில் காணப்படும்.
- ✓ 4-5 ஆண்டுகளில் சிக்கலான வாக்கியங்களும் பயன்படுத்தப்படும். எளிய இலக்கண விதிகளும் பின்பற்றப்படும்.
- ✓ இக்கட்டத்தில் குழந்தைகள் கேள்வி மேல் கேள்வி கேட்டு எதையும் தெரிந்து கொள்ளும் ஆர்வத்தோடு அதிகமாக பேசிக்கொண்டும் இருப்பர்.

SURYA TRB COACHING
www.Padasalai.Net

Contact: 81246 02428, 94435 64713, 75983 02428

- ✓ 5 வயதிற்குப் பின் குடும்பமும் பள்ளியும் குழந்தையின் மொழித்திறன் வளர்ச்சியை தீவிரப்படுத்துவதன் விளைவாக சொற்களஞ்சிய அளவுப் பெருக்கம், வாக்கியங்களின் நீளம் அதிகரித்தல், உச்சரிப்புத் தெளிவு, படித்துப் புரிந்து கொள்ளும் திறமை அதிகரிப்பு, எழுத்துத் திறன் வளர்ச்சி போன்றவை ஏற்படுகின்றன.
- ➢ ***பியாஜே*** -"தொடக்கத்தில் சிறு குழந்தை பயன்படுத்தும் சொற்களின் பொருள் தெளிவற்றவையாக இருக்கும். தன்னை மையமாகக் கொண்டே சொற்களுக்குப் பொருள் காணும்"
- ✓ குழந்தைகளது ஒலியெழுப்பும் செயல், மொழித்திறனாக உருவாதலில் 3 படிநிலைகளைச் சுட்டிக் காட்டியவர் - ***B.F.ஸ்கின்னர்***

மொழி வளர்ச்சியை பாதிக்கும் காரணிகள்

அகக் காரணிகள்	புறக்காரணிகள்
உடல் நலம்	வீட்டுச் சூழல்
ஆர்வம்	பெற்றோரின் கல்வித் தகுதி
சிந்தனை	பெற்றோர் மற்றும் ஆசிரியர் அளிக்கும் ஊக்கம்
கவனம்	தொலைத் தொடர்பு சாதனங்கள்
	பள்ளி
	ஒத்த வயதினரின் தாக்கம்

மொழியின் பயன்கள்

- ✓ சிந்திப்பதற்கு மொழி ஓர் கருவி
- ✓ கற்றல், மனத்திருத்தல், மீண்டும் கொணர்தல் ஆகியவற்றிற்கு மொழி உதவுகிறது.
- ✓ மனவெழுச்சிகளைத் தோற்றுவிக்க மொழி பயன்படுகிறது.

மொழியும் சிந்தனையும் (Language & Thinking)

- ✓ மொழித் தொடர்பற்ற சிந்தனை பயன்படாது.
- ✓ மொழி வழியே சிந்தனை செயல்படுகிறது.
- ✓ பேச்சு சிந்தனையின் உள்ளமைந்து காணப்படுவது மொழி.
- ✓ சிந்தனை தொடர்பாற்றலால் பேச்சு வளர்கின்றது.
- ✓ சிந்தனையின் எல்லையை மொழி நிர்ணயிக்கிறது.

சிந்தனைக்கும் மொழிக்கும் இடையேயுள்ள தொடர்பு

- ➢ ***வாட்சன்*** - "சிந்தித்தல் என்பது நமது உடலில் உள்ள பேச்சுறுப்புகளின் அசைவு "
- ➢ ***வைகாட்ஸ்கி*** -"மொழியும் சிந்தித்தலும் தனித்தனியான இரண்டு வேறுபட்ட அடிப்படைகளிலிருந்து எழுவன என்றும், இவை இரண்டின் இணைப்பும் முழுமையானதன்று என்றும் கருதுகிறார்"
- ➢ ***வோர்ப்*** -"சிந்தனையின் எல்லையை மொழி நிர்ணயிக்கிறது"
- ➢ ***புரூனர்*** -"மனிதனது பரிணாம நிலைகளில் தனது செயல்களை மேலும் சிறப்பாகச் செய்தலுக்கு உதவ அவனால் உருவாக்கப்பட்டவையே சிந்தனையும் மொழியும்"
- ➢ ***பியாஜே*** -"தொடக்க நிலையில் குழந்தையின் அறிவு வளர்ச்சி, மொழித் தொடர்பின்றி நிகழ்வதாகவும், குறியீடுகள் பயன்படுத்தப்படும் முறைகளில் மொழி ஒன்றென்றும், மொழியின்றியும் சிந்தனையில் பிற குறியீடுகளைப் பயன்படுத்தலாம் என்று கருதினார்"

மொழிசார் மனவியல் (Psycho Linguistics)

- ✓ மொழிசார் மனவியல் என்ற புதிய துறை, மொழி உருவாதலிலும், மொழியைப் புரிந்து கொள்வதிலும் அடங்கியுள்ள உளவியல் கருத்துகளை தெளிவுபடுத்துவதாகும்.
- ✓ ***1924*** ஆம் ஆண்டிலே ***வாட்சன்*** என்பவர் சிந்தனை என்பது நமக்குள் எழும் பேச்சாகும் என்று கருதி மொழிச் சொற்களுக்குப் பொருளுணர்தலில், ஆக்க நிலையிறுத்தல் என்னும் கருத்தைப் பயன்படுத்தினார். இத்தகைய கருத்தினை ***ஸ்கின்னர்*** போன்றோர் விரிவுபடுத்தினர்.
- ✓ இதற்கு எதிராக கெஸ்டால்ட் கோட்பாட்டினர், சிந்தனை, புலன்காட்சி, மொழி ஆகியன யாவும் இணைந்தவை என்றும், இவையாவும் தமக்கென ஓர் அமைப்பினைக் கொண்டவை என்றும் குறிப்பிட்டனர்.
- ➢ ***பியாஜே*** -"தொடக்க நிலையில் குழந்தையின் அறிவு வளர்ச்சி மொழித்தொடர்பின்றி நிகழ்வதாகும். குறியீடுகள் பயன்படுத்தப்படும் முறைகளில், மொழி ஒன்றென்றும், மொழியின்றியும் சிந்தனையில் பிற குறியீடுகளைப் பயன்படுத்தலாம் என்று கருதினார்"

SURYA TRB COACHING
www.Padasalai.Net

Contact: 81246 02428, 94435 64713, 75983 02428

- ***நியோம் சோம்ஸ்கி*** -"உலகின் இயல்பான மொழிகள் யாவற்றுக்கும் பொதுவாகச் சில பண்புகள் உள்ளன"
- ***நியோம் சோம்ஸ்கி*** -"ஒவ்வொரு மொழிக்கும் அடிப்படையான ஆழ்நிலை அமைப்பு உண்டென்றும், பல்வேறு மொழிகளின் மேற்பரப்பு அமைப்பில் ஒற்றுமையுள்ளது என்றும் குறிப்பிடுகிறார்"
- ***ஸ்கின்னர்*** -"மொழித்திறன் வளர்ச்சியில் முயன்று தவறிக் கற்றல் நடுவிடம் பெறுகிறதென்றும், சரியான மொழித்துலங்கல்கள், பரிசுகள், பெற்றோர்களது பாராட்டு போன்றவற்றினால் வலுபெறுகின்றன என்றும்

சிறப்பு அம்சங்கள்

1. Unit wise - study materials எளிய நடை முறையில் தெளிவான விளக்கத்துடன் கொடுக்கப்படும்.
2. Basic Concept Material அனைத்து Unit - களுக்கும் கொடுக்கப்படும்.
3. ஒவ்வொரு Unit - க்கும் 500 to 600 கேள்விகள் வினா வங்கியாக (பதிலுடன்) கொடுக்கப்படும்.
4. 2001 முதல் 2017 ம் ஆண்டு வரை நடத்தப்பட்ட முந்தைய TRB போட்டித் தேர்வுகளின் கேள்விகள் பதிலுடன் கொடுக்கப்படும்.
5. கடந்த ஆண்டு வரை நடைபெற்ற National Level Medical Entrance Test Questions with Key (UG and PG Standard) Printout கொடுக்கப்படும்.
6. Unit wise Test - ஒவ்வொரு வாரமும் சனி மற்றும் ஞாயிறு இரு நாட்களும்.
7. Education, Psychology & GK பாடங்கள் அனுபவமிக்க ஆசிரியரை வைத்து நடத்தப்பட்டு தனி கவனம் செலுத்தப்படும்.
8. கடந்த ஆண்டு வரை நடத்தப்பட்ட முந்தைய CTET, CSIR, SET, DIET Education and Psychology Question Bank with Key கொடுக்கப்படும்.
9. உங்கள் Mobile நம்பருக்கு WhatsApp மூலம் தினந்தோறும் TRB க்கான கேள்விகள் மற்றும் Current Affairs பயிற்சிக்காக அனுப்பப்படும்.
10. அனைத்து தேர்வுகளும் Original OMR Sheet மூலம் நடத்தப்படும்.
11. 5 திருப்புதல் தேர்வு மற்றும் 4 TRB Model Exam பயிற்சி காலத்திற்குள் நடத்தி முடித்து TRB Exam வெற்றி பெற பயிற்சி அளிக்கப்படும்.
12. வகுப்புகள் சனி மற்றும் ஞாயிறு கிழமைகள் மட்டும்.

100% தேர்ச்சி உறுதி !

அட்மிஷனுக்கு அணுக வேண்டிய முகவரி

SURYA TRB COACHING CENTRE

MADURAI (a place.. You try to achieve)

(Exclusively for ZOOLOGY)

" The No.1 Institute for Zoology "

Senthamil College, Tamil Sangam Road, Semmakal Bus Stop, Madurai.

(Run by : Surya Educational Trust - Regd.)

செல் : 8124602428, 9443564713, 7598302428, 8124825759

பயிற்சி ! முயற்சி !! உறுதியான வெற்றி !!!

கருதுகிறார்"

Contact: 81246 02428, 94435 64713, 75983 02428

SURYA TRB COACHING
www.Padasalai.Net

Contact: 81246 02428, 94435 64713, 75983 02428

PG & POLYTECNIC - TRB PHYSICS - RASIPURAM

V. KARIKALAN – 8807432425

12. TRANSFER OF LEARNING



www.Padasalai.Net

உங்கள் அரசுப் பணி கனவை நினைவாக்க உறுதியான வெற்றிக்கு !!!

டாக்டர் ஏபிஜே அப்துல் கலாம் அவர்களுக்காக ,,,,

www.Padasalai.Net www.TrbTnpsc.com

பயிற்சி மாற்றம் அல்லது கற்றல் மாற்றம்

TRANSFER OF TRAINING OR LEARNING

→ ஒரு கற்றலில் நிகழ்விலிருந்து பெறப்பட்ட அனுபவமும், பாதாரு கற்றலில் நிகழ்வுக்கு எடுத்துச் செலுத்தப்பட்டு நாகநத்தை ஏற்படுத்தினால் அதைக் கற்றலில் மாற்றம் என்கிறோம். கற்றலில் மாற்றம் கிளைலையணவி மனித வாழ்க்கை அனுபவங்களும் கற்றுக் கொள்வதிலேயே நடைபெறுகிறது.

→ ஒரு கற்றலில் நிகழ்விலிருந்து பெறப்பட்ட நிகழ்வு செயற்திறன்கள், பழக்கங்கள் மனப்பான்மை போன்ற எந்தவித அனுபவங்களும் பாதாரு கற்றலில் நிகழ்வுக்கு எடுத்துச் செலுத்தப்பட்டு நாகநத்தை ஏற்படுத்துவதே கற்றலில் மாற்றம் எனப்படும்.

→ "சிந்தனைத்திறன், உணர்த்திறன், வேலைத்திறன் போன்றவற்றை ஒரு நிலையாளருக்கு மற்றொரு நிலைக்கு மாற்றிப் பயன்படுத்த கூடியதே எனிதே பயிற்சி மாற்றம்." – தார்ன் & தார்ன் (1973)

→ "அறிவு, பயிற்சி, பழக்க வழக்கங்களை ஒரு சிக்கலையாருந்து மற்றொரு சிக்கலுக்கு மாற்றி பொலிவு பயிற்சி மாற்றம்" – சோன்சன் (1948)

கற்றலில் மாற்றம் – வகைகள் :

* நேரடிக் கற்றலில் மாற்றம். (positive transfer)
* எதிர்மறைக் கற்றலில் மாற்றம். (Negative transfer)
* நடுநிலைக் கற்றலில் மாற்றம்.

நேரடிக் கற்றலில் மாற்றம் :

→ ஒரு குறிப்பிட்ட பாடத்தில் அறிந்த ஒருவரை நாம் கற்றபின்னர் அத்தகைய பாடம் அல்லது செயலை மேற்கொள்ளும் அல்லது செயலாளரைக் கற்றுக் கொள்ள உதவுவதால் அல்லது எளிதாகிறதால் அது நேரடிக் கற்றலில் மாற்றம்.

TECHNICAL KALVI PADASALAI .Net

http://www.trbtnpsc.com/2013/07/trb-questions-and-study-materials.html

www.Padasalai.Net www.TrbTnpsc.com

→ உதாரணம் :

- மெல்லிய நரம்பு கொண்டவர்கள் கைப்பந்தாட்டம் நரம்பு வகையை எளிதாக அமைகிறது.
- கணிதத்தில் தேர்ச்சி பெற்றால் இயற்பியல் சிறப்பாக மற்றும் வேதியியல் சிறப்பான் பல உயர்வான பாடங்களைத் தேர்ந்தெடுக்க அடிப்படை திறமை உண்டாகிறது.
- சைக்கிள் ஓட்டம் நரம்பு கொண்ட இயற்கை, மோட்டார் சைக்கிள் ஓட்டுவதற்கு உதவி செய்கிறது.

எதிர்மறை நரம்பு மாற்றம் :

→ நாம் நரம்பு பாடம் அல்லது செயல் வேறு ஒரு பாடம் அல்லது செயலைக் நரம்பு கொள்ளுதல் தடையாக இருந்தால் அல்லது நரம்பு வகையை எதிர்மறை நரம்பு மாற்றம் எனலாம்.

→ உதாரணம் :

- இரவுநேரத்தை நேரம், நாம் வேலையை பாதிப்பு,
- உயர்வான பாடத்தில் தேர்ச்சி பெற்றவர் நரம்பு பாடத்தில் விரும்புவது
- சைக்கிள் ஓட்டும் பழக்கமுள்ள ஒருவர் இரண்டு சக்கர மோட்டார் ஓட்ட முயற்சி செய்யும் போது சாலை ஓரத்திலேயே செல்ல முயல்வது.

மூன்றாம் நரம்பு மாற்றம் : (புதிய பயிற்சி மாற்றம்)

→ நாம் நரம்பு பாடம் அல்லது செயல் வேறு ஒரு பாடம் அல்லது செயலைக் நரம்பு கொள்ளும் போது அவ்விரண்டு நரம்புகளுக்கும் பொதுவான நரம்பு வகை, அவ்விரண்டு நரம்பு வகைகளுக்கும் இடையே நேர்மறை மாற்றம் மூன்றாம் நரம்பு மாற்றம்.

→ உதாரணம் :

- கணிதத்தில் தேர்ச்சி பெற்றிருந்தால் இசைக் நரம்பு கொள்வதில் எளிதாக நரம்பு வகையை மாற்றுத்திறனாளி.

http://www.trbtnpsc.com/2013/07/trb-questions-and-study-materials.html

www.Padasalai.Net www.TrbTnpsc.com

கற்றலில் மாற்றுக் கொள்கைகள் :

I. முறைமை கட்டுப்பாட்டுக் கொள்கை அல்லது மனக் கட்டுப்பாட்டுக் கொள்கை : (Theory of formal discipline or mental discipline)

→ இது உளப்பயற்சிக் கோட்பாடு எனவும் அழைக்கப்படுகிறது.

→ இக்கொள்கையின்படி மனமானது நினைவு, கற்பனை, சிந்தித்தல் போன்ற பல மனவெழுச்சிகளைக் (faculties) கொண்டதாகும்.

→ லிலியம் ஜேம்ஸ் என்பவர் இக்கோட்பாட்டின் உண்மைத் தன்மையை சோதித்தறிய 1890-ல் இரீடர் டியுகோ என்பவர் அறுதிய "ஸைடர்" (Satyr) என்னும் கூட்டுள் தொடர்பு 158 வாக்கியை மனப்பாடம் செய்தார். பின்னர் அடுத்த 28 நாட்களை "ஆண்டிஸிடன்" அறுதிய "பாரடைஸ் லாஸ்ட்" என்னும் வெற்றுக்காப்பியத்தின் ஒரு புதிய பகுதியை மனப்பாடம் செய்ய செலவிட்டார். பிறகு மீண்டும் "ஸைடர்" கூட்டுள் தொடர்பிலுள்ள வேறு 158 வாக்கியை மனப்பாடம் செய்தார். இரண்டு சின்ன பகுதி அதில் சேரும் தேவைப்பட்டது. எனவே பயிற்சி முறைமை என்பது உண்மையல்ல என ஜேம்ஸ் வாதிட்டார்.

→ கிரெய்டு முறைமை முயலுமை கடந்திய சொற்றொடர்களை (nonsense syllables) கற்றலால் பயிற்சி பெறுவதன் மூலம் சிலவர்களது கற்கும் திறன், நினைவில் வைத்துக் கொள்ளும் திறன் ஆகியவை உயர்கிறது என பல தொய வந்தது.

→ ஸ்டீல் (உரைநடைப் பகுதிகளைக் கற்று நினைவில் வைத்திருந்தவர் பாடலைக் கற்று நினைவில் கொள்வதை மேம்படுத்துகிறதா என ஆராய்ந்தார்)

http://www.trbtnpsc.com/2013/07/trb-questions-and-study-materials.html

www.Padasalai.Net www.TrbTnpsc.com

→ மாணவர் (கிடைக்கும் பயிற்சி வாய்ப்புகளில் கிடைக்கும் வெற்றி, தோல்வி, வேறுபாடுகளை உணரும் திறன் ஆகியவை அதிகமாகிறதா என ஆராய்ந்தார்)

→ எலே & மாணவர் ஆகியோர் நடத்திய சோதனைகளின் முடிவில் மாற்றம் சிறப்பான பயற்சி மூலம் அதிகமாகிறது என்ற கோட்பாட்டிற்கு) வலுசேர்ப்பதாக அமைவதில்லை.

II. தார்ண்டைக்கின் ஒத்த கூறு கோட்பாடு:
(Thorndike's theory of identical elements)

→ ஒத்த கூறுகள் கோட்பாட்டை உருவாக்கியவர்கள்:
(i) E.L. தார்ண்டைக்
(ii) உட்வொர்த்.

→ இக்கோட்பாட்டின்படி ஒரு பாடத்திலிருந்தோ அல்லது அல்லாத்திலிருந்தோ முன்னால்நிகழ்ந்த பயிற்சி மாற்றம் நிகழ வேண்டுமானால் இரண்டிற்கும் இடையே பொதுவான ஒத்த கூறுகள் இருத்தல் அவசியமானது.

→ கிளான் (Kline) நடத்திய சோதனையால் இக்கோட்பாட்டின் உண்மைத்தன்மை கேள்விக்குறியாகிறது.

→ உதாரணம்:
- கணிதத்திலிருந்து இயற்பியலுக்கு கற்றல் மாற்றம் நிகழ வாய்ப்பு அதிகம் உள்ளது.

III. பொதுமைப்படுத்தல் கோட்பாடு:
(Theory of Generalisation):

→ C.H. ஜட் (Judd) 1908-ல் தான் நடத்திய சோதனைகளின் அடிப்படையில் இக்கோட்பாட்டை சென் வைத்தார்.

→ இக்கோட்பாட்டின்படி பயிற்சி மாற்றம் நிகழ இருப்பிடம் அல்லாவிடினாலும் கற்றலும் பாடங்களாலும் கற்றல் அவற்றில் பதிந்துள்ள மாறிகளைக் கண்டறிதல் அவசியம்.

http://www.trbtnpsc.com/2013/07/trb-questions-and-study-materials.html

www.Padasalai.Net www.TrbTnpsc.com

→ ஆடிமின் கொள்கையின்படி பள்ளிப்பருவப் வாழ்நிலைகளிற்கு பயன்படக் வேண்டுமென்னும் நோக்கிலேயே படிக்க வந்திருக்கிறார்களே தவிர பயன்களை பல மொழி ஆசிரியர்களை மாணவர்களுக்கு நெருங்கிய நல்லுறவு ஏற்படுத்தவில்லை.

→ தாய்மொழிக்கல்வி கொள்கை ஆடிமின் கொள்கைகளிலிருந்து அடிப்படையில் வேறுபடுகிறது.

IV. கெஸ்டால்ட் கொள்கையாளர்கள் தோற்ற மாற்றக் கோட்பாடு.
(Theory of transposition)

→ கற்றல் மாற்றம் என்பது பலவற்றிற்கும் உள்ள தொடர்பு குறித்ததாகவும் கண்டறிந்து கிளைவிரிவைப் புரிந்துகொண்டு பயன்படுத்தும் கூடிய திறனைப் பொறுத்திருக்கிறது என கெஸ்டால்ட் கொள்கையாளர் கருதுகின்றனர்.

→ பொருள் உணர்ந்து கற்றால்தான் பயற்சி மாற்றம் எதையும் நன்கு மேற்கொள்ள முடியும் என்பதை தோற்ற மாற்றம் கோட்பாடு கூறுகிறது.

→ "ஒரு நிலைமையில் காண்பதும் பண்புகளை வேறொரு நிலைமைக்கு மாற்றுதல் (Transferability) பயற்சி மாற்றத்தின் அடிப்படை ஆகும்" - கெஸ்டால்ட் அறிஞர்கள்.

→ "பயற்சி மாற்றத்தின் அடிப்படை தோற்ற மாற்றம்"

→ "உற்காட்சியே பயற்சி மாற்றத்தின் அடிப்படை"

→ இது "மாற்றியமைத்தல் சோதனைகள்" என்றும் அழைக்கப்படுகிறது.

→ காப்கோ பயற்சி மாற்றத்தில் 2 வகைகளாக பிரிக்கிறார்.

(1) பக்க மாற்றம்.

(2) செங்குத்து மாற்றம்.

http://www.trbtnpsc.com/2013/07/trb-questions-and-study-materials.html

www.Padasalai.Net www.TrbTnpsc.com

→ (1) பக்கவாட்டு மாற்றம் : (Lateral transfer) :

- Art-45 (Article 45) இந்திய அரசானது அடுத்த 10 ஆண்டுக்குள் (1960க்குள்) இலவசமான கட்டாயக்கல்வியைப் (Compulsory Free Education) பள்ளி வயது வந்த அனைத்து குழந்தைகளுக்கும், அவர்களின் 14 வயது வரை வழங்கப்படுதல் வேண்டும் எனக் கூறியது.
- (Art-46: SC/ST குழந்தைகளுக்கு கல்வி கொடுப்பது
- Art-48: பசுவதை தடைச்சட்டம் (Cow slaughter Prohibition Act)
- பசுவதைக்கு எதிர்த்து த.நா-ல் போராடியவர் இராஜாஜி)
- (Directive Principle) அரசியல் சட்டத்தின் நெறிமுறைக் கோட்பாட்டின்படி இலவச கட்டாயக் கல்வி எல்லோர்க்கும் வழங்கவேண்டும் என்று கூறுகிறது.
- மொத்த கல்விச் செலவில் 48.5% தொடக்க நிலை கல்விக்காக செலவிடப்பட்டு வருகிறது.
- 1944—ல் Central Advisory Board of Education (CABE) என்ற மத்திய கல்வி அறிவுரை வாரியம் இந்தியக் கல்வி வளர்ச்சிக்கானத் திட்டத்தை வெளியிட்டது. இதன்படி குழந்தைகளுக்கு இலவசக் கட்டாய ஆரம்பக் கல்வியை 40 ஆண்டுகளுக்குள் அளிக்க வேண்டும்.
- 1948—ல் நடைபெற்ற அகில இந்திய கல்வி மாநாட்டில் இலவசக் கட்டாயக் கல்வியை 16 ஆண்டுகளுக்குள் அளிக்க தீர்மானிக்கப்பட்டது.
- 1960—61—ல் தமிழக அரசு 6 முதல் 16 வயது வரையுள்ள எல்லா குழந்தைகளுக்கும் கட்டாயக் கல்வியை திட்டமிட்டுச் செயல்படுத்தியது.

<u>கோத்தாரிக் கமிஷனில் ஆரம்பக்கல்வி பற்றி கூறப்பட்டுள்ளது:</u>

(i) அனைவரும் பள்ளியில் சேர்ந்து கல்வி கற்றல்

(ii) தேக்கம; (Stagnation), கழிவு (Wastage) இருக்கக் கூடாது
தேக்கம் — நிறுத்தி வைத்தல் (Stoppage)
கழிவு — ஒரு குறிப்பிட்ட வகுப்பில் நின்று விடுதல் (Discontinues at any level)

(iii) ஓரசிரியர் பள்ளிகளை நிறுவ பரிந்துரைத்தது

(iv) ஆரம்பப்பள்ளி 1கி.மீ தொலைவிலும், இடைநிலைப்பள்ளி 3கி.மீ தொலைவிலும் அமைய வேண்டும்.

- <u>NPE (1986)</u> (New National Policy on Education) .
- புதிய கல்விக் கொள்கையின் முயற்சிகள் பின்வருவன.

1. கரும்பலகை இயக்கம் (Operation Blackboard)
தொடக்கப்பள்ளி ஆசிரியர்களின் கற்பிக்கும் தரத்தை உயர்த்துவதற்காக நாடெங்கும் மாவட்ட ஆசிரியர்கள் கல்விப் பயிற்சி நிறுவனம் (DIET) திறக்கப்பட்டுள்ளன.

- DIET – District Institute of Education and Training

3. NLM – National Literacy Mission (தேசிய கல்வியறிவு இயக்கம்) தொடங்கப்பட்டது.

மேல்நிலைப் பள்ளிக் கல்வி (Higher Secondary Education)

பல்வேறு கல்விக் குழுக்கள் மேல்நிலைப் பள்ளி கல்வியை பரிந்துரைத்தன. அவை.

❖ 1928—ல் சாப்ரு கல்விக்குழு:

இடைநிலைக்கல்வியின் இருமுனைகள்
- பல்கலைக்கழகம் புகும் மாவணர்களுக்கும்
- தொழிற்கல்வி புகும் மாணவர்களுக்கும் அமைத்தல் வேண்டும்.

❖ 1944—ல் சார்ஜண்ட் அறிக்கை

இருவகையான இடைநிலைக்கல்வி: (a) பொதுப்பாடக்கல்வி
(b) தொழில் சார்ந்த கல்வி

❖ 1952—53ல் டாக்டர் ஏ.எஸ். முதலியார் கல்விக்குழு

— உயர்நிலைப் பள்ளிக் கல்வியின் இறுதியாண்டு மேல்நலைப்பள்ளி வகுப்பாக அமைய வேண்டும் என்றும் உயர்நிலைப் பள்ளிகளில் பாட்டங்கள் பல்நோக்குடையதாக இருக்க வேண்டும் என கூறியது.

— (11+ 1 + 3) கல்வி முறையை பரிந்துரைத்தது.

❖ 1962—ல் டாக்டர் சம்பூராணானந் கல்விக்குழு

— உணர்வு ஒருமைப்பாடு உருவாக இந்தியா முழுமைக்கும் ஒரே சீரான கல்வி முறை அமைய வேண்டும்.

❖ கோத்தாரி கல்விக்குழு (1964—66)

10 + 2 + 3 கல்வியை பரிந்துரைத்தது.

❖ கல்விக்குழு (1973)

மேல்நிலைப் பள்ளிக் கல்வியில் பாடப்படிப்புகள் பல்துறைப்படுத்தப்பட வேண்டும்.

❖ தேசியக் கல்விக் கொள்கை (1968)

10 + 2 + 3 முறையை ஏற்றது.

மேல்நிலைக் கல்வியில் தொழிற் சார்ந்த கல்வி

❖ ஈஸ்வர்பாய் படேல் குழு (1977)

சமூகப் பயனுள்ள ஆக்கச் செயல்கள் (SUPW) உருவாக்கப்பட்டது.

❖ மேல்நிலைக் கல்விக்குழு (1978) — டாக்டர் மால்கம் ஆதிசேஷய்யா

பள்ளிக் கல்வியின் மேல்நிலை வகுப்பு கலைத்திட்டம் மற்றும் அதனுடன் சார்ந்த தொழிற்கல்வியினை மேற்பார்வை செய்வதாக அமைந்தது.

உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிக்கல்வி:— விடுத்லைக்குப் பின் கல்வி குழுக்கள்:— (High School & Higher Secondary School Education)

(1) உட்ஸ் அறிக்கை – 1854:

(i) பள்ளிகளுக்கு அரசாங்க நிதி உதவி அளிக்கும் சட்டம் ஏற்பட்டது

(ii) 1957—ஆம் ஆண்டு சென்னை, பம்பாய், கல்கத்தா ஆகிய நகரங்களில் முதன்முதலாகப் பல்கலைக்கழகங்கள் ஏற்படுத்தப்பட்டன.

(2) ஹண்ட்டர் கமிஷன் — 1882:

இரண்டு வகைகளில் உயர்நிலைப் பள்ளிக் கல்வி அமைந்திருக்க வேண்டும். அதாவது, உயர்படிப்புக்கு ஏற்ற வகையிலும் மற்றும் பள்ளிப் படிப்பிற்கு பின்பு பணிபுரியச் செல்வோருக்கும் ஏற்றவாறும் அமைய வேண்டும்.

(3) ஹார்டாக் குழு – 1929:—

— ஆசிரியர்களுக்கு நீண்டகால நல்ல பயிற்சியளிக்க வேண்டும்

— உயர்நிலைப் பள்ளி இறுதித் தேர்வில் தோல்வியுள்ள மாணவர்கள் படிப்பதற்கு மாநில மொழி கற்பிக்கும் பள்ளிகள் வசதியளித்தல் வேண்டும்.

(4) ஸார்ஜெண்ட் குழு — 1944:—

இக்குழுவின் அறிக்கையின் பயனாக உயர்நிலைப் பள்ளிகள் பல தோன்றின.

(5) தாராசந்த் குழு — 1948:—

— பட்டப்படிப்புக்குச் செல்ல விழையும் மாணவ, மாணவியர் 12 ஆண்டுகள் பள்ளிக்கல்வி பெற்றிருத்தல் வேண்டும்

— உயர்நிலைப்பள்ளிக் கல்வியின் இறுதியாண்டில் ஒரு பொதுத்தேர்வு வைக்கப்பட வேண்டும்.

(6) பல்கலைக்கழகக் கல்விக்குழு அறிக்கை (1948—49)

டாக்டர். இராதா கிருஷ்ணனைத் தலைவராகக் கொண்ட இக்குழுவின் பரிந்துரைகள் பெரும்பாலும் பல்கலைக்கழகத்துக்கு உரியன. சுதந்திரத்திற்கு பின்பு அமைக்கப்பட்ட முதல் குழுவாகும்.

(i) தற்போதுள்ள இண்டர்மீடியட் வகுப்புக்குப் பின்னரே (12 ஆண்டு கல்விக்குப் பின்னர்) மாணவர்கள் பட்டபடிப்பு வகுப்புகளுக்கு அனுமதிக்கப்படுதல் வேண்டும்

(ii) இண்டர் மீடியட் கல்லூரிகள் நிறுவப்படுதல்

(iii) தொழில்கல்வி பயிற்று நிலையங்கள் ஏற்படுத்தப்படுதல் வேண்டும்

(iv) 180 வேலை நாட்கள்

(v) கல்வியானது ஆராய்ச்சி நோக்கில் அமைய வேண்டும்.

(7) உயர்நிலைக் கல்விக் குழுவின் அறிக்கை (1952—55):

இக்குழுவின் தலைவர் டாக்டர். லட்சுமணசுவாமி முதலியார் ஆவார்.

- இக்குழு உயர்நிலைப்பள்ளிகள் பற்றிய அறிக்கையை சமர்பித்தது
- 4 + 3 + 3 pattern (4 ஆண்டு ஆரம்பப்பள்ளி + 3 ஆண்டு இடைநிலைப்பள்ளி ÷ 3 ஆண்டு உயர்நிலைக்கல்வி)
- விடுதியுடன் இணைந்த கல்விக்கூடங்கள்
- தாய்மொழி பயிற்று மொழியாகும்
- ஆசிரியர்களுக்கு பயிற்சியளிக்க வேண்டும்
- உயர்நிலைப்பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக மாற்றப்பட்டன
- உயர்நிலைப்பள்ளிக் கல்வித் திட்டத்தில் பல்துறைப் பாடங்களுக்கு (Diversified coursees) வழி செய்கிறது
- 60 நாட்கள் கோடை விடுமுறை

(8) கோத்தாரிக் கல்விக் குழுவின் அறிக்கை (1964–66):

தலைவர் பேராசிரியர் கோத்தாரி.

இது மேல்நிலைப்பள்ளிக் குழு எனவும் அழைக்கப்படுகிறது.

கல்வி வளர்ச்சியில் மூன்று நிலைகள்:

(i) 7 அல்லது 8 ஆண்டுகள் தொடக்கக்கல்வி

(ii) 3 அல்லது 2 ஆண்டுகள் பொது அல்லது தொழில் சம்பந்தமான உயர்நிலைக்கல்வி

(iii) 2 ஆண்டுகள் பொதுக்கல்வி அல்லது 3 ஆண்டுகள் தொழில் கல்வி (மேல்நிலைக்கல்வி)

- கல்வியில் சமவாய்ப்பு
- அதிகபட்ச மாணவர்கள் – ஆரம்பப்பள்ளி 50, இடைநிலைப்பள்ளி 40.
- கட்டணச்சலுகைகள், ஸ்காலர்ஷிப் அளிக்கப்பட வேண்டும்
- மும்மொழிக் கொள்கை
- 5 வயதில் முதல் வகுப்பில் சேர்க்கை நடைபெறும்.

❖ தொடக்கப் பள்ளிக் கல்வி, உயர்நிலைப் பள்ளிக்கல்வி, மேல்நிலைப் பள்ளிக் கல்வி ஆகிய முன்றையும் ஒருங்கிணைத்து பள்ளிக் கல்வி என்ற ஒரு அமைப்பாகத் தனது அறிக்கையில் கூறியது.

➢ தொடக்கக் கல்வி, மேல்நிலைக் கல்வி மற்றும் கல்லூரிக் கல்வி (10 + 2 + 3) என்று கல்வியின் அனைத்து நிலைகளைப் பற்றியும் கூறிய நமது நாட்டின் முதல் கல்விக்குழு, கோத்தாரி கல்விக்குழு ஆகும்.

➢ கல்வியியல் பயிற்சி கல்லூரியின் ஆசிரியர்கள் கண்டிப்பாக ஏதாவது ஒரு பாடத்தில் முதுகலை பட்டமும் கல்வியில் முதுகலை பட்டமும் பெற்றிருத்தல் வேண்டும்.

➢ ஆசிரியர்களுக்கு சிறப்பு கோடைக்கால பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட வேண்டும்.

➢ மேல்நிலைப்பள்ளிகளில் உள்ள ஆசிரியர்கள் அவர்கள் கல்லூரியில் பயின்ற முதன்மைபாடத்தையே மட்டுமே பள்ளிகளில் நடத்தவேண்டும். (கணிதம் பயின்றவர் மேல்நிலைப் பள்ளியில் கணிதத்தை மட்டுமே எடுக்க வேண்டும்)

➢ ஒவ்வொரு ஆசிரியர் பயிற்சி நிறுவனத்திலும் ஒரு மாதிரி பள்ளி அவசியம் இருத்தல் வேண்டும்.

9. தேசிய கல்விக் கொள்கை, 1968 (National Policy of Education, 1968)

கோத்தாரிக் கல்விக்குழு (1964–66), நாட்டின் முன்னேற்றத்திற்கு உறுதிமிக்கதும், தெளிவானதுமான தேசிய கல்விக் கொள்கை அமைந்திருத்தல் அவசியம் என்று வலியுறுத்தியது. ஆகவே அரசு 1968ல் தேசிய கல்விக் கொள்கையை அறிவித்தது.

- 12 ஆண்டுகள் ஆரம்பப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி கல்வி
- மூன்று ஆண்டுகள் கல்லூரிகளில் இளங்கலைப்படிப்பு.

சிறப்பம்சங்கள்:

❖ இலவச மற்றும் கட்டாயக் கல்வி
❖ ஆசிரியர்களின் தகுதி நிலை, ஊதியம் மற்றும் பயிற்சி
❖ கல்வி வாய்ப்புகளில் சமத்துவம்
❖ திறனாளிகள் (திறமையான மாணவர்கள்) அங்கீகரிக்கப்படல்
❖ வேலை அனுபவம், நாட்டு நலப்பணிகள்
❖ அறிவியல் கல்வி மற்றும் ஆராய்ச்சி
❖ வேளாண்மை & தொழிற்கல்வி
❖ புத்தகங்கள் பிரசுரிக்கப்படுதல்
❖ இடைநிலைக்கல்வி, பல்கலைக்கழக கல்வி
❖ பகுதி நேரக்கல்வி, தொலைதூரக்கல்வி
❖ கல்லாமையை ஒழித்தல் & முதியோர் கல்வி

(10) புதிய தேசியக் கல்விக் கொள்கை (1986): [National Policy on Education- NPE]

- பள்ளிக் கல்வியை எல்லா நிலைகளிலும் ஒரு சவாலாக ஏற்க வேண்டும் (Challenge of Education - a policy prospective)
- மேல்நிலைக் கல்வியில் தொழில்கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும்
- நவோதயா பள்ளிகள் திறமைமிக்க கிராமப்புறத்தைச் சேர்ந்த சிறுவர் சிறுமியர்களுக்காக தொடங்கப்பட வேண்டும்.
- இந்த அறிக்கை முன்னால் பிரதமர் ராஜிவ்காந்தி பிரதமராக இருந்த போது வெளியிடப்பட்டது.
- 7வது ஐந்தாண்டுத்திட்டத்தில் (1985–90) கொண்டுவரப்பட்டது.
- 1985, ஆகஸ்ட் 20–ல் NPE – 1986 (National Policy on Education, 1986) கல்வியிலுள்ள சவால்கள் -- ஓர் கொள்கை கண்ணோட்டம் பற்றி விவாதித்தது.
- கல்வி என்பது நிகழ் காலத்திற்கும், எதிர்காலத்திற்கும் உள்ள சிறந்த முதலீடு ஆகும்.

மற்ற பரிந்துரைகள்:

(1) தேசிய அளவிலான கல்வித்திட்டம்:–
  (அ) சமத்துவத்திற்கான கல்வி
  (ஆ) பொதுவான கல்வி அமைப்பு (10 + 2 + 3)
  (இ) கலைத்திட்டம் (Curriculum) - தேசிய அளவில் இருக்க வேண்டும்
  (ஈ) குறைந்தபட்சக் கற்றல் (MLL - Minimum Levels of Learning)

(2) அனைவருக்கும் ஆரம்பக் கல்வி (UEE - Universalization of Elementray–Education) ஆரம்பக்கல்வியை பொதுமைப்படுத்துதல் நமது அரசியல் சட்டத்தில் உள்ள வழிகாட்டும் நெறிமுறைகளில் குறிப்பிடப்பட்டு, வலியுறுத்தப்பட்டுள்ளது – Art. 45.

(3) குழந்தைமையக் கல்வி

(4) மதிப்புணர்வுக் கல்வி (அ) நன்னெறிக் கல்வி:– சமுதாயத்திலுள்ள மூதவெறித்தன்மை, பழமைவாதம், வன்முறை, மூடநம்பிக்கை ஆகியவற்றை ஒழிக்க கல்வி உதவ வேண்டும், நேர்மை, உண்மை, தைரியம், சகிப்புத்தன்மை, நீதியில் விருப்பம் etc ஆகியவற்றை மேம்படுத்த வேண்டும்.

(5) ஆசிரியர் கல்வி:– DIET, மற்றும் NCTE

(6) கரும்பல்கைத் திட்டம்:– (Operation Black Board)- OB
ஆரம்ப பள்ளிகளில் கட்டிடங்கள், ஆசிரியர்கள், பள்ளி வசதிகள் ஆகியவை மேம்படுத்தப்படும்

(7) சமுதாய ஈடுபாடு

(8) மதிப்பீட்டு முறை மற்றும் தேர்வு முறை சீர்திருத்தங்கள்.

(11) தேசியக் கல்வி கொள்கையின் திருத்தப்பட்ட செயல் திட்ட நடவடிக்கைகள் 1992 [or] Revised Programme of Action - POA, 1992

- தலைவர்:– விஜயபாஸ்கர ரெட்டி (ஆந்திரப்பிரதேச முதல்வர்)
- தேசிய கல்விக் கொள்கை 1986–ல் சில மாற்றங்களை செய்து புதிய செயல்திட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள 1991–ல் குழு அமைக்கப்பட்டது.
- 14வயது வரை உள்ள அனைத்து குழந்தைகளுக்கும் கட்டாய மற்றம் இலவசக் கல்வியை 21 ஆம் நூற்றாண்டுக்கு முன்பு வழங்குதல்.
- கரும்பலகைத் திட்டத்தை உயர் தொடக்கக்கல்விக்கும் நீட்டித்தல்

குறிப்பு:—

- ஆச்சார்ய ராமமூர்த்தி கமிட்டி (1990) என்பது தேசியகல்விக் கொள்கை, 1986ஐ ஆராய்ந்தது. இது NPERC (National Policy of Education Review Committee) எனப்படும்.

பிரிட்டிஷ் கல்விக் குழுக்களின் பரிந்துரைகள்

1. மெக்காலேயின் குறிப்புகள், 1835 (Macaulay's Minutes)

- கிழக்கிந்திய கம்பெனிச் சட்டம் 1813—ல் (Charter Act) சட்டப்பகுதி 43ன் படி, 1 இலட்சம் ரூபாய் இலக்கிய் வளர்ச்சிக்காக ஒதுக்கப்பட்டது.
- 1833 ஆம் சாசனத்தின் படி மெக்காலே கவர்னர் ஜெனாலின் சட்ட ஆலோசனைக் குழு உறுப்பினராக நியமிக்கப்பட்டார்.
- 1834ஆம் ஆண்டு ஜூன் 10—ல் இந்தியா வந்தார்.
- 1835 ஆம்ஆண்டு பிப்ரவரி 2ஆம் நாள் மெக்காலே ஒரு கல்வித் திட்டத்தைக் கொண்டு வந்தார்.
- இலக்கியம் என்பது ஆங்கிலத்தை மட்டும் குறிக்கும். இந்திய் மாணவர் என்பது லாக்கின் தத்துவம் & மில்டனின் கவிதையை கற்ற மாணவனைக் குறிக்கும்.
- ஆங்கிலம் பயிற்று மொழியாகும்.
- "கீழ்நோக்கிக் கசிதல் கோட்பாட்டை" ஆதரித்தார் மெக்காலே (Downward Filtration theory)
- ஓரியன்டலிஸ்ட் பார்டியின் தலைவர்

(வடமொழி, அரபு, பிரின் செப் பாரசீகம் etc என்பன ஓரியண்டல் இலக்கியம்)

2. உட்ஸ் கொள்கை அறிக்கை, 1854, ஜூலை 19 (Wood's Despatch, 1854)

பரிந்துரைகள்

- இந்தியக் கல்வியை அங்கீகரித்தது. மேலும், இந்தியாவின் கல்விப் பொறுப்புகள் முழுமையாக பிரிட்டிஷ் அரசுக்கே சார்ந்தது என பரிந்துரைத்தது.
- வடமொழி, அரேபியமொழி & பெர்சிய மொழிகளை பாடங்களாக பரிந்துரைத்தது.
- பொதுக் கல்வித்துறை (DPI – Department of Public Instruction) யை அனைத்து மாகாணங்களிலும் உருவாக்குதல் (இயக்குநர், துணை இயக்குநர், ஆய்வாளர், துணை கல்வி ஆய்வாளர் பதவிகள் உருவாக்கப்பட்டன).
- கல்வி அமைப்பு:

பல்கலைக்கழகம் ← கல்லூரிகள் ← உயர்நிலைப்பள்ளிகள் ← நடுநிலைப்பள்ளிகள் ← ஆரம்பப்பள்ளிகள்

- ஆர்ம்ப, நடுநிலை, உயர் நிலைப்பள்ளிகள் கூடுதலாக நிறுவப்பட்டன.
- ஆசிரியர்களுக்கு பயிற்சி ஏற்படுத்தப்பட்டது. (Teachers Training)
- பெண்கல்வி, முஸ்லீம்—கல்வி, தொழிற்கல்வியை ஊக்குவிக்க பரிந்துரைத்தது.
- கீழ்நோக்கிக் கசிதல் கோட்பாட்டை நிராகரித்தது.

3. ஹண்டர் கல்விக்குழு, 1882

ரிப்பன் பிரபு 1882—ல் சர். வில்லியம் ஹண்டர் தலைமையில் முதல் இந்தியக் கல்விக் குழுவை அமைத்தார். இக்குழு தனது அறிக்கையை 1884 ஆம் ஆண்டு சமர்பித்து சில பரிந்துரைகளை அளித்தது. அவை.

- ஆரம்பக்கல்வி:
  - தாய்மொழி (அ) இந்திய மொழியில் பயிற்றுவித்தல்.
  - ஆரம்பக் கல்வி மக்களின் பொதுவாழ்விற்கு பயன்படக்கூடியதாக இருக்க வேண்டும்.
  - ஆசிரியர்களுக்கு நன்கு பயிற்சி அளிக்க வேண்டும்.
  - இக்குழு அறிக்கையினால் நாடு முழுவதும் ஆரம்பக்கல்வி வளர்ச்சியடைந்தது.
- நாட்டிற்குரிய கல்வி (அ) பாடசாலைக் கல்வியையும் பரிந்துரைத்தது.
- இடைநிலைக் கல்வி
  - இடைநிலைக் கல்வியை நிர்வகிப்பதற்கும், ஒருங்கிணைப்பதற்கும் திறமை மற்றும் தகுதியுடைய இந்தியர்களிடம் ஒப்படைக்க வேண்டும்.
  - மக்களால் கல்வி நிறுவனங்களை நடத்த முடியாத இடங்களில் அரசு பள்ளிகளை தொடங்கலாம்.
  - இடைநிலைக் கல்வியில் ஆங்கில வழிக்கல்வி முறையையே இக்குழுவும் ஆதரித்தது.

உயர் கல்வி

- கல்வித் துறை
  - மாவட்ட கல்வி மேற்பார்வையாளராக இந்தியர்களையே நியமித்தார்.
- மான்யம் (Grant-in-aid) (அ) உதவித்தொகை வழங்குதல் (Scholarship)
- பெண் கல்விக்கு வேண்டிய முழு வளர்ச்சியையும், விரிவாக்கத்தையும் கூறியுள்ளது.
- இஸ்லாமியக் கல்விக் கொள்கையை மேம்படுத்த முயற்சிகளை எடுக்க இக்குழு பரிந்துரைத்தது.
- ஹரிஜன,பின்தங்கிய,ஆதிவாசிகள்மற்றும் மலைவாழ்மக்களுக்கு கல்வி அளித்தல்.
- பொதுக்கல்வியில் எந்த ஒரு மதக் கல்விற்கைளையும் கொடுக்கக் கூடாது. மதக்கல்வி முறையை அளிக்கும் பள்ளிகளுக்கு அரசு மான்யம் (நிதியுதவி) அளிக்கக் கூடாது.

Year & Commission (குழு)

- 1944 – சார்ஜெண்ட் அறிக்கை (Seargent Report)
- 1948 – தாராசந்த் குழு (Tharasandh Committee)
- 1948-49 – பல்கலைக்கழக குழுவின் அறிக்கை (Dr.ராதாகிருஷ்ணன் அறிக்கை) (University Grant Commission)
- 1952-55 – உயர்நிலைக் கல்விக் குழுவின் அறிக்கை (Dr.லட்சுமண சுவாமி முதலியார் (or) முதலியார் குழு அறிக்கை)
- 1964-66 – கோத்தாரிக் கல்வி குழு (Kothari Education Committee)
- 1979 – தேசியக் கல்விக் கொள்கை (10, +2, +3 Pattern)
- 1986 – NPE. புதிய தேசிய கல்விக் கொள்கை (New National Educational Policy)
- 1854 – உட்ஸ் டெஸ்பாட்ச் (Wood's Despetch) கல்வியின் மஹாசாசனம் (Magnecarta of Education)
- 1857 – (i) கல்கத்தா (Calcutta), (ii) பம்பாய் (Bombay), (iii) சென்னை (Chennai), ஆகிய நகரங்களில் முதன்முதலாக பல்கலைக் கழகங்கள் ஏற்படுத்தப்பட்டன.
- 1882 – ஹண்டர் குழு (Hunter's Committee)
- 1901 – உயர்நிலைப் பள்ளிகளை நடத்தும் பொறுப்பு பல்கலைக் கழகத்திடமிருந்து பள்ளிக் குழுவிற்கு மாற்றப்பட்டது.
- 1902 – பல்கலைக் கழகச் சட்டம் 1904-ன் படி உயர்நிலைப் பள்ளிகளை பல்கலைக் கழகங்களின் கீழ் கொண்டு வரவேண்டும் என பரிந்துரைத்தது.
- 1917 – கல்கத்தா பல்கலைக் கழகக் (Calcutta University Commission Chairman) குழுவின் தலைவராக மைக்கேல் சாதர் (Michal Sathar) நியமிக்கப்பட்டார். இவர்

குறிப்பு:—

From subject centered and teacher centered education, the transition was towards "Child Centred Education".

கல்வியின் நான்கு தூணக்கள்

- அறிவு, திறமை, மனப்பான்மை, நன்னெறிப் பண்புகள்.

கல்வியில் சமவாய்ப்பு (Equal Opportunity in Education)

— அனைவருக்கும் கல்வி கற்பிப்பதில் சமவாய்ப்பு அளிக்கபடுதலாகும்.

- சாதி. மதம். இனம். வாழ்விடம். பாலினம் போன்ற வேறுபாடின்றி தரமான கல்வியளிப்பது என்று "கல்வியியல் சமவாய்ப்பு" பற்றி NPE-1986 கூறுகிறது. இது ஒரு சமூக நீதி (Social Justice) ஆகும்.
- கல்வியியல் சமவாய்ப்பு எனபது ஒவ்வொருவரும் தங்களின உள்ளார்ந்த திறமைகளை உயரளவிற்கு வளர்த்திட வழங்கப்படும் கல்வி வாய்ப்புகள் — Dr.இராதாகிருஷ்ணன்.
- 1938 ஆம் ஆண்டே வார்தா மாநாட்டில் இலவச கட்டாயக் கல்வி பிரகடனப்படுத்தப்பட்டது.
- இந்தியக் கல்விக்குழு நான்காவது ஐந்தாண்டு திட்டக் குழுவிற்குள் ஆரம்பக் கல்வி இலவசமாக்கப்பட வேண்டும் என்றும் ஐந்தாம் ஐந்தாண்டுத்திட்ட கால முடிவிற்குள் நடுநிலைப்பள்ளிகள் எல்லாவற்றிலும் இலவச கல்வி அளிக்கப்பட வேண்டும் என பரிந்துரை செய்துள்ளது.
- பெண்கள் கல்விக்கென தனிப்பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழகங்கள்
- நாடு முழுவதும் 10, +2, +3 என்ற ஒரே சீர்மையான கல்வி முறை நடைமுறைப்படுத்தப்படுகிறது.
- கிராமப்புறத்திலுள்ள (Rural Area) அறிவாண்மை மிக்க குழந்தைகளுக்கு நவோதயப் பள்ளிகள் (Navodhaya Schools) திறக்கப்பட்டுள்ளன.
- பள்ளியை விட்டு விலகியோருக்கு முறைசார்ா கல்வியும். அவர்கள் முறை சார்ந்த பள்ளிகளில் சேருவதற்காக பலமுனை நுழைவுத் திட்டமும் (Multiple Point-entry) நடைமுறையில் உள்ளது.
- ஒவ்வோர் ஊரிலும் குன்றந்தது 2கி.மீ. தொலைவுக்குள் ஒரு தொடக்கப் பள்ளி (Primary School) தொடங்கி நடத்தப்படுகிறது.
- "கல்வியியல் சமூகவியல்" (Socialogy in Education) என்னும் புத்தகத்தை எழுதியவர் "ஹால்சி (Halcy)".
- Public School — செல்வந்தர் பயிலும் பள்ளிகள்
- இந்திய அரசியல் சட்டத்தில் கல்வி கற்கும் உரிமை நமது அடிப்படை உரிமைகளில் ஒன்றாக கூறப்பட்டுள்ளது (Fundamental RIghts)
- கோத்தாரிக் குழுவின் அறிக்கையில் கல்வியில் சமவாய்ப்பு பற்றி கூறப்பட்டுள்ளது
- கல்வியில் சமவாய்ப்பு அளிக்க ஆரம்பக்கல்வி மிகவும் இன்றியமையாததாகும்.
- கல்வியில் சமவாய்ப்பிற்கான வழிமுறைகள்:

  இலவச கல்வி, இலவச பாடப்புத்தகங்கள், இலவச உணவு, இலவச மருத்துவ வசதி, சீருடை, உதவித்தொகை, ஊனமுற்றோர்களுக்கான கல்வி, பெண்கல்வி, புறக்கணிக்கப்பட்ட பிரிவினரின் கல்விக்கு கவனம் செலுத்துதல் (S.C/S.T/B.C, M.B.C) etc.,

இந்தியாவின் எழுத்தறிவு நிலைமை (India Literacy Rate)

	1951	2001	2011
Males ஆண்கள் :	24.9%	75.85%	82.14%
Females பெண்கள் :	7.9%	54.16%	65.46%
Average மொத்தம் (சராசரி) :	16.6%	65.38%	74.04%

தமிழ்நாட்டின் எழுத்தறிவு நிலைமை (2001) (Tamilnadu Literacy Rate)

	2001	2011
ஆண்கள்	: 82.33%	86.81%
பெண்கள்	: 64.55%	73.86%
மொத்தம்	: 73.47%	80.33%

முறைசாராக் கல்வி மற்றும் வயது வந்தோருக்கான கல்வி (Non-Formal and Adult Education)

முறைசாராக் கல்வி

முதன் முதலில் 1979—80ல் 6—14 வயதுக் குழந்தைகளுக்கு முறைசாராக் கல்வி (NFE) கொண்டு வரப்பட்டது.

முறையான பள்ளிக் கல்விக்கு மாற்றாக, முறையாக வழங்கப்படும் கல்விச் செயல்களுக்கு முறைசாராக்கல்வி எனப்படும்.

வயது வந்தோர் கல்வி (ADULT EDUCATION)

- வயது வந்தோர் கல்வியில், ஒருவர் படிக்கவும், கணக்கு அறிவும் பெறுவதோடு அவர் சமுதாய, பொருளாதார பண்பாட்டு வளர்ச்சியிலும் பங்கு பெறுவதற்குரிய அறிவும் திறனும் பெறுகிறார்.
- ஏற்கனவே எழுத்தறிவு பெற்ற மக்களுக்கு தொடர் கல்வியம் அளிக்கப்படுகிறது.
- வயது வந்தோர் கல்விக்கு முதியோர்கல்வி மற்றும் சமூகக் கல்வி என்ற மற்ற பெயர்களும் உண்டு.
- பள்ளியை பாதியிலே விட்டுச் செல்லும் (Dropouts) மாணவர்களுக்கும். பள்ளிகளில்லாத இடங்களிலிருந்து வரும் சிறுவர். சிறுமியருக்கும். வேலை செய்யும் குழந்தைகளுக்கும் முறைசாராக் கல்வித் திட்டங்கள் பயனளிக்கிறது.
- முறை சாராக் கல்வியில், வயது வரம்பற்றது, குறிப்பிட்ட பாடத்திட்டம் இல்லாதது, பகுதி நேரக் கல்வி அமைப்புடையது, எல்லா வயதினரும் கற்கக் கூடியது.
- முறைசாராக் கல்வித்திட்டத்தில் 14 வயதுக்குட்பட்ட அனைத்துக் குழந்தைகளும் கட்டாயமாக ஆரம்பக்கல்வி கொடுத்து ஆக வேண்டும் என்னும் குறிக்கோள் செயலாக்கப்பட்டு வருகிறது
- 'ஒவ்வொருவரும் ஒருவருக்குக் கல்வி புகட்ட வேண்டும்' — டாக்டர். லபாக்
- முறைசாராக் கல்வி முறையில், 18 வயதுக்கு மேற்பட்ட ஆண்களும், பெண்களும் கல்வி கற்பதையே முதியோர் கல்வி எனலாம். இது பகுதி நேரக் கல்வியாக அளிக்கப்படுகிறது. இதனை வயது வந்தோர் கல்வியும் எனலாம்.
- முதியோர் கல்விக்கு இராஜாஜி அவர்கள் புத்தகங்களை எளிய, இனிய நடையில் வழங்கினார்
- பீஹார் மாநில கல்வி அமைச்சர் சையது ஹீசேன் ஒரு கரும்பலகையுடன் கிராமந்தோறும் சென்று முதியோருக்குக் கல்வி புகட்டினார்
- இந்திய நாடு விடுதலை அடைந்த பிறகு 1949—ல் முதியோர் கல்வி சமூகக் கல்வியாயிற்று
- கோத்தாரி கல்வி அறிக்கையில் சமூகக் கல்வி பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது
- 1972ஆம் ஆண்டு பன்னாட்டுக் கல்விக்குழு சமுதாயக் கல்வி பற்றி பரிந்துரைத்துள்ளது
- 1986 — தேசியக் கல்விக் கொள்கையும் இது பற்றி பரிந்துரைத்துள்ளது
- 1948 — The CABE முதன் முதலாக முதியோர் கல்வி திட்டத்த முறையாக கொண்டு வந்தது.

- 1967 – Farmer's Functional Literacy (பசுமைப் புரட்சி சமயம்) (விவசாயிகளுக்கான வாழ்க்கைக் கல்வித்திட்டம்)
- இது முதன்முதலில் அமுல்படுத்தப்பட்ட மாநிலம் மகாராஷ்டிரா
- தமிழ்நாட்டில் கோயம்புத்தூர் மாவட்டத்தில் உடுமலைப்பேட்டையில் நடைமுறைபடுத்தப்பட்டது
- Polyvalent Adult Education (பல்நோக்கு முதியோர் கல்வித்திட்டம்) தொடங்கப்பட்ட இடம் பம்பாய் - 1967. இது நகர்புறத் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டது.
- முதியோர் கல்வி இப்போது முதியோர் எழுத்தறிவு என மாற்றப்பட்டுள்ளது (Adult Education -> Adult Literacy)

  முறைசாராக் கல்வி முறையில் 15 வயதுக்கு மேற்பட்டவர்கள் கல்வி பற்றியது இது குறிப்பிடுகிறது.
- சுதந்திர இந்தியாவின் முதல் கல்வி மந்திரி — அபுல் கலாம் ஆசாத் (First Education Minister in Free India – Abul Kalam Aasath) சமூக கல்வி பற்றி குறிப்பிட்டுள்ளார்.
- 'ஒவ்வொருவரும் ஒருவருக்கு போதிக்க வேண்டும்' — டாக்டர். லாபாக்
- முதியோர் கல்வி — சமூகக்கல்வி
- முதியோர்களை நாட்டில் நல்ல குடிமக்களாக செய்வது சமூகக்கல்வியாகும். - ஹீமாயின் கபீர் (Humayeen Kabir)
- CAPE – Comprehensive Access to Primary Education (தொடக்க நிலைக் கல்வியை அனைவரும் அணுகும் திட்டம்.
- Rural Literacy Campaign (1959) - கிராமப்புற எழுத்தறிவு இயக்கம் மகாராஷ்டிரா மாநிலத்தில் (14-50 வயது) தொடங்கப்பட்டது.
- Nehru Yuvak Kendras (1973) நேரு இளைஞர் மையங்கள்: 15-25 வயது இளைஞர்களுக்கு முறை சாராக் கல்வி வசதிக்காக அமைக்கப்பட்டன.
- 1975-International Women's Year (பன்னாட்டுப் பெண்கள் ஆண்டு) — பெண்களுக்கான முறைசாராக்கல்வி தொடங்கப்பட்டது.

National Adult Education Programme (NAEP) (தேசிய வயது வந்தோர் கல்வித் திட்டம்)

- 1978-ல் NAEP – National Adult Education Programme (தேசிய வயது வந்தோர் கல்வித் திட்டம்) இது 1978. அக்டோபர் 2 (காந்தி பிறந்த நாளில்) தொடங்கப்பட்டது. (வயது 15-35). மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தின் கீழ் செயல்படுகிறது.
- POA, 1986 (Programme of Action) ஆனது NAEP ஐ புதிய வயது வந்தோர் தேசிய கல்வித் திட்டமாக (NPAE) கருதுகிறது.
- 1987—இல் Prof. D.E. கோத்தாரியின் தலைமையின் கீழ் அமைந்த கமிட்டி ஆன்து NAEP ஐ மறு ஆய்வு செய்தது (Review)
- NAEP—ன் கீழ் சமூகம், பண்பாடு & பொருளாதாரத்தில் பின்தங்கிய அனைவருக்கும் எழுத்தறிவு அளிக்க திட்டமிடப்பட்டது.
- "கல்வியானது எழுத்தறிவின் முடிவும் அல்ல, ஆரம்பமும் அல்ல" (Literacy is not the end of education, not even a beginning") — M.K. காந்தியடிகள்

NLM

- 1988-ல் NLM – National Literacy Mission (தேசிய எழுத்தறிவு இயக்கம் தொடங்கப்பட்டது.) (வயது 15-35) மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தின் கீழ் செயல்படுகிறது.
- முழுமையான எழுத்தறிவு இயக்கம் (Total Literacy campaign) – 1989 ஆனது எர்ணாகுளத்தில் நடைபெற்றது (கேரளா)
- 2005க்குள் 75% எழுத்தறிவை பெறுவது NLM—ன் நோக்கமாகும்.
- 1986-ல் MPFL – Mess Programme of Functional Literacy (பெருவாரி மக்களுக்கு செயல்முறைக் கல்வி திட்டம்) தொடங்கப்பட்டது.
- 1990-ல் Operation Enlightment (அறிவொளி இயக்கம்) தொடங்கப்பட்டது.
- ICDS (1975) - Integrated Child Development Services (ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டம்)
- TINP - Tamilnadu Integrated Nutrition Project (தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டம்).
  - இது 1980—ல் மதுரை மாவட்டத்தில் முதன் முதலில் தொடங்கப்பட்டது.
- CMNMP - Chief Minister's Nutrition's Meal Programme (முதல்வமைச்சரின் சத்துணவுத் திட்டம்).
  - இத்திட்டம் டாக்டர் எம்.ஜி.ஆர்.—ஆல் 1982—ல் தொடங்கப்பட்டது
  - 2—14 வயது வரையிலான வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள குழந்தைகளுக்கு சத்துணவு அளிக்கிறது
  - இதன் நோக்கம்: குழந்தைகளின் உடல்நலம், உடல் வளர்ச்சி, பள்ளிகளில் குழந்தைகளின் முழுமையான வருகையை ஊக்கப்படுத்துதல்.

குழந்தை தொழிலாளர்களுக்கான கல்வி

- குழந்தை தொழிலாளர் முறை ஒழிப்பு நாள் — ஜூன் 12
- 14 வயது நிறைவடையாது தொழில் செய்து வருமானம் ஈட்டும் குழந்தைகள் குழந்தை தொழிலாளர்கள் எனப்படுவர்.
- அனைவருக்கும் கல்வி திட்டத்தின் கீழ் 14 வயதிற்கு கீழ் உள்ள பள்ளி செல்லாத அனைத்து குழந்தைகளையும் கண்டறிந்து இலவசக் கல்வி அளிக்கப்படுகிறது.

குழந்தைகள் தொடர்பான திட்டங்கள்

- 1. NSS (Natonal Service Scheme)
  - NSS ஆரம்பிக்கப்பட் ஆண்டு — 1969
- 2. NRC (National Reconstruction Corps)
  - ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு — 30th June, 1999.
- 3. NCC (National Cadet Corps)
  - ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு — 1948
- 4. ICDS பயிற்சித்திட்டம்

  இது யுதிஸ்ஸா திட்டம் (Project – Udisha) எனப்படும்.

தொழிலாளர்களுக்கான கல்வித்திட்டங்கள்:

- 19-ம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் தொழிற்புரட்சி ஏற்பட்டது. (Industrial Revolution in England)
- 1945-ல் அகில இந்திய தொழில் கல்வி கவுன்சில் ஏற்படுத்தப்பட்டது. (All India Council of Technical Education)
- ஆசிரியர், மாணவர் விகிதம் (Teacher, Students Ratio) 1: 40 ஆக இப்போது இருக்கிறது.
- ஆண்டு தணிக்கைக்கு (Annual Audit), முன் ஒரு மேற்பார்வையும், ஆண்டு தணிக்கைக்குப் பின் ஒரு மேற்பார்வையும் செய்தல் வேண்டும். அதாவது கட்டாயமாக இரு மேற்பார்வைகளும், ஓர் ஆண்டுத் தணிக்கையும் இருக்க வேண்டும்.
- 1825 – லண்டன் இன்ஸ்டியூட் தொழிற்கல்வி முறையை போதித்தது.
- கிரேட் பிரிட்டனின் (Great Britain) அரசு லெய்ஸ்பேர் (Laizefaire Policy) பாலிசியை (கொள்கைளை) திடமாக பின்பற்றியது.

Laizefaire - Means "No Control"

- பொறியியல் கழகம் (Engineering Association) ஆரம்பித்த வருடம் 1956.
- இடைநிலைப் பள்ளியின் (Secondary Schools) முடிவில் தான் மன வளர்ச்சியும் பண்பாடும் Mentally Growth & Culture) கொண்ட மாணவர்கள் உருவாக்கப்படுகிறார்கள்.
- கல்வியில் வடிகட்டும் முறை (Filteration Method in Education) - மெக்காலே (Lord Mecaula) (சமூகத்தின் மேல் மட்டத்திலிருந்து சிலருக்குக் கல்வியை பரப்ப மற்ற கல்வியறிவற்ற பெரும் சமூகத்தினரை வடிகட்டுதல் ஆகும்.)
- மெக்காலேயின் கல்வியானது இடைநிலைக் கல்வியை (Secondary Education) கொண்டு வர முதற்படியாக அமைந்தது.
- ஆங்கிலம் 1937-ம் ஆண்டு நீதி வழங்கும் நீதிமன்றங்களில் மொழியாக அமைந்தது.
- நவோதயா வித்யாலயா பள்ளிகளை எல்லா மாநிலங்களிலும் ஏற்படுத்த 1986-ல் NPE (புதிய கல்வி கொள்கை) குழு பரிந்துரைத்தது.

கல்வித் தரத்திற்கான விதிகள்:

1) நல்ல சூழ்நிலை (Good Environment) 2) தகுந்த அளவு ஆசிரிய, மாணவ விகிதம் (Correct ratio of teachers & students) 3) தரமுள்ள ஆசிரியரை நியமித்தல் (Appointing quality teachers)

- தரமான் கல்வி (Quality in Education): தரமான கல்வி நல்ல சம்பளமுள்ள வேலையை கொடுக்கும் மற்றும் தரமான கல்வி மூலம் ஒருவனுக்கு சிறுசிறு அளவுகளில் நீதி போதிக்கப்படுகிறது.
- கேரள் மாநிலம் தன் கல்விப் பிரச்சினைகளைத் தீர்க்கும் பொருட்டு 10+2+3 கல்வி அமைப்பை முதன்முறையாக 1962-63-ல் அறிமுகப்படுத்தியது (ஆனால் நாடு முழுவதும் 1979-ல் தான் அமுல்படுத்தியது).
- The Underlying Principal: எத்தகைய கோட்பாடுகள் இருப்பிடங்கள் இருந்தாலும் அனைத்து மாணவ மாணவிகளும் ஒரே தரமான கல்வி கற்க வேண்டும் என்று கூறுகிறது.
- தற்போது இருமொழித்திட்டம் நடைமுறையில் உள்ளது.

முறையான முகவாண்மை அகம் (Formal Agencies)

பள்ளிகள், கல்லூரிகள், நூலகம், மியூசியம், மதம் சார்ந்த நிறுவனங்கள், விலங்குக் காட்சி சாலை (Zoo) etc.

முறைசாரா முகவாண்மை அகம் (Non-Formal Agencies)

குடும்பம், சமூக மையங்கள், டி.வி, ரேடியோ, பொதுவான விளையாட்டுக்கள், சந்தை (Market Place), அரசு, சமூகம் etc.

குறிப்பு:

- குடும்பம் என்பது செயல்படக்கூடிய முறைசாரா முகவாண்மை அகம் ஆகும். (An Active and Non-formal Agency)
- பள்ளி என்பது செயல்படக்கூடிய முறையான முகவாண்மை அகம் ஆகும். (An Active and Formal Agency)

Delinking Degrees from Employment (பட்டப்படிப்பிற்கு தொடர்பில்லாத வேலை)

- ஒரு வேலைக்கு அல்லது தொழிலுக்கு ஒருவரைத் தேர்ந்தெடுக்கையில், அவருடைய பல்கலைக்கழக பட்டங்களுக்கு மதிப்பளிக்காமல் அக்குறிப்பிட்ட வேலையைத் திறம்படச் செய்வதற்கு அவரிடமுள்ள பணித்திறன்களைக் கணக்கில் கொள்வதற்கு வேலையோடு பட்டங்களை கலவாமை (Delinking Degrees From Jobs – DDJ) எனப் பெயர்.
- இக்கருத்தை முதன்முதலில் 1974-ல் வெளியிட்டவர் ExUPSC – Chairman – A.R.Kidwai (A.R.கித்வாய்) ஆவார்.
- NPE, 1986 ன்படி
  - சில குறிப்பிட்ட துறைகளின் கீழ்வரும் வேலைக்களுக்கு பட்டப்படிப்புகளை பிரித்து விட வேண்டும்.
  - மருத்துவம், பொறியியல், சட்டம், ஆசிரியர் பணி போன்ற துறைகளிலுள்ள வேலைகளுக்கு அதற்கேற்ற பட்டப்படிப்புகளை இணைக்கலாம்.
  - பட்டப் படிப்புடன் தொழில்சார்ந்த சான்றிதழ் அல்லது பட்டயப் படிப்புகள் அவசியம் வேண்டும்.

நன்மைகள்

1. தொழில் சார்ந்த் படிப்புகள் (Vocationalization) மாணவர்களிடையே ஊக்குவிக்கப்படும்.
2. வேலைத்திறன் அதிகரிக்கும் (Work Experience).
3. பெறும் பல்கலைக்கழகப் பட்டப் படிப்புகளுக்கு மாணவர்களிடையே மவுசு குறையும்.
4. பணியிடைப் பயிற்சி (In-service) அளிப்பதால் பணியாளர்களுக்கு வேலையில் உண்மையான ஆர்வமும் வேலையில் திருப்தியும் ஏற்படும்.
5. வேலை அனுபவம் (Work Experience), சமுதாயப் பயனுள்ள ஆக்கச் செயல்கள் (SUPW) பாடத்திட்டத்தில் இடம் பெறுகின்றன.

- NCERT (1984) – National Council for Educational Research and Training (தேசிய கல்வி ஆராய்ச்சிப் பயிற்சி நிறுவனம்)
- Brain Drain (அறிவுப் புடைப் பெயர்ச்சி): நமது நாட்டில் கல்வியைக் கற்று (பொது அல்லது தொழிற்கல்வி) நமது நாட்டிற்குப் பயன்படும் வகையில் நமது நாட்டில் வேலை பார்க்காமல் அந்தத் திறமையை வெளிநாட்டில் பயன்படுத்தினால் (வேலை பார்த்தால்) அது பிரைன் டிரையன் எனப்படுகிறது.
- Brain Waste: இந்தியாவில் இருக்கும் பல மாணவர்கள், இளைஞர்கள், வல்லுநர்கள் ஆகியோர் தங்களின் உண்மையான திறமைகளை (talents) கண்டறியவும் வளர்த்துக் கொள்ளவும் இந்தியாவில் வாய்ப்பில்லை. அதனால் இந்திய மண்ணில் அறிவு வீணாக்கம் (Brain Waste) நிகழ்கிறது. இதுவும் அறிவுப் புடைப் பெயர்ச்சிக்கு ஒரு காரணமாகும்.
- Under employment (குறை நிலை வேலைவாய்ப்பு): ஒரு குறிப்பிட்ட உயர்

SUPW:-

SUPW - Socially Useful Productive Work (சமுதாயத்திற்கு பயனுள்ள உற்பத்தி வேலையை) கட்டாயப் பாடமாக 1977—ல், ஈஸ்வர்பாய் பட்டேல் என்பவர் SUPWஐ அறிமுகப்படுத்தினார்.

- மூன்று முக்கியக் கூறுகள்:—
  (i) மனித நேயம்
  (ii) அறிவியல்
  (iii) சமுதாயப்பணி
- மகாத்மா காந்தி — கைத்தொழில் (Craft)
- கோத்தாரிக் கமிஷன் — வேலை அனுபவம் (Work Experience)
- சுயவேலை வாய்ப்புத் திட்டம் (Self Exployment Program) படிப்பான்று ஏற்மைமை அடியோடு விரட்டுவதில் முக்கியப் பங்கு வகிக்கிறது.

ஐந்தாண்டு திட்டங்கள் (Five Years Plan)

- முதல் 5 ஆண்டுத்திட்டத்தில் ஆரம்பக் கல்விக்கு (Primary) முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது.
- இரண்டாவது 5 ஆண்டுத் திட்டத்தில் இடைநிலை கல்விக்கு (Secondary) முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது.
- மூன்றாவது 5 ஆண்டுத் திட்டத்தில் உயர் கல்விக்கு (Higher Education) முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது.
- நான்காவது 5 ஆண்டுத் திட்டத்தில் தொழில் நுட்பக்கல்விக்கு (Technical Education) முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது.
- NIEPA - National Institute of Educational Planning and Administration.

ஆதிசேஷய்யா குழு, 1978(அ) தொழிற்சார்ந்தகல்வி/மேல்நிலைக் கல்வி, 1978— (Vocationalisation of Education / Higher Secondary Education, 1978)

- யுனெஸ்கோ அறிக்கை, 1974—ல் தொழில்சார்ந்த கல்வி என்பது பொதுவாக அமைந்திருக்கக் கூடிய கல்வியோடு, இணைந்த தொழில்நுட்ப மற்றும் அது சார்ந்த அறிவியல் கல்வி மற்றும் பொருளாதார, சமூக வாழ்வியல் ஆகியவற்றின் கூறுகளே ஆகும்.
- ஜெ.பி. நாயக் தொழில்சார் கல்வியின் தேக்க நிலையை பற்றி விளக்கியிருக்கிறார்.
- கல்வி அமைச்சகத்தால், தேசிய மதிப்பீட்டுக் குழு ஒன்றைச் சென்னைப் பல்கலைக் கழகத்துணைவேந்தர் டாக்டர். மால்கம் எஸ். ஆதிசேஷய்யா, அவர்களைத் தலைவராகக் கொண்டு நியமிக்கப்பட்டது. அந்தக் குழு 1978—ல் "செயலாக்கக் கற்றல்பணி செய்து கற்கும் சமுதாயத்தை நோக்கி" என்ற தலைப்பின் கீழ் ஓர் ஆய்வறிக்கையைச் சமர்பித்தது.
  - இது "ஆதிசேஷய்யா அறிக்கை" எனப்படும்
  - பதினொன்று மற்றும் 12ஆம் வகுப்பு பாடத்திட்டம் சம்பந்தப்பட்டதால் இது "பன்னிரெண்டாம் வகுப்பு பாடத்திட்டத்திற்கான தேசிய மதிப்பீட்டுக் குழு அறிக்கை" 1978 எனப்படும்.
  - இது மேலும், தொழில்சார் கல்விமுறைக்கு முக்கியத்துவம் அளித்ததால், தொழில்சார் கல்விக் குறிப்புகள், அடங்கிய "மேல்நிலைக் கல்விக்கான தேசிய மதிப்பீட்டுக் குழு அறிக்கை" எனப்படும்.
  - பரிந்துரைகள்
    - ✓ சுய வேலை வாய்ப்பிற்கான தொழில் சார்ந்த படிப்புகளை உருவாக்குதல்.
    - ✓ மொழிப்பாடம் — 15% கால அளவு
      அடிப்படைப் பாடம் — 15% கால அளவு
      விருப்பப் பாடம் — 70%

மக்கள் தொகை (Population)

- உலகளவில் இந்தியா 2வது இடம் வகிக்கிறது. (In Population on 2nd Place)
- நிலப்பரப்பில் இந்தியா உலகளவில் 7 வது இடம் வகிக்கிறது. (In areawise 7th place)
- India – 1991 – 84.63 crores
- India – 2001 – 102.7 crores
- India - 2011 - 121.02 crores
- Tamilnadu – 2001 – 6.21 crores
- Tamilnadu - 2011 - 7.21 crores
- World - 2011 - 700 crores (as per UNO Report on 31st October 2011)
- Birth rate (பிறப்பு விகிதம்) (1999) இந்தியா-26.1% தமிழ்நாடு-19.3%
- Death rate (இறப்பு விகிதம்) (1999) இந்தியா-8.7% தமிழ்நாடு-8.0%
- Life Expectancy (1993-97 Average) இந்தியா-61.1, தமிழ்நாடு-64.1
- Poverty (ஏழ்மை) Under Poverty line (1999-2000) இந்தியா-23.33%, தமிழ்நாடு-21.12%

Unit – III

தேசிய ஒருமைப்பாடு (National Integration)

- தேசிய ஒருமைப்பாடு என்பது மக்களின் மனதில் எழுகின்ற நாம் அனைவரும் ஒரே தேசத்தைச் சேர்ந்த மக்கள் என்ற உணர்வு (Feeling of Oneness) ஆகும். நம் நாட்டு மக்களின் இத்தகைய உணர்வை இந்திய மனம் (Indian Mind) அல்லது இந்திய உணர்வு (Indianness) என்றும் கூறுவர்.
- 'தேசிய ஒருமைப்பாடு என்பது வெறும் செங்கல், சுண்ணாம்புக்கலவை அல்லது உளி மற்றும் சுத்தியால் உருவாக்கப்பட்டது அல்ல. அது மனிதனின் மனதின் மூலமாகவும், சிந்தனைகள் மூலமாகவும், சிந்தனைகள் மூலமாகவும், கல்வியின் மூலமாகவும் அமைதியான முறையில் வளர்க்கப்படுவதாகும்'

—டாக்டர். எஸ். ராதாகிருஷ்ணன்.

- 'அமைதியான, வன்முறையற்ற புரட்சியின் மூலம் தேசிய ஒருமைப்பாட்டை வளர்க்க முடியாவிட்டால் கட்டாயத்தின் மூலமாக அமைய வேண்டும்'

— நேரு.

உணர்வுப்பூர்வமான ஒருமைப்பாடு (Emotional Integration)

1961 — உணர்வுப்பூர்வமான ஒருமைப்பாட்டுக் குழுவின் (Emotional Integration Committee) தலைவர் டாக்டர். சம்பூராணானந் ஆவார்.

- 1967—ல் தேசிய ஒருமைப்பாட்டுக் குழுவின் தலைவர் திருமதி. இந்திராகாந்தி ஆவார்
- 1968—ல் இக்குழுவின் முதல் கூட்டம் ஸ்ரீநகரில் நடந்தது.
- மாநில எல்லைகள், மாநிலப் பண்பாடுகள், மாநில மொழிகள், மாநில அரசியல்கள், மாநில வகுப்பு வாதங்கள் இவற்றை எல்லாம் கடந்து "இந்திய மனம்" என்ற பேருணர்வே தேசிய ஒருமைப்பாடு ஆகும்.
- நாட்டின் ஒற்றுமையிலும் முன்னேற்றத்திலும், ஈடுபடும் மக்களின் மனமுதிர்ச்சி மற்றும் பல வேற்றுமைகளிடையே அனைவரையும் இந்தியராகப் பிணைக்கும் உணர்வே (Unit in Diversity) தேசிய ஒருமைப்பாடு எனப்படுகிறது.
- பொதுவான வாழ்க்கை இலட்சியங்கள், பொதுவாக நடத்தை நெறிமுறைகள் ஆகியவற்றை உள்ளடக்கிய ஒருமைப்பாடு (Emotional Integration) தேசிய ஒருமைப்பாட்டுக்கு தேவையான ஓர் அம்சமாகும்.

தேசிய ஒருமைப்பாட்டினை வளர்த்திடுவதின் முக்கியத்துவம் (Importance)

- இந்திய நாட்டின் அரசியல் சுதந்திரத்தை பேணிப் பாதுகாப்பதிலும்
- பொருளாதார வளர்ச்சிக்கும் விரைவான முன்னேற்றத்திற்கும்
- தேசிய நலன்களை காத்திடவும்
- சமூக ஒற்றுமை சமூக நீதி தழைக்கவும்
- வன்முறை, பிரிவினைவாதம், வகுப்புவாதம், மதவெறி தடுத்தல்.
- சகோதரத்துவம், கூடிவாழுதல், சகிப்புத்தன்மை ஆகியவற்றை வளர்த்தல்.

தேசிய ஒருமைப்பாட்டை வளர்க்கும் வழிகள்:

1. அறிவு சார்ந்த முறை (Intellectual Approach)
2. உடல் சார்ந்த முறை (Physical Approach)
3. மனவெழுச்சி சார்ந்த முறை (Emotional Approach)

1. அறிவு சார்ந்த முறை

- மாநிலங்களுக்கு இடையே நல்லுறவு, பண்பாட்டு பரிமாற்றம், தேசிய உணர்ச்சி, விடுதலை போராட்ட வீரர்களின் தியாகங்கள் போன்றவற்றை பாடங்கள் மூலம் மாணவர்களுக்கு அறியச் செய்தல் வேண்டும்.
- கலைத்திட்டத்தோடு இணைந்த செயல்களாக தேசிய விழாக்கள் கொண்டாடுதல், தேசிய அறிவியல் கண்காட்சிகள் உல்லாசப் பயணம், கல்விப் பயணம் மேற்கொள்ளுதல் மற்ற மாநிலங்களின் கலாச்சாரம் பற்றி படித்தல், மற்ற மொழிகளின் கலாச்சாரம் பற்றிப் படித்தல், பள்ளி விழாக்களில் தேசிய ஒருமைப்பாட்டை வளர்க்கும் முறையில் நாடகங்கள் நடித்தல்.

2. உடல் சார்ந்த வழிகள்

- கூட்டு உடற்பயிற்சி, விளையாட்டு, தேசிய மாணவர் படை, நாட்டு நலப்பணி திட்டத்தில் மாணவர்களை ஈடுபடச் செய்து தேசிய ஒருமைப்பாட்டை வளர்த்தல்.

3. மனவெழுச்சி சார்ந்த வழிகள்:

- நாட்டுக்கொடி, நாட்டுப்பண்ணுக்கு மரியாதை செலுத்துதல், ஜெய்ஹிந்த், வந்தே மாதரம் ஆகிய ஒலிகளுடன் தேசியத் தலைவர்களின் படங்களுக்கு மரியாதை செய்தல், சமுதாய விழாக்கள் கொண்டாடுதல், உதவி நடவடிக்கைகள் மூலம் ஒருமைப்பாட்டை வளர்த்தல்.

தேசிய ஒருமைப்பாட்டுக்கு இடையூறாக இருப்பவை:

- சாதி வெறி, மதவெறி, பொருளாதார ஏற்றத்தாழ்வுகள், மொழிவெறி, பலவேறு அரசியல் கட்சிகள், கலாச்சார மனப்பான்மை, மாநில மனப்பான்மை, தேசிய தலைமையின்மை, இளைஞர்களிடையே மனமுறிவு போன்றவை.

உலக நல்லுணர்வுக் கல்வி (Education for International Understanding)

- உலக நாடுகள், உலக பண்பாடுகள், உலக சமுதாயங்கள், உலகக்கலைகள், உலக நாட்டுக் கவிதைகள், உலகின் இயற்கை வளங்கள் போன்ற உலகளாவிய அறிவைப் பெறுவதும், அவற்றைப் புரிந்தும் உணர்ந்தும் பெருமிதப்படுவது உலக மனப்பான்மை அல்லது உலக நல்லுணர்வு (World Mindedness or International Understanding) எனப்படும்.
- பள்ளிகளில், மாணவர்களிடம் உலக மனப்பான்மை உருவாக்கிடுவதற்காக மேற்கொள்ளப்படும் அனைத்து கல்வி நிகழ்ச்சிகளுக்கு உலக மனப்பான்மைக் கல்வி (education for International Understanding) எனப்படும்.
- உலகில் ஏதேனும் ஒரு மூலையில் நிகழும் சாதனைகளுக்காக மகிழ்கின்ற, பிறிதொரு மூலையில் நிகழும் சோகங்களுக்காக கலங்குகின்ற உள்ளத்தை இளம் மாணவர்களிடம் உருவாக்குவதே உலக மனப்பான்மைக் கல்வியின் அடிப்படை ஆகும்.
- நம் நாட்டுப் பெருமைகளை நினைத்து மகிழும் வேளையில் பிற பகுதிகளில் உள்ள வளங்களையும், சிறப்புகளையும் நினைத்துப் பெருமிதப்படுவது உலகப்பற்று (internationalism) எனப்படும்.

உலக மனப்பான்மைக் கல்வியின் அவசியம் .

- உலக நாடுகள் ஒன்றை ஒன்று புரிந்து கொள்ளுதல், கூட்டுறவு மனப்பான்மையை வளர்த்துக் கொள்ளுதல். சில நாடுகள் இணைந்து வளர்ச்சிப் பாதையில் அமைதியாகவும் நட்புறவுடனும் கூடி வாழ்வது ஆகியன இன்றைய நிலையில் மிகவும் அவசியமாகிறது. இவற்றைக் கல்வியால் மட்டுமே மாணவர்களிடம் வளர்த்திட முடியும்.

மதிப்புணர்வுக் கல்வி (Value Education)

- தனி மனித மகிழ்ச்சிக்கும் சமூக நலனுக்கும் இன்றியமையாத மதிப்புகளை கற்றுக் கொள்வது மதிப்புணர்வு கல்வி (Value Education) எனப்படும். எது நல்லது? எது கெட்டது? என வாழ்நாளெல்லாம் தேடுகின்ற முயற்சியே மதிப்புணர்வு கல்வி ஆகும்
- மதிப்புணர்வு கலவி என்பது கற்பவரை மேம்படுத்தி மனிதனாக்கி அவனது ஆளுமையில் உரிய மாற்றங்களை ஏற்படுத்துவதே ஆகும்.
- அறநெறிகளை அறிவது, ஒழுக்க உணர்வுகளை போற்றி அதன்படி நடக்க முற்படுவது ஆகிய அனைத்தையும் மாணவனிடம் கற்பிக்க முயல்வதே மதிப்புணர்வு கல்வி ஆகும்.

மதிப்புணர்வு கல்வியின் அவசியம்

- ஒழுக்க சிதைவு, அறிவுக்கு முக்கியமளிக்கும் கல்வி பிற்போக்கு கலாச்சாரம், சமூக அக்கறையின்மை, தேசிய நலனில் அக்கறையின்மை, ஆகியவற்றை நீக்க மதிப்புணர்வு கல்வி அவசியம் ஆகிறது.

சத்துணவும், உடல்நலமும் (Nutrition and Health)

மனிதன் உயிர்வாழ உணவு, உடை, உறைவிடம் ஆகிய மூன்றும் இன்றியமையாதது ஆகும். இவற்றில் உணவு முதலிடம் பெறுகிறது. உடலின் வளர்ச்சிக்கும், பழுதுபட்ட திசுக்களைப் புதுப்பிப்பதற்கும் உடல் சக்திக்கு தேவையான வெப்பத்தை கொடுக்கவும் உணவு மிகவும் அவசியம்.

- உடல் வளர்ச்சியைத் தூண்டுவதற்கும், உடலுக்கும் சக்தியை அளிப்பதற்கும் உதவும் உணவுப் பொருட்களை ஊட்டச் சத்துக்கள் என்கிறோம். அவை புரதம் (protein) மாவுச்சத்து (Carbohydrates) கொழுப்பு (Fat), தாது உப்புகள் (Mineral), நீர், உயிர் சத்துகள் (Vitamins) போன்றவை.
- வளமான கல்விக்கு அடிப்படையாக விளங்குவது சத்துணவு (Nutrition) ஆகும்.
- உடல் நலம் பற்றிய விழிப்புணர்ச்சி, நலவாழ்வு குறித்த சரியான மனப்பான்மைகள், நலவாழ்வுக்குரிய நடத்தைகள் ஆகிறவற்றைக் கற்றுக் கொள்ள உதவும் அனைத்து கல்விச் செயல்களும் உடல் நலக்கல்வி (Health Education) என்று அழைக்கப்படுகிறது.
- சுல்ட்ஸ் (Schultz, 1985) என்பவர் கருத்துப்படி சிறு குழந்தைகள் கடுமையான உணவுப் பற்றாக்குறையால் (Malnutrition) வாடும் போது அக்குழந்தைகளின் மூளையின் எடை குறைகிறது. மூளையில் உள்ள செல்களின் எண்ணிக்கை 30% குறைகிறது.
- வினிக் (Winick 1976) என்பாரின் கருத்துப்படி உணவுப் பற்றாக் குறையால் வாடும் குழந்தைகளிடம் உடல் இயக்கத் திறன்களும் அறிதன்மை வளர்ச்சியும் குன்றுகின்றன.

வைட்டமின் (Vitamin)		வைட்டமின் பற்றாக்குறையால் ஏற்படும் நோய்கள் (Diseases due to vitamin deficiencies)
A	-	மாலைக்கண், Xeropthalmia (Blindness)
B	-	பெரிபெரி (Beri-Beri)
C	-	ஸ்கர்வி (Scurvy)
D	-	ரிக்கட்ஸ் (Rickets)

- ❖ கார்பன் மோனாக்சைடு என்ற நச்சு வாயு மிக ஆபத்தான விளைவுகளை ஏற்படுத்துக்கிறது. (கார், பேரூந்து, மற்றும் இதர வாகனங்களில் இருந்து வரும் புகை)
- ❖ World Health Organization — தலைமை இடம் ஜெனிவா (Geneva)
- ❖ உலக நல நாள் (World Health Day) – April 7

<u>பாதுகாப்பு மற்றும் முதல் உதவி (Safety and First Aid):</u>

விபத்துக்களில் அடிபட்டோர்க்கும், திடீரென நோயுற்றோர்க்கும், மருத்துவரிடம் எடுத்துச் செல்லும் முன், அவசர காலத்தேவைக்கு அளிக்கப்படும் அடிப்படையான உதவியே முதல் உதவி ஆகும்.

<u>முதல் உதவியின் முக்கிய நோக்கங்கள்:</u>

1. பாதிப்புக்கு உள்ளானவரை உயிரோடு வைத்து இருத்தல்
2. மருத்துவர் வருவதற்குள் நிலைமை மோசமாகி விடாதவாறு பாதிக்கப்பட்டவரின் உடல் நிலையைக் கவனித்திடுதல்
3. பாதிக்கப்பட்டவரின் துன்பத்தை ஓரளவு குறைத்திடுதல்

<u>பெண்கல்வி (Women's Education)</u>

ஆண்களுக்கும் கல்வி கற்பதில் என்னென்ன வசதிகளும் வாய்ப்புகளும் இருக்கின்றனவோ அவற்றுக்கு நிகராக பெண்களுக்கு கல்வி கற்பதற்குரிய அனைத்து வசதிகளையும் ஏற்படுத்தி தருவதே பெண்கள் கல்வி (Women's Education) எனப்படும்.

"ஓர் ஆண் கல்வி கற்பதால் அது அவருக்கு மட்டுமே பயன்படுகிறது. ஒரு பெண் கல்வி கற்றால் அது அவரது குடும்பமே கல்வி கற்பதற்கு சமம்".

கூறியவர் சுவாமி விவேகானந்தர்.

"ஆணுக்கு இணையாகப் பெண்களும் அறிவு பெற்றால் இவ்வையகம் தழைத்து ஓங்கும்."

— கூறியவர் பாரதி.

"பெண்களுக்கும் ஆண்களைப் போலவே இணையான கல்வி வழங்குவதோடு மட்டுமின்றி அவர்களுக்குத் தேவைப்பட்டால் சிறப்பான கல்வியும் வழங்கவேண்டும்."

கூறியவர் காந்தி.

- ❖ லார்டு வில்லியம் பெண்டிங், டல்ஹௌசி, கர்சன் பிரபு, போன்றவர்கள் பெண் கல்வியில் ஆழ்ந்த அக்கறை காட்டினர்.
- ❖ இராஜாராம் மோகன்ராய், ஈஸ்வர சந்திர வித்யாசாகர், ஆகியோர் பெண் கல்வியை ஆதரித்தனர்.
- ❖ கல்கத்தா பல்கலை குழு (மைக்கேல் சாதர் — 1917) பெண்களுக்காக தனி கல்வி நிறுவனங்கள் உருவாக்க வேண்டும் என்றும் பெண்களுக்கு தனிப்பட்ட பாடத்திட்டம் அமைக்க வேண்டும் என்றும் பரிந்துரைத்தது.
- ❖ 1926-ம் ஆண்டு அகில இந்திய பெண்கள் சங்கம் (All India Women's Association — AIWA) அமைக்கப்பட்டது.
- ❖ காந்தி அடிகள் பெண் கல்வியில் அதிக ஈடுபாடு காட்டினார். அவர் "பர்தா" அணியும் வழக்கத்தை வன்மையாக எதிர்த்தார்.
- ❖ 20-ம் நூற்றாண்டு தொடக்கத்தில் கர்சன் பிரபு பெண் கல்வியில் ஆழ்ந்த அக்கறை காட்டினார்.
- ❖ மகிள சமக்கிய திட்டம் (Mahila Samakhya) என்பது பெண்களுக்கான கல்வித்திட்டம்.
- ❖ NPE, 1986 இல் பெண்களின் நிலை & கல்வி பற்றி கூறப்படுகிறது.
- ❖ துர்க்காபாய் தேஸ்முக் குழு (1959): பெண்கல்வி பற்றிக் கூறுகிறது.
- ❖ கல்வி பற்றிய தேசிய கல்விக் கொள்கை – 1968: பெண்கல்வி பற்றிக் கூறுகிறது.
- ❖ இந்தியாவில் பெண்களின் நிலைபற்றிய குழுக்களின் முடிவுகள் — 1974.
- ❖ Art 15(3): பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கென கல்வி தொடர்பாக சிறப்பு விதிகளை உருவாக்குதல்.

இராதாகிருஷ்ணன் குழுவின் பரிந்துரை: (பல்கலைக் கழகக் கல்விக் குழு)

- பெண்களுக்கு கல்வியில் வழிகாட்டல் (Educational Guidance) வாழ்க்கைப் பிரச்சனைகளுக்கு தீர்வு காணுதலில் வழிகாட்டுதல் (Personal Guidance) வேண்டும்.
- ஆண் ஆசிரியர்களுக்கு தரும் ஊதியம் பெண் ஆசிரியைகளுக்கும் தரப்படல் வேண்டும்.
- பொருளாதாரம், குடும்ப நிர்வாகம், ஆகிய பாடங்களை பெண்கள் பயில அறிவுரை வழங்க வேண்டும்.

ஏ.எல்.முதலியார் குழுவின் பரிந்துரைகள்:

- மனையியல் (Home Science) பாடம் அதிக அளவில் பெண்களுக்கான உயர்நிலைப் பள்ளிகளில் கற்பிக்கபடுதல் வேண்டும்.
- பெண்களுக்கான பள்ளிகள் தேவை உள்ள இடங்களில் திறக்கப்பட வேண்டும்.
- பெண் ஆசிரியர்கள் நியமித்தலை ஊக்குவிக்க வேண்டும்.

ஹன்சா மேத்தா குழுவின் (1962) பரிந்துரைகள்

- பெண் கல்விக்கான தேசிய மன்றம் (National Council for Women's Education) இக்குழுவை நியமித்தது.
- தொடக்க பள்ளிகளில் பெண் ஆசிரியர்கள் நியமனம்.
- இருபாலர் கல்வியை ஆரம்ப நிலையிலேயே கொண்டு வர வேண்டும்.

பக்தவச்சலம் கல்விக் குழுவின் (1963) பரிந்துரைகள்

- பெண் ஆசிரியர்களுக்கு இலவச வீட்டு வசதி, சிறப்பு ஊதியம், போக்குவரத்து வசதிகள் போன்றவை.
- பெண்களுக்கு தொழில் நுட்ப கல்வி நிறுவனங்களை ஏற்படுத்துதல்.
- பொதுமக்கள் உதவியுடன் கிராமத்தில் பெண் கல்வி உருவாக்கப்பட்டது.

கோத்தாரி குழுவின் பரிந்துரைகள்

- பெண் கல்விக்கென தனித்திட்டங்களுக்கு முன்னுரிமையும், நிதியும் ஒதுக்கப்பட வேண்டும்.
- உயர்கல்வி பயிலும் மாணவிகளுக்கு படிப்பு உதவித் தொகை மற்றும் பண உதவி அளிக்கப்பட வேண்டும்.

டாக்டர். இராஜம்மாள் தேவதாஸ் குழுவின் (1976) பரிந்துரைகள்

- உயர் கல்வியில் பெண்களுக்கு சமஉரிமை
- பெண்கள் கல்லூரிகளில் தனிப்பயிற்சி வகுப்பின் மூலம் ஆங்கில அறிவை வளர்க்க துணை செய்தல்.

பெண்கல்வியின் நோக்கங்கள்

- குடும்ப நிர்வாகம் வேலையில் மரியாதை, சமமான பொறுப்பு, சமமான வாய்ப்பு, முடிவெடுத்தல், தற்சார்பு, சட்ட உரிமைகள் பொது வாழ்வில் பங்கேற்பு, சமஉரிமை — மோதல்களுக்கல்ல, உற்பத்தி பெருக்கம், அணிகலன் மோகத்தை கைவிடுதல், மேன்மையடைதல் ஆகியன பெண் கல்வியின் நோக்கங்கள் ஆகும்.

எழுத்தறிவற்ற பெண்களுக்கான திட்டங்கள்

கிராமப் புறங்களில் வாழும் பெண்களின் உடல்நலம், கல்வி, தொழில்நுட்ப

1. ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டம் (Integrated Child Development Scheme – ICDS – 1975)
2. கிராமப்புற இளையோருக்கான சுய வேலைவாய்ப்பு பயிற்சி (Training to Rural Youth for Self Employment – TRYSEM 1979)
3. கிராமப்புற பெண்கள், பெண் குழந்தைகளின் வளர்ச்சித் திட்டம் (Development of Women and Children in Rural Areas – DWCRA – 1982)

- ஐக்கிய நாடுகள் சபை (UNO) 1978-ம் ஆண்டினை சர்வதேச பெண்கள் ஆண்டாக அறிவித்தது.
- பெண்கள் உயர்கல்விக்காக அன்னை தெரசா பெண்கள் பல்கலை கழகம் (கொடைக்கானல்) 1984-ம் ஆண்டு தொடங்கப்பட்டது.
- ஒவ்வொரு ஆண்டும் பெண்கள் தினம் (Women's Day) மார்ச் 8ம் தேதி கொண்டாடப்படுகிறது.

<u>ஊனமுற்றோர் கல்வி (Education for the Handicapped)</u>

பேச்சு, கேள்வி, பார்வை, உடலுறுப்பு, மூளை வளர்ச்சி ஆகிய குறைபாடுகள் உள்ள குழந்தைகளுக்கு வழங்கப்படும் சிறப்பு வகையான கல்வி ஊனமுற்றோர் கல்வி எனப்படும்.

குறைபாடு உள்ள குழந்தைகளை (Handicapped Children) பின்வருமாறு பிரிக்கப்பட்டு உள்ளது.

1. உடற்கூறு குறைபாடு உடையோர் (Physically Handicapped)
2. மன வளர்ச்சி குன்றியோர் (Mentally Challenged)
3. சமூக வளர்ச்சி குறைபாடு உடையோர் (Emotionally Handicapped)

- வகுப்பு ஆசிரியர் ஒவ்வொரு குழந்தைக்கும் கல்வி புகட்டும் வகையில் ஆசிரியர்களுக்கு பயிற்சி கொடுக்க வேண்டும் (புத்தாக்கப் பயிற்சி – Orientation Programme). ஆசிரியர் குழந்தைகளுக்கு கொடுக்கும் பயிற்சியினால் குழந்தைகள் தங்கள் குறைபாடுகளையும் மீறி நடத்தைப் பண்புகளில் முன்னேற்றம் காண முடியும்.

<u>பயிற்சி:</u>

1. தன்னிச்சையாக இயங்குவதற்கு கற்றுக் கொடுத்தல்
2. தாழ்வு மனப்பான்மையை அகற்றுதல்
3. தகுந்த வேலை வாய்ப்புத் துறையில் திறமை பெறுதல். etc.

- உடற்குறைபாடு உடைய குழந்தைகளுள் பார்வையற்றோர், காது கேளாதோர், ஊமையர் போன்ற புலனு இயக்க குறைபாடு உடைய குழந்தைகளும், உடல் இயக்க குறைபாட்டினை (Defective Motor Ability) உடையவரும், பேச்சுக் குறைபாடு உடையவர்களும் அடங்குவர்.

<u>மன வளர்ச்சி குன்றியோரின் வகைகள்</u> (Mentally Retarded)

<u>1. மேதையர்கள்</u> (Morons)

- நுண்ணறிவு ஈவு: 50 – 75
- இவர்கள் கற்பிக்கத்தக்க மனவளர்ச்சி குன்றியவர்கள் (Educatable Mentally Retarded)

<u>2. மூடர்கள்</u> (Imbeciles)

- நுண்ணறிவு ஈவு : 25 – 50
- கல்வியில் முன்னேற்றம் காண இயலாது. ஆனால் பயிற்சியில் முன்னேற்றம் காண முடிவதால் கைத் தொழிலைக் கற்று வருவாய் ஈட்டமுடியும். எனவே, இவர்கள் பயிற்சியளிக்கத்தக்க மனவளர்ச்சி குன்றியவர்களாவார் (Trainable Mentally Retarded)

<u>3. முட்டாள்கள்</u> (Idiots)

- நுண்ணறிவு 25க்கு கீழ் உள்ளது.
- இவர்கள் முழுக்க முழுக்க மற்றவர்களைச் சார்ந்து இருப்பர். இதனால் இவர்கள் பயிற்சி கூட அளிக்க இயலாத மனவளர்ச்சி குன்றியவர்கள் எனலாம்.

கற்பிக்கத்தக்க மனவளர்ச்சி குன்றியவர்களுக்கான கல்விமுறைகள்

1. பெற்றோர்களுக்கான ஆலோசனை வழங்குதல்.
2. சிறப்பு பள்ளிகள் & சிறப்பு மருத்துவமனைகள்.
3. சிறப்பு பயிற்சி பெற்ற ஆசிரியர்கள், உளவியல் அறிஞர்கள், உளவியல் மருத்துவர்கள் இருத்தல் அவசியமாகும்.
4. சிறப்பு கலைத் திட்டம்.

- மனவளர்ச்சி குறைபாடு உடையவர்களில் நுண்ணறிவு குறைவாகவும் பெற்றுள்ளோர் (நுண்ணறிவு ஈவு 70-க்கு குறைவாக இருத்தல்) மெதுவாகக் கற்போர் ஆகியோரும் அடங்குவர்.
- சமூக வளர்ச்சி குறைபாடு உடையவர்களில் நெறிபிறழ் நடத்தை உடையோர், தாய் தந்தையற்றோர், அநாதைகள் ஆகியோர் அடங்குவர்.
- தமிழகத்தில் ஊனமுற்றோர்க்காக 47 சிறப்பு பள்ளிகள் செயல்படுகின்றன.
- சிறப்புக்கல்வி (Special Education) என்பது கல்வித் திட்டத்தில் ஓர் அங்கமாகும். இது ஊனமுற்ற குழந்தைகளின் உள்ளுணர்வுகளை வெளிக் கொணரவும், அவர்களை சமுதாயத்தின் ஓர் அங்கமாக மாற்றவும் ஏற்றவாறு அமைக்கப்பட்டு உள்ளது.

பார்வையற்றோர்க்கான கல்வி (Education for visually impaired children).

பார்வையற்ற குழந்தைகளுக்கான கல்வி முறைகளை ஹெலன் கெல்லர் (Helan Keller) பரிந்துரைத்துள்ளார்.

(i) தனிவகுப்பு (Segregated Class)
(ii) நடமாடும் ஆசிரியர் திட்டம் (Teacher Plan)
(iii) பிரேயில் நூலகம் (Brail Library) — பிரேயில் முறை

ஒவ்வொரு நாட்டிலும் கல்வி கற்கும் வயதுக் குழந்தைகளுள் பார்வையற்றோரும் (Blind) பார்வைத் திறன் குறைந்தோரும் (Visually Handicapped) 5% இருக்க கூடும் எனப்படுகிறது.

- 18-ம் நூற்றாண்டில் தான் பார்வையற்றோர்க்கான கல்வி பற்றி முதன் முறையாக தனிக் கவனம் செலுத்தப்பட தொடங்கியது.
- வாலண்டைன் ஹென்றி என்பவர் இத்துறையின் முதல் ஆசிரியர் என்று குறிப்பிடப்படுகிறார்.
- HELEN KELLER போன்றோர் பார்வையற்றோர்க்கான கல்வி முறை புறக்கணிக்கபட்டால் இவர்களுள் திறன் மிக்கோரது பணியும் சமுதாயத்திற்கு கிட்டாமல் போகக்கூடும் என்று கருதினார்.

பார்வையற்றோர்க்கான கற்பித்தல் முறைகள்

இவர்களுக்கு கற்பித்தலில் செவி வழியே அறிவு புகட்டல் முதலிடம் பெறும். தொடு புலனுணர்ச்சியைப் பயன்படுத்தி பிரெயில் (Brail) முறையில் எழுத்தறிவைப் பெறுதல் பரவலாகப் பயன்படுத்தபடுகிறது.

- பார்வையற்றோர்க்கு விவசாயம் மற்றும் சிறுதொழில் பயிற்சி அளிப்பதற்காக குஜராத்தில் பஸ்லா என்னுமிடத்தில் "The Agricultural for Blind" என்ற அமைப்பு ஏற்படுத்தப்பட்டு உள்ளது.

காதுகேளாத குழந்தைகளுக்கான கல்வி (Education for hearing impaired Children)

பயிற்சி

- சிறு வயதிலேயே சோதனை வழியே (Audio meter) காது கேளாமையின் அளவினை அறியலாம்.
- ஒலியின்னை டெசிபல் (Decibel) என்னும் அலகு கொண்டு குறிப்பிடுவர்.
- ஒரு குழந்தையின் செவியின் திறன் 50 டெசிபல் அல்லது அதற்கு மேல் குறைபாடு உள்ளதாக இருப்பின் அதன் கல்விக்கு தனி முறைகள் தேவை.
- மத்திய அரசு வயது வந்த காது கேளாதோருக்கு ஹைதராபாத்தில் ஒரு பயிற்சி நிலையம் ஏற்படுத்தி உள்ளது.

காது கேளாத குழந்தைகளுக்கான கல்வி முறை:

- ❖ காது கேட்கும் கருவியை உபயோகப்படுத்துவதற்கு பயிற்சி (Hearing aids)
- ❖ கேட்கும் திறனுக்கு பயிற்சி (Auditory)
- ❖ உதடுகளின் அசைவை கவனித்து அறிதல் (Lip reading)
- ❖ பேச்சை திருத்துதல் (Speech correction)
- ❖ விரல்களின் அசைவை அறிதல் (Sign Language)

மீத்திறன் மிக்கோருக்கான கல்வி (Education for the Gifted)

அறிவுத்திறன் மிகுந்த அளவில் பெற்று உள்ள குழந்தைகளை மீத்திறன் குழந்தைகள் என குறிப்பிடப்படுகிறது.

- ❖ பொதுவாக குழந்தைகளுள் 3% முதல் 5% வரை அறிவுத்திறன் மிக்கோராக இருக்கக்கூடும் என புள்ளி விவரங்கள் குறிப்பிடப்படுகின்றன.
- ❖ நுண்ணறிவு ஈவு 130-ம் அதற்கு மேலும் பெற்று உள்ள மாணவர்களை அறிவுத்திறன் மிக்கவர்களாகப் பொதுவாகக் கருதப்படுகறது. மற்றும் கலை, ஓவியம், இசை, பொறியியல் போன்ற குறிப்பிட்ட துறைகளில் மிகச்சிறப்பான ஆற்றல் பெற்றோரும் (Specially Talented) திறமை மிகுந்த மாணவர்களாக கருதப்படுகின்றனர்.
- ❖ ஒரு மாணவனிடம் பொதிந்து உள்ள திறன்களை உற்று நோக்கல், சோதனைகள், தீரன் பதிவேடு ஆகியவற்றை பயன்படுத்தி மீத்திறன் மிக்க மாணவர்களை கண்டறிய முடியும்.

மீத்திறன் மிக்கோருக்கான கல்வி முறைகள்

1. ஆற்றல்படி வகைப்படும் முறை (Ability Grouping)

ஒரே மாதிரியான கல்வித் திறனும் அறிவுடைய மாணவர்களை ஒரு குழுவாக வகைப்படுத்தி, ஒரு வகுப்பறையில் வைத்துக் கற்று தருதல் ஆறறல்படி வகைப்படுத்தும் திட்டம் ஆகும்.

2. வகுப்பு மாற்றத்தை விரைவுப்படுத்துவது (Accelerated Programme)

ஒரு வகுப்பை படித்து முடிக்க சாதாரண மாணவர்களுக்கு எவ்வளவு காலம் ஆகிறதோ அதைவிட குறைவான காலதளத்தில் திறனாண்மை உடைய மாணவர்களுக்கு வைத்தல் விரைவுக் கல்வித் திட்டம் எனப்படும்.

3. வளமைக் கல்வி திட்டம் (Enriched Programme)

வழக்கமான பள்ளி வகுப்புகளிலேயே திறனாண்மை உடைய மாணவர்களின் அறிவை வளப்படுத்தும் வகையில் அதிகப்படியான வாய்ப்புகளும், வசதிகளும் செய்து தருதல் வளமைக் கல்வித் திட்டம் எனப்படும்.

குறிப்பு

1. மொத்த மக்கள் தொகையில் 1.8% பேர் ஏதேனும் ஒரு குறைபாட்டுடையவர்கள் (Disabilities)
2. பார்வையற்றோருக்கான முதல் பள்ளி அமிர்தசரஸில் 1887—ல் உருவாக்கப்பட்டது.
3. 1982—ல் தேசிய நிறுவனம் (பார்வையற்றோர்) டேராடூனில் (Dehradun) நிறுவப்பட்டது.
4. 1982—ல் கல்கத்தாவில் உடல் ஊனமுற்றவர்களுக்காக (Orthopedically Handicapped) தேசிய நிறுவனம் நிறுவப்பட்டது.
5. 1982—ல் பாம்பேயில் காது கேளாதோர்களுக்காக தேசிய நிறுவனம் நிறுவப்பட்டது.
6. 1984—ல் மனநலம் குன்றியவர்களுக்காக தேசிய நிறுவனம் ஹைதராபாத்தில் நிறுவப்பட்டது.

மக்கள் தொகைக் கல்வி (Population Education)

- மக்கள் தொகை கல்வியானது மக்கள் தொகை பெருக்கத்தையும் அதன் விளைவுகளையும் பற்றிய பொதுவான விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது. இக்கல்வியை வாழ்க்கைக் கல்வி எனவும் அழைக்கப்படுகிறது.
- மேலும் மக்கள் தொகைக் கல்வி என்பது ஓர் இடத்தில் உள்ள மக்கள் தொகை பெருகுதல் பற்றியும், அதனால் விளையும் சமூக, பொருளாதார பண்பாட்டு பாதிப்புகள் பற்றியும் அறிய உதவும் கல்விச் செயல்கள் எனக் கூறப்படுகிறது.
- மக்கள் தொகைக் கல்வி என்பது குடும்பக் கட்டுப்பாடு திட்டமோ, பாலுணர்வு கல்வி திட்டமோ அல்ல. மாறாக மக்கள் தொகைக் கல்வி திட்டம் என்பது குடும்ப நலத்திட்டத்தின் ஒரு துணைத் திட்டம் என்று கூறப்படுகிறது.
- மக்கள் தொகை கல்வி பற்றிய படிப்பிற்கு Demography என்று பெயர்.
- ஒவ்வொரு வருடமும் ஜூலை 11-ம் நாள் உலக மக்கள் தொகை தினம் (World Population Day) கொண்டாடப்படுகிறது.

மக்கள் தொகை கல்வியின் குறிக்கோள்

- 1969-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் மக்கள் தொகை பற்றிய ஒரு தேசிய கருத்தரங்கு பம்பாயில் நடைபெற்றது. இக்கருத்தரங்கில் நிறைவேற்றப்பட்ட முன்று பரிந்துரைகளாவன.

1. கல்வியின் பணி, மாறிவரும் சமுதாய சூழ்நிலைகளில் பெருகிவரும் மக்கள் தொகையினால் ஏற்படும் அறை கூவல்களை சந்தித்திட உதவ வேண்டும்.
2. குடும்பத்தின் அளவு கட்டுப்படுத்தக் கூடியது. இதனால் நாட்டு மக்களுக்கு தரமான வாழ்க்கை அமையும் என்பதை மாணவன் அறிந்திட்ச் செய்ய வேண்டும்.
3. மக்கள் தொகைக் கல்வி பற்றிய கருத்துக்கள், வரலாறு, புவியியல், அறிவியல், சுகாதாரக் கல்வி, கணிதம், மொழிப் பாடம் ஆகியவற்றில் முடிந்த அளவுக்கு சேர்க்கப்பட வேண்டும்.

மக்கள் தொகைக் கல்வியின் சிறப்பு நோக்கங்கள்

1. மக்கள் தொகையியலில் காணப்படும் முக்கிய கருத்துக்கள், செயல்முறைகளை மாணவர்களை அறியச் செய்தல்.
2. உலகில் மக்கள் தொகையில் பெருமளவு அதிகரிப்பு ஏற்படுவதற்கான காரணங்களை உணரச் செய்தல்.
3. மக்கள் தொகைப் பெருக்கம் நமது வாழ்வின் அரசியல் சமுதாயம், பண்பாடு, பொருளாதாரம் போன்றவற்றை எவ்வாறு பாதிக்கிறது என்பதை புரிந்து கொள்ளச் செய்தல்.
4. மக்கள் தொகைப் பெருக்கம் எவ்வாறு சுற்றுச் சூழலைப் பாதித்து அதனை மாசுப்படுத்துகிறது என்பதை புரிந்து கொள்ளச் செய்தல்.
5. பிறப்பு, இறப்பு விகிதங்களில் ஏற்படும் சமநிலையற்ற தன்மையை தெரிந்து கொள்ளச் செய்தல்.
6. சிறு குடும்ப நெறியே சரியானது, விரும்பத்தக்கது என்பதை அறியச் செய்தல்.
7. நாட்டின் மக்கள் தொகைக் கொள்கைகள் திட்டங்கள் ஆகியவற்றில் விழிப்புணர்ச்சியை வளர்த்திடல்

"சிறு குடும்ப நெறி" என்பதன் விளக்கம்

- மக்கள் தொகையை கட்டுப்படுத்துவதற்கு ஒவ்வொரு பெற்றோரும் தனது குடும்பத்தில் உள்ள குழந்தைகளின் எண்ணிக்கையை கட்டுப்படுத்துவது அவசியம் என்ற உணர்வைப் பெற்று அதற்கேற்ப நடப்பது சிற குடும்ப நெறி (Small family norm) என்று பெயர்.
- ஒரு குடும்பம் என்பது அப்பா, அம்மா, திருமணமாகாத குழந்தைகளைக் குறிக்கும். குடும்ப அளவு (family size) என்பது குடும்பத்தில் உள்ள குழந்தைகளின் எண்ணிக்கையை குறிக்கும்.
- இரண்டு அல்லது அதற்கு குறைவான எண்ணிக்கையில் உள்ள குழந்தைகள் உள்ள குடும்பம் சிறு குடும்பம் எனப்படும். மூன்றும் அதற்கு

❖ <u>பரப்பெல்லைகள்:</u>

- மக்கள்தொகை பெருக்கம் பற்றிய அடிப்படைக் கருத்துக்கள்
- பிறப்பு பற்றிய அடிப்படைக் கருத்துக்கள்
- தாய்மைப்பேறு & உடல் ரீதியான பிரச்சனைகள்
- குடும்ப நலத் திட்டங்கள்
- மக்கள்தொகை பெருக்கம் & சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கும் இடையே உள்ள தொடர்பு.
- குடும்ப அளவிற்கு (Small family Norm) வாழ்க்கை தரத்திற்கும் இடையேயுள்ள தொடர்பு.

❖ <u>மக்கள் தொகைப் பெருக்கத்திற்கான காரணங்கள்:</u>

- குறைவான இறப்பு விகிதம்
- சராசரி ஆயுட்காலம் அதிகரித்துள்ளது.
- இளம் வயது திருமணம்
- அனைத்து தம்பதியர்களும் குழந்தைகளை பெற்றுக்கொள்ள விரும்புதல்
- குடும்பக் கட்டுப்பாடு பற்றிய அறியாமை
- அதிகமான குழந்தைகளை பெற்றுக் கொள்ளுவதால் பிறப்பு விகிதம் அதிகரிக்கிறது.
- படிப்பறிவு இல்லாமை (Illiterate)
- ஆண் குழந்தைகளை பெற விரும்புவது.

❖ புதிய தேசிய மக்கள் தொகைக் கொள்கை — 1976 (ஏப்ரல்)

❖ முதலாவது ஐந்து ஆண்டுத் திட்டத்தில் (1951 – 56)

மக்கள் தொகை கொள்கை (Population Policy) வடிவமைக்கப்பட்டது. முதலாவது ஐந்து ஆண்டுத்திட்டத்தில் குடும்ப நலத்திட்டத்தின் (Family Planning) முக்கியத்துவத்தை அரசு அங்கீகரித்தது.

❖ NPEP – National Population Education Project (தேசிய மக்கள் தொகை கல்வித்திட்டம்) என்ற ப்ளர்ளி கல்வித்திட்டத்தை ஏப்ரல் 1980ல் ஏற்படுத்தப்பட்டது.

❖ "தேசிய மக்கள்தொகை கல்வி அமைப்பு" (National Population Education organization) 1979—ல் உருவாக்கப்பட்டது.

❖ இரண்டாவது ஐந்து ஆண்டுத்திட்டத்தில், தானாகவே முன்வந்து குடும்ப கட்டுப்பாடு (Voluntary Sterilization) செய்யும் மக்கள் தொகை கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டது.

❖ நான்காவது ஐந்து ஆண்டுத் திட்டத்தில், குடும்ப நலத்திட்டத்தில் இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டது. (Time – bond target for family planning)

❖ 5வது ஐந்தாண்டு திட்டத்தில், குடும்ப நலத்திட்டமானது சமூக சேவையுடன் (including Education and Public health services) ஒருங்கிணைக்கப்பட்டது.

❖ 6வது ஐந்தாண்டு திட்டத்தில் (1980—85), குடும்ப நலத் திட்டத்திற்கு அதிக முன்னுரிமை வழங்கப்பட்டது. திட்டக் கமிஷன் ஆனது மக்கள் தொகை கொள்கை மீது செயல்படும் குழுவை (working group) அமைத்து. 2001—ல் NRR (Net Reproduction Rate) 1 என நிர்ணயம் செய்தது.

❖ IEC — தகவல், கல்வி & தொடர்பு (Information, Education and communication)

❖ 1960—ல் மக்கள் தொகை கல்வி ஏற்படுத்தப்பட்டது. கொலம்பியா பேராசிரியர் வேலேன்ட் (Wayland) என்பவர் மக்கள் தொகை கல்வியை பிரபலபடுத்தினார்.

❖ இந்தியா உலகளவில் 2வது மிகப்பெரிய மக்கள் தொகையுடைய நாடாகும். (உலக மக்கள் தொகையில் 17% (அ) உலக மக்கள் தொகையில் 1/6 மடங்கு)

❖ உலக மக்கள் தொகை 700 கோடியாகும் (7 பில்லியன்கள்)

❖ 1921 – Year of Great Divide என அழைக்கப்படுகிறது.

❖ 1966—ல் குடும்ப நல இலாகா (Full Fledged Department of Family Planning) உருவாக்கபட்டது.

சுற்றுச் சூழல் கல்வி (Environmental Education)

மனிதன் வாழ்கின்ற சுற்றுப்புறச் சூழல் மாசடையும் வீதங்களை பற்றி அறியவும், அவைகளைத் தவிர்ப்பதோடு சுற்றுச் சூழலை மேம்படுத்தவும் பாதுகாக்கவும் கூடிய நடத்தைகள் மனப்பான்மைகள் ஆகியவற்றை வளர்த்திடும் கல்விச் செயல்களுக்கு "சுற்றுச் சூழல் கல்வி" எனப்படும்.

புரோமோத்(1985) என்பவரின் கருத்துப்படி சுற்றுப்புறச் சூழல் மாசடைதலின் வகைகள்

1. நிலம் 2. நீர் 3. காற்று 4. ஒலி 5. கதிர்வீச்சு

சுற்றுச்சூழல் மாசுறுதல்:

சுற்றுச்சூழல் வகைபின் அடிப்படையில் மாசுறுத்தலை பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

I. காற்று மாசுறுதல் (Air Pollution)

II. நீர் மாசுறுதல் (Water Pollution)

III. மண் மாசுறுதல் (Soil Pollution)

I. காற்று மாசுறுதல்:

முதல்நிலை காற்று மாசுபடுத்திகள் (Air Pollutants)

CO (கார்பன் மோனாக்ஸைடு, CO_2 (கார்பன்—டை—ஆக்ஸைடு), SO_2 (சல்பர்—டை—ஆக்ஸைடு), SO_3 (சல்பர்—ட்ரை—ஆக்ஸைடு), ஹேலோஜின் சேர்மம், No, NO_2, ஹைட்ரோகார்பன்கள் கதிர்வீச்சு மாசுகள் போன்றவை முக்கியமான காற்று மாசுபடுத்திகளாகும்.

இரண்டாம் நிலை காற்று மாசுபடுத்திகள்:

ஒளி வேதி புகைப்படலம் (Photo Chemical smog) மற்றும் அமில மழை (Acid Rain)

நச்சு வாயுக்கள்:

CO, CO_2, SO_2, SO_3, NO, NO_2, CFC, ஃபிரியான் (Freon), ஏரோசால் (Aerosol) — வான ஊர்திகளிலிருந்து வெளிப்படும் புகை.

ஒளிவேதி புகைப்படலம் (Photo chemical smog)

ஹைட்ரோ கார்பன், நைட்ரஜன் ஆக்ஸைடு & பிற மாசுபகுதிகள் மீது சூரிய ஒளி செயல்படும் போது வளிமண்டல மாசு ஏற்படுவதை ஒளிவேதி புகைப்படலம் எனலாம்.

அமில் மழை (Acid Rain)

- மழை நீர் (அ) பனியின் pH மதிப்பு 5.7க்கு கீழ் குறையும் போது அதை "அமிலமழை" என்கிறோம்.
- சல்பர் ஆக்ஸைடு மற்றும் நைட்ரஜன் ஆக்ஸைடு போன்ற சில பொருட்களில் ஏற்படும் வேதியியல் மாற்றங்களால் அமிலமழை ஏற்படுகிறது.
- அமில் மழையினால் இலைகள் மஞ்சளாக மாறுகிறது.

கதிர்வீச்சு மாசு (Radio Active Dust)

பசுமை வீடு விளைவு (Green House Effect)

- உலகளாவிய சராசரி வெப்ப நிலையை (Global Warming) ஏறக்குறைய 60^0F க்கு நிலைப்படுத்தலாகும். இதனால் புவியின் வெப்பம் அதிகரிக்கிறது.
- பசுமை வீடு வாயுக்கள் (Green House Gases)

  CO_2 (கார்பன் டை ஆக்ஸைடு), மீத்தேன் (CH_4), நைட்ரஸ் ஆக்ஸைடு (NO), குளோரோ ஃபுளூரோ கார்பன் (CFC), ஓசோன் (O_3).

  இவை வளிமண்டலத்திலுள்ள வெப்பத்தை ஈர்த்து எல்லா திசைகளிலும் வெளியிடுகின்றன. இதனால் புவியின் வெப்பம் உயர்கிறது.

ஓசோன் படல ஓட்டை (Ozone Hole)

ஓசோன் படலத்தை அழிக்கக் கூடியவை: CFC, CH_4, N_2O,

மேலும் குளோரின் ஓசோனை அளிக்க வல்லது.

- 1985—ல் அண்டார்க்டிக்காவின் மீது உள்ள வளிமண்டலத்தில் ஓசோன் படல ஓட்டை கண்டுபிடிக்கப்பட்டது.
- மதுராவில் உள்ள சுத்திகரிப்பு ஆலையினால் தாஜ்மஹால் மாசுபடுகிறது.

II. நீர் மாசடைதல் (Water Pollution)

- கரிமப் பொருள், உயிர் — வேதியியல் பொருட்கள், கதிரியக்கப் பொருட்கள் etc போன்றவைகளால் நீர் மாசடைகிறது.
- கனிம – கரிமக் கழிவுகளால் நீர் மாசுபடுவதை உயிரியல் ஆக்ஸிஜன் தேவை BOD (Biological Oxygen Demand) மூலம் அளக்கப்படுகிறது. பிற கழிவுகளை வேதியியல் ஆக்ஸிஜன் தேவை COD (Chemical Oxygen Demand) மூலம் அளவிடலாம்.
- மிகையூட்ட வளமுறுதல் (Eutrophication)

  நீல பச்சை பாசிகள் நீரின் மேல் படர்ந்து வளர்வதாகும். இவை அதிகளவு ஆக்ஸிஜனை எடுத்துக்கொண்டு விஷ வாயுவை வெளியேற்றுகிறது. இதனால் நீர்வாழ் உயிரினங்கள் ஆக்ஸிஜன் கிடைக்காததால் இறந்துவிடுகின்றன.
- ஜப்பானில், பாதரசம் (Mercury) கலந்த நீரினை உண்ட மீனை உண்டவர்களுக்கு மினமேட்டோ (Minamata) எனும் உடல் ஊனமுற்ற நோய் உண்டானதாக கண்டுபிடிக்கப்பட்டது.
- காட்மியம் (CD) கலந்த நீரினால் இட்டய்—இட்டல் (Itai – Ital) எனும் நோய் (மூட்டு & எலும்புகளில் கடும்வலி) ஏற்படுகிறது.
- காரீயம் — மனவளர்ச்சி குன்றுதல், கருத்தரித்தலில் மாறுபட்ட தன்மையை உண்டாக்குகிறது.
- ஃபுளூரைட் — பல், மூட்டு, எலும்பு வலி, மூட்டிலிருந்து கால்கள் வெளிநோக்கி வளைந்து காணப்படுதல்.
- ஆர்செனிக் — கருங்கால் நோய் (Black Foot)

III. மண் மாசுபடுதல் (Soil Pollution)

- அமிலத் தன்மையுள்ள உரங்களை அதிகமாகப் பயன்படுத்துதல், தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் கதிர்வீச்சுக் கழிவுகள், பூச்சிக் கொல்லிகள், நகரமயமாக்கல், மரங்களை வெட்டுதலாலும் மண் மாசுபடுகிறது.
- புழு வளர்ப்பு (Vermiculture), கழிவுகளை எரித்து சாம்கலாக்கம் (Incineraction), மறுசுழற்சி முறை (Recycling), திட்டமிடப்பட்ட நகரமயமாக்கல் etc மூலம் மண் மாசுபடுதலை தடுக்கலாம்.

ஒலி மாசுபடுதல் (Noise Pollution)

விரும்பத்தகாத மனிதிற்கு எரிச்சலைக் கொடுக்கின்ற ஒலி பொதுவாக இரைச்சல் எனப்படுகிறது. இது தலைவலி, தூக்கமின்மை, இதயநோய், காதுகேளாமை போன்ற நோய்களை உருவாக்குகிறது.

- ஒருவருக்கு அனுமதிக்கப்பட்ட ஒலியின் அளவு — 81 dB முதல் 120 dB வரை
- Noise என்ற வார்த்தை இலத்தீன் வார்த்தை "Nausea" இருந்து பெறப்பட்டது.
- "Environment" என்ற வார்த்தை ஃபிரெஞ்ச் வார்த்தை "Environ" இருந்து பெறப்படுகிறது.
- "Ecology" – கிரேக்க வார்த்தை "Oikos" லிருந்து பெறப்படுகிறது. இது வீடு எனும் பொருள் ஆகும்.

Environment Act For controlling Pollution மாசுபடுதலை தடுக்கும் சுற்றுபுறச்சூழல் சட்டங்கள்

1. பூச்சிக்கொல்லி சட்டம் (Insecticide Act) - 1968
2. நீர் சட்டம் (Water Act), 1974
3. காற்று சட்டம் (Air Act), 1981
   ஒலி (Noise) ஆனது காற்று மாசுபடுத்தி என 1987—ல் அங்கீகரிக்கப்பட்டது. (Re cognized).
4. சுற்றுச் சூழல் பாதுகாப்பு சட்டம் (Environment Act), 1986
5. மோட்டார் வாகனச் சட்டம் (Motor vehicles Act), 1988

விதிகள் (Rules)

1. Hazardous Wastes Rule, 1989 (தீங்கு விளைவிக்கக் கூடிய கழிவுகள் விதி)
2. Bio Medical Waste Rule (உயிர் மருத்துவ கழிவு), 1998
3. Recycled Plastic manufacture and usage Rule, 1999 (மறுசுழற்சி செய்த பிளாஸ்டிக் தயாரிப்பு & பயன்பாடு)
4. ஒலி மாசுபடுதல் விதி (Noise Pollution Rule), 2000
5. Ozone Depleton substances Rule (ஓசோன் படலத்தை குறைக்கும் பொருட்கள்), 2000

சில திட்டங்கள்

கங்கை திட்டம் (Ganga Action Plan) – 1985

உச்சி மாநாடுகள்

1. UNCED - "United Nations conference on Environment and Developemnt" முதலாவது பூமி உச்சி மாநாடு (First Earth Summit) பிரேசிலில் 1992—ல் ரியோடிஜெனிரோவில் நடந்தது.

2. United Nations conference on the Human Environment — சுவீடனில் ஸ்டக்ஹோலத்தில் ஜீன். 1972ல் நடைபெற்றது.

முக்கிய தினங்கள்

1. உலக சுற்றுப்புற சூழல் தினம் (Wordl Environment Day) — ஜீன் 5
2. ஓசோன் தினம் — செப்டம்பர் 16
3. உலக பாதுகாப்பு தினம் (World conservation day) — டிசம்பர் 3

பேரழிவுகள்

1. போபால் விஷவாயு பேரழிவு (Bhopal Gas Disaster) - Dec 2, 1984
2. ரஷ்யாவின் செர்னோபைல் பேரழிவு (உக்ரைன்) — 1986
3. அணுப் பேரழிவு — ஆகஸ்ட் 6, 1945 (ஹிரோசிமா)
   — ஆகஸ்ட் 9, 1945 (நாகசாகி)

இயக்குங்கள்:

- சிப்கோ இயக்கம் — சுந்தர்லால் பகுகுணா (தெஹ்ரி அணை)
- சர்தார் சரோவர் அணை — மேதா பட்கர்

குறிப்பு:

- NEERI - National Environmental Engineering Research Institute (at Nagpur)
- CPCB - Central Pollution control Board
- UNEP - Untied Nations Environment Programme
- CTBT - Comprehensive Test Ban Treaty.

சமூக காடுகள் (Social Forestry)

ஒரு நுசுமையான மாசுபடுதலை தடுத்தல் சமூக காடுகள் மற்றும் மாசுபடுதலை தடுத்தல் (Pollution control) ஆகிய இரண்டும் அவசியமாகும். இந்தியாவில் 15% பரப்பு காடுகள்க் (Forest) உள்ளது. இதை 30 லிருந்து 33% காடுகளாக (Forest) மாற்ற அரசு முயற்சிகளை மேற்கொள்கிறது.

சுற்றுச்சூழல் கல்வியை கற்பிப்பதற்கான அணுகுமுறைகள்

1. தனிப்பாட அணுகுமுறை (Separate) 2. பாடவேளை முறை (Time Table)
3. அலகு அணுகுமுறை (Unit) 4. ஒருங்கிணைந்து அணுகுமுறை (Integrated)

சுற்றுச்சூழல் கல்வியின் குறிக்கோள்கள்

1. விழிப்புணர்வு

சுற்றுச்சூழல் தொடர்பான பிரச்சனைகளை பற்றி மாணவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தல்

2. அறிவு

சுற்றுச்சூழல், சுற்றுச்சூழல் பிரச்சனைகள், சுற்றுச்சூழலுக்கும், மனித இனத்திற்கும் உள்ள தொடர்பு பற்றி அடிபபடையான அறிவை மக்களிடையே ஏற்படுத்துதல்.

3. மனப்பான்மை

சுற்றுச்சூழலினைப் பாதுகாக்கவும், மேம்படுத்தும் மனபபான்மை மக்களிடையே வளர்த்தல்.

4. திறமைகள்

சுற்றுச்சூழல் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு உரிய திறமைகளை கற்போரிடம் வளர்த்தல்

5. மதிப்பீடு

சுற்றுச்சூழலை மேம்படுத்தும் நடவடிக்கைகளின உண்மைப் பயனை ஆராய்ந்து அளவீடு செய்தல்.

6. பங்கேற்பு

சுற்றுச்சூழல் பிரச்சனைகளை தீர்ப்பதற்கு ஈடுபடும் வகையில் மக்களிடம் பொறுபபுணர்வை வளர்த்தல்.

சுற்றுப்புறச் சூழலை பாதிக்கும் காரணிகள்.

1. நவீனமயமாக்கல் (Modernisation)

   இதன் மூன்று கூறுகளாவன (1) தொழில்மயமாக்கல் (Industrialisation) (2) நகர் மயமாக்கல் (Urbanisation) (3) நுகர்வோர் மையப் பொருளாதாரம் (Consumerism)

2. கட்டுங்கடங்கா மக்கள் தொகை பெருக்கம் (Population explosion)

3. அளவுக்கு அதிகமாக இயற்கை வளங்களை பயன்படுத்துவது (Over exploitation of natural resources)

4. சுற்றுப்புறச் சூழலை மாசுப்படுத்துதல் (Environmental Polution)

ஆசிரியரும் சுற்றுச்சூழல் கல்வியும்

- உறுதிமொழி எடுத்தல்
- உலகச் சுற்றுச்சூழல் நாள் (World Environmnet Day) ஜீன்-5 கொண்டாடுதல்
- சுற்றுச்சூழல் திருவிழா நடத்துதல்
- சுற்றுச்சூழல் விழிப்புணர்வுப் போட்டிகள் வைத்தல்
- பொருள் பொதிந்த வாசகங்களை எழுதச் செய்தல்
- சுற்றுச்சூழல் வட்டம்
- சுற்றுச்சூழல் தகவல் முனை
- களப்பயணம்
- மரம் நடுதல்
- சுற்றுச்சூழல் நடைபயணம்
- இயற்கை வளங்களை தத்து எடுத்தல்

சுற்றுச்சூழல் பாதுகாத்தலின் அவசியம் (Need for Protecting the Environment)

- மக்கள் தொகை பெருக்கத்தால் மனிதன் வாழும் சுற்றுச்சூழலில் உடல் நலக்கேடும் நோய்களும் அச்சுறுத்துகின்றன.
- கேரளாவில் அமைதிச் சமவெளியில் (Slient Valley) வரவிருந்த நீர்த்தேக்க திட்டம் இயற்கைச் சூழல் சமநிலை பாதிக்கப்படும் என்பதால் அத்திட்டம் கைவிடப்பட்டது.
- தொழிற்சாலைகளின் வளர்ச்சியால் வளி மண்டலத்தில் பசுமைக்குடில் வாயுக்கள் (Green House Gas) அதிகரிக்கின்றன. இதனால் பூமியின் சராசரி வெப்பம் அதிகரிக்கிறது.
- தொழிற்சாலை வாகனங்கள் போன்றவற்றால் கந்தகம் (அ) சல்பர் என்னும் வேதிப்பொருள் வளிமண்டலத்தில் சேருவதால் உலகெங்கும் அமில மழை (Acid Rain) பெய்யும் அபாயும் இருக்கிறது.
- குளோரோபுளோரோ கார்பன் வாயு வளிமண்டலத்தில் பரவுவதால் ஓசோன் படலத்தில்

பன்னாட்டு அமைதி கல்வி (Peace Education)

பள்ளியில் பன்னாட்டு அமைதி பற்றிய கல்வி இரண்டு விதங்களில் அளிக்கலாம்.

1. நாடுகள் ஒன்றைஒன்று சார்ந்துள்ள நிலை. அனைத்து உலகத்திற்கும் பொதுவான பண்பாடு முதலிய கருத்துக்கள் பன்னாட்டு அமைதிக்கான வழிவகுக்கும்.
2. பிறநாடுகள் மீது விருப்பமான கண்ணோட்டத்தை வளர்த்துக் கொள்ளுதல்.

முக்கியத்துவம்

- இலக்கியம், மொழிக்கல்வி, அறிவியல், வரலாறு, குடிமையியல், ஆகிய கருத்து வேற்றுமையில் ஒற்றுமை காண பக்குவத்தை வளர்க்கிறது.
- பிறநாட்டு அறிஞர்களின் சிந்தனைகளை மாணவர்களுக்கு அறிமுகப்படுத்துதல்
- உலகளவில் பரந்த நோக்கில் மாணவர்களை தயார் செய்தல்

Unit – IV

கல்விப் புதுமைகள் என்பதன் பொருள் (Meaning of Education Innovations)

கல்விச் செயலை மேம்படுத்த ஆராய்ந்து எடுக்கும் ஒரு முயற்சியே கல்விப் புதுமை ஆகும். (எ.கா. கற்றல் – கற்பித்தல் முறைகள், பாடத்திட்டங்களை மாற்றி அமைத்தல், etc.,)

சமுதாய பண்பாடு மற்றும் சமயப் பின்னணியில் பள்ளி உருவாதல் (Emergence of School in Social Cultural and Religious Setting)

சமூகததில் முதன்முதலில் தோன்றிய அமைப்பு குடும்பமே. குழந்தையை சமூக நெறிப்படுத்துவதில் (Socilaisation of the Child) முதன்மைப் பங்கு வகிப்பது குடும்பமே ஆகும். பள்ளி என்பது முறையான (Formal) சமூக அமைப்பு ஆகும்.

வேத காலப் பள்ளிகள் (Vedic Schools)

- இது ஆரிய நாகரிகத்தின் ஓர் அங்கமாக வேத காலப் பள்ளிகள் தோன்றின.
- இவை குருகுலக் கல்வி முறை (Teacher centred Education) கொண்டது.
- எட்டு வயதில் உபநயனம் என்ற சடங்கு நடந்த பின்னர் மாணவர்கள் ஆசிரமங்களில் சேர்க்கப்பட்டனர்.
- வேத பாடங்கள் முக்கிய பாடங்களாக இருந்தன
- பயிற்று மொழி சமஸ்கிருதம் ஆகும்
- இயற்கைச் சூழலில் கற்றல் கற்பித்தல் நடைபெற்றது
- பெண்கல்விக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை
- ஆசிரியருக்கும் மாணவருக்கும் நெருங்கிய தொடர்பு இருந்தது

புத்தமதக் கல்வி முறை (Buddhistic System of Education)

- வேத கால கல்விமுறைக்கு எதிரானது
- குழு விவாத முறை (Group Discussion), தர்க்க முறை (Logic) ஆகியவை பொது கற்பித்தல் முறை ஆகும்
- பாலி (Pali) மொழி மூலம் கல்வி கற்பிக்கப்பட்டது
- "பப்பஜா" (Pabbaja) என்ற சடங்கு முடிந்த உடன் மாணவர்கள் கல்வி கற்க சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.
- "உபசம்பத்தா" (Upasampatta) என்ற சடங்கு 20 வயதில் நடத்தப்பட்டு பின்னர் ஒருவர் ஆசிரியப் பணியை மேற்கொள்ளலாம் (புத்த பிச்சுவாக மாறிய பின்)
- நாலந்தா, தட்சசீலம் ஆகிய இடங்களில் புத்தமதக் கல்வி போதிக்கப்பட்டது

இஸ்லாமியக் கல்விமுறை (Education Under the Muslim Rule)

- 11—ம் நூற்றாண்டில் இருந்து 17—ம் நூற்றாண்டு வரை இந்தியாவில் முஸ்லிம் ஆட்சி நடந்த போது இஸ்லாமிய கல்விமுறை தோன்றி வளர்ந்தது.
- பொதுவாக பள்ளிவாசலை ஒட்டியே மக்தாப் (Makthab) மதரஸா (Madarasa)க்கள் அமைந்து இருந்தன.
- பள்ளி, மதரஸா என்றே அழைக்கப்பட்டது
- மசூதியில் பணியாற்றிய மதகுருமார்களான மௌல்விகளே ஆசிரியர்களாக இருந்தனர்.
- குழந்தைகளுக்கு எழுதுதல், படித்தல், எண்களைக் கையாளும் திறன் (Numerical Ability) ஆகியவற்றுடன் மருத்துவம் (யூனானி) வானவில், உருது இலக்கியம், பெர்சியன், அரேபியன் போன்ற மொழிகளும் கற்க ஏற்பாடு செய்யப்பட்டது.
- வகுப்புத் தலைவன் (Monitor) முறை கொண்டுவரப்பட்டது
- பள்ளிகளுக்கு மான்யம் வழங்கும் வழக்கம் தோன்றியது
- பெண் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை.

கல்விச் சோதனைகளிலிருந்து தோன்றிய புதுமைகள் (Innovations that Emerged from ducational Experiments)

தாகூர் (Tagore) – சாந்தி நிகேதன் (Santiniketan) (1861—1941)

- தாகூர் 1861—ம் ஆண்டு மே—6ல் கல்கத்தாவில் பிறந்தார் (19—ம் நூற்றாண்டு)
- 1901—ல் கல்கத்தாவில் பேல்பூரில் சாந்தி நிகேதன் ஆசிரமம் தொடங்கினார்
- 1913—ல் கீதாஞ்சலி இலக்கிய படைப்புக்காக நோபல் பரிசு பெற்றார்
- 1914—ல் D.Lit என்ற கௌரவ பட்டம் (கல்கத்தா பல்கலை கழகம்)
- 1915—ல் Knight hood என்ற பட்டத்தைப் பெற்றார். இப்பட்டத்தை
- ஜாலியான்வாலா படுகொலையைக் கண்டித்து 1919-ல் திருப்பி அளித்தார்.
- 1921-ம் ஆண்டு சாந்தி நிகேதன் என்ற ஆசிரமம் விஸ்வ பாரதி பல்கலைக்கழகமாக (International University) மாறியது.
- தாகூர் ஒரு நவீன இந்தியத் துறவி ஆவார்..
- இவர் ஒரு இயற்கை வாதி (Naturalist) மற்றும் யதார்த்தவாதி (Realist)
- "குருதேவர்" என்று காந்தியால் அழைக்கப்பட்டார்.
- சாந்தி நிகேதன் என்பது "அமைதியான உறைவிடம்" என்பது ஆகும்.
- விஸ்வபாரதி பல்கலை கழகமானது மைய அரசின் நேரடிப் பராமரிப்பில் இயங்குகிறது.
- விஸ்வபாரதி பல்கலை கழகதத்ின் மூன்று தலையாய நோக்கங்கள (1) கீழை நாடுகளின் கலாச்சாரங்களைப் போதித்தல் (2) கிராம சீரமைப்பு (3) மேலை நாடுகளுக்கும் கீழை நாடுகளுக்கும் குறிப்பர்க இநதியாவிற்கும் இடையே பரஸ்பர ஒற்றுமையை பேணுதல்.
- சாந்தி நிகேதன் பள்ளி, பல்கலை கழகம், கிராம சீரமைப்பு பயிற்சி நிலையம் ஆகிய மூன்றும் விஸ்வ பாரதியின் முப்பெரும் அங்கங்கள் ஆகும்.

துறைகள்

பாத் பவன்	-	துவக்க கல்வி முதல் உயர் கல்வி
வித்யா பவன்	-	கீழைநாட்டு மொழிகள், தத்துவம், இலக்கியம், பண்பாடு ஆகியவைகளில் ஆய்வு நடத்த

கலா பவன்	-	கைத்தொழில்களிலும், நுண்கலைகளிலும், கல்வியும் பயிற்சியும் அளக்கப்படுகிறது.
சங்கீத் பவன்	-	இசை, நடனம், ஆகியவை கற்பிக்கப்படுகின்றன.
ஹிந்தி பவன்	-	ஹிந்தி, மொழி, இலக்கியம் ஆகியவைகளின் மேம்பாடு
அத்யாபக் சிக்ஷா பவன்	-	ஆசிரியப் பயிற்சி
ரபீந்திர பவன்	-	தாகூரைப் பற்றிய ஆய்வு
ஸ்ரீ நிகேதன்	-	கிராமிய சீரமைப்பு பயிற்சி நிலையம்

தாகூரின் கல்விச் சித்தாந்தம் (Tagore's Educational Philosophy)

1. சுதந்திரம் (Freedom)
2. படைப்பாற்றல் மிக்க சுயவெளியீடு (Creative Self Express)
3. இயற்கையுடனும், மனிதனுடனும் நல்லுறவு (Active Communication with Nature and Man)
4. உலோக சகோதரத்துவம் (Internationalisam)

தாகூரின் கல்வி நோக்கங்கள் (Tagore's Aims of Education)

1. உடல் வளர்ச்சி
2. அறிவு வளர்ச்சி
3. ஒழுக்க ஆன்மீக வளர்ச்சி
4. சமூக வளர்ச்சியும் பன்னாட்டு சிந்தனையும்

- தாகூர் உலக சகோதரத்துவத்தை (Universal Brotherhood) வலியுறுத்தினார்.
- Moto of Vishwa Bharathi University "Simple Living and High Thinking"
- "கல்வியின் நோக்கம் சமூக முற்போக்கு அடைவதாக இருக்க வேண்டும்" என்று கூறினார்
- கிழக்கிந்திய நாகரீகமும் பண்பாடும் மேற்கத்திய அறிவியலோடு ஒன்றாகக் கலந்து விட வேண்டும் என்று விரும்பினார்.

கற்பித்தல் முறைகள் (METHODS OF TEACHING)

மாணவர்கள் இயற்கைச் சூழலில் செயல் வழியும் (நேரிடை அனுபவங்கள் மூலமும்) கற்க வகை செய்ய வேண்டும். மாணவர்கள் தங்களுக்கு ஆர்வமுள்ள துறையில் ஈடுபட அனுமதிக்கப் பட வேண்டும். எவ்வித கற்றல் செயல்முறையும் மாணவர்களுக்கு மகிழ்ச்சி அளிக்க கூடியதாக இருக்க வேண்டும்.

தாகூரின் படைப்புகள்: கீதாஞ்சலி, The Gardener, The Post Office, Home and world. The Crescent Moon, Chitra.

காந்திஜி (Gandhiji) – ஆதாரக் கல்வி (Basic Education) (1869 – 1948)

- 1869 – அக்—2ல் போர்பந்தரில் (குஜராத்) பிறந்தார் (19ம் நூற்றாண்டு)
- இவரின் கோட்பாடுகள் உண்மை, அகிம்சை, அன்பு
- தனது கல்வி சித்தாந்தத்தை நடைமுறைப்படுத்த வார்தா (குஜராத்) என்னுமிடத்தில் சபர்மதி ஆசிரமத்தில் பள்ளியைத் துவக்கி நடத்தினார். எனவே ஆதாராக் கல்வி திட்டம், வார்தா திட்டம் என்றும் அழைக்கப்படுகிறது
- காந்தியடிகள் அரசியல்வாதியாகவும், யதார்த்த தத்துவஞானியாகவும் சமூக சீர்திருத்தவாதி ஆவார்.
- காந்தி தனது சித்தாந்தத்தில் கருத்தியல் கொள்கை (Idealism)
- யதார்த்தவாதம் (Realism) பயனளவுக் கொள்கை (Pragmatism) பயன்படுத்தினார்.

ஆதாரக் கல்வியின் சிறப்பு அம்சங்கள்:

1. 6 முதல் 14 வயது வரை இலவசக்கல்வி
2. தேர்ந்தெடுத்த. கைத்தொழில் வழிக் கல்வி (Craft – Centred education)
3. அனைத்துப் பாடங்களும், தேர்ந்தெடுக்கப்பட்ட கைத்தொழிலுடன் இணைக்கப்படல்
4. உற்பத்தியுடன் இணைந்த கல்விச் செயல்முறை (மாணவர்கள் கைத்தொழில் மூலம் உற்பத்தி செய்த பொருட்களின் மூலம் பெறப்படும் பணத்தைக் கொண்டே பள்ளிச் செலவுகளை சமாளித்தல்)5
5. மாணவர்களும் ஆசிரியர்களும் பள்ளியிலேயே தங்கி எளிய கூட்டுறவு வாழ்க்கையை மேற்கொள்ளுதல்.
6. மாணவர்களின் தாய்மொழியே பயிற்று மொழியாக இருத்தல்
7. சமய, நன்னடத்தை பயிற்சிக்கு முக்கியத்துவம் அளித்தல்.

- காந்தி ஒரு இலட்சியவாதி (IDEALIST) ஆவார்
- 1937—ல் வார்தா கல்வித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

காந்தியின் படைப்புகள்

சத்திய சோதனை, Indian Home Rule, Non-Violence in Peace x war, In early life

- காந்தி 1948—ஜனவரி 30—ல் இறந்தார். அவரின் நினைவாக அந்நாள் தியாகிகள் தினமாக (Martyrs Day) அனுசரிக்கப்படுகிறது.
- "Education Should be aimed at the grass root level of any nation" – by Gandhiji.

ஸ்ரீ அரவிந்தர் (Sri Aravinder) — ஆசிரமப்பள்ளி (Ashram School) 1872-1950

- அரவிந்தர் 1872-ம் ஆண்டு ஆகஸ்ட் 15-ல் கல்கத்தாவில் பிறந்தார்.
- 1943-ல் பாண்டிச்சேரியில் ஆசிரமப் பள்ளியை நிறுவினார்.
- 1952 ஜனவரி 6-ல் அரவிந்தர் புன்னாட்டு பல்கலைகழகமாக (International University) மாறுதல்

பல்கலை கழகத்தின் சிறப்பு இயல்புகள்

- அனைவருக்கும் யோகப்பயிற்சி
- அனைவருக்கும் முழுமையான கல்வியை (Integrated Education) வழங்குவது
- பட்டங்களும், சான்றிதழ்களும் வழங்குவது இல்லை.
- "கல்விக்காகவே கல்வி" என்ற கோட்பாடு நடைமுறைப்படுத்தப்படுகிறது.
- சுயேச்சையாக முன்னேறும் முறை (Free Progress System) மேற்கொள்ளப்படுகிறது.
- ஆங்கிலமும், பிரெஞ்சும் போதனா மொழிகள்
- இங்கு சமயப் போதனை கிடையாது.
- இங்கு பணிபுரியும் ஆசிரியர்களுக்கு ஊதியம் தரப்படுவது இல்லை.

அரவிந்தரின் கல்வித் தத்துவம் (Educational Philosophy)

- கல்வியானது கடந்த காலத்தைப் பற்றி கற்பதன்று நிகழ் கால தேவைக்கு தயார் படுத்துவதே ஆகும்.
- நல்ல குடிமைப் பண்பினை வளர்ப்பது கல்வியின் தலையாய கடமை
- கல்வியின் உண்மையான அடிப்படை மன ஆராய்ச்சியே.
- கவனக்குவிப்பு (Concentration) ஆராய்ந்தறிதல் (Reasoning) ஆகியவற்றை பெற கல்வி

அரவிந்தரின் கற்பித்தலின் மூன்று கோட்பாடுகள்

1. எதையும் யாருக்கும் கற்பிக்கமுடியாது (Nothing can be taught); அவரவர் தானே விரும்பிக் கற்க வேண்டும். ஆசிரியர் மாணவர்களின் கற்றலுக்கு உதவுபவரே.
2. மனமே அறிவு வளர்ச்சிக்கான சாதனம். ஆசிரியரின் முதல் பணி குழந்தைகளுக்கு சரியான புலப்பயிற்சி அளித்தலே.
3. தெரிந்தவற்றில் இருந்து அறியாதவற்றிர்க்கு செல்லல் / அருகாமைக்கு பின்னரே தொலைவு நோக்கல் ஆகியவை கல்விப் போக்காக அமைய வேண்டும்.

- அரவிந்தர் தீவிரவாதியாக இருந்து ஆன்மீகவாதியாக் மாறியவர்.
- தொடக்கத்தில் இவரின் புரட்சி கருத்துக்களை பரப்ப வந்தே மாதரம் எனனும் இதழ் தொடங்கி நடத்தினார்.
- Moto of Aurobido International University "Education for Education sake"

அரவிந்தரின் படைப்புகள்

- Karma Yogi, Sound Mind in a sound body, The Brain of India, Savithri.

ஜே. கிருஷ்ணமூர்த்தி (J. KRISHNAMOORTHY) – கற்றல் சூழல்களில் சுதந்திரம் (FREEDOM IN LEARING SITUATION (1896-1986)

- J.K என்றும் கிருஸ்ணாஜி என்றும் அன்பாக அழைக்கப்பட்டவர்
- இந்திய தத்துவ அறிஞர்
- ஆந்திர மாநிலம் மதனப் பள்ளியில் பிறந்தவர்
- சென்னை அடையாரில் வாழ்ந்து வந்தார்
- இந்து தியாஸபிகல் சொஸைட்டி (பிரம்ம ஞான சபை) பாரம்பரியத்தை சார்ந்தவர்
- சிறுவயதில் தாயை இழந்ததால் வளர்க்கும் பொறுப்பை அன்னிபெசன்ட் அம்மையார் ஏற்றுக் கொண்டார்.
- தமது 16வது வயதில் 'குருவின் காலடியில்' என்ற நூலை எழுதி வெளியிட்டார்.
- இந்திய மொழிகள் எதுவும் தெரியாது
- இவர் ஒரு குருவாக தன்னை எப்போதும் கருதியது இல்லை. யாரையும் சீடராக ஏற்றுக் கொண்டதும் இல்லை
- இவரின் கல்வி கருத்துக்களின் அடிப்படையில் பள்ளிகள் தோற்றுவிக்கப்பட்டு செயல்படுகின்றன. இவை "பள்ளி" (The School) என்று குறிப்பிடப்படுகின்றன.

J.K. யின் கல்வித் தத்துவம் (EDUCATIONAL PHILOSOPHY)

- மனதை அதன் போக்கில் அனுமதித்து அமைதிப்படுத்தும் வழிமுறையே கல்வி
- கல்வியும் கவனமும்
- சுதந்திரமும் கற்றலும் (FREEDOM AND LEARNING)
- கற்றலில் போட்டியின்மை
- சுதந்திரமும் பொறுப்புணர்வும் (FREEDOM AND RESPONSIBILITY)
- தனி மனித விழிப்புணர்வும், விடுதலையும்

J.K. யின் நூல்கள்

- குருவின் காலடியில், "The Noisy Child and the Silent Mind, Letter to School,. The order of the star of the east,, the Songs of Life.
- மாணவர்கள் பயத்தை அறவே ஒழிக்கும் போதுதான் கற்றல் நன்கு நிகழும் என்று கூறியவர்.
- "மாற்றம் உன்னிடமிருந்தே! உனக்குள்ளிருந்தே! ஏனெனில் நீதான் மாற்றத்தின் வித்து!" என்று கூறியவர் J.K.

சுவாமி விவேகானந்தர் (SWAMI VIVEKANANDAR) – மனிதனை மனிதனாக உருவாக்கும் கல்வி (Man Making Education (1863-1902)

- 1863—ல் கல்கத்தாவில் பிறந்தார்
- இவரின் இயற்பெயர் நரேந்திர நாத் ஆகும்
- இவரின் ஆன்மீக குரு ஸ்ரீராமகிருஸ்ண பரமஹம்சர் ஆவார்
- இவரின் குறிக்கோள் "ஏழைகளுக்கும், தாழ்த்தப்பட்டவர்களுக்கும் செய்யும் பணியே கடவுளுக்குச் செய்யும் மிகப்பெரிய பணி ஆகும்"
- இவர் 1893—ம் ஆண்டு அமெரிக்காவில் உள்ள சிகாகோ நகரில் நடைபெற்ற உலக சமய மாநாட்டில் பங்குபெற்று அங்கு இருந்தவர்களை நோக்கி "இவ்வுலக சகோதர சகோதரிகளே (Brothers and Sisters of this universe) என்று தொடங்கினார்.
- இராம கிருஸ்ணமடம் 1897—ம் ஆண்டு விவேகானந்தரால் கல்கத்தா அருகில் பேலூரில் நிறுவப்பட்டது. இம் மடத்தின் நோக்கம் "மனித இனத்திற்கு சேவை செய்வதே" ஆகும்.

கல்வி பற்றி விவேகானந்தரின் கருத்துகள்

- ஒவ்வொரு மனிதனிடமும் தெய்வீகத் தன்மையும் பூரணத்துவம் எனப்படும் முழுமையும் உள்ளது. உண்மைக் கல்வியின் வழியே இத்தகைய முழுமை வெளிப்படுகிறது (Education is the Manifestation of Perfection inherent in man)
- எல்லாக்கல்வி, பயிற்சி ஆகியவற்றின் நோக்கம் மனிதனை மனிதனாக வளரச் செய்தல் (Man Making) ஆகும்.
- குழந்தையின் சுதந்திரத்தின் அடிப்படையில் தான் கல்வி அமைதல் வேண்டும்
- கல்வியானது குழந்தையின் இயல்பான போக்குகளுக்கு ஏற்ப அமைதல் வேண்டும்.

விவேகானந்தரின் தத்துவங்கள்:

- "இளைஞர்களே உடல்வலிமையை நாடுங்கள்; இது எனது அறிவுரை, கீதையை ஓதுவதை விட கால்பந்தாட்டம் உங்களை சொர்க்கத்திற்கு எளிதில் அழைத்து செல்லும்" என்று கூறுகிறார்.
- "கீழ்த்தரமான இச்சைகளை விட்டொழியுங்கள்; உங்களுடைய தெய்வீகத் தன்மையை உணருங்கள்; ஏழை எளியவர்களுக்கு உதவுவதன் வழியே கடவுள் தொண்டிற்கு உங்களை அர்பணித்துக் கொள்ளுங்கள்; விழுமின்! எழுமின்! இலட்சியத்தை எய்தும் வரை அயராது உழையுங்கள்".
- "A true Teacher comes down to the level of the student" – சுவாமி விவேகானந்தர்

A.S.NEIL – ஏ.எஸ். நீல் PROGRESSIVE SCHOOL – முற்போக்கு கல்வி

- ஏ.எஸ். நீல் இங்கிலாந்தில் பிறந்தவர் (20—ம் நூற்றாண்டு)
- இவர் முதல் முற்போக்கு பள்ளி (First in the world) "the Summerhill School" — நிறுவினார்.
- கற்றல் என்பது குழந்தைகளின் மனத்திற்கு உகந்த சூழலில் இன்பகரமான அனுபவமாக அமையும் வகையில் "சம்மர்ஹில்" (England) என்ற இடத்தில் 1922—ல் முற்போக்கு பள்ளியை நிறுவி தலைமை ஆசிரியர்க பணியாற்றினார்.

சம்மர்ஹில் பள்ளி நடைபெறும் விதம்

- பள்ளிக்கு பொருத்தமானவர்களாக குழந்தைகளை நடத்துவது இல்லை. மாறாக குழந்தைகளுக்கு பொருத்தமாக இப்பள்ளி நடத்தப்படுகிறது.
- இது ஒரு சுயாட்சி குடி அரசு.
- "குழந்தைகள் பிறப்பிலேயே நல்லியல்பினர்; மாசு மறுவற்றவர்கள்" என்ற நம்பிக்கை
- ஆசிரியர்கள் & முதல்வர்கள் மூத்த குடிமக்கள் ஆவர். ஆனால் மாணாக்கர்கள் உண்மையான குடிமக்கள் ஆவர்.
- பிரம்படி போன்ற தண்டனைக்கு பதிலாக ஊக்குவித்தலும் வலிமைப்படுத்தலும் அனுசரிக்கப்படுகிறது

A.S. நீலின் பாடச் சார்பான திட்டங்களும் நடைமுறைகளும்

- வழக்கமாக கடைபிடிக்கப்படும் கட்டாய பாடங்கள் (Compulsory Basic Subjects) வீட்டு ஒப்படைப்புகள் (Home Works) தேர்வுகள் (Examination) போன்றவைகளுக்கு இடமில்லை.
- தொழிற்சார்ந்த வாழ்க்கை பயன்மிக்க பாடத்திட்டங்களையே பாடங்களில் சேர்த்தார். ஏதோ ஒரு பாடத்தில் முதுகலைப் பட்டமான M.A. பெறுவதைக் காட்டிலும் இரு சக்கர வாகனத்தை பழுதுபார்க்கும் இயந்திரப் பொறியாளர் (Mechanic) ஆவது எவ்வளவோ மேல் என்றார்.
- தேர்வுகள் அவசியம் இல்லை (No Exam) என்பது அவர் கருத்து.
- Freedom in Classroom situation.

A.S. நீல் எழுதிய நூல்

குழந்தை வளர்ப்பில் ஒரு தீவிர அணுகுமுறை (Summerhill A Radical Approach in Child Rearing)

ரூசோ (Rousseau) — குழந்தை மைய கல்வி (Child Centred Education)

- 1712-ம் ஆண்டு ஜெனிவாவில் பிறந்து பிரான்ஸில் வாழ்ந்தவர்
- 18-ம் நூற்றாண்டை சார்ந்தவர்.
- குழந்தை மையக் கல்வியின் தந்தை (Father of Child Centred Education)
- ரூஸோவின் தத்துவம் இயற்கை கோட்பாடு (Naturalist) என அழைக்கப்படுகிறது.
- இவர் கருத்து சுதந்திரத்தை (Freedom of thought) வலியுறுத்தினார்.

கல்வியின் மூன்று நிலைகள்

1.இயற்கையின் வளர்ச்சி. 2.உடல் வளர்ச்சி, 3.எதிர்மறைக் கல்வி (Negative Education)

- "மனிதன் பிறக்கின்ற போது சுதந்திரமாக பிறக்கிறான். ஆனால் சமூகத்தினால் அவன் சங்கிலியால் பிணைக்கப்படுகின்றான். (Man is born Free but every where he is in a chjar)" — ரூசோ
- "சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம். (பிரெஞ்ச் புரட்சியின் தாரக மந்திரம்) Freedom Equuality Fraternity — ரூசோ

ரூசோவின் கற்பித்தல் முறைகள்

1. உற்றுநோக்கல் மூலமும், சுய அனுபவங்கள் மூலமுமே கற்றல் நிகழ வேண்டும்.
2. செய்து கற்றல் (Learning by doing)
3. சிறு குழந்தைகளுக்கு விளையாட்டு மூலம் கற்பித்தல் (Play way method of teaching for the kids)
4. தானே கண்டறியும் முறை (Heuristic Method)

குழந்தையின் வளர்ச்சி நிலை ("எமிலியில்" பரிந்துரைக்கப்பட்டபடி)

1. குழவிப்பருவம் (Infance) 1-5
2. குழந்தைப் பருவம் (Child hood) 6-12
3. முன்குமரப் பருவம் (Early adolescence) 13-15
4. பின் குமரப்பருவம் (Later adolescence) 16-20

ரூசோ எழுதிய நூல்கள்

1. சமூக ஒப்பந்தம் (Social contract) (அரசியல் நூல்)
2. எமிலி அல்லது கல்வியைப் பற்றி (Emile or Concerning Education) 'எமிலி' என்பது கற்பனை ரூசோ குழந்தை. சோப் எனபது கற்பனை பெண் குழந்தை
3. கலை மற்றும் அறிவியலின் முன்னேற்றம் (the Progress of Art and Science)
4. மக்களிடையே சமத்துவத்தின் தோற்றம் (The Origin of equality among men)
5. "குழந்தை ஒரு தெய்வீகப் பிறவி"

டாக்டர் மாண்டிசோரி (Dr.MONTESSORI) — தொடுதல் கல்வி (SENCE EXPERIENCE) (1870-1952)

- மாண்டிசோரி அம்மையார் இத்தாலி நாட்டு மருத்துவர்.
- இவர் 'குழந்தைகள் வீடு' (Children's House) என்ற பள்ளியை 1907-ல் தொடங்கினார்.
- கற்பித்தல் கருவிகள் (Didatic apparatus) பயன்படுத்தப்பட்டன.
- இவர் 1940-ல் இந்தியாவிற்கு வந்து 12 ஆண்டுகள் பல இடங்களில் பள்ளி ஆசிரியர்களுக்கு மாண்டிசோரி முறையில் பயிற்சி அளித்தார்.
- மாண்டிசோரி கல்வி முறையானது அறிவியல் முறையை அடிப்படை கொண்டது.
- இக்கல்வி முறையில் ஆசிரியர் இயக்குநர் (Directors) என்று அழைக்கப்படுகின்றனர்.
- மாண்டிசோரி அம்மையார் மந்த புத்தியுள்ள குழந்தைகளை ஆராய்ந்து பாலர் கல்வி (Pre-school) மூலம் புலப்பயிற்சியும் (Senosry Training), தசை இயக்கப் பயிற்சியும் (Muscular Co-ordination Training) தருவதால் இக்குறையிலிருந்து விடுதலை பெறமுடியம் என்றார்.

கல்வி கோட்பாடுகள் (Principles of Education)

1. தனிநபர் வளர்ச்சி (Individuality)
2. புலப் பயிற்சி (Sensory Training)
3. சுய கற்றல் (Self Education)

மாண்டிசோரி முறை செயல்படும் விதம்

1. உடல் இயக்க கல்வியும் (Muscular Training) அன்றாட வாழ்க்கை செயல்களில் பயிற்சியும்
2. புலன் உணர்வுக் கல்வி (Sensory Training)
3. எழுத, வாசிக்க, எண் கணக்கு செய்ய, மொழி அறிய பயிற்சிகள்

எழுதிய நூல்கள் (Books)

1. Discovery of Child
2. Education of new world

புரோபெல் (Frobel) — குழந்தைகள் பூங்கா (Kinder Garden) (1782-1862)

- இவர் 1782-ல் ஜெர்மனியில் பிறந்தார்.
- இவர் கருத்தியல்வாதி (Idealism) ஆவார்.
- இவர் "Father of Kindergarden" என்று அழைக்கப்படுகிறார்.
- இவர் பெஸ்டாலாஜியின் அணுகுமுறைகளை கையாண்டார்.
- "சுயமாக செய்து கற்றல்" என்ற கோட்பாட்டை வற்புறுத்தினார்.
- 1837-ல் கிண்டர்கார்டன் பள்ளியை தொடங்கினார்.
- "வாருங்கள் நாம் குழந்தைகளுக்காக வாழ்வோம்" என்று கூறியவர்.
- கற்பித்தலில் பயன்படுத்தப்படும் விளையாட்டு பொருட்கள்: பரிசுகள் ஆகும். அவை Soft Ball, Cylinder & Cubes, கனசதுர கட்டைகள், கோளங்கள் ஆகும்.
- ஆசிரியர் "தோட்டகாரருக்கு" ஒப்பிடப்படுகிறார்.
- "விளையாட்டு வழிக்கற்றலை" (Playway method of learning) பிரபலப்படுத்தியவர் புரோபல் ஆவார்.
- கல்வி எனப்படுவது உள்ளத்தினின்றும் இயற்கை எழும் வளர்ச்சி ஆகும்.
- புரோபல் முழுமை கருத்தியல் கொள்கையில் (Absolute Idealism) நம்பிக்கை கொண்டவர். இவர் வலியுறுத்திய இரண்டு கருத்துகள் (1)வேற்றுமையில் ஒற்றுமை — (Unity in Diversity) (2) வளர்ச்சி கோட்பாடு (Theory of Development)

கிண்டர்கார்டனின் முக்கிய அம்சங்கள் (Features of Kindergarden)

1. சுயமான செயல் (Self Activity)
2. படைப்பாற்றல் (Creativeness)
3. சமூக பங்கேற்பு (Social Participation)

புரோபல் எழுதிய நூல்கள்

1. The Education of Man
2. Pedagogies of Kindergarden
3. Mother plays and Nursery Rhymes
4. Education by Development
5. "Jack and Jill" "Humpty Dumpty" "Cindrella" (Nursery Rhymes)

பெர்ட்ரண்டு ரஸல் (Bertrand Russels) — கல்வியும் சமுதாய மேம்பாடும் (Education and Social Order) (1872-1970)

- ரஸ்ஸல், 1872-ம் ஆண்டு மே-18ல் இங்கிலாந்தில் பிறந்தார்.
- இவர் ஆங்கிலேய தத்துவஞானி, இலக்கியவாதி, கணித அறிஞர்
- இலக்கியத்திற்காக நோபல் பரிசு பெற்றவர்
- இவர் செயல்முறை கொள்கைவாதியாகவும் (Empricist) பகுத்தறிவுவாதியாகவும் மாறினார்.
- இவர் பரிட்சார்ந்த செயல்முறையை (Experimental Empiricism) வலியுறுத்தினார்.
- இவர் கற்பித்தல் முறையில் தொகுப்பாய்வை (Inductive Method) பயன்படுத்தினார்.

கல்வியின் நோக்கம்

1. ஊக்கம் (vitality)
2. துணிச்சல் (Cowrage)
3. நுண்ணுணர்வு (Sensitivveness)
4. அறிவாண்மை (Intelligence)

ரஸ்ஸல் எழுதிய நூல்

Education for the Better Social Order.

ஜான் டூயி (John Dewey) – Pragmatic Life (1859-1952)

- இவர் 1859 அக்டோபரில் அமெரிக்காவில் பிறந்தார்.
- இவர் பயனுள்ள கல்வியை (Pragmatic Life) பற்றி குறிப்பிடுகிறார்.
- பயனுள்ள வாழ்விற்கு மாணவர்களை தயார் செய்வதே கல்வி என்பது ஜான் டூயின் புதுமையான கல்வி கருத்து ஆகும்.
- கல்வியில் ஆராய்ச்சியை (Research) தொடங்கி வைத்தார் (First)
- இவரின் கல்வி சித்தாந்தம் "பரிணாமக் கொள்கை" (Pragmatic Life) ஆகியவற்றை அடிப்படையாக கொண்டது.
- இவரின் கற்றல் முறையானது செய்து கற்றல் (Learning by Doing) Project Method & Problem Solving ஆகியவற்றை சோதனை அணுகுமுறையில் வற்புறுத்துகிறார்.
- Note: Project Method-ஐ கொண்டு வந்தவர் "கீல் பாட்ரிக்" ஆவார்.
- இவர் 1896-ல் சோதனைப் பள்ளியை (Experimental School) சிகாகோவில் தொடங்கினார்.
- இவரது கலைத்திட்டம் அனுபவ ரீதியான கலைத்திட்டம் (Experimental Curriculum) என்று அழைக்கப்படுகிறது.
- "Education is the Reconstruction of Experience" கல்வி என்பது அனுபவங்களை மறுபடியும் வடிவமைத்தல் – டூயி
- What Nutrition and Reproduction are to the Physiologic Life, Education is to Social – டூயி
- All "Education proceeds by the participation of the individual in the social consciousness of the Race" – டூயி

டூயி எழுதிய நூல்கள்

1. The school and the society
2. The school and the child
3. The school of tomorrow
4. Democracy and Education
5. Freedom and culture

ஜீபியாஜே (Piage) – Experiments and Discovery Learning (1896-1980)

- ஸ்விட்சர்லாந்து நாட்டில் பிறந்த உளவியல் அறிஞர்
- ஒருவனது குழந்தை பருவம், குமரப்பருவம் ஆகிய இரு பருவங்களில் எவ்வாறு சிந்தனை வளர்ச்சி அடைகிறது. (Cognitive Development) என்பதை கண்டறிந்து கூறினார்.
- இவர் அறிவின் தோற்றத்தையும் வளர்ச்சியையும் ஆய்வது இவரின் துறை இதனை Genetic Epistomology எனப்படுகிறது.
- கண்டுபிடித்து கற்றலை (Discovery Learning) ஊக்குவிக்க பியாஜேயின் குழந்தைகளின் சிந்தனை வளர்ச்சி பற்றிய கோட்பாடு பெரும் பங்கு வகிக்கிறது.
- செயலும் பயிற்சியும் அறிதிறன் வளர்ச்சிக்கு மிகவும் முக்கியமானது. எனவே செயல் மையக் கல்வி ஏற்பாடு (Activity Based Curriculum) இன்றியமையாதது.

பெஸ்டலாசி (Pestalozzi)

- 1746-ல் ஸ்விட்சார்லாந்தில் பிறந்தார்.
- இவர் உற்றுநோக்கல் (Observation) அனுப்வங்களை பெறுதல் (Experineces) ஆகியவற்றை பயன்படுத்தியே குழந்தைகள் கல்வி அறிவு பெறுதல் வேண்டும் என்று கூறினார்.
- இவரது கற்பித்தல் முறை உற்று நோக்கல் முறை (Methods of Observation) எனப்படுகிறது.
- இவரது அடிப்படைக் கல்வி கோட்பாடானது "சொற்களுக்கு முன் பொருள்கள்" (Things before words) ஆகும்.
- கல்வி என்பது மனிதனது எல்லாத்திறன்களும், வன்மைகளும், இயல்பாகவும், படிப்படியாகவும், இசைந்தும் வளர்ச்சி பெறுதல் ஆகும்.

எழுதிய நூல்கள்

1. A Journal of a Father
2. Leonard and Gertrude

Note

- திட்டமிட்டு கற்பித்தல் (Programmed Laearning) கற்பித்தல் இயந்திரம் (Teaching Machines) உருவாக்கியவர் சிட்னி பிரெஸ்ஸி (Sydney Pressy)
- நேர்கோட்டு வகை (Linear Type) – B.F.Skinner
- கிளைவழி திட்டம் (Branched Programme) – கிரௌடர் (Crowder)

UNIT – VIII

கலைத்திட்டம் (Curriculum)

கலைத்திட்டம் என்ற சொல் "Currere" என்ற இலத்தீன் வேர்ச் சொல்லிருந்து பெறப்பட்டது. 'Currere' என்ற சொல்லிற்கு "ஓடுகளம்" அல்லது 'ஓடும்பாதை' என்று பொருள். எனவே "பாடப்பொருள்களின் களம்" என்று பொருள் கொள்ளப்படுகிறது.

இலட்சியத்தை அடைய கலைத்திட்டம் என்ற ஓடும் பாதையை கடக்க வேண்டும்.

கல்வியாளர்களின் கூற்றுகள்


- "கலைத்திட்டம் என்பது கற்றலுக்கான திட்டமிடலாகும்" — தாபா, ஹில்டர் (1962)
- "தனது எண்ணங்களின் வெளிப்பாட்டை திரையில் (மாணவர்கள்) வடிக்க முற்படுகின்ற ஓவியரின் (ஆசிரியரின்) கையில் உள்ள தூரிகை போன்றதுதான் கலைத்திட்டம்" — கன்னிங்ஹாம்
- "வெளிப்படுத்தப்படும் முறை எவ்வாறாக இருப்பினும், கலைத்திட்டத்தின் உண்மைத்தன்மையுடைய நிலையான பகுதி பாடப்பொருள்தான்" — பியூகாம்ப்
- கலைத்திட்டமானது பாடப்பொருள், கற்பித்தல் முறைகள் மற்றும் இலக்குகளை உள்ளடக்கியதாகும். இந்த மூன்று பரிமாணங்களும் செயல்பாட்டுக் கலைத்திட்டமாகும். — டெய்லர்
- கலைத்திட்டமானது கற்பதற்குரிய பாடப்பொருளாகும் — ஆர்ன்ஸ்டீன்

- கலைத்திட்டமானது கற்போருக்கு அளிக்கப்படும் ஒட்டுமொத்த அனுபவமாகும் (Total Experience). பள்ளி வளாகத்தின் பல்வேறு இடங்களிலிருந்தும் மாணவர் பெறப்படும் திறன்கள் மற்றும் அறிவாகும்.
- "கலைத்திட்டம்" என்பது கலைத்திட்டம் பற்றி 1918 ஆம் ஆண்டு ஜான் பிரான்சி என்பவரால் வெளியிடப்பட்ட முதல் புத்தகம்.


கலைத்திட்டத்தின் வரையறைகள் 5 வகைகளுக்கு பொருந்தும் படியாக அமைந்துள்ளது.

1. செயல்முறைகள், கற்றல் விளைவுகளில் கலைத்திட்டம்
   நிகழ்வுகள், தொகுப்புகள், மின்னியல் தொடர்புகள் மற்றும் பல ஊடகங்கள் (Electronic media and multimedia)
2. கல்வி நிகழ்வுகளில் கலைத்திட்டம் (or) கற்றல் நிகழ்வுகளில் கலைத்திட்டம்
   - கற்பிக்கப்படும் பாடங்கள், (தமிழ், ஆங்கிலம், கணிதம், அறிவியல், சமூகவியல்.....)
   கலைத்திட்டத்தின் தொடர் கற்றல் நிகழ்வுகள் (கற்பித்தல், முறைகள், கற்றல், தேர்வு முறைகள், மதிப்பிடல், பின்னூட்டல்)
3. உள்ளார்ந்த கற்றலில் கலைத்திட்டத்தின் பங்கு
   இலக்கு, பாடப்பொருள், கருத்துகள், பொதுமைப்படுத்துதல், நடத்தை மாற்றங்கள், வெளிப்பாடுகள்.
4. கற்றல் அனுபவங்களில் கலைத்திட்டத்தின் பங்கு
   செயல்பாடுகள்
   திட்டமிடப்பட்ட கற்றல் செயல்பாடுகள்
   திட்டமிடப்படாத கற்றல் செயல்கள்
5. மறைக்கப்பட்ட அல்லது உள்ளார்ந்த கலைத்திட்டம்
   மொத்த கல்வி அனுபவம். இவ்வனுபவம் முறையாக அல்லது முறைசாராத, வகுப்பறை
   அல்லது பள்ளியின் ஏதேனும் ஒரு பகுதியில் இருந்து கற்றல் ஏற்படுதல் —

கலைதிட்ட கருத்துகளின் வகைப்பாடு



கிளேன் கலைத்திட்ட வடிவமைப்பின் வகைகள் (Klein Curriculum Design)



கிளேன் மூன்று வகையான கலைத்திட்டத்தை வடிவமைத்தார் (Curriculum Design)

- ❖ பாடமைய கலைத்திட்டம் (Subject – centred Curriculum)
- ❖ மாணவர் மைய கலைத்திட்டம் (Child – Centred Curriculum)
- ❖ வாழ்க்கை அல்லது சமூக மைய கலைத்திட்டம் (Life or Social – centred Curriculum)

1. பாட மைய கலைத்திட்டம் (Subject – centred Curriculum)

- ❖ உள்ளமையக் கலைத்திட்டம் — Core Curriculum
- ❖ விரிகள கலைத்திட்டம் — (Broad field curriculum / Integrated curriculum)
- ❖ தனி பாடக் கலைத்திட்டம்— Separate subject curriculum
- ❖ இடைத்தொடர்புள்ள கலைத்திட்டம் (Correlated Curriculum)

2. மாணவர் மைய கலைத்திட்டம் (or) கற்போர் மைய கலைத்திட்டம் (Child - centred Curriculum)

இதனை **கெல்லி (Kelly)** மூன்று விதமாக வலியுறுத்தினார்.

- ❖ கற்பேரின் தேவை
- ❖ கற்போரின் வளர்ச்சி
- ❖ கற்போரின் ஆர்வம்

மாணவர் மைய அணுகுமுறை — ஜான்டூயி 5 விதமாக வலியுறுத்தினார். அவை

- ➢ கற்போரின் சூழல்
- ➢ கற்றல் அனுபவங்கள்
- ➢ கற்போரின் வளர்ச்சிக்கு ஏற்ற பாடப்பொருள்
- ➢ சமூகம் சார்ந்தது
- ➢ படைப்பாற்றல், தர்க்கவியல் சிந்தனை (Creativity & logical thinking)

நிஸ்பெட் கருத்து (Nisbet's Concepts)

ஆளுமை தொடர்புடையது

3. சமூக மைய கலைத்திட்டம் (or) வாழ்க்கை மைய கலைத்திட்டம் (Social – centred curriculum)

பிளாரன்ஸ் ஸ்ரேடிமேயர் (Florence Stratemayer) இதனை பிரச்சினை அடிப்படையான கலைத்திட்டம் என்று குறிப்பிடுகிறார்.

- சமூக பிரச்சினைகள்
- சமூக வளர்ச்சி
- வாழ்வியல் நிகழ்வுகள்
- நிகழ்காலத்தை பாதிக்கும் அச்சுறுத்தல்

ஹில்டா டாபா இதனை 9 களங்களில் வலியுறுத்துகிறார்.

கலைத்திட்ட கட்டமைப்பு (Structure of Curriculum)

இது 5 பரிமாணங்களைக் கொண்டது.

- மாணவர்கள் மற்றும் சமுதாயத் தேவைகள்
- குறிக்கோள்களை அடைதல்
- பாடப்பொருள் தெரிவு செய்தல்
- கற்றல் — கற்பித்தல் முறைகள்
- மதிப்பீடு செய்தல்

கலைத்திட்டம் குறித்து மாறிவரும் கருத்துகள் (Changing concepts of Curriculum)

- பாடப்பொருள்
- அனுபவங்கள்
- சமூக மாற்றம்
- வாழ்வியல் அனுபவங்கள்
- செயல்பாடுகள்
- பண்பாடு மற்றும் கலாச்சாரம்

கலைத்திட்ட வளர்ச்சி (Curriculum Development) (or) கலைத்திட்டம் தயாரித்தல்

இது ஒரு தொடர்ச்சியான நிகழ்வாகும்.

கலைத்திட்ட வளர்ச்சி = கலைத்திட்ட தயாரிப்பு + தொடர்ந்து மாற்றங்களைப் புகுத்தி செம்மைப் படுத்திக் கொண்டிருத்தல்

கலைத் திட்டம் தயாரித்தல் — கோட்பாடுகள் (Principles of Curriculum Development)

1. நெகிழ்வுத்தன்மை (Flexibility)

தனியாள் வேறுபாடுகளுக்கு ஈடுகொடுக்கும் வகையில் நெகிழ்வுடையதாக இருத்தல் வேண்டும்.

2. பொருத்தப்பாடு (Relevance)

தனி மனித வளர்ச்சி, சமுதாய வளர்ச்சி, தேசிய வளர்ச்சி ஆகியவற்றிற்கு இடமளிக்கும் வகையில் பொருத்தமானதாக கலைத்திட்டம் இடம் பெற வேண்டும்.

3. நகர்வுத் தன்மை (Mobility)

கல்வியிலும், வேலை வாய்ப்பிலும் உயர்நிலை நகர்வு (Vertical mobility), கிடைமட்ட நகர்வுக்கும்(Horizontal mobility) வகை செய்வதாக அமைய வேண்டும்.

தேவைகளின் அடிப்படையில் கலைத்திட்ட வளர்ச்சி அமைந்துள்ளது. தனியாள் தேவை, சமூகத்தேவை, தொழிற்தேவை, கல்வித்தேவை மற்றும் தேசிய தேவை முதலியன.

டைலரின் (Tyler) கலைத்திட்ட வளர்ச்சி 4 அடிப்படைத் தத்துவங்களை கொண்டது.

- ❖ பள்ளியின் குறிக்கோள்கள்
- ❖ கற்றல் அனுபவங்கள்
- ❖ கற்றல் அனுபவங்களை உருவாக்கித் தருதல்
- ❖ மதிப்பிடல்

<u>ஹில்டா தாபாவின் (1962) Hilda Taba வின் கலைத்திட்ட வளர்ச்சி</u>

7 அடிப்படைத் தத்துவங்களைக் கொண்டது.

- ❖ மாணவர்களின் தேவைகள்
- ❖ தேவைகளின் அடிப்படையிலான குறிக்கோள்கள்
- ❖ பாடப்பொருளைத் தேர்வு செய்தல்
- ❖ பாடப்பொருளை முறைப்படுத்தி ஒழுங்கு வரிசையில் அமைத்தல்
- ❖ கற்றல் அனுபவங்களை தேர்வு செய்தல்
- ❖ அனுபவங்களை வரிசைப்படுத்துதல்
- ❖ செயல்பாட்டினை மதிப்பீடு செய்தல்

<u>பாடப்பகுதி (Syllabus)</u>

பாடப்பகுதி மூன்று பரிமாணங்களை உடையது.

1. குறிக்கோள் மற்றும் நோக்கம் (Objective and aim)
2. பாடப்பொருள் (Content)
3. மேற்பார்வை புத்தகம் (Reference Books)

கலைத்திட்டம் (Curriculum)	பாடப்பகுதி (Syllabus)
1. முப்பரிமாணமுடையது (கற்போரின் தேவை, பாடப்பொருள், கற்பிக்கும் முறைகள்)	1. மூன்று பரிமாணமுடையது.
2. கற்பித்தல் அனுபவங்களை விவரிக்கும்	2. திட்டப்படி மட்டும் பின்பற்றப்படும்
3. மொத்த படிப்பிற்கு தயாராவது	3. ஒரு வருடம் அல்லது, ஒரு பருவத்திற்காக மட்டும் தயார் செய்வது
4. கற்றலுக்கு திட்டமிடுகிறது. அத்திட்டமிடலில் பாடஇணைச் செயல்பாடுகள் ஆகியனவும் இடம்பெறும்.	4. இது கலைத்திட்டத்தின் ஒரு பகுதி. வார்த்தைகளால் அடங்கிய, புத்தகம் சார்ந்த கல்வி மட்டுமே.

<u>கலைத்திட்டத்தை தீர்மானிக்கும் காரணிகள்</u>
<u>(Determinants of Curriculum) (or) Foundations of Curriculum)</u>

கலைத்திட்டம் அமைத்தல் சிக்கல்கள் நிறைந்த சவாலான பணியாகும். கலைத்திட்ட உருவாக்கத்தின் போது பின்வரும் காரணிகளை கருத்தில் கொள்ள வேண்டும்.

1. தனிமனித, சமுதாய, நிறுவன மற்றும் தேசியத் தேவைகள்
2. பண்பாடு
3. சமூக மாற்றம்
4. விழும அமைப்பு (Value System)

கல்வியின் தத்துவ, சமூக, உளவியல் அடிப்படைகள்

முன்று முக்கிய அடிப்படைகள் உள்ளடக்கியது. (Foundations of Curriculum):

1. தத்துவம் 2. சமூகவியல் 3. உளவியல்

முக்கிய கல்வித் தத்துவக் கொள்கைகளும், கலைத்திட்டத்தில் அவற்றின் தாக்கங்களும்:

கருத்தியல் கொள்கை (Idealism)

- மனித வாழ்க்கை நோக்கம், பயன், ஆன்மீக வளர்ச்சி, அறநெறிப்படி வாழ்தல் முதலானவை இறைவனை வணங்கி பேரின்பத்தை அடைதல், சமயம் சார்ந்த கல்வி. மெய்யறிவு அடைய சிறப்பிடம் தருகிறது.
- கருத்தியல் வாதிகள்: ஜேம்ஸ்ராஸ் (James Ross), பட்லர், பிளேட்டோ, காந்திஜி, விவேகானந்தர்
- அறநெறி சார்ந்த விழுமக்கல்வியுடன் தொழிற்கல்விக்கு முக்கியத்துவம் தருகிறது. ஆனால் நூல் அறிவே சிறப்புடையது என கருத்தியல் வாதிகள் பெரிதும் வலியுறுத்துகிறார்கள்.
- இயற்பியல், வரலாறு, நுண்கலை, தர்க்க சாஸ்திரம், கணிதம், மனிதவியல் ஆகிய பாடங்கள் முக்கியத்துவம் பெற்றன.
- தொழிற்கல்வி குறுகிய கண்ணோட்டம் உடையவை. அது அறிவுப்பசியை தீர்க்காது என்கிறது.

இயற்கைக் கொள்கை (Naturalism)

இயற்கையோடு இணைந்த கற்றல். இயற்கை அழகானது, மதிப்பு மிக்கது. எனவே சுய வெளிப்பாடு, மாணவர் இயல்பூக்கம் நிறைந்த கல்வியை தரும். கல்வியில் புலப்பயிற்சி தரும் இயற்பியல், வேதியியல், உயிரியல் போன்ற பாடங்களுக்கு அதீத முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. இயற்கையே இணைந்து கற்றலில் அழகுணர்ச்சி வெளிப்படும் விதமாக அமைந்துள்ளது. சுதந்திரமான விளையாட்டுகள், சுற்றுலா, களப்பயணம் முதலியன இடம்பெற வேண்டும். **ரூஸோ, தாகூர், அரிஸ்டாட்டில் ஆகியோர் இயற்கை வாதிகள்.**

புற உண்மைக்கொள்கை (Realism) (or) இயல்புக் கொள்கை

- பருப்பொருட்களே உண்மையானது. நம் புலன்களே அறிவைப்பெறும் வாயில்கள். அனுபவ அறிவே மெய். பகுத்தறிவு செய்தல்.
- ஓவியம், இசை, சமுதாய இலக்கியங்கள் அனைத்தும் கலைத்திட்டத்தில் சேர்க்கப்பட வேண்டும் என்கிறது.
- வாழ்க்கைத் தத்துவம், கல்வித் தத்துவம் இவை இரண்டும் வாழ்வின் உண்மைக் காரணிகளான மனிதன், சூழ்நிலை இவற்றின் இடைவினை.
- மொழியை விட கணக்கியலுக்கு அதிக முக்கியத்துவம் தருகிறது. **இயல்பு வாதி** – சாக்ரடீஸ்

முக்கியத்துவக் கொள்கை (Essentialism)

அடிப்படை திறன்களுக்கு முக்கியத்துவம் தருகிறது. (வாசிப்பு, எழுதுதல், கணக்கியல் (3R))

Reading
Writing
Arithmatic

இதில் ஆங்கிலம், அறிவியல், கணிதம் மற்றும் அன்னிய மொழிகளுக்கு அதிக முக்கியத்துவம் அளித்தது.

பயணளவைக் கொள்கை (Pragmatism)

செயல் எனவும், வேலை எனவும் Pragma என்ற கிரேக்கச்சொல் பொருள்படும். ஒவ்வொரு மாணவரின் ஆற்றல், ஆர்வம் ஆகியவற்றிற்கு ஏற்ப முழு வளர்ச்சியையும் ஏற்படும் விதமாக வேண்டும். அவ்வளர்ச்சி தனிமனித வளர்ச்சியாகவும், சமூக வளர்ச்சியாகவும் இருந்திட வேண்டும்.

எதிர்காலம் நிலையற்றது. இந்த பிரபஞ்சத்தில் மாற்றம் என்பது தவிர்க்க இயலாத ஒன்றாக உள்ளது. எதுவுமே முடிவு அல்ல. எனவே தற்காலத்தில் வாழ மற்றும் மற்றவருடன் இணைந்து வாழ வகை செய்யும் கல்வி வேண்டும் என வலியுறுத்துகிறது.

செயல்திட்டமுறை, குழந்தையின் வளர்ச்சிக்கு ஏற்ப ஓவியத்தல், எழுதுதல், கைவேலை, இயற்கை அறிவு, சித்திரம் வரைதல் உடல்நலம், புவியியல் சார்ந்த கலைத்திட்டம் அமைத்தல்.

பின்வரும் நான்கு அடிப்படைத் தத்துவங்களை இது உள்ளடக்குகிறது:

1. பயன்பாடு 2. இயல்பான ஆர்வம் 3. அனுவம் சார்ந்த கலைத்திட்டம் 4. ஒருங்கிணைப்பு

ஜான்டூயி, சி.பி. பியர்ஸ், வில்லியம் ஜேம்ஸ், குல்பாட்ரிக் என்பவர்கள் பயனளவைக் கொள்கை வாதிகள்.

<u>கலைத்திட்ட வடிவமைப்பில் இந்தியத் தத்துவங்கள்</u>

— சத்தியம் (உண்மை), சிவம் (இறைத்தன்மை), சுந்தரம் (அழகு)

- ஒழுக்கம், கடமை, பக்தி
- தன்னலமற்ற தொண்டு
- சகிப்புத்தன்மை
- மனித சமுதாய நலன்
- இறைநிலையுடன் இணைந்த தன்மை
- உண்மை அகிம்சை முதலான அனைத்து விழுமங்களும் (Values)

கலைத்திட்ட வடிவமைப்பில் பிரதிபலிக்கின்றன.

காந்தியக் கல்விமுறை: <u>"வாழ்த்தைக் கல்வி"</u> வாழ்க்கை முழுவதும், அதுவும் வாழ்வின் மூலமாகவே அளிக்கிறது. இது <u>ஆதாரக்கல்வி</u> எனப்படுகிறது.

<u>கலைத்திட்டத்தை தீர்மானிக்கும் சமூக காரணிகள்</u>

அனைத்து சமுதாயமும் ஒரு பள்ளியிலிருந்து எதிர்பார்க்கும் விசயங்கள் பின்வருபவையே.

- கலாச்சாரத்தை பாதுகாத்தல், பின்வரும் சமூகத்திற்கு அக்கலாச்சாரத்தை அளித்தல்
- கற்போரை சமூகத் தேவைக்கு ஏற்ப வளர்த்தல், அதற்கு உதவுதல்
- கற்போரை எதிர்காலத்திற்கு தயாராக்குதல்

<u>சமூகத்திற்கு பாரம்பரியமான தேவைகள்</u>

- திறன்கள் — கற்போரின் அடிப்படைத் திறன்களில் வல்லுனராக்குதல்
- பண்பாடு — பாதுகாத்தல், கற்றுத்தரல், புதுப்பித்தல்
- தொழில்திறன் — மேம்படுத்துவது சார்ந்த யுத்திகள்
- குடும்ப உறுப்பினர் — குடும்பத்தில் திருப்திகரமான, பயனுள்ளவராக இருத்தல்.
- பொழுதுபோக்கு — பயனுள்ளதாக இருத்தல்
- செயல் திறன்மிக்க குடிமகனாதல் — குடிமகனுக்குரிய கடமைகளைச் செய்தல்

நவீன சமூகத்தேவைகள்

- ❖ தொழில் மயமாதல்
- ❖ நவீன நகரமாதல்
- ❖ அறிவியல் பூர்வமான, தொழில்நுட்ப மாற்றங்கள்
- ❖ சூழ்நிலையில் மனித பங்கு — மனிதனால் உருவாக்கப்பட்ட பொருட்களை கொண்ட சுற்றுச்சூழல்

கலைத்திட்டத்தை தீர்மானிக்கும் உளவியல் காரணிகள்

குழந்தைகளின் வளர்ச்சிக்கும், கற்பித்தல் செயல்முறைகளில் உளவியல் பெரும்பங்கு வகிக்கிறது.

கலைத்திட்ட வடிவமைப்பில் அடங்கியுள்ள தத்துவங்கள் (Principles)

- ❖ தேவையின் அடிப்படையில் (Principles of need)
  உடல், உணர்வு, சமூகம் சார்ந்த தேவைகள்
- ❖ பயன்பாட்டின் அடிப்படையில் (Principles of Utility)
  மாணவன் அறிவை அன்றாட வாழ்வில் பயன்படுத்தும் விதமாக
- ❖ விரிவான பயன்பாட்டின் அடிப்படையில்
  மாணவர்களின் விருப்பத்திற்கேற்ப பல்வேறு துறைகளிலும் விரிவானதாக வேண்டும்.

ஆயத்த நிலையின் அடிப்படையில் (Readiness)

கலைத்திட்டமானது, கற்றலில் மாணவர்களின் ஏற்கும் தன்மைக்கு ஏற்ப அமைத்திட வேண்டும்.

சமூகத் தொடர்பின் அடிப்படையில் (Social relevance)

கற்போரின் சுய தேவைகளை நிறைவேற்றுவதுடன் சமூகத் தேவைகளை பூர்த்தி செய்திட வேண்டும்.

நடுநிலை தன்மை அடிப்படையில் (அ) சமநிலைத்தன்மை (balancing)

குறிக்கோள்கள் மற்றும் பாடப்பொருள் சம்நிலை
குறிக்கோள்கள் மற்றும் திறன்கள் சமநிலை
கற்கும் அனுபவங்கள்

ஒருங்கிணைப்பின் அடிப்படையில் (Integration)

குழந்தையின் தேவை மற்றும் செயல்பாடுகளை ஒருங்கிணைக்க வேண்டும். மேலும் உளவியல் அடிப்படை மூன்று பெரும் பிரிவுகளை உள்ளடக்கியுள்ளது.

1. நடத்தை சார் உளவியல் (Behavioural Psychology)

நடத்தை உளவியலில் முக்கிய பங்காற்றியவர்கள் ஸ்கின்னர் மற்றும் தார்ண்டைக் ஆவார்கள்.

- ➢ தூண்டல், துலங்கள் அடிப்படையில் அமைந்துள்ளது.
- ➢ பின்னூட்ட (Feedback) முறையும் அதிகம் பயன்படுத்தப்பட்டுள்ளது.
- ➢ அத்துடன் வலுவூட்டி (reinforcement) கற்பித்தல் இடம்பெற்றது.
- ➢ கற்றலானது வலுவூட்டல் பாராட்டு மற்றும் வெகுமதிகளை கொண்டு வடிவமைத்து முறைப்படுத்தப்பட்டது.

2. அறிதல் புல உளவியல் (Cogonitive Psychology)

கற்போரின் சிந்தனை குறித்து விவரிக்கிறது.

பியாஜே, புரூனர், காக்னே மற்றும் கில்போர்டு ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

- ➢ குவி சிந்தனை, விரிசிந்தனைகளை வளர்க்கிறது.
- ➢ கற்பனைத்திறன் மற்றும் சிக்கல் — தீர்க்கும் திறனை வளர்க்கிறது.
- ➢ சூழலின் தன்மைக்கேற்ப தகவல் சேகரித்தல் மற்றும் ஒருங்கிணைத்தலுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கிறது. கூர்சிந்தனையையும் (crititical thinking) வளர்த்திட வேண்டும்.

-மனிதநேய உளவியல் (Humanistic Psychology)

மாஸ்லோ மற்றும் கார்ல் ரோஜர் ஆகியோர்

- குழந்தைகளின் அறிவு, மனம் மற்றும் சமூகம் முதலான அனைத்திலும்.
- கற்றலானது மனித தேவை, மனோபாவம், உணர்வுகள் மற்றும் சுய விழிப்புணர்வு ஆகியவற்றை அடிப்படையாக கொண்டது.
- நேர்மறையான மனோபாவம், உணர்வுகள், தன்னிறைவு அடையச் செய்திடும். சுதந்திரமாக கற்றல், தன் வழிகாட்டுதல்.

பியாஜேயின் அறிதல் திறன் வளர்ச்சி

பியாஜே அறிதல் திறன் வளர்ச்சியினை நான்கு பெரும் பிரிவுகளாக வகைப்படுத்தியுள்ளார்.

1. புலனியக்க நிலை (Sensory Motro Stage)

பிறந்தது முதல் 2 வயது வரையில்.

எளிய பொருட்களை கையாளுதல், தனக்குதானே செயல்படுதல் போன்ற செயல்களின் மூலம் கற்றலை வழங்கிட வகை செய்தல்.

2. செயலுக்கு முற்பட்ட நிலை (pre – Operational Stage)

2 வயது முதல் 7 வது வரை

மொழி வளர்ச்சி, சொற்கள், குழந்தைகளின் தனித்தேவைகள், பயன்கள் ஆகியவற்றிற்கு ஏற்ப எளிய சொற்கள் அடிப்படையில் கற்பித்தல்.

3. பருப்பொருள் நிலை (Concrete operatonal Stage)

7 வயது முதல் 11 வயது வரை

படங்கள், மாதிரி பொருட்கள், செய்து கற்றல் போன்ற உடனடி அனுபவங்களை வழங்கும் வகையில் கற்பித்தல்.

4. கருத்தியல் நிலை (Formal operaton stage)

11 வயதிற்கு மேல்

பிறர் கருத்துகள், அனுபவங்களின் மூலம் கற்பதற்கான பாடப்பொருள் அமைத்தல்.

மேற்கூறிய நான்கு அறிதல் திறன் வளர்ச்சிக் கோட்பாடும், குழந்தைகளின் வளர்ச்சி நிலைகளுக்கேற்ப கற்றல் நிகழ்வுகளை வலியுறுத்துகிறது.

கலைத்திட்ட வடிவமைப்பின் அடிப்படைக் கருத்துகள் (4)

(Basic concepts of Curriculum)

1. வீச்சின் அடிப்படையில் (Scope)

எந்த நிலையில் எதனைக் கற்றிட வேண்டும் என தீர்மானித்தல்.

2. தொடர்புறுவு (Articulation)

பாடக்கருத்துகளை நடைமுறை நிகழ்வுகளுடன் தொடர்பு படுத்தும் விதமாக கலைத்திட்டம் தேர்ந்து எடுத்தல். கிடைமட்டம் (Horizontal) & செங்குத்து (அ) மேல்நோக்கு (Vertical) என 2 வகை.

3. சமநிலை (Balance)

பாடப்பொருள், கற்றல் அனுபவங்கள் இவ்விரண்டிற்கும் இடையே உள்ள முரண்பாடற்ற தன்மையே சமநிலை. சமநிலையுள்ள கலைத்திட்டம் என்பது கல்விக் குறிக்கோள்களை நிறைவேற்றும்.

4. அடுக்கு வரிசை (Sequency)

பாடத்தின் கடினத்தன்மை, பயன்பாடு, மாணவர் வளர்ச்சிநிலை ஆகியவற்றை அடிப்படையாக கொண்டு வரிசைக்கிரமமாக அமைத்தல்.

அனுபவ நிலைக் கலைத்திட்டம் (Experimental Curriculam)

ஜான்டூயி செயல்திட்டமுறையை வலியுறுத்துகிறார். களப்பயணம் செல்லுதல், சமூகப் பணிகளில் ஈடுபடல், செய்து கற்றல் முறைகளில் கற்றல். இவ்வனைத்திலும் அனுபவங்களைப் பெற்று அவற்றின் மூலம் கற்பதால் குழந்தைக்கு நேரடி அனுபவம் கிடைக்கிறது. இதனால், கற்றுக் கொண்ட பாடப்பொருள் நீண்ட நாள் நினைவில் நிலைத்திருக்கும்: புதியன படைக்கும் ஆற்றலும், உற்சாகமும் பெருகும்.

செயல்நிலைக் கலைத்திட்டம் (Activity Curriculum)

செயல்களின் மூலம் அறிவை பெறுதல், இது அனுபவ கலைத்திட்டத்தின் அடிப்படை.

கண்காட்சி அமைத்தல், பொருட்காட்சி அமைத்தல், கலை நிகழ்ச்சிகள், கண்டறிமுறையில் சோதனை, வினாடிவினா, களப்பயணம், விளையாட்டு, தமிழ் மன்றம், அறிவியல் ஆய்வுக்கூடம் கைவினைப் பொருள்கள் உருவாக்கல், தோட்ட வேலை முதலானவை இவற்றில் மாணவர்கள் தனியாகவோ, குழுவாகவோ பங்கேற்று கற்றலில் ஈடுபட இயலும்.

தற்போது தமிழக அரசால் பின்பற்றப்படும் செயல்வழிக் கற்றல் (Activity based learning) இதற்கு மிகச் சிறந்த உதாரணமாகும்.

உள்மைக் கலைத்திட்டம் (Core Curriculum)

இது இலட்சிய கலைத்திட்டத்தை உருவாக்குவது. வாழ்க்கையில் தொடர்புள்ள வகையில் கலைத்திட்டம் அமைப்பது.

புதிய கல்விக் கொள்கை 1986 (National Educational Policy) மூலம் உருவாக்கப்பட்டது. இதில் 10 வகையான கல்விச் செயல்கள் பரிந்துரைக்கப்படுகிறது.

1. சிறு குடும்ப வசதி
2. சுற்றுச்சூழல் பாதுகாப்பு
3. ஆண் — பெண் சமத்துவம்
4. இந்திய சுதந்திர போராட்ட வரலாறு
5. அடிப்படைக் கடமைகள்
6. பண்பாடு மற்றும் கலாச்சாரம்
7. சமூகத் தடைக்ளை நீக்குதல்
8. தேசிய பண்புகள்
9. அறிவியல் மனப்பான்மை
10. சமத்துவம், ஜன்நாயகம் சமயச் சார்பின்மை.

கலைத்திட்டத்தின் பாடப் பொருளை தேர்ந்தெடுத்தலும் வரிசைப்படுத்தலும் (Content Selection)

கற்போருக்கு தேவையான கருத்துகள், கோட்பாடுகள் விதிகள், விளக்கங்கள், தகவல்கள், நிரூபிக்கப்பட்ட உண்மைகள், முக்கிய நிகழ்வுகள் போன்றவையே பாடப்பொருளாக அமையும். அவை பொருத்தமான தலைப்புகளில் தேர்ந்து எடுக்கப்பட்டு, வரிசைப்படுத்தப்படுகிறது. அவ்வாறு தேர்ந்தெடுக்க எட்டு வகையான தகுதிப்பாடுகள் பின்பற்றப்படுகிறது. அவையாவன்.

1. தன்னிறைவு (Self – Sufficieny)

குறைவான பாடப்பொருள் நிறைய கருத்துகளை கற்றிடும் வகையில் இருத்தல்.

2. முக்கியத்துவம் (Significance)

அடிப்படைத்திறன்கள், பொருள் பொதிந்த அனுபங்கள் எதிர்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் திறன்களுக்கு அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்க வேண்டும்.

3. ஏற்புடைமை (Validity)

நிரூபிக்கப்பட்ட உண்மையாகவும், குறிக்கோள்களுக்கு பொருத்தப்பாடுடன் இருத்தல்.

4. ஆர்வமூட்டல் (Interest)

மாணவர் ஆர்வத்தை தூண்டும் விதமாக இருத்தல்.

5. பயனுடைமை (Utility)

மாணவர் பிரச்சினைகளை தீர்க்கப் பயன்படும் விதமாக இருத்தல்.

6. கற்றலுக்கு பொருந்தியிருத்தல் (Learnability)

மிக கடினம், மிக எளிமை என்றில்லாதபடி

கற்போரின் அறிவுநிலை, தரம் ஆகியவற்றிற்கு பொருத்தமானதாக இருந்திட வேண்டும்.

செயல்படுத்தும் தன்மை (Feasiblity)

நடைமுறையில் பயன்படும் விதமாக அமைந்த பாடப்பொருள் எளியமுறையில் செயல்படுத்த இயலும்.

ஜனநாயக மதிப்புகளைப் பேணல் (Orientation of democratic values)

சகிப்புத்தன்மை, சகோதரத்துவம், சமத்துவம், இறையாண்மை, வேற்றுமையில் ஒற்றுமை, வாய்மை, அகிம்சை, மனிதநேயம் போன்ற ஜனநாயக மதிப்புகளை ஒருங்கிணைக்கும் விதமாக அமைதல் சிறப்பானதாகும்.

பாடப்பொருளை வரிசைப்படுத்தி ஒருங்கமைதல் (Content organization)

பாடப்பொருளை படிப்படியாக உயர்த்தி அடுக்குவது கற்றல் பணியை எளிமையாக்கும். இவ்வாறு வரிசைப்படுத்துவது "பாடப்பொருள் அடுக்குமுறை" எனப்படும். இவை ஐந்து முறைகளில் வரிசைப்படுத்தப்படுகிறது. அவையாவன:

1. தருக்க முறையிலான அடுக்கமைப்பு (Logical organization)

இது "இயல்படுக்கு முறை" என்றழைக்கப்படுகிறது.


- தெரிந்ததிலிருந்து தெரியாதவற்றிற்கு செல்லல்.
- எளியதிலிருந்து சிக்கலானதிற்கு செல்லல்.
- பருப்பொருளிலிருந்து கருத்தளவிற்குச் செல்லல்.
- முழுமையாக சொல்லியபின் அதன் பகுதிகளை விவரித்தல்
- உற்றுநோக்கி காரணமறிதல்
- பழைய கருத்துகளுடன் புதிய கருத்துகளை படிப்படியாக புகுத்துதல்.
- குறியீடுகளைப் பயன்படுத்துதல்.
- விதி வருமுறை, விதி விளக்க முறை ஆகிய இரு முறைகளிலும் கற்பித்தல்.
- புலனனுவங்களிலிருந்து அறிவு நிலைக்கு கொண்டு செல்லுதல்.
- புதிய கருத்துகளை படிப்படியாக (Step by Step) புகுத்துதல்.

2. உளவியல் முறை அடுக்கமைவு (Psychological organization)

பியாஜே அறிதிறன் வளர்ச்சி நிலைக் கேற்ப வழங்கப்படுகிறது. மேலும் தனியாள் வளர்ச்சியை சார்ந்தது.

3. பொதுமைய வட்ட அடுக்கமைவு (Concentric organization)

தொடக்க கல்வியிலிருந்து மேலே செல்லச் செல்ல பாடக் கருத்துகள் மற்றும் தகவல்கள் விரிவானதாக ஆழ்மானதாக அமையும். இவ்வாறு எளிமையிலிருந்து கடினமரகதாக மாறும், நிகழ்வே பொதுமைய வட்ட அடுக்கமைவு ஆகும். ஆனால் சுருள் அடுக்கு முறையிலிருந்து மாறுபடுகிறது. ஏனெனில் தொடக்க வகுப்பிலிருந்து உயர்நிலை வரை தொடர்ச்சியாக பாடப்பொருள் அமையும்.




எ.கா:

- ❖ மூன்றாம் வகுப்பு — உணவுப்பொருட்கள்
- ❖ நான்காம் வகுப்பு — உணவுப் பொருட்களின் சத்துக்கள்
- ❖ ஐந்தாம் வகுப்பு — உணவுப் பொருட்களின் மாறுபாடுகள்
- ❖ ஆறாம் வகுப்பு — குறைபாட்டு நோய்கள் தீர்க்கும் முறைகள்
- ❖ ஏழாம் வகுப்பு — செரித்தல் மண்டலம்
- ❖ எட்டாம் வகுப்பு — செரித்தலில் உள்ள நொதிகள்
- ❖ ஒன்பதாம் வகுப்பு — உணவு உடலின் பல்வேறு உறுப்பாதல்
- ❖ பத்தாம் வகுப்பு — செரித்தல் உடலில் உணவின் மாற்றம்

இவ்வாறு எளிமையிலிருந்து கடினம் வரை சிறிது சிறிதாக பாடப்பொருள் அமைதல்.

சுருள் அடுக்கு கலைத்திட்டம் (Spiral Curriculum)

கீழ்நிலைகளில் கற்றவற்றை மீண்டும் குறிப்பிடாது அடுத்த நிலைக்கு கொண்டு செல்லும் யுக்தியே சுருள் அடுக்கு கலைத்திட்டம் எனப்படும். இம்முறையிலும் கீழ் வகுப்புகளில் எளிய கருத்துகளும் உயர்வகுப்புகளில் கடினமானவையும் இடம்பெறும்.



விளக்கம், விளக்கத்தில் குறியீடுகளின் பயன்பாடு

சிறுகுறிப்பு, கருத்துக்கள், குறியீடுகள் அறிமுகம்

படங்களுடன் எழுத்துகளும்

படங்கள் கொண்டு பொருட்களின் பெயர் கூறல்

எடுத்துக்காட்டு:

- ❖ தொடக்கநிலை — அம்மா, ஆடு, ஆப்பிள் முதலான படங்கள் காட்சிப்படுத்தி அறிமுகம் செய்வது போல் அமையும்.
- ❖ உயர் தொடக்க நிலை — முன்பு படங்களில் கூறிய விசயங்கள் எழுத்துகளில் அறிமுகப்படுத்தி பயன்படுத்தப்படும்.
- ❖ உயர்நிலையில் — சிறிய குறியீடுகள் முதலானவை அறிமுகம் செய்யப்படும்.

  Fe – இரும்பு, Au – தங்கம்,
  Ag – வெள்ளி
- ❖ தொடக்க நிலை — குறியீடுகளை விரிவாக்கி வினைகளை குறிப்பிடும். அதன் விளைவுகள், பயன்கள் முதலானவை விரிவாக விளக்கப்படும்.

நிறையலகு அடுக்குமுறை (Modulae Organisation)

ஒரு மையத் தலைப்பு ஒரு நிறையலகாக அமைக்கப்பட்டு இருக்கும். இதில் கற்போர் தம் வேகத்திற்கு ஏற்ப கற்க இயலும். ஒவ்வொரு நிலைக்கும் தொடர்புபடுத்தி கற்பித்தல் நிகழ்வுகளை அமைத்திடும் முறையாகும். ஒவ்வொரு அலகின் இறுதியிலும் ஒரு முறையான மதிப்பீடு அமைந்திடும். சுய தேர்வு, பயிற்சி, தற்குறிப்பு நிகழ்வுகள் நற்காலத்தில் அதிக முக்கியத்துவம் பெறுகின்றன.

கலைத்திட்ட மதிப்பீடு

வடிவமைக்கப்பட்ட கலைத்திட்டத்தின் தரத்தை மதிப்பீடு செய்து வரையறை செய்வது கலைத்திட்ட மதிப்பீடு ஆகும்.

கலைத்திட்டத்தின் தரத்தை அல்லது மதிப்பைத் தீர்மானித்தல் மதிப்பிடுதல் எனப்படும்.

கலைத்திட்ட மதிப்பீடு = தர அளவீடு (Qualitative Assessment) + எண் அளவீடு (Quantitative assessment)

வளர்வறி மதிப்பீடு (Formative Evaluation)

கற்றல் நிகழ்வின் போது பல்வேறு நிலைகளில் நடத்தப்படும் மதிப்பீடுகள் எடுத்துக்காட்டு:

வகுப்புத் தேர்வு, மாதத்தேர்வு, வாராந்திரத்தேர்வு, அலகுத்தேர்வு, காலாண்டு, அரையாண்டு தேர்வு, திருப்புதல் தேர்வு ஆகிய அனைத்தும் வளர்வறி மதிப்பீடுகள் ஆகும்.

தொகுநிலை மதிப்பீடு: (Summative Evaluation)

கற்றல் நிகழ்வின் இறுதியில் நடத்தப்படும் தேர்வே தொகுநிலை மதிப்பீடு ஆகும். கற்போர் இறுதிநிலையில் ஏற்பட்ட முழு விளைபயனை அளந்தறியப் பயன்படுகிறது. வெற்றி, தோல்வியை நிர்ணயம் செய்கிறது.


எ.கா: அடைவுத் தேர்வுகள், இறுதித்தேர்வு.

கலைத்திட்ட மதிப்பிடலின் படிநிலைகள் (Steps in Curriculum Evaluation)

இரண்டு படிநிலைகளைக் கொண்டுள்ளது.

1. கலைத்திட்ட மதிப்பிடலை திட்டமிடுதல்
2. கலைத்திட்ட மதிப்பீட்டு திட்டத்தை செயற்படுத்தல்

கலைத்திட்ட மதிப்பீட்டின் அடிப்படைக் கூறுகள் (Basic Elements)



பின்னணி சூழ்நிலை மதிப்பீடு (Context Evaluation)

இலக்கு, நோக்கங்களை அடிப்படையாகக் கொண்ட கலைத்திட்டத்தை உருவாக்கிட உதவுகிறது.

உள்ளீட்டு மதிப்பீடு (Input Evaluation)

இலக்கு மற்றும் நோக்கங்களை அடைந்திட தேவையான வளமைகள் மற்றும் உத்திகளை பரிந்துரைக்கிறது.

செயல்முறை மதிப்பீடு (Provess Evaluation)

கலைத்திட்டத்தை செயல்படுத்தும்போது மாணவரிடம் ஏற்படும் தாக்கத்தை அறிய உதவுகிறது.

விளைப்பயன் மதிப்பீடு (Product Evaluation)

முன்னாள் மாணவர்களின் தற்போதைய நிலையை ஆராய்ந்த அதன் மூலம் நிறுவனங்கள் ஏற்படுத்திய விளை பயனை அளவிடும் முறையே விளைபயன் மதிப்பீடு எனப்படும்.

கலைத்திட்ட மதிப்பீட்டின் மாதிரிகள்

1. டைலர் மாதிரி (Tyler's Model)

இது நேர்கோட்டு படிவமுடையது. இது கற்பித்தல் நோக்கங்களை மையமாகக் கொண்டது. கலைத்திட்ட மதிப்பீடு ஏழு முக்கிய படிகளை உள்ளடக்கியது.

2. ஸ்டேக் முகத் தோற்ற மாதிரி (Stake's countenance Model).

இது மூன்று நிலைகளை விளக்குகிறது. அவை

1. அடைய விரும்பும் குறிக்கோள்கள் 2. செயல்படுத்தல் மற்றும் செயல்கள்

3. செயல் படுத்தியதின் விளைவுகள்

கலைத்திட்டத்தின் குறித்தான முழுமை செய்வதற்கும் இதனை முக்த் தோற்ற மாதிரி என்று அழைக்கப்படுகிறது.

3. ஸ்டீவல் பீம் மாதிரி (Stuffle beam's CIPP model)

CIPP (Context, Input, process, product)

(பின்னணிச் சூழல், உள்ளீடு, செயல்முறை, விளைபயன்)

மேற்குறிப்பிடப்பட்டுள்ள நான்கு நிலையை கொண்டு ஒட்டு மொத்த மதிப்பீட்டை பெற உதவுகிறது. மேலும் மூன்று படிநிலைகளை உள்ளடக்கியது.

1. விரிவாக வர்ணித்தல் (Delineating)
2. விவரங்களை பெறல் (Obtaining data)
3. அறிக்கை வழங்குதல் (Providing Report)

4. ஹில்டா தாபாவின் மாதிரி (Hilda Taba's Model)

இது காரண விளைவு தொடர்பினை வலியுறுத்தும் கலைத்திட்ட வழிமுறைகளில் அமைகிறது. இது வளர்வறி மதிப்பீட்டில் அதிக பங்காற்றி கலைத்திட்ட பாடப்பொருள் மற்றும் வழிமுறைகளை உருவாக்குகிறது.

5. ஸ்கிரிவன் மாதிரி (Scriven's Model)

இலக்குகளற்ற மதிப்பீடு (Goal free Evaluation) உண்மை விளைவுகளையே அதிகமாக விளக்குமேயன்றி இலக்குகளை மதிப்பீடு செய்யாது. இம்மாதிரியானது மொத்த மொழியை வளர்க்கும் விதமாக அமையும் எதிர்பாராத பக்க நிகழ்வுகளை வளர்க்கிறது.

பாடப்புத்தகத்தை மதிப்பீடு செய்வதில் முக்கிய காரணிகள்

- நோக்கம் மற்றும் பயனாளிகள்
- தொல்லியம் மற்றும் நம்பகத்தன்மை
- குறிக்கோள்கள்
- நிகழ்வுகள்
- முழுமையானது
- ஆளுமை

இவ்வாறு நிகழ்வுகளைக் கொண்டு பாடப்புத்தகம் வரையறை செய்யப்படுகிறது.

கல்வி நுட்பவியல்

கல்வியியல்: தனி மனிதனின் உள்ளிருக்கும் திறமைகளை வெளிக்கொண்டு வருவதே கல்வி (or) விரும்பத்தக்க நடத்தை மாற்றத்தை கொண்டு வரும் செயல்முறைகளே கல்வி ஆகும்.

நுட்பவியல்: நோக்கங்களை அடைய கற்பித்தல் நுட்பங்களை பயன்படுத்தும் முறைகள்.

இவ்விரு வார்த்தைகளை இணைத்த கருத்துகளைக் கொண்டதே கல்வி நுட்பவியல் (Educational Technology)

"techne" என்பது ஒரு கிரேக்கச் சொல். இதன்பொருள் "கலை" என்பதாகும்.

Technique நுட்பவியல் என்பது இதிலிருந்து உருவாகி கல்வி நுட்பவியலாக பயன்படுகிறது.

வீச்சு (Scope)

- எளிய, வலிமையான தகவல் தொடர்பிற்கு
- திறம்படக் கற்க
- சிறந்த கற்றல் சூழலை உருவாக்கிட
- தொலைதூர கல்விகளில் பயன்படுகிறது
- பெரும்பான்மை கல்விக்கு (Mass Education)

Dr. J. சிங், கல்வி நுட்பவியலை இரு முக்கிய பிரிவுகளாக வகைப்படுத்துகிறது. அவை


1. கல்வியில் நுட்பவியல் (Technology in Education)
2. கல்வியின் நுட்பவியல் (Technology of Education)

கல்வியில் நுட்பவியல் (Technology in Education)

— தொழில் நுட்ப கண்டுபிடிப்புகளை கற்பித்தலுக்கும் கற்றலுக்கும் பயன்படுத்துவது கல்வியில் தொழில்நுட்பம் எனப்படும்.

இயந்திர நுட்பவியல் (Hardware approach) — கற்பிக்கத் துணை செய்யும் மின் இயந்திர சாதனங்களை பயன்படுத்துவது இயந்திர நுட்பவியல்.

இது வன்பொருள் அணுகுமுறை (Hardware approach) என்றும் அழைக்கப்படுகிறது.



கல்வியின் நுட்பவியல் (Technology of Educaiton)

கற்பிக்கும் போது பயன்படுத்தும் நுணுக்கங்கள், உளவியல் உத்திகள், மாணவர் கவனத்தை கவரும் வழிமுறைகள் ஆகியன அனைத்தும் கல்வியின் நுட்பவியல் ஆகும்.

இதில் மென்பொருள் அணுகுமுறை (Software approach) பயன்படுகிறது. கல்வியல், உளவியல், தத்துவங்கள் மற்றும் மொழியியல் ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்துள்ள பாடநூல்கள், வீடியோ படங்கள், படத்தொகுப்புகள், வானொலி பாடங்கள், படச்சுருள் (Film strips)

மென்பொருள் அணுகுமுறை

முப்பரிமாண உருவங்கள் 3 Ditnsional Aid / models	திட்டமிட்டுக் கற்றல் Programmed leanring	அமைப்பு அணுகுமுறை System approach	கற்பித்தல் துணைகள் Teaching Aids.	படக் கருவிகள் Graphic Aids

1. பொருட்கள்
2. மாதிரிகள் (Models)
3. உண்மைப் பொருட்கள்
4. பொம்மலாட்டம்
5. முப்பரிமாண காட்சி அமைப்பு (Diaroma)

திரையில் காட்டப்படாத துணைக்கருவிகள் (Non Projected Aids)	திரையில்வீழ்த்தும் துணைக்கருவிகள் (Projected Aids)
a. நிழற்படங்கள் (Photos)	1. நழுவங்கள் பட வீழ்த்தி (slide projector)
b. வரைபடங்கள் (maps sketches)	2. தலைமேல் வீழ்த்தி (OHP)
c. விளக்கப்படங்கள் (charts)	3. சுருள்பட வீழ்த்தி (film strip projector)
d. கருத்துப்படங்கள் (cartoons)	4. ஒளி ஊடுருவாப்பட வீழ்த்தி (Paxi scope)
e. மாதிரிகள் (models)	5. கணிணி வழி திரைவீழ்த்தி LCD projector (or) Multimedia Projector


f. காட்சிப்பலகைகள் (Display Board)
   1. கரும்பலகை (Black board)
   2. பிளானல் பலகை (Flannel board)
   3. செய்திப் பலகை (Notice board)
   4. காந்தப் பலகை (Magnetic board)
   5. துளைப் பலகை (Fixograph)
   6. நீட்சி பலகை (Peg boards)

g. படங்கள் (Pictures)
h. மின் அட்டைகள் (Flash Cards)
i. சுவரொட்டிகள் (Posters)
j. கேலிச் சித்திரங்கள் (Cartoons)

[LCD (Liquid Crystal Display Projector) – திரவ படிகக் காட்சி வீழ்த்தி]

அமைப்பு அணுகுமுறை (System approach).

அமைப்பு அணுகுமுறை என்பது பிரச்சனைகளை தீர்க்கும் முறையாகும். அமைப்பு முறை என்பது தனியாக இயங்கும் அனைத்து பாகங்களின் மொத்தம் மற்றும் விரும்புகின்ற முடிவை அடைவதற்கு இணைந்து செயல்படுவது ஆகும்.



Teaching Learning Process

கற்கும் மாணவர்கள் மனிதவளம், பொருளாதாரவளம் நுட்பங்கள், செய்திகள்	அமைப்பு	மாணவர்கள் அடைவுகள் (அ) குறிப்பிட்ட பகுதியில் மாணவர் கருத்து முன்னேற்றம்

திட்டமிட்டு கற்றல் (Programmed Learning)

ராபர்ட். எம். காக்னே என்ற கல்வியாளர் பள்ளிகளில் கற்பிக்க திட்டமிட்ட கற்றலை உருவாக்கினார்.

திட்டமிட்டு கற்பித்தல் (Programmed Instruction) — கற்போரின் நடத்தையில் மாற்றத்தை உருவாக்கும்.

திட்டமிட்டு கற்றல் உண்மை, வரையறை, திறன்களை வளர்க்க உதவும். மேலும் திட்டமிட்டு கற்றல் பின்வரும் ஐந்து கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளது.

1. சிறுபடிகள் கோட்பாடு (Principle of Small Steps)

சிறிய சிறிய அறிவுகளை பெற்று தேர்கிறான், அவைகளை தொகுத்து தேர்த்தி அடைகிறான்.

2. உடன் விடை தரல் கோட்பாடு (Principle of acitive responding)

கற்பவர் சுறுசுறுப்பாக இருப்பதனால் நன்கு கற்கிறார். விடையளிப்பதன் மூலம் பாடப்பொருள் நீண்ட நாள் நினைவிலிருக்கும்.

3. உடனடியாக விடையை உறுதி செய்தல் (Principle of immediate conformation)

கற்பவர் அளித்த விடை சரியா, தவறா என்று உடனடியாக பதில் உறுதிப்படுத்தப்படுகிறது. இது உளவியல் அடிப்படையிலான வலுவூட்டம் தருகிறது.

4. தன் வேகத்திற்கு ஏற்ப கற்றல் கோட்பாடு (Principle of Self Pacing)

கற்பவர் புரிந்து கொள்ளும் திறனுக்கேற்ப. தனது வேகத்திற்கு தானே கற்கிறார்கள்.

5. மாணவர் மதிப்பிடல் கோட்பாடு (Prinicple of Student evaluation)

தொடர்ச்சியாக மாணவர் மதிப்பீடு செய்வதால் கற்றல் வளர்ச்சி சிறப்பாக உள்ளது.

திட்டமிட்டு கற்பித்தலின் வகைகள்


மூன்று முக்கிய வகைகளை உடையது.

1. நேர்வழித்திட்டம் அல்லது புற வழித்திட்டம் (Linear Programming / Extrinsic Progamming)
2. கிளைவழித்திட்டம் அல்லது அகத்திட்டம் (Branched programming / Intrinsic programming)
3. நிரல் வழித்திட்டம் (or) மெதடிக்ஸ் திட்டம் (Mathetics Programme)

நேர்வழித்திட்டம் (ஸ்கின்னர் வழித்திட்டம்)

1954—ல் B.F. ஸ்கின்னர் மற்றும் ஆராய்ச்சியாளர்களால் உருவாக்கப்பட்டது.

அடிப்படை — சரியான விடையை பெறும் வரை சிறிது சிறிதாக விடையை மாற்றியமைத்து விடையை பெறுதல் முறையாகும்.



நேர்வழித் திட்டத்தின் சிறப்புகள்

- சுறுசுறுப்பாக விடையளித்து பங்கேற்பு
- சிறு அலகுகளாக தகவல்கள்
- கட்டுப்படுத்தப்பட்ட துலங்கள்.
  தவறுகளைக் குறைப்பதற்காக குறிப்புச்சொல வழங்கப்படுகிறது.
- உடனடியாக பலன்கள், வேகமான பின்னூட்டம்
- பாடப்பொருள் படிபடியாக நிலைப்படுத்தப்படுகிறது. (Hierarchical base)
- தன் திறன் மற்றும் வேகத்திற்கேற்ப கற்றல்
- தொட்க்கநிலை மாணவர்களுக்கு பொருத்தமானது.
- மெல்லக்கற்போர் கற்றலில் உயர வழி செய்கிறது.
- சுதந்திரமாக விடையளிக்க வாய்ப்பு.

குறைபாடுகள்

- ஊக்குவித்தல் இல்லாமை.
- கட்டுப்படுத்தப்பட்ட விடைகள் படைப்பாற்றலை தடை செய்யும்.
- ஆசிரியர் மேலாண்மை செய்வதில் சிரமங்கள் ஏற்படும்.
- மாணவர் மையக் கோட்பாட்டிற்கு நேர் எதிரானது.
- ஒரே செயல் வடிவில் இருப்பதால் ஊக்கம் குறைகிறது.
- இணக்கத் தன்மை குறைவு.

B. கிளைவழித்திட்டம் (கிரௌடர் திட்டம்)

நார்மன் A. கிரௌடர் என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்டது. கணினி போன்ற எந்தவித புறக்கருவிகளின்றி மாணவரின் தேவையை பூர்த்தி செய்ய உதவும் வழிமுறைகளில் ஒன்றாகும்.

இது "ஒழுங்கற்ற பாடப்பொருள்" (Scrambled text) ஏனெனில் புத்தகத்தில் உள்ள பக்கங்களை பின்பற்றுவதில்லை.

கிளைவழித்திட்டத்தின் கோட்பாடுகள்

1. வெளிப்பாட்டுக் கோட்பாடு (Principle of Exposition)
2. குறையறிக் கோட்பாடு (Principle of diagnosis)
3. தீர்வுகாண் கோட்பாடு (principle of remediation)

1. வெளிப்பாட்டுக் கோட்பாடு (Principle of Exposition)

ஒரு பத்தி அல்லது ஒரு பக்க பாடப்பொருளை அடிப்படையாகக் கொண்டது. எனவே கற்பவர் பாடப்பொருளை முழுமையாக கற்கிறார்கள்.

2. குறையறிக் கோட்பாடு

மாணவரின் குறைகளைக் கண்டறிய உதவுகிறது. மேலும் பாடப்பொருளை எதிர்கொள்ளும் போது மாணவர்களுக்கு ஏற்படும் சிக்கல்களை அறிய உதவுகிறது.

3. தீர்வுகாண் கோட்பாடு

மாணவர் குறைகளை அறிந்து சரியான தீர்வினை அளித்திடுதல்.

கிளைவழித்திட்டத்தின் வகைகள். இரண்டு வகைகள்

1. முன்னோக்கு கிளைவழித் திட்டம் (Forward Branching)
2. பின்னோக்கு கிளைவழித் திட்டம் (Backward Branching)

- NDC—யில் இருந்து வெளிவருவோர் இந்திய முப்படைப் பிரிவுகளில் நேரடியாக கமிஷன் அந்தஸ்து பெற்ற இளநிலை அதிகாரிகளாக (Junior Commissioned Officers) பணியில் சேர்த்துக் கொள்ளப்படுவர்.
- சைனிக் பள்ளிகளுக்கான நுழைவுத்தேர்வை இது நடத்துகிறது.

பிரான்சிஸ் பார்க்கர் பள்ளி (Francis W. Parker School)

- முற்போக்கு கல்வி (Progressive Edu.) யின் தந்தை மார்க்கர்
- இவர் உற்று நோக்கல், சோதனைச் சாலையில் ஆய்வு செயலில் கருத்துக்களை பரீட்சித்துப் பார்த்தல் ஆகிய முறைகள் பின்பற்றப்பட்டன
- இவர் கற்பித்தல் முறை குவின்ஸி முறை என்று அழைக்கப்படுகிறது

வால்டார்ஃப்க் கல்வி (Woldorf Education – 1913)

- ரூடால்ஃப் ஸ்டெய்னர் (Ruldalph Steiner) என்பவர் இம்முறையை நிறுவினார்
- இதில் அவருக்கு ஊக்கமளித்தது இந்தியாவில் பிளாவட்ஸ்கி அம்மையார் (Madam Blavatsky) துவக்கிய சமயநெறி ஆகும்.
- ஆன்மீக வளர்ச்சியை குழந்தைகளுக்கு தருவதே இதன் நோக்கம்.

சமூகப் பள்ளிகள் (Community School)

- சமூகத்தின் செயல்களைச் சுற்றியே தன் பாட ஏற்பாட்டினை அமைத்துக் கொள்ளுதல்
- 'USA'—வில் 'சுதந்திர பள்ளி' இயக்கத்தின் பின்னணியில் இவை தொடங்கப்பட்டன
- USA—வில் இவ்வகை பள்ளிகளில் பட்டங்கள் வழங்கப்படுகின்றன.

நடமாடும் பள்ளிகள் (Mobile School)

- சுவரில்லா பள்ளிகள் (School without walls) என அழைக்கப்படுகிறது
- ஃபிரடரிக் ஜே.மெக்டொனால்டு (Mc Donald) என்பவர் இந்த புதுமையான கருத்தை பரிந்துரைத்தார்
- இவ்வகை கல்வியில் மாணவர்களை வெளியே அழைத்துச் சென்று சமூக நடவடிக்கைகளை கண்ணுறவும் அவற்றில் தாமும் பங்கேற்க செய்கின்றன.

பள்ளிகள் அற்ற சமுதாயம் (De-Schooling Society (or) World Without School)

- சமுதாயத்தினின்று பள்ளிகள் அனைத்தையும் அறவே நீக்கிவிட்டு அவற்றினும் மேலான மாற்று ஏற்பாடுகளை புகுத்த வேண்டும்.
- இக்கருத்தினை முதன்முதலில் வழங்கியவர் இவான் இலிச் (Ivan Illich). மேலும் இயான் லிஸ்டர் (Ian Lister) பாலோஃபிரியர் (Paulo Freire) எவரெட் ரீமர் (Everett Reimer) ஆகியோரும் இதை வலியுறுத்தினர்.
- பள்ளிகளற்ற சமுதாயத்தில் பள்ளியில் சென்று பயிலுதல் முற்றிலுமாக ஒழிக்கப்படுதல் வேண்டும் என்றும் ஆனால் கல்வியினைப் பெறுதல் வேண்டும் என்றும் வலியுறுத்துகின்றார்.
- விருப்பப் பாடம் வழங்குதல்
- DE Schooling என்னும் சொல்லை இவான் இலிச் 1971—ல் 'De Schooling Society' என்னும் நூலில் முதன்முதலில் பயன்படுத்தினார்.

பள்ளிக்கு வெளியே கற்றல் (Non-Classroom Learning)

- இக்கருத்தை அறிமுகப்படுத்தியவர் ஜான் ஹோல்ட் (John Holt)
- பள்ளிக்கூடங்களையே நம்பிக் கொண்டு இராமல் சமுதாயத்தில் உள்ள வளங்களைப் (Community Resource) பயன்படுத்திக் கற்கும் தன்மையானது 'பள்ளிக்கு வெளியே கற்றல்' எனப்படுகிறது.

❖ இது 'பள்ளியில்லாச் சமுதாயம்' (De Schooling Society) என்னும் கருத்தையொட்டி 'பள்ளிக்கு வெளியே கற்றல்' எழுந்தது ஆகும்.

ஆங்கிலோ இந்தியப் பள்ளிகள் (Anglo – Indians Schools)

❖ ஆங்கிலோ இந்தியர் நம் நாட்டின் மிகச் சிறிய மொழிச் சிறுபான்மையினர்

❖ இவர்களது தாய்மொழி ஆங்கிலமாகவும் நாகரீகம் மேல்நாட்டினரைப் பின்பற்றுவதாகவும் உள்ளது

❖ இப் பிரிவு மக்களது குழந்தைகளுக்காக ஆங்கிலோ இந்தியப்பள்ளிகள் சென்னை, விழுப்புரம், திருச்சி, கோவை போன்ற இடங்களில் செயல்படுகின்றன.

ஓரியண்டல் பள்ளிகள் (Oriental Schools)

ஓரியண்டல் என்பது கீழ்த்திசை நாடுகளைக் குறிக்கும். இப்பள்ளிகளில் சமஸ்கிருதம், அராபிக், பெர்ஷியன் போன்ற மொழிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டன. சமயநெறிகளில் பயிற்சி தருதல் சிறப்புக் கவனம் பெறுகிறது.

தனியார் பள்ளிகள் (Private Schools)

தனியார் பள்ளிகள் என்பது ஒரு தனி நபர் அல்லது குழுவினர்ால் நிறுவி, பராமரித்து தமிழ்நாடு ஏற்புப் பெற்று உள்ள தனியார் பள்ளி சட்டம் 1973—ன் படி எப்பள்ளிகள் ஏற்பு பெற்று உள்ளதோ அப்பள்ளிகள் தனியார் பள்ளிகள் எனப்படும்.

சிறுபான்மையினர் பள்ளிகள் (Minority Schools)

சிறுபான்மையினர் பள்ளி என்பது சமய அடிப்படையிலோ மொழி அடிப்படையிலோ அரசியல் அமைப்பு விதி 27(1) அளிக்கும் தனி உரிமையின் கீழ் நிறுவப்பட்டு பராமரிக்கப்பட்டு வருபவை ஆகும்.

நிதி உதவி பெறாத பள்ளிகள் (Un'Aided Schools)

சில பள்ளிகள் முழுவதும் தன்னிசையாக செயல்பட வேண்டும் மற்றும் வணிக ரீதியாக நிறுவனங்களை நடத்த வேண்டும் என்ற நோக்கத்துடன் செயல்படும் பள்ளிகள் நிதி உதவி பெறாத பள்ளிகள் என்ப்படும்.

நிதி உதவி பெறும் பள்ளிகள்: (Aided Schools)

நிதி உதவி பெறும் பள்ளி என்பது ஒரு தனிநபர் அல்லது குழுவினரால் நிறுவப்பட்டு, பராமரிக்கப்பட்டு தமிழக அரசின் ஏற்பு பெற்று மாநில அரசிடம் இருந்து பள்ளி ஆசிரியர்களுக்கான ஊதியம் மற்றும் பள்ளியை நிர்வகித்தலுக்கான மானியம் போன்றவற்றை பெற்று கற்பித்தல் பணியை நிறைவேற்றும் பள்ளிகள் நிதி உதவி பெறும் பள்ளிகள் எனப்படும்.

மெட்ரிகுலேஷன் பள்ளிகள் (Matriculation Schools)

இவ்வகை பள்ளிகள் அரசு நிதி உதவி கிடையாது. ஆனால் இவை மெட்ரிகுலேஷன் பள்ளிகளுக்கான இயக்குநரது (Director of Matriculation School) ஏற்பினை பெற்று இருக்க வேண்டும். இப்பள்ளிகளுக்கு தனியான கலைத்திட்டமும் பாடத்திட்டமும் உள்ளது.

அரசுப்பள்ளிகள் (Government Schools)

❖ தொடக்க கல்வித் துறையின் கீழ் இயங்கும் ஊராட்சி ஒன்றிய பள்ளிகள்

❖ பள்ளிக் கல்வித் துறையில் இயங்கும் பள்ளிகள்

❖ ஆசிரியப் பயிற்சி நிறுவனத்துடன் இணைந்த மாதிரி பள்ளிகள்

❖ அரசு பிற்பட்ட இனத்தவர் நலத்துறையில் இயங்கும் பள்ளிகள்

❖ அரசு ஹரிஜன மற்றும் மலைவாழ் குடிகள் நலத்துறையின் கீழ் இயங்கும் பள்ளிகள்

❖ மீனவர் துறை, வனத்துறை நடத்தும் அரசுப்பள்ளிகள்


❖ சீர்திருத்தப்பள்ளிகள்

❖ மாநகராட்சிப் பள்ளிகள் (சென்னை, கோவை, திருச்சி, மதுரை, நெல்லை, சேலம்)

❖ நகராட்சி பள்ளிகள்.


முன்னோக்கு கிளைவழித்திட்டம்

கற்பவர் சரியான விடையோ, தவறான விடையோ, எதுவாயினும் பொருட்படுத்தாது. அடுத்த புது பக்கத்திற்கு செல்வது.



பின்னோக்கு கிளைவழித்திட்டம்

கற்பவர் சரியான பதிலை அளித்தால் மட்டுமே அடுத்த அடுத்த சட்டகத்திற்கு செல்ல இயலும். தவறான பதில் அளித்தால் திரும்பும் சட்டத்திற்கு வந்து பாடப்பொருளை மீண்டும் கற்று, சரியான விடையளித்து அடுத்த சட்டகம் செல்ல வேண்டும்.



கிளைவழித்திட்டத்தின் நிறைகள்

- சுய வேகத்திற்கேற்ப இச்சுழற்சி பயன்படுகிறது.
- கருவி வடிவிலும், புத்தக வடிவிலும் உள்ளது.
- தீர்வு சட்டகம் பாடப்பொருளை தெளிவாக்க உதவுகிறது.

கிளைவழித்திட்டத்தின் குறைகள்

- கற்பவர் சரியான விடையை அறியாமல் யூகம் செய்ய முயற்சிப்பர். மாற்றங்கள் செய்வது சிரமம் உண்டாக்கும். உயர்நிலை பள்ளிகளுக்கே பொருந்தும்.
- அதிகப்படியான கிளைகள் உள்ளது.

நுண்ணிலைக் கற்பித்தல் (MICR TEACHNG)

பொருள் (Meaning):

- "நுண்ணிலைக் கற்பித்தல்" எனும் சொல்லை 1963 ஆம் ஆண்டு ஸ்டேன் போர்ட் பல்கலைக் கழகத்தின் (USA) A.W. ட்வைட் ஆலன் (A.W. Dwighth Allen) என்பவர் முதன் முதலில் பயன்படுத்தினார்.
- இந்தியவரில் முதன்முதலாக 1967 ஆம் ஆண்டு டி.டி. திவாரி அலகாபாத் அரசினர் மத்திய கற்பித்தல் நிறுவனத்தில் நுண்ணிலைக் கற்பித்தலை ஆராய்ச்சி செய்தார்.
- நுண்ணிலைக் கற்பித்தலின் தந்தை — D.W. Allen. (ஆலன்)

❖ <u>கற்பித்தல் முறைகள்:</u>

1. <u>பேரியல் (அ) பொது நிலைக் கற்பித்தல்</u> (Macro Teachng)
   — அதிக எண்ணிக்கையுள்ள மாணவர்களுக்கு (30க்கு மேல்) நீண்டநேரம் (40 முதல் 60 நிமிடங்கள்) பாடவேளைகள் அமைக்கப்படுகின்றன).
2. <u>நுண்ணிலைக் கற்பித்தல்</u> (Micro Teaching)
   — கற்பித்தலில் அடங்கியுள்ள பல்வேறு திறன்களை இனங்கண்டு அத்திறன்களின் உட்கூறுகளை வகைப்படுத்தி அவற்றில் முழுமையான பயிற்சியினை பெறுவதாகும். அதாவது கற்பித்தலில் சிக்கலான செயல் நடத்தையை மிகவும் எளிதாக மாற்றும் ஒரு உத்தியே நுண்ணிலைக் கற்பித்தலாகும்.

<u>வரையறைகள்</u>

❖ <u>டிவய்ட் ஆலன் & கேன் ரேயான்:</u>
நுண்ணிலைக் கற்பித்தல் என்பது கட்டுப்படுத்தப்பட்ட முறையில் பயிற்சி செய்வதாகும். குறிப்பிட்ட கற்பித்தல் முறையில் கவனம் செலுத்தவும் உதவுகிறது.

❖ <u>B.K. பாசி மற்றும் லலிதா:</u>
நுண்ணிலை கற்பித்தல் என்பது ஒரு கற்பித்தல் பயிற்சிக்கான தொழில் நுட்பமுறை. இது ஆசிரிய மாணவன், ஒரே கருத்தை, ஒரே ஒரு திறனைக் கொண்டு, சிறிய குழுவிலான தன் நண்பர்கள் குழுவிற்கு, குறைந்த அளவு நேரத்திற்கு கற்பித்தல் முறையாகும்.

பண்புகள்

❖ <u>நுண்ணிலைக் கற்பித்தலில்,</u>
— ஒரே ஒரு கருத்து (Single concept) & ஒரே ஒருதிறன் (one skill) மட்டுமே எடுக்கப்படுகிறது.
— மாணவர்களின் எண்ணிக்கை : 5 – 10
— கற்பித்தலின் கால அளவு : 5 – 10 நிமிடங்கள்
— ஒரு குறிப்பிட்ட திறனைக் கொண்ட கற்பித்தல் நடைபெறுகிறது. (One skill)
— பின்னூட்டம் (Feedback) வழங்குவதன் மூலம் பாடப்பகுதியை மாற்றியமைக்கலாம்.
— குறைகளை நிவர்த்தி செய்து மறுபடியும் மறுபடியும் கற்பித்தல் பயிற்சி கொடுக்கப்படுகிறது.

❖ நுண்ணிலைக் கற்பித்தல் உண்மையான கற்பித்தலாகும். இது தரமான ஆசிரியர்களை உருவாக்கும் அற்புதமான கற்பித்தல் உத்தியாகும்.

❖ நுண்ணிலைக் கற்பித்தல் பயிற்சியானது கல்லூரி (அ) பயிற்சி மாணவர்கள் பயிலும் நிறுவனத்திலேயே நடைபெறுகிறது.

<u>கோட்பாடுகள்</u>

❖ நுண்ணிலைக் கற்பித்தலில்

❖ <u>ஆலன் & ரயான் ஆகியோரின் 5 முக்கிய கருத்துக்கள்:</u>
— உண்மையான கற்பித்தல்
— திறன் கற்பித்தலுக்கு முக்கியத்துவம்
— பயிற்சிக்கு முக்கியத்துவம்
— கட்டுப்படுத்தப்பட்ட பயிற்சியை அதிகரித்தல்
— மாணவர்களின் அறிவை விரிவுபடுத்துதலும் அதன் விளைவுகளும்.

❖ <u>நுண்ணிலைக் கற்பித்தலில் உள்ள கோட்பாடுகள்</u> (Principles)

1. பயிற்சிக் கோட்பாடு 2. வலுவூட்டல் கோட்பாடு (Feedback) 3. சோதனைக் கோட்பாடு
4. மதிப்பிடுதல் கோட்பாடு 5.சரியான மேற்பார்வையாளரின் கோட்பாடு
6. தொடர்ச்சி கோட்பாடு

<u>நுண்ணிலைக் கற்பித்தல் திறன்கள்</u> (Micro Teaching Skills)

❖ இந்தியாவில் என்.கே. ஜாங்கிரா மற்றும் அஜித் சிங் என்பவர்கள் 1979–ல் 20 வகையான நுண்ணிலைக் கற்பித்தல் திறன்களை வகைப்படுதினர். எ.கா:

1. விளக்குதல் திறன் (Skill of Explaining)
2. கிளர் வினாத் திறன் (Probing Questions)
3. உதாரணங்களுடன் எடுத்துக்காட்டுதல் திறன் (Illustrating with examples)
4. வலுவூட்டல் திறன் (Reinforcement)
5. தூண்டல் மாறுபாடு திறன் (Stimulus variation)
6. கரும்பலகையை பயன்படுத்துதல் திறன் (Using of Blak Board)
7. வகுப்பறை மேலாண்மை திறன் (Skill of, classroom Management)
8. கற்பித்தல் இலக்குகளை எழுதுதல் திறன் (Writing instructional objectives)
9. கேள்விகளை அமைத்தல் திறன் (Structuring Questions) etc.

<u>குறிப்பு:</u> முதல் 7 திறன்கள் உள்ளமையத் திறன்கள் (Core skills) என அழைக்கப்படுகிறது.

❖ தூண்டல் மாறுபாட்டின் உட்திறன்கள் (Components of stimulus variation)
ஆசிரியர் இயக்கம் (Movement) TM, சைகை (Gestures) – TG, குரல் மாற்றம் (Change in voice) – CV, குவிமைப்படுத்தல் (Focussing) – F, கலந்துரையாடல் மாற்றம் (Change in Intraction Pattern) – CIP, இடைநிறுத்தம் (Pausing), மாணவர் இயங்குதல் (Pupil Moment), புலன்சார் மாற்றம் (Change in Sensory Focus) – CSF.

❖ <u>வலுவூட்டல் திறன்</u> (Reinforcement)

1. நேர்மறை வலுவூட்டிகள் (மனதிற்கு மகிழ்வு தரும் தூண்டல்கள்
   - நேர்முறைமொழிசார்ந்த வலுவூட்டி. எ.கா.பாராட்டுதல், ஏற்று கொள்ளுதல்
   - நேர்மறை மொழிசார்ா வலுவூட்டிகள் — சைகை எ.கா. புன்சிரிப்பு, தலையசைத்தல், கைதட்டுதல், தட்டிக் கொடுத்தல்

2. எதிர்மறை வலுவூட்டிகள் (மனதிற்கு மகிழ்வு தாராதத் தூண்டல்கள்
   - எதிர்மறைமொழிசார்ந்த வலுவூட்டிகள். எ.கா. தவறு, சரியில்லை
   - எதிர்மறை மொழிசாரா வலுவூட்டிகள் (சைகை)

❖ <u>விளக்குதல் திறன் (Explanation) உட்கூறுகள்:</u>

1. தொடர்புபடுத்தல் 2. எடுத்துக்காட்டுடன் விளக்குதல்
3. ஒப்பிட்டு வேறுபடுத்திக் கூறுதல் 4. மையக் கருத்தை திருப்பிக் கூறல்


❖ <u>கிளர்வினாத் திறன் (Probing Questions):</u>

1. எண்ணத் தூண்டல் (அ) ஊக்குவித்தல் (Prompting) 2. மேலும் செய்திகளை வரவழைத்தல்
3. தொடர்புபடுத்தல் 4. வினாவைத் திசை திருப்புதல்
5. காரணம் உணரும் ஆற்றலை அதிகரித்தல்.

நுண்ணிலை கற்பித்தல் அமைப்பு — இந்தியாவில்:

கற்பித்தல்	—	6 நிமி.
பின்னூட்டம்	—	6 நிமி.
மறுதிட்டமிடல்	—	12 நிமி.
மறுகற்பித்தல்,	—	6
மறுபின்னூட்டம்	—	6
மொத்தம்		36

நுண்ணிலைக் கற்பித்தல் சுழற்சி: (6 படிகள்)




குறிப்பு:

- ஸ்கின்னர் செயல்படு ஆக்கநிலையிறுத்தம் (Operant condition) ஆனது நுண்ணிலைக் கற்பித்தலுக்கு அடிப்படையாக அமைகிறது. பின்னூட்டம் என்ற கருத்து இதில் பயன்படுத்தப்படுகிறது.

எட்கர் டேலின் கற்றல் அனுபவக் கூம்பு:

(Edgar Dale's Cone of Learning Experience)

- கற்றல் அனுபவத்தை பயன்படுத்தி அமைக்கப்பட்ட மாதிரியானது கற்றல் அனுபவக் கூம்பு என்று அழைக்கப்படுகிறது. இந்த மாதிரி கற்றல் — கற்பித்தல் முறையான அடிப்படையில் அமைந்துள்ளது.



- ❖ அனுபவக் கூம்பு மாதிரியில் 10 பிரிவுகள் உள்ளன.
- ❖ கூம்பின் அகன்ற அடிப்பகுதியில் நேரடி அனுபவங்கள் போன்ற சிறந்த கற்றல்முறை (அதிகம்) அமைந்துள்ளது.
- ❖ கூம்பின் உச்சியில், வாய்மொழி மூலம் கேட்டு கற்றல் போன்ற குறைவான கற்றல் முறை அமைந்துள்ளது.
- ❖ கூம்பின் அடிப்பாகத்தை விட கூம்பின் உச்சிப் பாகத்திற்கு அதிக அளவில் தகவல்கள் தேவை.
- ❖ ஒருவன் பின் வரும் மூன்று நிலைகளிலிருந்து தன் அனுபவத்தை பெறுகிறான்.

1. நேரடி அனுபவம் (Direct Experience)

   சோதனைகள் செய்தல், களப்பணி etc.

2. **Vicarious Experiences:**

   கண்காட்சி, படங்கள் etc.

3. குறியீடு அனுபவம் (Symbolic Experiences)

   வார்த்தை & காட்சிக் குறியீடுகள்

வகுப்பறையில் கருத்தளாவுதல் பகுப்பாய்வு (Classroom Interaction Analysis)

வகுப்பறைக் கற்பித்தலில் ஆசிரியர் பேசுவதும் மாணவர் பதிலுரைப்பதும், ஆசிரியர் கேள்வி கேட்பதும் மாணவர் விளக்கம் தருவதும் என்பன போன்ற பல செயல்கள் நிகழ்கின்றன.

வகுப்பறையில் நிகழும் பேச்சுக்களை முதன்முதலில் முறையாக ஆராய்ந்தவர் நெடு பிளாண்டர்ஸ் (Ned Flanders) ஆவார். எனவே, இவர் கண்டறிந்த பேச்சுப் பகுப்பாய்வு "பிளாண்டர்ஸ் கருத்தளாவுதல் பகுப்பாய்வு வகைமுறை" (Flander's Interaction Analysis Category System – FIACS) எனப்படும்.

கருத்தளாவுதல் பகுப்பாய்வு முறை (System of interaction Analysis)

Ober. et. al (ஓபர்) என்பவர் கருத்தளாவுதல் பகுப்பாய்வு முறையை (i) குறியீட்டு முறை (Sign System) & (ii) வகைமுறை (Category System) என இருவகையாக பிரித்தார்.

(i) குறியீட்டு முறை (Sign System) — நடத்தைகளின் பட்டியல் (Composed of a list of behaviours)

(ii) வகைமுறை (Category System) – ஆசிரியரின் நடத்தைகள் பல அலகுகளாக பிரிக்கப்பட்டு பின்பு ஒரு நடத்தை அலகு (A behavior Unit) என்பது வகைகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

வகுப்பறை கருத்தளாவுதல் பகுப்பாய்வு உத்திகள்:

- ❖ ஆண்டர்சன் — Earliest Approach (அணுகுமுறை)
- ❖ Observation Schedule and Record (OSCAR) (உற்றுநோக்கல் பட்டியல் மற்றும் பதிவு செய்தல்) மெட்லி மற்றும் மிட்செல் (Medley and Mitzel) என்பவர்கள் 1963—ல் பட்டதாரி ஆசிரியர்களை உற்றுநோக்க உருவாக்கினர்.

2. Bale's Interaction Process Categories (பேலின் கருத்தளாவு செயலாற்று வகை)

   1950—ல் பேல் (Bale) என்பவர் தனிப்பட்ட நடத்தைகளை ஆராயும் நோக்குடன் இதை உருவாக்கினார். இதில் உள்ள 12வகைகளும் (Categories) சமச்சீராக ஒழுங்குபடுத்தப்பட்டு வரிசைப்படுத்தப்பட்டுள்ளது. 12 வகைகளில் இருபெரும் பரப்புகள்.

   (i) சமூக – உணர்வு பரப்பு (ii) செயல் (வேலை) பரப்பு

பிளாண்டர்ஸ் கருத்தளாவுதல் பகுப்பாய்வு உத்தி:
(Flander's Interaction Analysis Technique)

- 1959—ல் மினசோட்டா பல்கலைக் கழகத்தில் N.A. பிளாண்டர்ஸ் என்பவர் கண்டறிந்த பேச்சுப் பகுப்பாய்வு "பிளாண்டர்" கருத்தளாவுதல் பகுப்பாய்வு வகைமுறை "(FIACS)" என அழைக்கப்படுகிறது.
- இது ஓர் உற்று நோக்கும் உத்தி ஆகும். (Observatonal Technique)
- இதில் 10 வகையான பேச்சுக்கள் (நடத்தைகள்) உள்ளன:

I. 7 வகையான ஆசிரியர் பேச்சுக்கள்: (Teacher Talk)

1. உணர்வுகளை ஏற்றுக் கொள்ளுதல் (Accepts Feeling)
2. பாராட்டுதல் (அ) ஊக்கப்படுத்துதல் (Praises Or Encourages)
3. மாணவர் கருத்தை ஏற்றலும் பயன்படுத்துதலும் (Accepts or uses Ideas of Pupils)
4. கேள்வி கேட்டல் (Ask Questions)
5. விரிவுரையாற்றுதல் (Lecturing)

மேற்கூறியனயாவும் (1 முதல் 5) பதிலுரைகளாகும். (Response)

6. கட்டளையிடுதல் (Gives Direction)
7. குறைகூறுதல் அல்லது நியாயப்படுத்துதல் (Critizer or justifies authority)

(மேற்கூறிய 6 & 7 என்பன தொடங்குதல் (Initiation) ஆகும்.

II. இருவகையான மாணவர் பேச்சு (Pupil Talk)

8. மாணவர் பேச்சு – பதிலுரை (Pupil Talk – Response)
9. மாணவர் பேச்சைத் தொடங்குதல் (Pupil Talk - Initiation)

III. பிறவகையான பேச்சு (அமைதி – Silence).

10. அமைதி (or) குழப்பம் (Silence or confusion)

– ஆசிரியரின் மறைமுகத் தாக்கம் (Indirect influence)
வ.எண். (1), (2), (3), (4)

ஆசிரியரின் நேரடித் தாக்கம் (Direct Influence)
வ.எண். (5), (6), (7)

- பிளாண்டர்ஸ் கருத்தளாவுதல் பகுப்பாய்வு முறையை பய்ன்படுத்தும் முறையில் உள்ள 3 முக்கியப் படிகள்
  1. உற்று நோக்குதல் (or) பதிவு செய்தல்
  2. சதுர அணியை வடிவமைத்தல் (Constructon of interaction matrix)
  3. சதுர அணியைப் பற்றி விளக்கமளித்தல் (Interpretaton of Interaction matrix)
- ஆசிரியர் நடத்தையின் நிறையளவு பகுப்பாய்வு – 4 நிலைகள்
  (Quantitative Analysis of Teacher Behaviour)
  1. கருத்தளாவும் வகைக்கான முறைகள் விளக்கம் (Interpretation of Interacton Categories)
  2. கருத்தளாவும் பகுதிகள் (Interaction Areas)
  3. நடத்தை விகிதங்கள் (Behavious Ratios)
  4. கருத்தளாவும் மாறிகள் (Interaction variables)
- **ஆசிரியர் நடத்தையின் தரமளவு பகுப்பாய்வு**
  (Qualitative Analysis of Teacher Behaviour)
  1. கடிகார திசையிலான அமையும் படங்கள் முறை
  2. பெட்டிவகை படங்கள் முறை
  3. ஆசிரியரின் கற்பித்தல் நடத்தையின் இடைவினைப் பகுப்பாய்வு மாதிரிகள்

❖ <u>பிளாண்டர்ஸ் கருத்தளாவும் பகுப்பாய்வு முறையின் நிறைகள்</u> (Merits of FIACS):

1. இது நம்பத் தகுந்தவை ஆகும். இது வகுப்பறை நிகழ்வுகளையும், ஆசிரியரின் பேசும் செயலையும் பகுப்பாய்வு செய்கிறது.
2. ஆசிரியர் மாணவர் இருவருக்கும் பயிற்சி அளித்தலையும், விரும்பத்தகு கற்பித்தல் நடத்தைகளை கற்றுக்கொள்ளவும் மிகவும் உதவுகிறது.
3. நுண்ணிலைக் கற்பித்தல் (Micro Teaching) மற்றும் குழுக் கற்பித்தலுக்கான (Team Teaching) பயிற்சியளிக்கும் உத்தியை இது அதிகப்படுத்துகிறது.
4. இதிலிருந்து கிடைக்கும் பின்னூட்டம் (Feed back) மூலம் நடத்தையை மாற்றியமைக்க முடியும்.
5. சமூக உணர்வு & உணர்வு சூழ்நிலைகளை (Socio – emotional climate) உருவாக்குகிறது.

❖ <u>குறைகள் (Demerits)</u>

i. வாய்மொழி பேச்சுகளுக்கு மட்டுமே கவனம் செலுத்தப்படுகிறது. முழுமையான ஆசிரியரின் செயல்களை (or) வகுப்பறை நிகழ்வுகளை கூறவில்லை.
ii. மாணவர் – மாணவர் கலந்துரையாடல் கொடுக்கப்படவில்லை.
iii. அமைதி மற்றும் குழப்பம் தெளிவாக கூறப்படவில்லை.

<u>வாய்மொழி கருத்தளாவுதல் வகை முறை</u>

<u>Verbal Interaction Category System (VICS)</u>

இது பிளர்ண்டரின் கருத்தளாவுதல் வகை முறையை (FIACS) அடிப்படையாகக் கொண்டு உள்ளது. இதில் சில மாற்றங்களை ஏற்படுத்தி உருவாக்கியவர் அமிடான் (Amidon) ஆவார்.

<u>இருமுகக் கருத்தளாவுதல் வகைமுறை</u> (Reciprocal Calegory System) (RCS)

❖ 1967—ல் புளோரிடா பல்கலைக்கழகத்தைச் சார்ந்த ரிச்சர்டு ஓபர் (Richard Ober) என்பவர் பிளாண்டர்ஸ் கருத்தளாவுதல் முறையை மாற்றியமைத்தார். ஓபர் மாற்றியமைத்து வழங்கிய கருத்தளாவுதல் முறைக்கு <u>"இருமுகக் கருத்தளாவுதல் வகைமுறை"</u> எனப்படும்.
❖ RCS—ல் முதலில் உள்ள 9 வகைகளும் ஆசிரியருக்கும் மாணவருக்கும் பொருந்துவதால், ஓபர் வழங்கிய முறைக்கு இருமுகக் கருத்தளாவுதல் முறை எனப் பெயர் வந்தது. இந்த 9 வகைகளும் தலைகீழ் வகையாகும். (Reciprocity Principle). அதாவது ஒவ்வொரு வகைக்கும் ஒரு தலைகீழ் வகை உண்டு.
❖ RCS முறையில் ஆசிரியர் பேச்சுக்களுக்கும் மற்றும் மாணவர் பேச்சுக்களுக்கும் சம கவனம் செலுத்தப்படுகிறது.
❖ ஆசிரியர் பேச்சுக்கள் ஒற்றை எண்களாலும் மாணவர் பேச்சுக்கள் இரட்டை எண்களாலும் பதிவு செய்யப்படுகிறது.
❖ இருமுகக் கருத்தளாவுதலில் 10 வகைகள் உள்ளன.

<u>இணைந்த (சரிசமமான) பேச்சுவகை</u>

<u>(Equivalent – Talk – Category) - ETC</u>

❖ ETC என்ற வகையானது RCS அமைப்பின் அடிப்படையில் சற்றே மாற்றி அமைக்கப்பட்ட வகையாகும். அதாவது ETC என்பது RCS—ன் வளர்ச்சியடைந்த நிலையாகும்.
❖ 1970—ல் அட்லாண்டா பல்கலைக் கழகத்தில் <u>எர்னஸ்ட்</u> எல். பென்ட்லி மற்றும் எடித் மில்லர் என்பவர்கள் ETC என்ற வகை முறையை பயன்படுத்தினர்.
❖ இம்முறையில் ஒவ்வொரு வகைப்பாட்டிலும் இருவகையான சமமான செயல்கள் உற்று நோக்கப்படுகின்றன. மேலும், இதில் ஆசிரியருக்கும், மாணவனுக்கும் சரிசமமான பங்குகள் குறிக்கப்பட்டு ஆராயப்படுகின்றன.
❖ ETC-ல் 10 வகையான பேச்சுகள் அமைந்துள்ளன.

கற்பித்தல் துணைக்கருவிகள்
(Teaching Aids)

ஆசிரியர் தனது வகுப்பறைக் கற்பித்தலின் போது மாதிரி உருவங்கள், விளக்கப்படங்கள், திரைப்படம் ஆகியவற்றை பயன்படுத்தி முழுமையான கற்றல் அனுபவத்தைப் பெறச் செய்வதற்கு உதவும் இக்கருவிகளுக்கு கற்பித்தல் துணைக் கருவிகள் என்று பெயர்.

கற்பித்தல் துணைக்கருவிகள் : வகைப்பாடு (Classificaton)

I. பாரம்பரிய முறையிலான வகைப்பாடு: (Traditional Type)

1. ஒலி வடிவிலான கற்பித்தல் துணைக்கருவிகள் (Audio Aids)
2. காட்சி வடிவிலான கற்பித்தல் துணைக் கருவிகள் (Visual Aids)
3. ஒலி–ஒளி வடிவிலான கற்பித்தல் துணைக்கருவிகள் (Audio – Visual Aids)

Audio Aid (ஒலி)	Visual Aid (ஒளி)		Audio Visual Aids (ஒலி – ஒளி)
1. வானொலி (Radio)	1. கரும்பலகை (Chalk Board)	8. ஃபிளானல் போர்டுகள்	1. விரிவுரை – செய்து காட்டல் (Lecture Demonstration
2. ஒலிநாடர் (Tape Recorder)	2. Bulletin Board (அறிவிப்பு பலகை)	9. விளக்கப்படங்கள் (Diagram)	2. படச்சுருள்கள் (Films)
3. CD'S (குறுந்தகடுகள்)	3. கருத்துப்படங்கள் (Charts)	10. ஆல்பம்	3. தொலைக் காட்சிகள் (TV)
4. Linguaphone	4. Drawings (ஓவியங்கள்)	11. காந்தப் பலகைகள் (Magnetic Board)	4. கணிப்பொறிகள் (Computers)
5. Microphone	5. சுவரொட்டிகள் (Posters)	12. தேசப்படங்கள் (Maps)	5. ஒளிப்பதிவு நாடாக்கள் (Video Taps)
6. Dictaphone	6. Pictures (படங்கள்)	13. புகைப்படங்கள் (Photoes)	6. VCD, DVD
7. Headphone	7. வரைபடங்கள் (Graphic)	14. மாதிரிகள் (Models)	7. LCD
		15. OHP – Over Head projector	
		16. எபிடியாஸ்கோப் (ஒளி புகா , புகும் படங்கள் காட்டி)	8. படச்சுருள் துண்டுகள் (Sound Film Strips)
		17. நழுவங்கள் (Slides)	
		18. ஃபிளாஸ் அட்டைகள்	

II. ஒளி (காட்சி) வடிவிலான துணைக் கருவிகள்— பிரதிபலிக்கும் மற்றும் பிரதிபலிக்காத கற்பித்தல், துணைக் கருவிகளின் வகைப்பாடு: (Projected and Non-projected Aids)

Projected Aids (பிரதிபலிக்கும் துணைக் கருவிகள்)	Non- Projected Aids (பிரதிபலிக்காத துணைக்கருவிகள்)				
	வரைபடம் (Graphic)	காட்சி பலகைகள் (Display Boards)	3D (முப்பரிமாணம்)	ஒலி வடிவம் (Audio)	செயல்பாடு (Activity Aids)
1. படச்சுருள்கள் (Films)	1. கேலிச் சித்திரங்கள் (Cartoons)	1. கரும்பலகை	1. மாதிரிகள் (Models)	1. வானொலி (Radio)	1. செய்து காட்டல் (Demonstration)
2. படச்சுருள் துண்டுகள் (Film Strips)	2. கருத்துப் படங்கள் (Charts)	2. அறிவிப்பு பலகை	2. மாக்அப் (Mockups)	2. TV (தொலைக்காட்சி)	2. நாடகங்கள்
3. நழுவங்கள் (Slids)	3. காமிக்ஸ்	3. ஃபிளானல் பலகை	3. உண்மையான பொருள்களின் சிறுமாதிரிகள் (Specimesn)	3. களப் பயணங்கள் (Field trips)	3. பரிசோதனைகள்
4. ஒளிபுகும் படங்கள் (Opaque projections)	4. விளக்கப் படங்கள்	4. காந்த பலகை	4. டயரோமா (Diaroma)		4. கணிப்பொறி துணையுடன் கற்பித்தல் (CAI)
5. OHP (தலைக்கு மேல் படவீழ்த்தி)	5. வரைபடங்கள்	5. துளைப் பலகை (Peg Board)	5. உலக உருண்டை		5. திட்டமிட்டு கற்பித்தல்
6. அசைவுப் படங்கள் (Motion Pircures)	6. தேசப்படங்கள்		6. பொம்மைகள்		6. கற்பித்தல் இயந்திரங்கள்
	7. புகைப்படங்கள்		7. ஹாலோ கிராம்		
	8. படங்கள்		8. Puppets		
	9. சுவரொட்டிகள்		9. பொருட்கள் (Objects)		
	10. ஃபிளாஸ் அட்டைகள்				

III. நகரும் மற்றும் நகரா கற்பித்தல் துணைக் கருவிகள் (Static & Dynamic Aids)

நகராத து. கருவிகள்	நகரும் கற்பித்தல் து. கருவிகள் (Dynamic Aids)
1. அட்டைகள் (Flash cards)	1. செயல்படும் மாதிரிகள்
2. கருத்துப்படங்கள் (Charts)	2. அசைவுப் படங்கள்
3. நழுவங்கள் (Slides)	3. TV
4. OHP, எபிடாஸ்கோப்	4. கணினி (Computer)
5. மைக்ராஸ்கோப்	

IV. இருபரிமாண & முப்பரிமாண கற்பித்தல் துணைக் கருவிகள்

2D & 3D Aids

2D Aids இருபரிமாண து. கருவிகள்	3D Aids முப்பரிமாண துணைக் கருவிகள்
1. அட்டைகள், வரைபடங்கள், புவி வரைபடங்கள், கருத்துப்படங்கள்	1. மாதிரிகள் உலக உருண்டைகள், பொருட்கள்
2. விளக்கப் படங்கள் (Diagrams)	2. மாக் அப் (Modes –ups)
3. கரும்பலகை, காந்தப்பலகை etc.	3. பப்பெட்ஸ் (Puppets)
	4. டயரோமா (Diaroma)

ஊடகம் அடிப்படையில் கற்பித்தல்

துணைக் கருவிகள் (Size of Media)

சிறிய ஊடகம்	பெரிய ஊடகம்
1. வானொலி (Radio)	1. கணிப்பொறி (Computer)
2. படச்சுருள் (Film Strips)	2. TV
3. ஒலி நாடா	3. VCR (ஒளிப்பதிவு நாடா)

VI. புலன் உறுப்புகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் வகைப்பாடு (Sense organs):

கற்பித்தல் . துணைக்கருவிகள்

Uni-Models Aids
1. ஒலி
2. ஒளி (காட்சி)

Bi-Models Aids
1. ஒலி மற்றும் ஒளி (காட்சி)

பிரதிபலிக்கும் துணைக்கருவி பிரதிபலிக்காத துணைக்கருவி

UNIT – IX

கற்பித்தலுக்கான திட்டமிடலின் நிலைகள்

— பாடத்திட்டம் (Lesson plan)
அலகுத்திட்டம் (Unit Plan)
ஆண்டுத்திட்டம் (Year Plan)

பாடத்திட்டம் — முழுப்பாடப் பொருளின் ஒரு சிறு பகுதியாகும்.

லெஸ்சர். B. யின் கூற்றுப்படி பாடத்திட்டம் என்பது "செயலுக்கான திட்டம்".

குட் (Good) அவர்களின் கூற்றுப்படி பாடத்திட்டம் என்பது "பாடத்தின் முக்கியமான பகுதிகளை வரிசைக்கிரமமாக மாணவர்களுக்கு கற்பித்தலை வழங்கும் செயல்" என்கிறார்.

பாடத்திட்டத்தின் படிநிலைகள் (ஹெர்பர்ட் 6 படிநிலைகள்)

ஹெர்பர்ட் என்பவர் 6 படிநிலையாக அமைத்துள்ளார்.

1. தொடங்குதல் / ஊக்கப்படுத்தல் (Introduction / Motivation)
2. வழங்குதல் (Presentation)
3. தொடர்புபடுத்துதல் அல்லது இணைத்தறிதல் (comparison or Association)
4. பொதுமைப்படுத்துதல் (Generalization)
5. பயன்படுத்துதல் (Application)
6. மீள்பார்வை செய்தல் (Recapitulisation)

நோக்கங்கள் இரண்டு வகையாக பிரிக்கப்படுகின்றன. அவை

1. பொது நோக்கங்கள் (General Objectives)

– GIO (General Instructional objectives (or) Non- Behavioural Objectives – நடத்தை அல்லாத நோக்கங்கள்

2. சிறப்பு நோக்கங்கள் (Specific objectives)

- (SIO) – Specific Instructional objectives (or) Behavioural objectives – நடத்தை சார்ந்த நோக்கங்கள்.

அலகுத்திட்டம் (Unit Plan)

பிரிஸ்டோன் கூற்றுப்படி "அலகு என்பது ஒன்றுக்கொன்று தொடர்புடைய பல்வேறு பாடங்களின் தொகுப்பு".

அலகு திட்டம்: பல பாடத்திட்டங்களின் தொகுப்பாகும்.

அலகு திட்டத்தின் படிநிலைகள்

1. பாடப்பொருள் பகுப்பாய்வு (content analysis)

என்னென்ன பாடப்பொருள் இடம்பெற வேண்டும் என பகுப்பாய்வு செய்தல்.

2. சிறப்பு நோக்கக் கூறுகள் (objectives with specification)

பாடப்பொருள் கற்பிக்கக் காரணம், ஏற்படும் பலன்கள் குறித்து விவரிக்கிறது.

3. கற்றல் செயல்பாடுகள் (Learning Activities)

மாணவர்களுக்கு வழங்கப்படும் பல்வேறு செயல்பாடுகள் குறித்து ஆய்வு செய்கிறது.

4. சோதித்தல் முறைகள் (Testing Procedures)

பாடப் பொருளினை அளவிடுதல் மற்றும் மதிப்பிடல்.

பாடத்திட்டத்திற்கும், அலகுத்திட்டத்திற்குமான ஒப்பீடு

எண்	பாடத்திட்டம் (Lesson Plan)	அலகுத்திட்டம் (Unit Plan)
1.	தினசரி செயல்திட்டம்.	8 முதல் 10 பாடவேளைகளை உள்ளடக்கியது. இது வாரத்திட்டம் எனவும் அழைக்கப்படுகிறது.
2.	தர்க்கரீதியாகவும், உளவியல் ரீதியாகவும் பாடப்பொருள் வரிசைப்படுத்தப்பட்டு வழங்கப்படுகிறது.	தத்துவங்கள், உண்மைகள், பொதுக் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு அலகுத்திட்டம் உருவாக்கப்படுகிறது.
3.	விளக்கமான கற்றல் செயல்கள் இடம்பெறும்	கற்றல் செயல்கள் குறிப்பிடப்பட்டு இருக்கும்.
4.	சரியான சோதனை முறைகள் விளக்கமாக காணப்படும்.	சரியான சோதனை முறைகள் குறிப்பிடப்பட்டிருக்கும்.
5.	முழுப்பாடப் பொருளின் ஒரு சிறு பகுதியாகும்.	பல பாடத்திட்டங்களின் தொகுப்பாகும்.

ஆண்டுத்திட்டம் (Year Plan)

ஒரு கல்வியாண்டிற்கான பாடவேளைகள், வாக்குவாதங்கள், வினாடிவினா பயணம் மற்றும் கல்வி சார்ந்த பணிகள் அனைத்தும் ஆண்டின் தொடக்கத்திலே திட்டமிடுவது ஆண்டுத்திட்டம்.


கல்விப் பணியை தெளிவாக, தடம் புரளாமல் சரியான பாதையில் கொண்டு செல்ல உதவுகிறது.

ஆண்டுத்திட்டத்தின் சிறப்புகள்

- ஆசிரியருக்கு தன்னம்பிக்கையும், நம்பகத்தன்மையையும் அளிக்கிறது.
- சரியான துணைக்கருவிகளின் பயன்பாட்டை உண்டாக்கும்.
- கல்விப் பணிகளை சரியான முறையில் ஒழுங்கமைத்து செயல்படுத்த வகை செய்யும்.
- பாடங்களுக்கிடையேயான தொடர்பினை அறிந்து தொடர்ச்சியாக மேற்கொள்ள உதவுகிறது.


கற்பித்தல் நோக்கங்களின் வகைப்பாடு (Taxonomy of Educational objectives – Benjamin S. Bloom)

பெஞ்சமின் புளும் (1956) கற்பித்தல் நோக்க வகைப்பாடுகளை 1. அறிதல் புலம், 2. எழுச்சி புலம், 3. உள இயக்க புலம் (or) செயல் சார்புலம் என மூன்று பெரும் பிரிவுகளாக பிரிக்கிறார்.




1. அறிவுசார் புலத்தின் உட்கூறுகள்

(அடிப்படையிலிருந்து உயர்நிலை வரை)



புளும், கிராத்வால் & மாசியா ஆகியோர் இப்பிரிவினை வகைப்படுத்தினர்.

2. எழுச்சி சார்புலத்தின் உட்கூறுகள்: புளும், கிராத்வால் & மாசியா ஆகியோர் இப்பிரிவை வகைப்படுத்தினர்.



3. உள இயக்க (or) செயல்சார் புலம் — சிம்ப்ஸன் & கிப்ளெர் என்பவர்களால் இதன் நோக்கங்கள் வரையறுக்கப்பட்டுள்ளது.

டேவ் (Dave) உள இயக்க புலத்தின் வகைப்பாடு (செயல் சார்புலம்)

1. பின்பற்றல் (or) போலச் செய்தல் (Imitation)

ஒரு செயல்திறனை பார்த்து திரும்பச் செய்ய முற்படுதல்.

2. கையாளுதல் (Manipulation)

ஒரு பொருளை உருவாக்கி திறம்பட செயல்படுத்தல்

3. துல்லியம் (Precision)

துல்லியமாக ஓர் பொருளை உருவாக்கல்

4. தெளிவாக்குதல் (Articulation)

புதிய சூழ்நிலைகளுக்கு ஏற்ப திறன்களை பயன்படுத்தி புதிய விளைபொருளை உருவாக்கலில் மாற்றி அமைத்தல், பொருத்தமாக்குதல்.

5. திறன்படுதல் (Naturalisation)

உள இயக்க செயல்களை ஒருங்கிணைத்து பல்வேறு திறன்களில் முழுமை பெறல், துல்லியத்தன்மை பெறுதல்.

நோக்கங்கள் அடிப்படையிலான கற்பித்தல் (Objective based Instruction (OBI)

நோக்கங்கள் சிறப்பாக, துல்லியமாக அளவிடு செய்யும்படியாக கற்போரின் நடத்தைக்கேற்ப வழங்கப்படும். நோக்கங்களின் அடிப்படையிலான கற்பித்தல் மாணவர்

என்ன செய்ய வேண்டும் என்பதை அல்லது. என்ன செய்ய இயலும் என்பதை கூறுகிறது தருகிறது.

நோக்கங்களை சார்ந்த சோதனைகள் (Objective Based test) — OBT (அல்லது)

குறிக்கோள் சார்ந்த சோதனைகள் (criterion - referenced test)

புறவயத்தன்மை உடையது. நோக்கங்களின் அடிப்படையிலான கற்போர் சூழலை உருவாக்க இயலும். இவ்வகைத் தேர்வுகள் கற்றல் நோக்கங்களை அறிவுப்புலத்தின் வாயிலாகவும், செயல்பாட்டின் வாயிலாகவும் சோதித்தறிய உதவுகிறது.

சோதனைகளும் அளவிடுதலும் (Tests & Measurements)

சோதனைகள்: நடத்தைகளை முறையாக அளவிட உதவும் கருவியாகும். இவை விடையளிக்க வேண்டிய வினாக்களின் தொகுப்பு.

அளவிடுதல்: மதிப்பிடலில், ஒரு பகுதி. ஒரு தனி நபரின் குறிப்பிட்ட ஒரு திறனை எண்ணியல் முறையில் விளக்கிச் சொல்லும் செயல்முறையாகும்.

சோதனை முடிவுகளுக்கு எண் மதிப்பளிப்பதாகும். எண்ணிக்கை அடிப்படையில் வெளிப்படுத்தப்படுகிறது.

மதிப்பிடல்:

மதிப்பிடுதல் = அளந்தறிதல் + சீர்தூக்கிப் பார்த்தல்

மதிப்பிடுதல் என்பது தரநிலையை உயர்த்திட உதவுகிறது. எத்தகைய உயர்நிலையை கற்போர் அடைகிறார் என்பதை தீர்மானிக்கிறது.

சோதனைகளின் வகைகள்

1. அடைவுச் சோதனைகள் (Achievement test)

கற்போரின் விரும்பத்தக்க அடைவினை அளவிட உதவுகிறது. கற்றல் நிலைகளையும் கணக்கிடுகிறது.

எ.கா: 1. ஆய்வு செய்யும் திறன்கள் 2. புரிதல்

3. பாடத்தின் பகுதிகளில் அறிவுப் பெருக்கம்

இரண்டு பிரிவுகளாக வகைப்படுத்தப்படுகிறது

அ. ஆசிரியரால் அமைக்கப்பட்ட அடைவுச் சோதனைகள்

அந்த அந்த பள்ளிகளின் வளங்களைப் பொறுத்து அவ்வாசிரியர்களால் உருவாக்கப்படும் சோதனைகள்

நிறைகள்:

- ❖ தொடர்ந்து மாணவர்களின் திறனை சோதிக்க உதவுகிறது.
- ❖ மாணவர் கற்கும் நிலையை புரிந்து அதற்கேற்ப தேர்வு அமைப்பார்.
- ❖ தான் கற்பித்தவற்றை சோதனை செய்து தனது கற்பித்தல் திறனையும் சோதிப்பதால் ஆசிரியருக்கு சுய பரிசோதனையாக அமையும்.
- ❖ முடிவுகளை எடுத்திட உதவுகிறது.
- ❖ மாணவர்களை ஊக்குவிக்க உதவுகிறது.

❖ சுய சோதனை செய்து கொள்ள மாணவர்க்கு உதவுகிறது.

❖ குழுவினருடன் மாணவர்களின் திறன்களை ஒப்பிட்டு அறிய உதவுகிறது.

குறைகள்:

❖ அதே நிலையில் உள்ள பிற பள்ளி மாணவருடன் ஒப்பிட இயலாது.

❖ மதிப்பீட்டில் பாகுபாடுகள் ஏற்படலாம்.

❖ பிற ஆசிரியர்களால் மதிப்பிட இயலாது.

❖ பொதுமைப்படுத்துதல் என்பது இயலாததாகும்.

சோதிக்கும் முறைகள் வேறுபடுவதால் புறவயத்தன்மை (Objectivity), நம்பகத்தன்மை (Reliablity), ஏற்புடைமை (Validity) ஆகியனவும் வேறுபடும்.

ஆ. தரப்படுத்தப்பட்ட சோதனைகள் (Standarised Test)

இத்தகைய சோதனைகள், முன்சோதனைகள் (Pre test) களச்சோதனைகள் (Field test) மற்றும் ஆராய்ச்சி ஆகியவற்றின் அடிப்படையில் வரையறை செய்யப்படுகிறது.

நிறைகள்:

❖ விரிந்த ஆழமான திறன்களை உள்ளடக்கியது.

❖ உயர் நம்பகத்தன்மை மற்றும் ஏற்புடைமை உடையது.

❖ தேர்வினை மேலாண்மை செய்வது மதிப்பீடு செய்வது எளிது.

குறைகள்:

❖ ஒரே வகையான சோதித்தல் இருப்பதால் வகுப்பறை சூழலில் பயன்படுத்துவதில் சிக்கல் ஏற்படுகிறது.

முன்னறிவுச் சோதனை (Prognostic test)

வரவிருப்பதை அறிவிக்க நடத்தப்படும் சோதனைகள் பிறகாலத்தின் வளர்ச்சியை முன்கூட்டியே அறிவிக்கும் திறன் படைத்தது. இதற்கான வினாக்கள், விடைகளை மாணவரிமிருந்தே வரவழைக்கும் விதமாக அமையும்.

குறையறிச் சோதனை (Diagnostic tests)

மாணவர்களிடம் காணப்படும் கற்றல் குறைபாடுகளை கண்டறிய அமைக்கப்படும் சோதனைகள், குறையறிச் சோதனைகள் எனப்படும். குறைபாடுகளை கண்டறிந்து அதற்கேற்ற கற்றல் – கற்பித்தல் செயல்பாடுகளை மாற்றியமைக்க உதவுகிறது.

குறியளவுச் சோதனை (Criterian Reference test) - CRT

கற்றல் கற்பித்தல் செயல்பாடுகளின் முடிவில் நடத்தப்படும் தேர்வுகள் குறியளவுச் சோதனைகள். முதிர்நிலை நடத்தைகளை சோதித்தறிய உதவுகிறது.

தரமளவுச் சோதனைகள் (Norm Referenced Test) – NRT

ஒரு மாணவரின் மதிப்பெண்களை ஒரு குழுவினருடன் ஒப்பிடுவதே தரமளவுச் சோதனையாகும்.

வயது, தரம், நிலை ஆகியவற்றைக் கொண்டு தரப்படுத்தப்படுகிறது.

வேகத்தேர்வுகள் (Speed tests)

எவ்வளவு விரைவாக செயலை முடிக்கிறார்கள் என்பதை கண்டறிய உதவுகிறது.

எ.கா: சுருக்கெழுத்து, நட்டச்சு, மின்னிசோட்டா சோதனைகள்

திறன் சோதனை (Power test)

திறன்களை வெளிப்படுத்து விதத்தினை அறிய உதவுகிறது. மொழித்திறன், சிந்தனைத்திறன், காரணம் கூறும் திறன், புதிர் விடுவிக்கும் என்பதை அறிந்திட உதவுகிறது.

வாய்மொழிச் சோதனைகள் (Oral tests)

கீழ்நிலை வகுப்புகளில் மாணவர்களின் குறையறிய உபயோகிக்கப்படுகிறது. நேர்காணலில் உதவுகிறது.

எழுத்துத் தேர்வுகள் (Written Tests)

1. கட்டுரைத் தேர்வு
2. குறுவிடைத் தேர்வு
3. புறவயத் தேர்வு என மூன்று நிலைகளைக் கொண்டது.

செயல்திறன் தேர்வு (Performance Test)

உள இயக்கம் சார்ந்து வரையறுக்கப்படுகிறது.

புறவயச் சோதனை (Objective test)

ஒரு வார்த்தை விடையளிக்கும் வினாக்கள் புறவய வினாக்கள் என்பப்படுகிறது.

பொருள்சார் சோதனை (Subjective test)

ஒரு குறிப்பிட்ட பொருளினைச் சார்ந்து விளக்கும் ஆற்றலை வரையறுக்க உதவுகிறது.

எ.கா: கட்டுரை வடிவ வினாக்கள்.

தேர்வினை அமைத்தல்

ஒரு சிறப்பான தேர்வு என்பது கீழ்காணும் படிநிலைகளை உள்ளடக்கியது.

- சோதனையைத் திட்டமிடல்.
- திட்ட படம் தயாரித்தல். (Blue Print preparation)
- வினாத்தாளை வடிவமைத்தல்.
- சோதனையை மேலாண்மை செய்தல்.
- சோதனையை அளவிடல்.
- சோதனையை மதிப்பிடுதல்.

1. சோதனையை திட்டமிடல் (Planning the test)

திட்டமிடுதல் பின்வரும் படிநிலைகளை உள்ளடக்கியது.

- நோக்கங்களுக்கு எடையிடுதல் (Weightage to objectives)
- பாடப்பொருள்களுக்கு எடையிடுதல் (Weightage to content)
- பல்வேறு வகையான வினாக்களுக்கு எடையிடுதல் (Weightage to different forms of questions)
- விருப்பங்களை அளிக்கும் முறை (Scheme of options)
- பகுதிகள் (Sections)

2. திட்டப்படம் தயாரித்தல் (Preparing Blue Print)

திட்டப்படம் மூன்று – பரிமாணங்களை உள்ளடக்கியது. அவை

- நோக்கங்களை எடையிடுதல்

- வினாக்களின் வகைகள்
- பாடப்பொருள்

வினா வடிவமைப்பு (Designing questions)

வினா வடிவமைப்பு கீழ்காணும் படிநிலைகளை உடையது.

- நோக்கங்களை வரையறுத்தல்
- சிறப்பு நோக்கக் கூறுகளை நோக்கங்களோடு தொடர்புபடுத்தல்.
- பாடப்பொருள் பற்றி முழுமையான அறிவு.

3. வினாத்தாள் அமைத்தல் (Editing the question paper)

வினாத்தாளின் வினாக்களை வடிவமைத்திடும் போது வினாக்கள் அதன் வகைகளை அடிப்படையாக கொண்டிருக்கும். அவை கீழ்வரும் முக்கிய மூன்று கூறுகளை உள்ளடக்கியதாக இருக்கும்.

எ.கா: பகுதி அ – புறவய வினாக்கள்
பகுதி ஆ – குறு வினாக்கள்
பகுதி இ – கட்டுரை வினாக்கள்.

மேலும் தேவையான இடங்களில் தகுந்த விளக்கமான குறிப்புகள் அடங்கியிருக்கும்.

எ.கா: பகுதி அ மற்றும் பகுதி – இ அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.

4. சோதனையை மேலாண்மை செய்தல் (Admintering the test)

சோதனைக்கான கால அளவு, சோதனை நடைபெறும் இடம் மற்றும் சோதனைக்கான அறிவிப்புகளை வழங்குதல் போன்றவைகளை அடிப்படையாகக் கொண்டு முன்கூட்டியே தீர்மானித்து சோதனை மேலாண்மை செய்யப்படுகிறது.

மதிப்பீட்டு வழிகாட்டி மற்றும் மதிப்பீட்டு முறைகள் (Scoring key & Marking Scheme)


புறவயவினாக்களை மதிப்பீடு செய்ய மதிப்பீட்டு வழிகாட்டியும் மதிப்பீட்டு முறைகள் அல்லது மதிப்பெண் வழங்கும் முறைகள் கட்டுரை வினாக்கள் மற்றும் குறுவினாக்களை மதிப்பீடு செய்ய வழிகாட்டியாக உதவுகிறது.

சோதனையை அளவிடுதல் (Evaluating the test)

சோதனையை அளவிடுதலில் சில முக்கிய வினாக்கள் கேட்க வேண்டும். மாணவர் மதிப்பெண்கள் அதிகம் எனில் சோதனைகள் எளிமையாக கருதப்படும். மதிப்பெண் குறைவாக இருக்கும் பட்சத்தில் சோதனை கடினமாகதாக கருதப்படும்.

ஆசிரியரால் அமைக்கப்பட்ட சோதனைக்கும், தரப்படுத்தப்பட்ட சோதனைக்கும் இடையே உள்ள ஒப்பீடு

வ. எண்.	புணர்ப்புள்	ஆசிரியரால் அமைக்கப்படும் சோதனைகள்	தரப்படுத்தப்பட்ட சோதனைகள்
1	அடிப்படை	பாடப்பொருள் மற்றும் நோக்கங்கள் வகுப்பு ஆசிரியரால் நிர்ணயம் செய்யப்படுகிறது.	பாடப்பொருள் மற்றும் நோக்கங்கள் பொதுவானது.
2	நம்பகத்தன்மை	நடுநிலைத்தன்மை உடையது	உயர் நம்பகத்தன்மை உடையது.
3	தர எண்கள் (Norms)	வகுப்பறை அல்லது குறிப்பிட்ட எல்லையைச் சார்ந்தது	தேசிய அல்லது மாநில அளவிலானது.
4	கற்றல், பாடப்பொருள்	குறைவான திறன்களை உள்ளடக்கியது.	விரிவான, ஆழமான திறன்களை உள்ளடக்கியது.
5	சிறப்புகள்	ஆசிரியர் சார்ந்தது.	கல்வியாளர் குழுவைச் சார்ந்தது.



சோதனைகளின் பண்புகள்

1. புறவயத்தன்மை (Objectivity)

மதிப்பிடுபவரின் தனிப்பட்ட விருப்பு, வெறுப்புகளுக்கு அப்பாற்பட்டு மதிப்பிடப்படும் தேர்வுகள் புறவயத்தன்மை உடையன. சரியான விடையில் சிறிய மாற்றம் செய்து விடையளிக்க இயலாதவாறு அமைத்தல்.

2. ஏற்புடைமை (Validity)

மதிப்பிட வேண்டியவற்றை மட்டுமே மதிப்பிட வேண்டும். நோக்கத்தினை அடிப்படையாக கொண்டு சோதனை அமைவதே தகுதியான சோதனை அல்லது ஏற்புடைமை கொண்ட சோதனை எனப்படும்.

3. நம்பகத்தன்மை (Reliablity)

எந்த சோதனையும், எந்த காலகட்டத்திலும் ஒரே மாதிரியான, மாறாத மதிப்பெண்களைப் பெற்றிருக்குமானால் அதனை நம்பகத்தன்மை கொண்டது எனலாம்.

4. போதுமானது (Adequacy)

மாதிரிகள் போதுமான அளவினதாகவும், விரிவாகவும் அமைக்கப்பட வேண்டும்.

5. நடைமுறைப்படுத்தல் (Practicability)

சோதனைகள் மிகப் பெரியதாகவோ, அல்லது மிகச்சிறியதாகவோ இருக்கக் கூடாது. குறிப்பிட்ட காலகட்டத்திற்குள் மாணவர்கள் தேர்வினை முடித்திடல் வேண்டும். செலவானது குறிப்பிட்ட அளவிற்குட்பட்டிருத்தல் வேண்டும்.

6. மேலாண்மை செய்தல் (Administrability)

தெளிவான, எளிய, உறுதியான குறிப்புகள் வழங்கப்படுதல், தேர்வுத்தாள் மற்றும் விடைத்தாள் முதலானவற்றை உரிய காலத்தில் வழங்குதல் மற்றும் சேகரித்தல்.

7. ஒப்பிட்டு நோக்குதல் (Interpretability)

சோதனையின் மதிப்பெண்கள் எளிமையாக ஒப்பிடும்படியாக இருத்தல் வேண்டும். மேலும் ஏற்றுக் கொள்ளும் விதமாக ஒப்பிட்டு ஆராய்ந்திடல் வேண்டும்.

உருப்படிப் பகுப்பாய்வு (Item analysis)

உருப்படிப் பகுப்பாய்வு என்பது மாணவரின் விடைகளை ஆராய்ந்து, தேர்வில் இணைக்கப்பட்ட ஒவ்வொரு வினாவின் சோதித்து அறியும் திறனைக் கணக்கிடுவது. ஒவ்வொரு உருப்படியின் கடின்த்தன்மை அறிய முடியும். அவை மூன்று பகுதிகளை உள்ளடக்கியது. அவையன

1. உருப்படியின் கடின தன்மை (Item difficulty Index)

$$F = \frac{R_H + R_L}{N_H + N_L} \times 100$$

R_H — அதிக மதிப்பெண் பெற்றவரில் சரியான விடையை அளித்தவர்.
R_L — குறைந்த மதிப்பெண் பெற்றவரில் சரியான விடையை அளித்தவர்.
N_H — மூன்றில் ஒரு பகுதி அதிக மதிப்பெண் பெற்றவர்.
N_L — மூன்றில் ஒரு பகுதி குறைந்த மதிப்பெண் பெற்றவர்.

20 – விழுக்காட்டிற்கு குறைவாக அமைந்தால் கடினம்.

80 – விழுக்காட்டிற்கு மேல் இருப்பின் வினா மிகவும் எளியது.

20 முதல் 80 வரை நலம். இவ்வாறு ஒவ்வொரு வினாவில் மதிப்பு காணலாம்.

<u>உருப்படி</u>

<u>வேறுபடுததி அறியும் எண்</u> (Item Discrimination Index)

$$D = \frac{R_H - R_L}{N_H or N_L}$$

ஒவ்வொரு வினாவிற்கும் கணக்கிட்டால் –1 லிருந்து +1 வரை இருக்கும். –1 லிருந்து +0.2 மதிப்பு இருக்குமாயின் வேறுபடுத்தி அறிவதில்லை.

0.2 லிருந்து +1 வரை மதிப்பு உள்ள வினாக்கள் மட்டும் தேர்ந்து எடுப்பது நல்லது.

<u>திசை திருப்பும் விடைகளின் திறன் அறிதல் (Multiple Choice)</u>

பல் வாய்ப்பு வகை விடைத் தேர்வில் நான்கில், ஒன்று மட்டும் சரியான விடை. மீதமுள்ள மூன்று விடைகளும் மாணவனை குழப்பமடையச் செய்து திசை திருப்பும்படி அமையும்.

<u>எடுத்துக்காட்டு:</u>

– "சக்கரவர்த்தி திருமகன்" என்ற நூலின் ஆசிரியர் யார்?

a) கம்பர் b) துளசிதாசர் c) ராஜாஜி d) அகிலன்

இதில் சரியான விடை c) ராஜாஜி. இருந்தபோதும் மற்ற மூன்று விடையும் திசை திருப்பும் விதமாக கொடுத்து மாணவரை குழப்பத்தில் ஆழ்த்தும் விதமாக உள்ளது. அவ்வகை திறன் அறிய சோதனை நடத்தி அறியலாம்.

மேற்கண்ட வினாவிற்கு சோதனையின் அடிப்படையில் தகவல்கள்.

மொத்த மாணவர்கள் 20 பேர்

விடைகள்	A	B	C	D	மொத்தம்
அதிக மதிப்பெண் பெற்றோர்	8	0	9	3	20
குறைந்த மதிப்பெண் பெற்றோர்	10	0	6	4	20

விடை: B யில் திசை திருப்பும் திறன் செயல்படவில்லை. ஏனெனில் குறைந்த மதிப்பெண் பெற்ற மாணவரும் இந்த விடையை தேர்வு செய்யவில்லை.

விடை: A திசை திருப்பும்திறன் சிறந்து செயல்படுகிறது. இரு பிரிவினரும் தேர்ந்தெடுத்துள்ளனர்.

விடை: D குறைவாக செயல்பட்டுள்ளது.

$$D = \frac{R_H - R_L}{N} \qquad = \frac{9-6}{20} = \frac{3}{20} = 0.15$$

வேறுபடுத்தி அறியும் குணகத்தின் மதிப்பு குறைவு. எனவே திசை திருப்பு விடையாகவே அமைந்துள்ளது எனலாம்.

உருப்படியின் கடினத் தன்மை அறியும் எண் (Item Difficulty Index) (or) P- Value

$$P = \frac{N_P}{N} \qquad \text{(மற்றொரு வடிவம்)}$$

ie. P = தேர்ச்சி பெற்றோர் / மொத்த மாணவர்கள்

(i) For CRTs, P-value = 0.9 (or) above

(ii) For NRTs, P-value = 0.4 to 0.6

UNIT – X

தேசிய கல்வி நிறுவனங்கள் மற்றும் கல்வித்துறையில் ஏற்படுத்தப்பட்டு உள்ள பல்வேறு அமைப்புகள் (National Level Agencies / Statutory Bodies of Education)

கல்வி நிலையங்களின் செயற்பாட்டை தொடர்ந்து கண்காணிக்கவும் மாறிவரும் சமூகப் பொருளாதார அறிவியல் வளர்ச்சி தேவைகளுக்கு ஏற்ப கல்வியில் மாற்றங்களை செய்திடவும், கல்வித் தரத்தை மேம்படுத்த பேணிக்காக்கவும் மைய மாநில அரசுகள் பல்வேறு அமைப்புகளை ஏற்படுத்தி உள்ளன.

மனித வள மேம்பாட்டுத்துறை (Ministry of Human Resource Development – MHRD)

மைய அரசின் கல்வி, சுகாதாரம், இளைஞர் நலம், சமூகநலம் ஆகியவற்றை ஒருங்கிணைத்து மனிதவளமேம்பாட்டுத் துறையாக திரு. ராஜீவ்காந்தி அவர்களால் 1986–ம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இத்துறையானது மைய அரசைச் சார்ந்தது ஆகும்.

மனித் வள மேம்பாட்டுத்துறையானது மத்திய அமைச்சர்வையின் கேபினட் அமைச்சரின் கீழ் இத்துறை செயல்படுகிறது.

பணிகள்:

- மனித வள மேம்பாட்டுத்துறை மைய அரசின் கல்வித்துறை, மைய அரசின் கீழ் இயங்கும் கல்வி நிலையங்கள் ஆகியவற்றை கவனித்து கொள்கிறது.
- கல்வி வளர்ச்சிக்கான சர்வ சிக்ஷா அபியான் (SSA) போன்ற கல்வித் திட்டங்களை உருவாக்கி அவற்றை நிறைவேற்றிட மாநில அரசுகளுக்கு நிதி உதவி வழங்குகிறது
- இத்துறையானது பல்கலைகழக மானிய குழுவிற்கு நிதி ஒதுக்குதல், கல்வி மேம்பாட்டிற்கான விதிகளையும் சட்டங்களையும் உருவாக்குதல்
- இத்துறையின் கீழ் பின்வரும் நிறுவனங்கள் செயல்படுகின்றன.

1. Central Board of seeondary Education (CBSE) – New Delhi
2. Central Hindi Directorate – New Delhi
3. Central Institute of Indian Languages – Mysore
4. Central Institute of English and Foreign Languages – Hyderabad
5. Educational Consultants of India Ltd – NewDelhi
6. Kendriya Vidalaya Sangathana – New Delhi
7. National Council of Educational Research and Training (NCERT) – New Delhi
8. National Council of Teacher Education (NCTE) – New Delhi
9. National Institute of Adult Education – New Delhi
10. National Institute of public co-operation and child Development – New Delhi
11. National open School – New Delhi
12. Navodaya Vidyalaya Samiti – New Delhi
13. All India Council for Technical Education (AICTE) – New Delhi
14. University Grants Commission (UGC) – New Delhi
15. National Institute of Educational Planning and Administration – New Delhi
16. National Sports Authority of India – New Delhi
17. National Literacy Mission (NLM) – New Delhi.

பல்கலைகழக மானியக்குழு (University Grants Commission – UGC)

தத்துவ மேதை டாக்டர். இராதாகிருஷ்ணன் குழுவின் பரிந்துரைகளில் ஒன்று, இங்கிலாந்தில் உள்ளதைப் போன்றே இந்தியாவில் பல்கலைகழக மான்யக்குழுவை அமைப்பது ஆகும்.

இந்தியாவில் பல்கலைகழக மானியக் குழுவானது 1953–ம் ஆண்டு சுயஅதிகாரமுள்ளதாக சட்டப்படி ஏற்படுத்தப்பட்டது. இதன் தலைமை இடம் புதுதில்லி ஆகும்.

முக்கிய பணிகள்:

- பல்கலை கழகங்களுக்கும், ஆராய்ச்சி நிறுவனங்களுக்கும் அங்கீகாரம் வழங்குதல்
- உயர் கல்வி நிறுவனங்களுக்கு நிதி உதவி அளித்தல்
- கல்லூரி மற்றும் பல்கலைக் கழக ஆசிரியர்களின் கல்விதகுதிகளையும் ஊதிய விகிதங்களையும் நிர்ணயம் செய்தல்.

பிற பணிகள்:

- ஆராய்ச்சி மாணவர்களுக்கு படிப்பு உதவித்தொகை வழங்குதல்
- குறிப்பிட்ட ஆராய்ச்சி திட்டங்களுக்கு நிதி உதவி வழங்குதல்
- உயர்கல்வி நவீன மயமாக்கப்பட்டு பல புதிய பாடத்துறைகளை உருவாக்குதல்
- போலி கல்வி நிறுவனங்களை அடையாளம் காணுதல்.

தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (National Council of Educational Research and Training – NCERT)

இந்நிறுவனமானது இந்தியப் பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட சட்டத்தின் படி 1961–ம் ஆண்டு செப்டம்பர் முதல் தேதி தொடங்கப்பட்டது.

இதன் தலைமை அலுவலகம் புது டில்லியில் உள்ள அரவிந்தமார்க் என்ற சாலையில் அமைந்து உள்ளது.

மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர் இதன் தலைவராகவும், மாநில கல்வி அமைச்சர்கள் இதன் உறுப்பினர்களாகவும் செயல்பட்டு வருகின்றனர். இந் நிறுவனத்தின் இயக்குநர் மனித வள மேம்பாட்டுத் துறையில் தேர்வு செய்யப்படுகிறார். இது தன்னாட்சி அந்தஸ்து பெற்ற நிறுவனம் ஆகும்.

பணிகள்:

- கலைத்திட்டம், கற்பித்தல் கருவிகள், கற்பித்தல் முறைகள், மதிப்பீட்டு முறைகள் ஆகியவற்றை மேம்படுத்தல்
- ஆசிரியர்களுக்கு பணிமுன்பயிற்சி (Pre-Service Training) பணியிடைப்பயிற்சி (In-service Training Programme) ஆகியவற்றை வழங்குதல்.
- கல்வி ஆராய்ச்சியில் ஈடுபடுதல் – வளர்த்தல்
- மேம்பட்ட கல்வி நுட்பங்களையும், ஆராய்ச்சி முடிவுகளையும் பரவச் செய்தல்
- பள்ளிக்கல்வி, ஆசிரியர் கல்வி பற்றிய தகவல் தொகுப்பு நிலையமாகவும், தேவைப்படுவோர்க்கு தகவல் அளிக்கும் மையமாகவும் செயல்படுதல்.

  தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் அங்கங்களாக வட்டார கல்வி நிறுவனங்கள் (Regional Institutes of Education) மைசூர், புவனேஸ்வர், அஜ்மீர், போபால் ஆகிய நான்கு இடங்களில் செயல்படுகிறது.

- மைசூரிலும் புவனேஸ்வரிலும் உள்ள நிறுவனங்கள் M.Sc. Ed என்ற முதுகலைப்பட்ட வகுப்புகளையும் நடத்துகின்றன.

மாநில கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (State Council of Educational Research and Training – SCERT)

NCERT- ஐத் தொடர்ந்து அதே போன்று மாநில அளவில் செயல்படும் நிறுவனமாக SCERT மாநில அரசுகளால் தோற்றுவிக்கப்பட்டன. பொதுவாக இவை மாநில பள்ளிக்கல்வி இயக்குநர் தலைமையில் இயங்குகின்றன.

பணிகள்:

- கலைத்திட்டம், கற்பித்தல் கருவிகள், கற்பித்தல் முறைகள், மதிப்பீட்டு முறைகள் ஆகியவற்றை மேம்படுத்தல்
- கல்வி ஆராய்ச்சியை குறிப்பாக தொடக்க கல்வி தொடர்பான ஆராய்ச்சிகளையும் திட்டங்களையும் மேற்கொள்ளுதல்
- DIET-களின் பணிகளை கண்காணித்தல் மற்றும் ஒருங்கிணைத்தல்
- தொடக்கக்கல்வி தொடர்பான மைய, மாநில அரசுகளின் பல்வேறு திட்டங்களை பொறுப்பேற்று நடத்துதல்.

தேசிய கல்வி திட்டமிடல் மற்றும் நிர்வாகக் கழகம் (National Institute of Educational Planning and Administration – NIEPA)

தோற்றம்:

- 1961–62ல் கல்வியைத் திட்டமிடப்படுபவர்களுக்கான யுனெஸ்கோவின் வட்டார மையமாக இருந்தது முதல் இதன் தோற்றம் தொடங்குகிறது
- 1965–ல் இது "ஆசிய கல்வி திட்டமிடல் மற்றும் நிர்வாக நிறுவனம்" ஆக பெயர் மாற்றம் பெற்றது
- 1970–ல் தேசிய கல்வி திட்ட மற்றும் நிர்வாகப் பணியாளர் கல்லூரி (National Staff College for Educational Planners and Administrators) என்று பெயர் மாற்றம் செய்தது.
- பின்பு 1979–ல் பணியாளர்களுக்கு பயிற்சி அளிப்பதுடன் ஆய்வுகளையும் மேற்கொள்வதற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு "தேசிய கல்வி திட்டமிடல் மற்றும் நிர்வாகக் கழகம்" (National Institute of Educational Planning and Administration – NIEPA) என்ற பெயரால் அழைக்கப்படுகிறது.
- இதன் அலுவலகம் புதுடில்லியில் NCERT–யின் வளாகத்திலேயே அமைந்து. உள்ளது.

நிறுவன கட்டமைப்பு:

NIEPA நான்கு படிநிலைகளைக் கொண்ட அமைப்பாக செயல்படுகிறது.

1. பொதுக்குழு (General Council)
2. நிதி நிர்வாகக் குழு (Finance Executive Committee)
3. செயல் திட்டங்களை வகுத்து முறையாக செயற்படுத்தும் குழுக்கள் (Planning and Programme Committee)
4. அன்றாட உள் நிர்வாகத்தை கவனிக்கும் அலகுகள் (Internal Academic and Administrative units)
    - மத்திய அரசின் மனிதவளத்துறை அமைச்சரே NIEPA–வின் பொதுக்குழு தலைவர் ஆவார்.

பணிகள்:

1. மைய, மாநில அரசுகளின் உயர் கல்வி அதிகாரிகளுக்கான பயிற்சி வகுப்புகள், பணிப்பட்டறைகள், கருத்தரங்குகள், கலந்துரையாடல்கள், விவாதங்கள் ஆகியவைகளுக்கு ஏற்பாடு செய்து நடத்துதல்.
2. கல்வி நிறுவனங்களுக்கும், மாநில அரசுகளுக்கும் பல கல்வித்திட்டங்களை வடிவமைத்து செயல்படுத்திட ஆலோசனை வழங்குதல்

3. கல்லூரி மற்றும் பல்கலைக்கழகப் பேராசிரியர்களுக்கும் நிர்வாக அதிகாரிகளுக்கும் கல்வித் திட்டங்கள் வடிவமைத்தலில் பயிற்சி அளித்தல்.

தேசிய ஆசிரியர் கல்வி நிறுவனம் (National Council of Teacher Education – NCTE)

தோற்றம்:

1986–ம் ஆண்டு வெளியிடப்பட்ட தேசிய கல்வி கொள்கையின் பரிந்துரையின்படி 1995–ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 17–ம் தேதி இந்தியப் பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட சட்டப்படி (National Council of Teacher Education Act, 1993) தேசிய ஆசிரியக்கல்வி நிறுவனம் தோற்றுவிக்கப்பட்டது.

நோக்கங்கள்:

நாடு முழுவதிலும் அனைத்துவகை ஆசிரியக் கல்வியிலும் திட்டமிட்ட ஒருங்கிணைந்த முன்னேற்றத்தை ஏற்படுத்துதலே ஆசிரியக் கல்வி நிறுவனத்தின் முக்கிய குறிக்கோள்.

பணிகள்:

- தரமுள்ள ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களுக்கு மட்டுமே அங்கீகாரம் (Recognition) வழங்கி, தரம் தாழ்ந்த நிறுவனங்களை வெளியேற்றுதலையும், பயிற்சி நிறுவனங்கள் மீது தொடர் கண்காணிப்பை மேற்கொள்ளுதலையும் தனது முதன்மைப் பணிகளாக கொண்டு உள்ளது.
- புகுநிலைக்கல்வி, தொடக்கநிலைக்கல்வி, இளநிலைக்கல்வி, மேனிலைப்பள்ளிக்கல்வி, முறைசாராக்கல்வி, பகுதி நேரக்கல்வி, வயது வந்தோர் கல்வி, தொலைதூரக்கல்வி (அஞ்சல் வழிக்கல்வி) போன்றவற்றிற்கான ஆசிரியர்களை பயிற்றுவிக்கும் அனைத்துவகை ஆசிரியக் கல்வித் திட்டங்களை முறைப்படுத்தி, தரக் கண்காணிப்பு செய்திடலை தேசிய ஆசிரியக் கல்வி நிறுவனம் மேற்கொண்டு உள்ளது.

தேசிய ஆசிரியக் கல்வி நிறுவனத்தின் தலைமை இடம் புதுடில்லியில் உள்ளது. இதனுடைய வட்டார கிளைகள் (Regional Office) ஜெய்பூர், புலனேஸ்வர், போபால், பெங்களூர் ஆகிய நான்கு இடங்களில் உள்ளது.

தேசிய தரச்சான்றளிக்கும் கழகம் (National Assessment and Accreditation Council – NAAC)

தோற்றம்:

உயர்கல்வி நிறுவனங்களான கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் போன்றவற்றின் செயல்திறனை அறிவியில் அடிப்படையில் சீர் தூக்கிப் பார்த்து மதிப்பீடு செய்து தரசான்றிதழ் அளிப்பதற்காக UGC–ஆல் தன்னாட்சி அந்தஸ்துடன் ஏற்படுத்தப்பட்டது NAAC ஆகும்.

பணிகள்:

உயர்கல்வி நிலையங்கள் அவற்றில் உள்ள கட்டமைப்பு வசதிகள் (Infra Structural Facilities), ஆசிரியர்களின் தகுதி, கல்விக்கு அக்கல்லூரி அல்லது பல்கலைக்கழகம் ஆற்றியுள்ள தொண்டு, நிர்வாக அமைப்பு, பின்பற்றப்படும் கொள்கைகள் ஆகியவை மதிப்பீடு செய்யப்பட்டு மிக உயர்மதிப்பு நிலையான 5 நட்சத்திரக் குறியில் இருந்து படிப்படியாக வரிசைப்படுத்தப்படுகின்றன.

தரச்சான்று பெறுவதன் பயன்கள்:

- உயர்தரமுள்ள NAAC அறிவிக்கும் கல்லூரிகளுக்கும், பல்கலைகழகங்களுக்கும் UGC சிறப்புத் திட்டங்களையும் அதற்கான நிதி உதவிகளையும் வழங்குகிறது.
- மேற்படிப்பைத் தொடர விரும்புவோர் தரமான கல்வி நிலையங்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள NAAC தரும் மதிப்பீடு உதவுகிறது. தற்சமயம் நட்சத்திர குறியீடுகளுக்கு பதிலாக "கிரேடு" (Grade) பயன்படுத்தப்படுகிறது.

தரச்சான்றுக்கு விண்ணப்பிப்பதற்கான தகுதிகள்:

முதன்முறையாக தர மதிப்பீடுதலுக்கு விண்ணப்பிக்கத் தேவையான தகுதிகள்:

1. கல்லூரிகள் அல்லது பல்கலைக்கழகங்கள் தொடங்கப்பட்டு 5 ஆண்டுகள் நிறைவு செய்ய வேண்டும்

(அல்லது)

2. தொடர்ச்சியாக இரு வருடங்களாவது மாணவர்கள் தங்களது படிப்பை வெற்றிகரமாக முடித்து தேர்ச்சி பெற்று வெளியேறி இருக்க வேண்டும்.

இவ்வாறு அளிக்கப்படும் தரச்சான்றிதழ்கள் (Certificate of Accreditation) 5 ஆண்டுகளுக்கு மட்டுமே செல்லுபடியாகும். அதன் பிறகு கல்வி நிலையங்கள் தாநிர்ணயத்திற்கு தங்களை உட்படுத்திக் கொள்ள வேண்டும்.

காச்சான்று வகை

1. நிறுவன தர மதிப்பீடு (Institutional Accreditation)
2. உயர் கல்வி நிறுவனத்தில் உள்ள தனி பாடத்துறை (Departmental Accreditation)

அனைத்திந்திய தொழில் நுட்பக் கழகம் (All India Council for Technical Education) – AICTE

திறமையானவர்களுக்கு சமவாய்ப்பு அளிக்க அவர்கள் நாடெங்கிலும் ஒரு பகுதியில் இருந்து மற்ற பகுதிகளுக்கு சென்று கல்வி கற்கும் வகையில் தொழில் நுட்ப, மேலாண்மைக் கல்விகள் மாற்றி அமைப்பதற்காகவும், தொழில் நுட்பக் கல்வியைத் திட்டமிட்டு, தொழில்நுட்ப கல்வி நிறுவனங்களுக்கு தரச்சான்றிதழ் வழங்கிடவும், தொழில் நுட்பக் கல்வியில் ஏற்படும் முன்னேற்றங்களை ஒருங்கிணைத்திட அனைத்திந்திய தொழில் நுட்பக் கழகம் (All India Council for Technical Education) ஏற்படுத்தப்பட்டது.

தமிழ்நாட்டின் கல்வி அமைப்பின் மேலாண்மையும் நிர்வாகமும்: (Management and Administration of Education In Tamilnadu)

அரசு கல்வித்துறை (Government Department of Education)

கல்வி அமைச்சரே இதன் தலைவர். மாநிலத்தில் உள்ள அனைத்து கல்வி நிறுவனங்களும் இவர் அதிகாரத்திற்கு உட்பட்டது. கல்வித்துறை செயலர், கல்வித்துறை இயக்குநர்கள் ஆகியோர் இவருக்கு துணைபுரிகின்றனர்.

மாநில பள்ளிக் கல்வி இயக்குநரகம் (State Directorate of School Education)

ஆங்கிலேயர் ஆட்சிகாலம் முதல் மாநிலத்தில் உள்ள அனைத்து கல்வி நிலையங்களும் ஓர் இயக்குநரின் கீழ் இயங்கி வந்தன. அவர் பொதுக்கல்வி இயக்குநர் (Director of Public Instruction – DPI) என்று அழைக்கப்பட்டார்.

தற்பொழுது தமிழக கல்வித்துறைக்கு ஒரு இயக்குநரும், மாவட்ட அளவில் முதன்மைக்கல்வி அலுவலர்களும் கல்வி மாவட்ட அளவில் மாவட்டக்கல்வி அலுவலர்களும் உள்ளனர்.

பள்ளிக்கல்வி இயக்குநர் (Director of School Education)

- இவர் தமிழ்நாடு அரசின் பள்ளி கல்வி கொள்கைகளை மாநிலப்பள்ளிகளில் நிறைவேற்றும் அதிகாரம் கொண்டவர்.
- இவர் நிதி உதவி பெறும் பள்ளிகளின் மானியங்களை தற்காலிகமாகவோ நிலையாகவோ நிறுத்தும் அதிகாரம் பெற்றவர்
- இவர் முதன்மைக் கல்வி அலுவலர் (CEO) மாவட்ட கல்வி அலுவலர் (DEO) போன்றோரை நியமிக்கும் அதிகாரம் பெற்றவர்.

பள்ளிக்கல்வி இணை இயக்குநர் (பணியாளர்) Joint Directors of School Education – Personnel

- இவர் தன் ஆளுகைக்கு உட்பட்ட பள்ளிகளின் ஆசிரியர்கள், அலுவலர்களை மாற்றும் அதிகாரம் படைத்தவர்

- ஒவ்வொரு கல்வி ஆண்டிலும் இயக்குநருடன் இணைந்து மாறுதல் பெறுவதற்கான் விதிமுறைகளை வரையறை செய்பவர்.

முதன்மைக் கல்வி அலுவலர் (Chief Educational Officer) – CEO

- புதிய முன் தொடக்க, தொடக்க நடுநிலைப்பள்ளி திறத்தல் அல்லது எற்கனவே உள்ள ஒரு பள்ளியின் தர்த்தை உயர்த்துதல் இவற்றுக்கு அனுமதி அளித்தல்.
- இடைநிலை ஆசிரியர்களை (Secondary Teachers) தனது அதிகாரத்திற்கு உட்பட்ட பள்ளிகளுக்கு நியமித்தல்
- ஒவ்வொரு உயர்நிலை, மேல்நிலைப்பள்ளிகளிலும் நிகழும் கற்றல் பணிகளை மதிப்பிடும் அதிகாரத்தை பெற்றவர்.

மாவட்டக் கல்வி அலுவலர் (District Educational Officer)

- தன் ஆளுகைக்கு உட்பட்ட பள்ளிகளில் கூடுதல் வகுப்போ, அல்லது கூடுதல் பிரிவோ அனுமதித்தல் அதற்கு ஏற்பும் அரசினர் மானியமும் அளித்தல்
- அரசினர் மானியம் பெறும் பள்ளி ஆசிரியர்களுக்கு ஊதியம் வழங்குதல்
- நிதி உதவி பள்ளிகளில் ஆசிரியர்—நிர்வாகியின் தகராறுகளை முடித்து வைத்தல்
- தன் ஆளுகைக்கு உட்பட்ட பள்ளிகளை மேற்பார்வை செய்தல், மற்றும் கற்பித்தல் பணிகுறித்து ஆசிரியர்களுக்கு அறிவுரை கூறுதல்.

தலைமை ஆசிரியர் (Head Master)

ஒரு பள்ளியின் தலைமைஆசிரியர் முதல்வர், பள்ளியின் தலைவர், முதன்மை ஆசிரியர் என்று அழைக்கப்படுகிறார்.

இவர் மேலாண்மையாளராகவும் (Management Executive) மேற்பார்வையிடுபவராகவும் (Supervisor) செயல்படுகிறார்.

தலைமை ஆசிரியரின் பல்வேறு பணிகள்:

கட்டளையிடுபவர் (Dictator), ஒழுங்கை நிலைநாட்டுபவர் (Disciplinarian) மேலாளர் (Manager) செயலாளர் (Executive) ஒருங்கிணைப்பாளர் (Co-coordinator) தலைவர் (Leader)

தலைமையாசிரியரின் பொறுப்புகள் (Responsibilities)

1. ஆசிரியர்கள் தொடர்பான பொறுப்புகள் (Responsibilities to Staff)
2. மாணவர்கள் தொடர்பான பொறுப்புகள் (Responsibility to Students)
3. பள்ளிப் பணிகளுக்காக ஆற்றும் கடமைகள் (Responsibility to School Service)
4. நிதிப்பொறுப்புகள் (Financial Responsibility)
5. பொதுமக்கள் தொடர்பு உடைய பொறுப்புகள் (Public Relations Responsibilities)
6. மதிப்பீடு செய்தல் பொறுப்புகள் (Evaluating Responsibilities)

- தலைமை ஆசிரியர் பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் செயலாளர் ஆவார் (H.M – PTA Secretary)

பள்ளிகளின் வகைகள் (Types Of Schools)

மத்திய இடைநிலைக் கல்வி வாரியம் (Central Board of Secondary Education – CBSE)

- மத்திய இடைநிலைக் கல்வி வாரியம் (CBSE) 1921—ல் முதன்முதலாக உத்திர பிரதேச உயர்நிலைப்பள்ளி மற்றும் இன்டர் மீடியட் கல்வி வாரியம் தொடங்கப்பட்டது.
- 1929—ல் உயர்நிலைப் பள்ளிக்கல்வி மற்றும் இண்டர்மீடியட் கல்வி வாரியம் இராஜபுதானா" என்று பெயர் மாற்றம்
- 1962—ல் மத்திய இடைநிலைக்கல்வி வாரியம் (Central Board of Sec. Education – CBSE) என்ற தற்போதைய பெயர் சூட்டப்பட்டது.
- இதன் தலைமை இடம் டில்லியில் அமைந்துள்ளது.

- மத்திய அரசில் பணியுரியும் அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள் அவ்வப்போது இடம் மாற்றப்படுவதால் அவர்களின் குழந்தைகளின் கல்வித் தேவைகளை நிறைவு செய்யவும், தரமான கல்வியை வழங்கவும் மத்திய இடைநிலைக் கல்வி வாரியத்தின் தலையாய குறிக்கோள் ஆகும்.
- இப்பள்ளிகளில் மும்மொழித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

நவோதயாப் பள்ளிகள்:

கல்வியில் மேன்மை (Excellence in Education) என்ற இலட்சியத்தை இழக்க கூடாது என்பதற்காக ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் கிராமப்புறங்களில் உள்ள அறிவாண்மை மிக்க மாணவர்களுக்காக 'மாதிரிப் பள்ளிகள்' (Model Schools) 1986–ம் வருட தேசிய கல்விக் கொள்கைகளின் வழி ஏற்படுத்தப்பட்டு நவோதயா பள்ளிகள் என்ற பெயரில் இயங்கி வருகின்றன

- இவை முன்னோடிப் பள்ளிகள் (Pace-Settings Schools), தகைமைப்பள்ளிகள் (Centers of Excellence) என்றும் அழைக்கப்படுகிறது.
- இவை மைய இடைநிலைக் கல்வி வாரியத்தின் கீழ் (CBSE) இயங்குகின்றன
- கல்வி, உணவு, உறைவிடம் இலவசம்
- 6 to 12 –ம் வகுப்பு வரையில் கல்வி தரப்படுகிறது
- மாணவர்கள் உளவியல் தேர்வு அடிப்படையில் தெரிவு செய்தல்
- அந்தந்த மாவட்டத்தில் உள்ள மக்கள் தொகைக்கு ஏற்ப SC 15% ST 17% இட ஒதுக்கீடு உண்டு
- வாழ்வியல், அறிவியல், வணிகவியல், தொழிலியல் போன்ற 4 வகைப்பிரிவில் கல்வி
- இது மனித வள மேம்பாட்டு அமைச்சகத்தால் நிறுவப்பட்ட ஒரு சுயேச்சையான சங்கத்தால் (Autonomous Body) நிர்வகிக்கப்படுகிறது.
- இங்கு மும்மொழிக் கொள்கை பின்பற்றப்படுவதால் தமிழ்நாடு, மேற்கு வங்காளத்தில் இப்பள்ளிகள் திறக்க அனுமதி இல்லை.

சைனிக் பள்ளிகள்: (Sainik Schools)

- இந்தியாவில் ஆங்கிலேய படைத்துறை அதிகாரிகளின் பிள்ளைகளுக்காகத் தொடங்கப்பட்ட பள்ளிகள் ஜார்ஜ் அரசர் பள்ளிகள் (பின்னர் சைனிக் பள்ளிகள் என்று அழைக்கப்பட்டன) மற்றும் சனாவர் லாரன்ஸ் பள்ளிகள் எல்லாம் இவ்வகையைச் சார்ந்தவை
- தமிழ்நாட்டில் கோயமுத்தூர் மாவட்டத்தில் உடுமலைப்பேட்டைக்கு அருகில் அமராவதி நகரில் 'சைனிக்' பள்ளி உள்ளது
- இப்பள்ளியில் 6–ம் வகுப்பிற்கு நுழைவுத்தேர்வு அடிப்படையிலும், அறிவாண்மை, உடல்நலம், மனவளர்ச்சி அடிப்பண்டையில் மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.
- இங்கு வழக்கமான பாடங்களும் போர் பயிற்சிகளும் அளிக்கப்பட்டு வெற்றி பெறும் மாணவர்கள் போர்படை கல்லூரிகளில் (Military College) சேர தகுதியானவர்கள்
- இந்தியாவில் மொத்தம் 17 சைனிக் பள்ளிகள் உள்ளன. இவை சைனிக் பள்ளிக் கழகத்தால் (Sainik School Academy) நடத்தப்படுகிறது. இக் கழகத்தின் தலைவர் இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ஆவார்.

தேசிய பாதுகாப்பு கழகம் (National Defence Academy)

- பாதுகாப்பு அமைச்சகத்தின் கீழ் இயங்கும் இராணுவ பயிற்சி நிறுவனம்
- மகாராஷ்டிர மாநிலம் (பூனே அருகில்) கடக்வாட்ஸலாவில் உள்ளது
- இங்கு சேர்வதற்கு மேல்நிலைப் பள்ளி கல்வி தகுதி பெற்று இருக்க வேண்டும்
- இங்கு இராணுவப்படை அதிகாரிகளாக பணி புரிய விழையும் மாணவர்களுக்கு பயிற்சி தரப்படுகிறது

பள்ளிகள் இணைப்புத் திட்டம் (School Complex)

- வசதிகள் மிகுந்து உள்ள ஒரு உயர்நிலைப்பள்ளியை (Lead School) மையக் கேந்திரமாகவும் அதனைச் சுற்றி அமைந்து உள்ள ஆரம்ப பள்ளியை (Feeder School) அதனோடு இணைத்து அவற்றை துணை நிறுவனங்களாகவும் அமைத்து பின்னர் அதற்கு ஆசிரியர் சேவை மன்றும் தளவாட உதவி நிர்வாகம் போன்றவைகளை பகிர்ந்தளிக்கச் செய்வதே இத்திட்டம் ஆகும்.
- இத்திட்டத்தை கோத்தாரி கல்வி கமிஷன் (1964—66) பரிந்துரைத்தது
- தமிழ்நாட்டில் 1978—ல் செயல்படுத்தப்பட்டது.

மிதக்கும் பல்கலைக் கழகம் (Floating University)

- கப்பலிலேயே உலகின் பல்வேறு நாட்டின் துறைமுகங்களுக்குப் பயணம் செய்து நேரடி அறிவைப் பெறும் முயற்சியே இதன் புதுமை
- நேரடி அனுபவங்களை மூலம் உண்மை அறிவைப் பெறுதல் இதன் நோக்கமாகும்
- உலகின் முதல் மிதக்கும் பல்கலைக்கழகம் 'கப்பல் தளப் பல்கலைக்கழகம்' (Shipboard University) என அழைக்கப்பட்டது. இது அமெரிக்காவில் உள்ளது
- 1978—ம் ஆண்டு S.S. Universe என்ற கப்பலில் அமெரிக்க நாட்டின் பல்வேறு கல்லூரிகளையும், பல்கலைக் கழகங்களையும் சேர்ந்த 491 மாணவர்களுடன் சென்னைக்கு வந்தது. இவர்களை கவனிக்கும் பொறுப்பை TCI நிறுவனம் ஏற்றுக்கொண்டது.

அனைவருக்கும் கல்வி இயக்கம் (Sarva Sikhsha Abhiyan – SSA)

இத்திட்டமானது 6—14 வயது வரை உள்ள குழந்தைகள் அனைவருக்கும் கல்வி வழங்குவதற்காக மத்திய அரசால் கொண்டுவரப்பட்ட திட்டம் ஆகும்.

இது அனைவருக்கும் சமச்சீர் துவக்க நிலைக்கல்வி (Universalization of Elementary Education – UEE) மின் வளர்நிலைத் திட்டமாகும்.

மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டம் (District Primary Education Programme – DPEP)

திட்டத்தின் நோக்கம்

- குழந்தைகள் அனைவரையும் பள்ளியில் சேர்த்தல்
- தொடர்ந்து கற்கச் செய்தல்
- இடையில் நிற்போர் விகிதத்தை 10 சதவீதத்திற்கு கீழ் கொண்டு வருதல்
- பள்ளி முலமாகவும், மாற்றுப் பள்ளி மூலமாகவும் (Alternative School) தொடக்க கல்வியை அனைவருக்கும் வழங்குதல்.

இத்திட்டமானது முதல் கட்டமாக தர்மபுரி, திருவண்ணாமலை, விழுப்புரம், கடலூர் மாவட்டங்களில் 1994—ம் ஆண்டு நவம்பர் முதல் இத்திட்டம் செயல்படத் தொடங்கியது.

இரண்டாம் கட்டமாக இத்திட்டம் இராமநாதபுரம், புதுக்கோட்டை, பெரம்பலூர் மாவட்டங்களுக்கு விரிவாக்கப்பட்டது

- இத் திட்டமானது மத்திய அரசால் கொண்டுவரப்பட்டது.

நோக்கங்களை நிறைவேற்றும் செயல்முறைகள்

- பள்ளிகளுக்கு கூடுதலான கட்டட வசதிகளை ஏற்படுத்தல்
- பெண்கள், ஆதி திராவிட பழங்குடியினர் குழந்தைகள் போன்றோருக்கு பள்ளி வசதிகள் ஏற்படுத்துதல்
- பெண் குழந்தைகளுக்கு கழிப்பிட வசதி, குடிநீர் வசதி செய்து தருதல்
- அனைத்து பள்ளிகளுக்கும் கற்றல், கற்பித்தல் பொருள்கள் வழங்குவதுடன் முக்கிய தளவாடங்கள், கருவிகள் வாங்க நிதி உதவி செய்தல்

- கற்றலை பாதியில் விட்டவர்களுக்கும், பள்ளியில் சேராதவர்களுக்கும் மாற்றுப் பள்ளிகள் அமைத்து பயிற்சி பெற்ற நபர்கள் மூலம் கல்வி கற்பித்தல்.

ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககம் (Directorate of Teacher Education Research and Training – DTERT)

ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககம், 29 மாவட்டங்களில் அமையப் பெற்றுள்ள மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களை நிர்வகிக்கிறது.

பணிகள்:

- ஆசிரியர்களுக்கு திறமையும் தொழில் நுட்பமும் நிறைந்த கல்வியை பல்வேறு பயிற்சிகள் மூலம் அளித்தல்
- பள்ளிக்கல்வி மற்றும் துடைநிலை ஆசிரியர் கல்விக்கான பாடத்திட்டத்தை திருத்தி அமைத்து பாடநூல்களை வழங்குதல்
- கற்பித்தல் கருவிகளான பாடப்புத்தகம், கையேடுகள், பயிற்சி கையேடுகள், ஒலி, ஒளி நாடாக்கள் தயாரித்தல்
- மக்கள் தொகை கல்வித்திட்டம், பள்ளிகளில் எய்ட்ஸ் கல்வித்திட்டம் போன்றவற்றை மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் வாயிலாக செயல்படுத்தி வருகிறது.

மாவட்ட கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் (District Institute of education and Training – DIET)

மாவட்டத்திற்கு ஒன்றாக 29 மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனங்கள் மனித வள மேம்பாட்டுத்துறை நிதி உதவியுடன் ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி பயிற்சி இயக்கக (DTERT) கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வருகின்றன.

- இது மாணவர்களுக்கு இரண்டு ஆண்டு பட்டய படிப்பு (Diploma in Teacher Education – DTE) வழங்குகிறது
- இது அம்மாவட்டத்தில் உள்ள தொடக்க, நடுநிலைப்பள்ளியில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு பணியிடைப் பயிற்சியினை அளிக்கிறது.

வட்டார வளமை மையம் (Block Resource centre- BRC)

இம்மையத்தின் மூலம் அம்மாவட்டத்தில் உள்ள இடைநிலை ஆசிரியர்களுக்கு புத்தறிவு பயிற்சி அளிக்கப்பட்டு கற்பித்தலை மேம்படுத்துவதற்கு துணைபுரிகிறது.

தொகுப்பு வளமை மையம் (Cluster Resource Centre – CRC)

இம் மையத்தின் மூலம் குறிப்பிட்ட வட்டத்தில் உள்ள பள்ளிகளின் ஆசிரியர்கள் ஒருங்கிணைந்து தங்களுக்குள்ளாக பெற்ற புத்தறிவுப் பயிற்சியினை பகிர்ந்து கொண்டு அனைவரும் கற்றல்—கற்பித்தலினை மேம்படுத்துவதற்கு ஆய்த்தமாகின்றனர்.

பல்கலைகழகங்களும் வருடமும்

1. சென்னை பல்கலை கழகம் (சென்னை) – 1857
2. அண்ணாமலை பல்கலை கழகம் (சிதம்பரம்) – 1929
3. காமராஜர் பல்கலை கழகம் (மதுரை) – 1966
4. தமிழ்நாடு வேளாண்மை பல்கலை கழகம் (கோவை) – 1971
5. காந்தி கிராமம் பல்கலை கழகம் (திண்டுக்கல்) – 1976
6. அண்ணா பல்கலை கழகம் (சென்னை) – 1978
7. தமிழ் பல்கலை கழகம் (தஞ்சாவூர்) – 1981
8. பாரதிதாசன் பல்கலை கழகம் (திருச்சி) – 1982
9. பாரதியார் பல்கலை கழகம் (கோவை) – 1982
10. அன்னை தெரசா பல்கலை கழகம் (கொடைக்கானல்) – 1984
11. அழகப்பா பல்கலை கழகம் (காரைக்குடி) – 1985

12. அவினாசிலிங்கம் பெண்கள் மன்னையியல் மற்றும் உயர்கல்வி நகர்நிலைப் பல்கலைகழகம் (கோவை) – 1988
13. டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவ பல்கலை கழகம் (சென்னை) – 1988
14. தமிழ்நாடு கால்நடை அறிவியல் பல்கலை கழகம் (சென்னை) – 1989
15. மனோன்மணியம் சுந்தரனார் பல்கலை கழகம் (திருநெல்வேலி) – 1990
16. டாக்டர் அம்பேத்கார் சட்ட பல்கலை கழகம் (சென்னை) – 1996 (இந்தியாவின் முதல் சட்ட பல்கலை கழகம்)
17. பெரியார் பல்கலை கழகம் (சேலம்) – 1997
18. திருவள்ளுவர் பல்கலை கழகம் (வேலூர்) – 2002
19. தமிழ்நாடு திறந்த நிலை பல்கலை கழகம் (சென்னை) – 2003

❖ மக்கள் தொடர்பு சாதனம் என்பது (Mass Media) வானொலி, தொலைக்காட்சி, செய்தித்தாள்கள், வாரஇதழ்கள், திரைப்படங்கள் ஒலி, ஒளி நாடாக்கள் இவை முறையான & முறைசாரா கல்வி வழங்கும் திட்டத்திற்கு இவை மிகவும் உதவுகின்றன.

❖ முறைசாரா ம்மையங்களை தற்காலிகப் பள்ளிமனைகள். (Transit School) என்று அழைக்கப்படுகிறது.

❖ இந்தியாவில் முதன்முதலாக தொலை தூரக்கல்வி (Distance Education) 1962–ம் ஆண்டு UNIVERSITY OF DELHI – யில் தொடங்கப்பட்டது

❖ இந்தியாவின் முதல் திறந்த நிலைப் பல்கலைகழகம் (Open University) 1982–ம் ஆண்டு ஆந்திராவில் டாக்டர் அம்பேத்கார் திறந்த நிலைப் பல்கலை கழகம் ஏற்படுத்தப்பட்டது.

❖ இந்திராகாந்தி தேசிய திறந்த நிலை பல்கலை கழகம் (Indira Gandhi National open University (IGNOU) 1985–ம் ஆண்டு டில்லியில் ஏற்படுத்தப்பட்டது.

❖ விவேகானந்தர் ஆசிரியரை "தியாகி" என்று குறிப்பிடுகிறார்.

விவேகானந்தரின் கல்வியின் நோக்கங்கள்:

1. மனிதனை உருவாக்குதல் (Man-Making)
2. நடத்தைக்கான கல்வி (Education for Character)
3. ஆளுமைக்கான கல்வி (Development of Personality)
4. நம்பிக்கை (Shradha (or) Genuine faith)

❖ வைட்டமின் K குறைபாடால் இரத்தம் உறைதல் (Blood Clot) தாமதப்படுதல்

❖ வைட்டமின் B_{12} குறைபாடால் இரத்தசோகை (Anemia) ஏற்படுதல்

❖ 1950 –ம் ஆண்டு யுனெஸ்கோ நடத்திய கல்வி ஆய்வின் படி ஐப்பானிய மாணாக்கர்கள் கணிதப் பாடத்தில் அதிக மதிப்பெண்களும், சுவிடன், இத்தாலி நாட்டு குழந்தைகள் படித்து புரிந்து கொள்வதிலும் (Reading Comprehension) நீருகிலாந்து, ஜெர்மன் மாணவர்கள் அறிவியலில் முதலி இடம் பெற்றனர்.

❖ மலேரியா நோய் மனிதனில் பிளாஸ்மோடியம் என்ற புரோட்டோசோவா ஒட்டுண்ணியால் ஏற்படுகிறது. இந்நோய் பெண்கொசுவான அனோபீலஸ் மூலம் பரவுகிறது.

❖ <u>பாக்டீரியாவால் பரவக் கூடிய நோய்கள்:</u>

காலரா, பிளேக், சிபிலஸ், கோனோரியா காசநோய் (Tuber Culosis), தொழுநோய் (Leprosy), டைபாய்டு, டிப்தீரியா, நிமோனியா, Whooping Cough.

வைரஸால் பரவக் கூடிய நோய்கள்

ரேபிஸ், சின்னம்மை (Chicken Box), பெரியம்மை (Small Box), இன்புளுயன்சா (Influenza), AIDS, டெங்கு காய்ச்சல், சிக்குன் குனியா.

Unit – IX - புள்ளியியல் (தொடர்ச்சி)

ல்விப் புள்ளியியல் (Educational Statistics)

புள்ளியியல் (Statistics) என்ற ஆங்கில வார்த்தை "நாடு" என்று பொருள் தரும். இந்த வார்த்தை "Status" எனும் இலத்தின் வார்த்தையிலிருந்து பெறப்பட்டதாகும்.

புள்ளியியலின் தந்தை : சர் ரொனால்டு A பிஷ்ஸர்

ள்ளியியல் ஆய்வில் இடம்பெறும் படி நிலைகள்

1. விவரங்களை சேகரித்தல்
2. விவரங்களைச் சீர்படுத்தி அட்டவணைப்படுத்துதல்
3. பகுப்பாய்வு
4. பொருள் உரைத்தல்
5. பிற இடங்களில் இம்முடிவுகளை பயன்படுத்துதல்

விவரங்களைச் சேகரித்தல் : (Collection of Data)

1. முதல் நிலை புள்ளி விவரங்கள் (Primary Data)

மூலங்களிலிருந்து நேரடியாக முதன் முதலாக சேகரிக்கப்பட்டதகவல்கள் ஆகும். இவைகள் சீர்படுத்தப் படாத தனித்த விவரங்கள் (Raw Data)

எ.கா. (1) மக்கள் தொகை கணக்கீடு

2) NSS (National Sample Survey) மூலம் பெறப்படும் விவரங்கள்

2. இரண்டாம் நிலை புள்ளி விவரங்கள் (Secondary Data)

ஏற்கனவே திரட்டப்பட்ட தகவல்களை வேறொருவர் பயன்படுத்துதலாகும். இவை நன்கு வடிவமைக்கப்பட்டு உடனே பயன்படுத்தக் கூடிய நிலையில் இருக்கும்.

எ.கா. U.N.O. போன்ற அமைப்புகளின் வெளியீடு.

2. உலக வங்கி , ILO போன்றவற்றின் வெளியீடு Etc.

விவரங்களை வகைப்படுத்தி அட்டவணையிடுதல் :

Classification and Tabultion of Sata

விவரங்களை வகைப்படுத்துதல் (Classification) என்பது ஒரே மாதிரியான தொகுதிகளையுடைய வகுப்புகளாக பிரித்தலாகும்.

விவரங்கள் பின்வருமாறு வகைப்படுத்தப்படுகிறது.

1. புவியியல் அடிப்படையில் (மாவட்டங்கள் , வட்டங்கள் etc)
2. காலத்தின் அடிப்படையில் (வருடம் , மாதம் etc)
3. பண்புகள் அடிப்படையில் (ஆண் , பெண் etc)
4. அளவுகள் (உயரம் , எடை etc)

விவரங்கள் அட்டவணையிடுதல் (Tabulationof Data)

அட்டவனையில் (Table), வகைப்படுத்துதல் (classification) என்பது முதல் படியாகும். அட்டவனையிடுதல் என்பது நிரை(Row), நிரலில் (column) விவரங்களை வரிசைப்படுத்தும் முறையாகும்.

அட்டவனையின் பகுதிகள் (parts of table)

(1) அட்டவணை எண்

(2) அட்டவணையின் தலைப்பு

(3) நிரல் தலைப்பு(caption)

(4) நிரை தலைப்பு (stub)

(5) அட்டவணை மையப் பகுதி (Body of the table)

(6) அட்டவணை மேல் குறிப்பு (head note)

(7) அட்டவணை கீழ் குறிப்பு (foot note)

விளக்கப்படங்களும் வரைபடங்களும்: (Diagrams and graphs)

விளக்கப்படங்கள்: (Diagrams)

(1) பட்டை விளக்கப்படங்கள் (Bar Diagrams)

(2) வட்ட விளக்கப்படங்கள் (Ple-Diagram)

(3) உருவ விளக்கப்படங்கள் (Pictograms,cartograms)

(4) நேர்கோட்டு விளக்கப்படங்கள்

Graphs (வரைபடங்கள்)

வரைபடங்கள் வரைவதற்கு வரைபடத்தாளை பயன்படுத்த வேண்டும்.


வகைகள்:

(1) கால வரைபடம் (Time series)

(2) நிகழ்வெண் பரவலின் வரைபடங்கள் (Frequency Distribution)

1.கால வரைபடம் (or) நேர்கோட்டு வரைபடம்:

x-அச்சில் நேரத்தையும், y-அச்சில் மாறியின் மதிப்பையும் எடுத்துக்கொண்டு புள்ளிகளை குறித்து அவற்றை நேர்கோட்டு வடிவில் இணைப்பதாகும்.



SRI SAI INSTITUTE
2/25, RAJA MILL ROAD,
MADURAI-1
Cell: 9791352522
9750517739

2.நிகழ்வெண் பரவலின் வரைபடம் :


நிகழ்வெண் பரவல் செவ்வகப் படம்:(Histogram)

நிகழ்வெண் பரவல்களின் வகுப்புப் பிரிவு எல்லைகள் யாவும் வரிசையாக கிடை அச்சு மேல் குறிக்கப்படுகின்றன. பிரிவு இடைவெளிகளின் மேல் அப்பிரிவுகளின் நிகழ்வெண்களுக்கு விகிதசமமான பரப்பளவுகளைக் கொண்ட செவ்வகங்கள் வரையப்படுகின்றன. x-அச்சில் மாறியின் எல்லைகள், y-அச்சில் நிகழ்வெண்ணும்

(2) நிகழ்வெண் பல கோணப்படம் (Frequency polygon)


நிகழ்வெண் பல கோணம் வரைந்து நடுப்புள்ளிகளை குறித்து மைய மதிப்புகளை நேர் கோட்டால் இணைத்து பல கோணப்படம் வரையப்படுகிறது.

நிகழ்வெண் பல கோணப்படம் மூலம் பரவலின் முகட்டு மதிப்பை அறிய முடியும். நிகழ்வெண் செவ்வக வரைபடம் மூலமும் முகட்டைமதிப்பிட முடியும்.



(3) குவிவு (or) கூட்டு நிகழ்வெண் வளைவு கோடு:(Cumulative frequency)

x-அச்சில் மாறியின், மதிப்பையும், y-அச்சில் நிகழ்வெண்களையும் எடுத்துக்கொண்டு வரையப்படுகிறது.



(1) கீழின குவிவு நிகழ்வெண் வளைகோடு (Less than cuif).

(2)மேலின குவிவு நிகழ்வெண் வளைகோடு (Greater than cuif)

இவை ஒகைவ் (ogives) எனவும் அழைக்கப்படுகிறது.

ஒகைவ் மூலம் இடைநிலை,கால்மானங்கள்,பத்துமானங்கள், நூற்றுமானத் தரங்களை காணமுடியும்.

(3) நிகழ்வெண் பரவல் (Frequency Distribution)

வகுப்பு இடைவெளி:	0-10	11-20	21-30	31-40	41-50
நிகழ்வெண்:	2	5	9	8	11

(2) வகுப்புப் பிரிவு எல்லை (Class limits)

41-50 என்றஇடைவெளியில், மேல் எல்லை :50 கீழ் எல்லை:41

(3) வகுப்புப் பிரிவுகளின் இடைவெளி (Class intervals)

41-50 இல், C.I = 10

(1) வகுப்புப் பிரிவுகளின் எண்ணிக்கை (Number of class Internals)

$$\text{எண்ணிக்கை} = \frac{\text{வீச்சு}}{\text{தேவைப்படும் பிரிவுகளின் எண்ணிக்கை}}$$

சராசரிகள்:(or) மையப் போக்கு அளவைகள்:

(1) கூட்டு சராசரி (A.M)

(2) இடைநிலை (Median) (3) முகடு (Mode)

1. கூட்டுச்சராசரி (A.M)

(1) தனிவரிசைக்கு : கூ.ச $(\bar{x}) = \frac{\sum x}{n} = \frac{\text{கூடுதல்}}{\text{எண்ணிக்கை}}$

(2) தொடர்ச்சியற்ற வரிசைக்கு: $(\bar{x}) = \frac{\sum fx}{\sum f} = \frac{\sum fx}{N}$

$N = \sum f$

(3) தொடர்ச்சியான வரிசைக்கு. $(\bar{x}) = \frac{\sum fm}{N}$

f -> நிகழ்வெண் , m-> நடுப்புள்ளி,

எ.கா (1) கூட்டு சராசரி (A.M) காண்க:

83, 74, 74, 81, 48, 53, 56, 72, 65, 66

தீர்வு: A.m $(\bar{x}) = \frac{\sum x}{n} = \frac{83+74+74+81+48+53+56+72+65+66}{10}$

$= \frac{674}{10} = 67.4$

(2) கூட்டு சராசரி காண்க:

மார்பி x: 80 85 90 95 100

நிகழ்வெண் f: 5 6 6 2 1

தீர்வு:

x	f	fx
80	5	400
85	6	510
90	6	540
95	2	190
100	1	100
	$\sum fx=20$	$\sum fx=1740$

கூட்டுசராசரி $\bar{x} = \frac{\sum fx}{\sum f} = \frac{1740}{20} = 87\%$

SRI SAI INSTITUTE
2/25, RAJA MILL ROAD,
MADURAI-1
Cell: 9791352522
9750517739

15 மாணவர்களில், 4 மாணவர்கள் 66 மதிப்பெண்களும், 5 மாணவர்கள் 67மதிப்பெண்களும் பெற்றனர் எனில் சராசரி மதிப்பெண் யாது?

தீர்வு:

மதிப்பெண் (x)	மாணவர்கள் (f)	fx
66	4	264
67	5	335
68	6	408
	$\Sigma fx=15$	$\Sigma fx= 1007$

கூட்டு சராசரி $\bar{x} = \frac{\Sigma fx}{\Sigma f} = \frac{1007}{15} = 67.13$

4. கூட்டுச் சராசரியை கணக்கிடுக

வகுப்பு இடைவெளி : 10 - 20, 20-30, 30 - 40, 40 - 50, 50 - 60

நிகழ்வெண் : 8 14 7 10 11

தீர்வு

வகுப்பு இடைவெளி	மையம் (x)	நிகழ்வெண் (f)	fx
10-20	15	8	120
20-30	25	14	350
30-40	35	7	245
40-50	45	10	450
50 – 60	55	11	605
		$\Sigma f = 50$	$\Sigma fx = 1770$

கூட்டுச் சராசரி : $\bar{x} = \frac{\Sigma fx}{\Sigma f} = \frac{1770}{50} = 35.4$

குறிப்பு

In Short Cut Method :

கூட்டுச் சராசரி $\bar{x} = A + \frac{\Sigma fd}{N}$ $\quad d = x - \bar{x}$

கூட்டுச் சராசரி $\bar{x} = A + \frac{\Sigma fd}{N} \times i$, $\quad d = \frac{x - \bar{x}}{i}$

A – ஊக சராசரி

5. 100 மாணவர்களின் சராசரி மதிப்பெண் (கணிதம்) 50. மதிப்பெண் 48 ஆனது 84 என தவறாக பதிவு செய்யப்பட்டது. சரியான கூட்டுச் சராசரியைக் கணக்கிடுக

தீர்வு : சராசரி $\bar{x} = 50$ $n = 100$

$\bar{x} = \frac{\sum x}{n}$, $\sum x = \bar{x} \times n = 50 \times 100 = 5000$

தவறான $\sum x = 5000$

சரியான $\sum x = 5000 + 48 - 84 = 5048 - 84 = 4964$

சரியான கூட்டு சராசரி $\bar{x} = \frac{\text{சரியான} \sum x}{n} = \frac{4964}{100}$

$= 49.64$

6. முதல் n இயல் எண்களின் கூட்டு சராசரியைக் காண்க.

தீர்வு : n இயல் எண்களின் கூடுதல் $\sum x = \frac{n(n+1)}{2}$

∴ சராசரி $\bar{x} = \frac{\sum x}{n} = \frac{n(n+1)}{2} \times \frac{1}{n} = \frac{n+1}{2}$

குறிப்பு

(2) இணைக்கப்பட்ட கூட்டுச் சராசரி

$\bar{x} = \frac{n_1\bar{x_1} + n_2\bar{x_2}}{n_1+n_2}$ $\frac{n_1\bar{x_1} + n_2\bar{x_2} + n_3\bar{x_3}}{n_1+n_2+n_3}$

(7) ஒரு வகுப்பில் 35 மாணவர்கள் மற்றும் 15 மாணவர்கள் உள்ளனர், அவர்களின் சராசரிகள் முறையே 40 மற்றும் 42 எனில், வகுப்பின் சராசரி மதிப்பெண்ணைக் கணக்கிடுக

தீர்வு

$n_1 = 35, n_2 = 15,$ $\bar{x_1} = 40$ $\bar{x_2} = 42$

கூட்டுசராசரி $= \bar{x} = \frac{n_1\bar{x_1} + n_2\bar{x_2}}{n_1+n_2} = \frac{35x40+15x42}{35+15}$

$= \frac{1400+630}{50} = \frac{2030}{50} = 40.6$

SRI SAI INSTITUTE
2/25, RAJA MILL ROAD,
MADURAI-1
Cell: 9791352522
9750517739

சராசரியின் நிறை, குறைகள் (Merits & Demerits of A.M)

(1) மைய நிலை போக்களவைகளில் சராசரியானது இடைநின்ல, முகட்டை விட மிகச் சிறந்த, துல்லியமான அளவையாகும். (Stable Measure)

(2) இது கணக்கீடு மற்றும் புரிந்து கொள்வதற்கு மிக எளிமையானதாகும்.

(3) வரிசையின் ஒவ்வொரு மதிப்பினாலும் சராசரி பாதிக்கிறது.

(4) இதற்கு தெளிவான கணித வாய்ப்பாடு உண்டு.

(5) இது கணக்கிடப்பட்ட மதிப்பாகும்.

(6) புறக் கோடி உறுப்புகளால் (சிறிய & பெரிய மதிப்பு) சராசரி பாதிக்கப்படக் கூடியதாகும்.

(7) திறந்த முனைப் பரவல்களில், சர்சரியானது நேரடியாக கணக்கீடு செய்யப்பட்டாமல் சில நிபந்தனைகளுடன் கணக்கிடப்படுகிறது.

குறிப்பு

(1) கூட்டுசராசரியிலிருந்து கணக்கிடப்பட்ட விலக்கங்களின் கூடுதல் பூச்சியமாகும்.

$\sum (x-\bar{x}) = 0.$

(2) சராசரியிலிருந்து கணக்கிடப்பட்ட விலக்கங்களின் வர்க்கங்களின் கூடுதல் சிறுமமாகும். (Minimum).

(3) சராசரியானது வரைபடம் (Graph) மூலம் காணமுடியாது.

இடைநிலை (Median)

இடைநிலை என்பது கொடுக்கப்பட்ட பரவலின் மைய மதிப்பாகும் (Middle value) இது ஒரு இடமதிப்பாகும் (Positional value). இடைநிலை மதிப்பிற்கு மேலும், கீழும் 50% உறுப்புகள் அமைகிறது.

(1) இடைநிலை மதிப்பைக் காணும் வழிமுறைகள்

(i) ஏறுவரிசை (or) இறங்கு வரிசையில் அமைக்க.

(ii) உறுப்புகளின் எண்ணிக்கை N என்க.

(iii) N ஒற்றை எண் எனில், இடைநிலை $= (N+1)/2$ வது உறுப்பாகும்.

(iv) N இரட்டை எனில், இடைநிலை என்பது $N/2$, $(N/2)+1$ வது உறுப்புகளின் சராசரியாகும்.

(2) தொடர்ச்சியற்ற வரிசைக்கு இடைநிலை

(i) கூட்டு (or) குவிவு நிகழ் வெண்ணைக் கணக்கிடுக.

(ii) இடைநிலை என்பது $(N+1)/2$ ன் அளவாகும்.

அதாவது $(N+1)/2$ என்ற சூத்திரத்தை பயன்படுத்தி வருகின்ற கூட்டு (or) குவிவு நிகழ்வெண் மதிப்புக்கு எதிரே இருக்கும் மாறியின் மதிப்பாகும்.

எ.கா. (1)

66, 63, 55, 60, 46, 10 என்ற விவரங்களுக்கு இடைநிலை யாது?

தீர்வு

ஏறுவரிசை : 10, 46, 55, 60, 63, 66, N =6, இரட்டை

∴ இடைநிலை = 55, 60 களின் சராசரி மதிப்பாகும்.

$$= \frac{55+60}{2}, = \frac{115}{2} = 57.5.$$

(2) 50, 40, 30, 60, 20 என்ற விவரங்களுக்கு இடைநிலை யாது?

தீர்வு : ஏறுவரிசை 20, 30, 40, 50,60

இடைநிலை =40

(3) 43 தொழிலாளர்களின் கூலிகள் பின்வருமாறு கொடுக்கப்பட்டுள்ளது.

கூலி (ரூபாய்)	=	25	35	45	55	65
தொழிலாளர்கள்	=	3	5	20	10	5

இடைநிலையை கணக்கிடு

தீர்வு

கூலி (x)	தொழிலாளர் (f)	குவிவு நிகழ்வெண் cuf
25	3	3
35	5	8
45	20	28
55	10	38
65	5	43
	N $\sum$f = 43	

N/2 (m) N+1 / 2 = 43÷1 / 2 =44/2 = 22 என்பது குவிவு நிகழ்வெண்கள்

8 மற்றும் 28க்கு இடையில் அமைகிறது. மேல் எல்லை 28க்கு தொடர்பான மாறி x ன் மதிப்பு 45 என்பது இடைநிலையாகும்.

இடைநிலை = 45

குறிப்பு

1. தொடர்ச்சியான வரிசைக்கு

இடைநிலை = L + (N/2 – cuf x i) / f

இடைநிலையின் நிறை குறைகள்

1. இது ஒரு இட மதிப்பாகும்.
2. திறந்த முனைப் பரவல்களின் இடைநிலை கணக்கிட முடியும்.
3. முனை உறுப்புகளால் இடைநிலை கணக்கிட முடியும்.
4. வரைபட முறையில் இதனை கணக்கிட முடியும்.
5. கோட்ட அளவை பரவல்களில் இது சிறந்த சராசரியாக பயன்படுகிறது.
6. தொடரில் அனைத்து உறுப்புகளையும் சார்ந்து அமைவதில்லை
7. இயற்கணித கணக்கீடுகளுக்கு உட்பட்டது.

குறிப்பு :

1. இடைநிலை நிலையிலிருந்து கணக்கிடப்பட்ட விலக்கங்களில் கூடுதல் மிகக் குறைவாகும். (Leost)

SRI SAI INSTITUTE
2/25, RAJA MILL ROAD,
MADURAI-1
Cell: 9791352522
9750517739

முகடு (MODE)

ஒரு புள்ளி விவரத் தொடரிலுள்ள மதிப்புகளில் எந்த மதிப்பு அதிகமான தடவைகள் திரும்பத் திரும்ப வருகின்றனவோ அம்மதிப்புக்கு முகடு என்று பெயர்.

எ.கா.

3, 5, 8, 5, 4, 5, 9, 3 என்ற விவரங்களுக்கு முகடு யாது?

தீர்வு

3 இரண்டு தடவைகள் 5- 3 தடவைகள் மற்றவை ___ 1 தடவை

முகடு - 5

2. தொடர்ச்சியற்ற வரிசைக்கு

மீப்பெரு நிகழ்வெண்ணின் நேர் எதிரே குறிக்கப்பட்டிருக்கும் மாறியின் மதிப்பாகும்

எ.கா. 2 முகட்டைக் காண்க

வயது (வருடங்களில்)	-	25	35	45	55	65	75	85
எண்ணிக்கை	-	18	16	230	350	140	15	3

தீர்வு

எண்ணிக்கை என்பது நிகழ்வெண்ணைக் குறிக்கும்.

மீப்பெரு நிகழ்வெண் - 350

முகடு = 350க்கு தொடர்பாக மாறி 55

முகடு – 55

குறிப்பு

1. தொடர்ச்சியான வரிசைக்கு

முகடு = $L + f1-f0 / 2f1 - f0 - f2 \times i$

முகட்டின் நிறை குறைகள்

1. முனை உறுப்புகளில் பாதிக்கப்படுவதில்லை
2. திறந்த முனைப் பரவல்களில் முகட்டை காண முடியும்.
3. வரைபடம் மூலம் கண்டுக்கிட முடியும்.
4. இயற்கணித கணக்கீடுகளை பயன்படுத்துவதில்லை.
5. வரிசையின் ஒவ்வொரு உறுப்பையும் சார்ந்தது அல்ல.
6. இதற்கு வரையறுக்கப்பட்ட அளவீடு கிடையாது.

கூட்டுச் சராசரி, இடை நிலையளவு மற்றும் முகடு ஆகியவற்றின் தொடர்பு (Empirical Relation)

1. கார்ல் பியர்சனின்படி

முகடு = 3 இடைநிலை - 2 சராசரி

2. சமச்சீர் பரவலில்

சராசரி = இடைநிலை = முகடு

3. சமச்சீரற்ற பரவலில்

சராசரி ≠ இடைநிலை ≠ முகடு

எ.கா. 1 ஒரு பரவலின் இடைநிலை – 37.8

சராசரி 45.2 எனில் முகடு யாது?

தீர்வு

முகடு = 3 இடைநிலை - 2 சராசரி

= 3 x 37.8 – 2 x 45.2

= 113.4 – 90.4

= 23

சிதறல் அளவைகள் (Measures o Dispersion)

1. வீச்சு (Range) 2. கால்மான்விலக்கம் (Q.D)

3. சராசரி விலக்கம் (M.D) 4. திட்டவிலக்கம் (S.D)

1. வீச்சு வீச்சு = மீப்பெரு மதிப்பு – மீச்சிறு மதிப்பு.

வீச்சுக் கெழு = $\frac{L - S}{L + S}$

எ.கா. (1) பின்வரும் விவரங்களுக்கு வீச்சைக் கணக்கிடுக

60, 70, 50. 45, 38, 58, 63

தீர்வு

வீச்சு L-S = 70 – 38 = 32

2. கால்மான விலக்கம்

கா.வி (Q.D) = $\frac{Q_3 - Q_1}{2}$

கால்மான விலக்கக் கெழு = $\frac{Q_3 - Q_1}{Q_3 + Q_1}$

Q_1 = ¼ (N+1), Q_2 = ½ (N+1), Q_3 = ¾ (N+1)வது உறுப்புகள்

எ.கா. (1) பின்வரும் விவரங்களுக்கு கால்மான விலக்கத்தைக் கணக்கிடுக

10,14,16,18,20,22,23,24,26,27,12

ஏறுவரிசை

$Q_1 = \frac{1}{4}(N+1)$, $Q_3 = \frac{3}{4}(N+1)$ N=11

ஏறுவரிசை : 10, 12, 14, 16, 18, 20, 22, 23, 24, 26, 27

$Q_1 = \frac{1}{4}(N+1)$ $\frac{11+1}{4} = \frac{12}{4}$ = 3வது உறுப்பு =14

$Q_3 = \frac{3}{4}(N+1)$ $\frac{3}{4}(11+1) = 3x\frac{12}{4} = 3x3=9$ வது உறுப்பு =24

கா.வி = $\frac{Q_3 - Q_1}{2}$ = $\frac{24-14}{2}$ = $\frac{10}{2}$ = 5

SRI SAI INSTITUTE
2/25, RAJA MILL ROAD,
MADURAI-1
Cell: 9791352522
9750517739

(2) பின்வரும் தொடர்ச்சியற்ற விவரங்களுக்கு கால்மான விலக்கம் மற்றும் கால்மான விலக்கக் கெழுவை கணக்கிடுக

மதிப்பெண் : 20 40 60 80 100

மாணவர்கள் : 6 12 18 14 9

தீர்வு

மதிப்பெண் x	மாணவர்கள் f	குவிவு நிகழ்வெண் Cu.f
20	06	6
40	12	18 Q_1
60	18	36
80	14	50 Q_3
100	09	59
	N=59	

Q_1 = $\frac{1}{4}(N+1)$ $\frac{3}{4}(59+1)$ = 3x15=45 என்பது குவிவு நிகழ்வெண் 50ல் அமைகிறது

கா.வி Q.D = $\frac{Q_3 - Q_1}{2} = \frac{80-40}{2} = \frac{40}{2} = 20$

Q.D $\frac{Q_3 - Q_1}{Q_3+Q_1} = \frac{80-40}{80+40} = \frac{40}{120} = \frac{4}{12} = \frac{1}{3}$

(3) சராசரி விலக்கம்

M.D $= \frac{\sum |D|}{N}$

M.D $= \frac{\sum |D|}{N}$

D = $x-\bar{x}$ or D = x Md

D ⟶ என்பது சராசரி (or) இடைநிலை (or) முகடுகளிலிருந்து பெறப்பட்ட விலக்கமாகும்.

(4) திட்டவிலக்கம் (Or) வர்க்கமூலம் சராசரி வர்க்க மூலம் விலக்கம்

திட்டவிலக்கம S.D (σ) = $\sqrt{\frac{\sum d^2}{N}}$, $d = x-\bar{x}$

$|D|$

$$\text{(or) } \sigma = \sqrt{\frac{\sum fd^2}{N} - \left(\frac{\sum fd}{N}\right)^2}$$

எ.கா.(1)

பின்வரும் விவரங்களுக்கு சராசரியிலிருந்து சராசரி விலக்கத்தை கணக்கிடுக

200, 210, 220,230, 240

Solution

x	D = x-$\bar{x}$ = x-220	101
200	-20	1-201-20
210	-10	1-101=10
220	0	0
230	10	10
240	20	20
$\sum x$=1100		$\sum \lvert D \rvert$ =60

N = 5

$$\text{Mean } \bar{x} = \frac{\sum x}{N} = \frac{1100}{5}$$

$$= 220$$

M D சராசரி

$$= \frac{\sum |D|}{N}$$

$$= \frac{60}{5} = 12$$

(2) திட்ட விலக்கத்தைக் கணக்கிடுக (S.D)

52, 50, 56, 68, 65, 62, 57, 70

தீர்வு

N = 8

$$\text{Mean } \bar{x} = \frac{\sum x}{N} = \frac{480}{8} = 60$$

$\therefore d = x-\bar{x} = x-60$

x	d = x-$\bar{x}$	d^2

SRI SAI INSTITUTE
2/25, RAJA MILL ROAD,
MADURAI-1
Cell: 9791352522
9750517739

	= x-60	
52	-8	64
50	-10	100
56	-4	16
68	8	64
65	5	25
62	2	04
57	-3	09
70	10	100
$\sum x=480$		$\sum d^2=382$

திட்ட விலக்கம்

$$\sigma = \sqrt{\frac{\sum d^2}{n}}$$

$$= \sqrt{\frac{382}{8}} = \sqrt{47.75}$$

$$= 6.91$$

குறிப்பு

(1) ஒவ்வொரு மதிப்புடனும் 'K" என்ற மாறிலியை கூட்டும் போது (or) கழிக்கும் போது, திட்டவிலக்கம் மாறாது.

(2) ஒவ்வொரு மதிப்பையும் K என்ற மாறிலியால் பெருக்கும் போது (or) வகுக்கும் போது திட்டவிலக்கமானது முறையே Kஆல் பெருக்கப்பட வேண்டும் (or) வகுப்பட வேண்டும். எனவே திட்டவிலக்கம் மாறுகிறது.

எ.கா. (1)

10, 4, 6, 12, 8 என்ற விவரங்களின் திட்ட விலக்கம் 2.83 ஆகும். ஒவ்வொரு மதிப்பையும் 2 உடன் கூட்டும் போது புதிய திட்ட விலக்கம் யாது?

தீர்வு

புதிய திட்ட விலக்கம் = பழைய திட்ட விலக்கம்

= 2.83

(கூட்டும் போது Or கழிக்கும் போது புதிய திட்ட விலக்கம் மாறாது)

'2) 10,4,6,12,8 ஆகிய விவரங்களுக்கு திட்டவிலக்கம் 2.83 எனில் ஒவ்வொரு மதிப்பையும் 2 ஆல் பெருக்கும் போது புதிய திட்ட விலக்கம் யாது?'

தீர்வு

புதிய திட்டவிலக்கம் σ = பழைய திட்டவிலக்கம் X2

= 2.83X2 = 5.66

குறிப்பு

(1) சராசரியானது எப்பொழுதும் திட்டவிலக்கத்தை விட அதிகமாக இருக்கும்

(2) சிதறல் அளவைகளில் திட்டவிலக்கம் (S.D) மிகவும் சிறந்ததாகவும் நம் பிக்கையுடையாதவும் இருக்குகிறது (Most Stable and reliable)

(3) பரவற்படி (or) விலக்க வர்க்க சராசரி

(Variance (or) mean square deviation)

$$\sigma^2 = \frac{\Sigma d2}{N}, \quad d = x - \overline{x}$$

$$\text{திட்டவிலக்கம் } \sigma^2 = \frac{\Sigma d2}{N}, = \sqrt{\text{பாவற்படி}}$$

$$\therefore \text{பரவற்படி} = (\text{திட்டவிலக்கம்})^2$$

(4) மாறுபட்டுக் கெழு (Coefficient of variation)

$$C.V \frac{\text{திட்விலக்கம்}}{\text{சராசரி } x} = \frac{\sigma}{x} \times 100$$

ஒட்டுறவுப் பகுத்தாய்பு (or) உடன் தொடர்பு (or) இடைஉற்வு (CORRELATION)

இரண்டு (or) அதற்கு மேற்பட்ட மாறிகளுக்கு இடையே உள்ள தொடர்பை பற்றி கூறுகிறது. அதாவது ஒரு மாறியின் மதிப்பில் ஏற்படும் மாறுதல் காரணமாக அதோடு தொடர்புள்ள மற்றொரு மாறியின் மதிப்பிலும் மாற்றம் ஏற்பட்டால் இத்தகைய மாறுதல் ஒட்டுறவு எனப்படும்.

ஒட்டுறவின் வகைகள்

1. நேரிடை ஒட்டுறவு (POSITIVE CORRELATION)

இரண்டு மாறிகளின் மதிப்புகள் ஒரே திசையை நோக்கி நகரும் பொழுது, அதனை நேரிடை ஒட்டுறவு என்கிறோம்.

(2) எதிரிடை ஒட்டுறவு (Negative Correlation)

இரண்டு மாறிகளின் மதிப்புக்கள் மாறுப்பட் திசையை நோக்கி நகரும் போது. அதனை எதிரிடை ஒட்டுறவு என்கிறோம்.

(3) பூஜ்ய ஒட்டுறவு (Zero Correlation)

இரண்டு மாறிகளுக்கு இடையே தொடர்பு இல்லாமையை குறிக்கிறது.

ஒட்டுறவுக் கெழு (Coefficient of Correlation)

இரு மாறிகளுக்கு இடையேவுள்ள தொடர்பின் அளவை இது குறிக்கிறது (Degree of Relationship)


இதனை 'r' எனக் குறிப்பிடலாம்

எல்லை (Limits)	:	-1 முதல; +1 வரை
முழுமையான நேரிடை ஒட்டுறவு (Positive)	-	+1
முழுமையான எதிரிடை ஒட்டுறவு (Negative)	-	-1
பூஜ்ய ஒட்டுறவு (zero)	-	0

SRI SAI INSTITUTE
2/25, RAJA M'LL ROAD.
MADURAI-1
Cell: 9791352522
9750517739


ஒட்டுறவை அளவிடும் முறைகள்

(1) சிதறல் விளக்கப்படலம் (Scatter Diagram)




(i) நேரிடை ஒட்டுறவு

புள்ளிகள் இடமிருந்து வலமாக மேல்நோக்கிய திசையில் சிதறிக்கிடக்கிறது.



(ii) எதிரிடை ஒட்டுறவு

இடமிருந்து வலமாக கீழ்நோக்கி திசையில் புள்ளிகள் சிதறிக் கிடக்கிறது.



(iii) பூச்சிய ஒட்டுறவு

நேர்கோட்டின் மீது இல்லாமல் விளக்கப்படம் முழுவதும் புள்ளிகள் சிதறிக் கிடக்கிறது.

(2) ஒட்டுறவு வரைபடம்

(3) கார்ல் பியாசனின் ஒட்டுறவுத் கெழு

கார்ல் பியர்சனின் ஒட்டுறவுக் கெழு

$$r = \frac{\sum xy}{\sqrt{\sum x^2 \sqrt{\sum y^2}}} = \frac{\sum xy}{N\sigma_x \sigma_y}, \text{ Here}$$

$$x = x - \bar{x}, \qquad y = y - \bar{y}$$

ஸ்பியர்மேனின் தரவரிசை ஒட்டுறவக் கெழு (Spearman's Rank Correlation)

$$r = 1 - \frac{6 \sum d^2}{N(N^2-1)} \qquad d = R_1 - R_2$$

கால்மானங்கள், பத்துமானங்கள், நூற்றுமானங்கள்

இடைநிலை நிகழ்வெண் பரவலை இரு சமபாகங்களாக பிரிக்கிறது.

கால்மானங்கள் (Quartiles)

ஒரு நிகழ்வெண் பரவலை நான்கு சமபாகங்களாகப் பிரிக்கும் புள்ளிகளாகும். ie, (Q_1, Q_2, Q3.....)

$$Q_1 = L + \left(\frac{N/4 - Cu.f}{f} \right) \times i$$

$$Q_2 = MD = L + \left(\frac{N/2 - Cu.f}{f} \right) \times i$$

$$Q_3 = L + \left(\frac{3N/4 - Cu.f}{f} \right) \times i$$

பத்துமானங்கள் (Deciles)

ஒரு நிகழ்வெண் பரவலை 10 சமபாகங்களாகப் பிரிக்கும் புள்ளிகள் $D_1, D_2, D_4, D_5, D_6, D_7, D_8, D_9$ ஆகும்

$$1^{st} \text{ Decile } D_1 = L + \left(\frac{N/10 - Cu.f}{f} \right) \times i$$

$$D_1 = \frac{1}{10} (N+1) \text{ வது உறுப்பு}$$

$D_5 = Md$ = இடைநிலை

நூற்றுமானங்கள் : (Percentiles)

ஒரு நிகழ்வெண் அலைவு பரவலை 100 சமபாகங்களாக பிரிக்கும் 99 புள்ளிகளாகும். ie, $P_1, P_2, \ldots, P_{99}$

$$P_1 = L + \left(\frac{N/100 - Cu.f}{f} \right) \times i$$

$$P_1 = 1\% (N+1)$$

$$P_1 = \frac{1}{100} (N+1) \text{வது உறுப்பு}$$

$P_{50} = Md$ = இடைநிலை

$P_{25} = Q_1$ $P_{75} = Q_3$.

எ.கா. (1) 22, 65,53, 49, 74, 13, 96 என்ற விவரங்களுக்கு P_{70} ஐ கணக்கிடுக

தீர்வு

ஏறுவரிசை : 13, 22, 49, 53, 65, 74, 96

$$70 \text{ வது நூற்றுமானம் } = P_{70} = \frac{70}{100} (N+1) \text{வது உறுப்பு}$$

$$= \frac{1}{10} 7 (7+1) = \frac{7 \times 8}{10} \qquad N = 7$$

SRI SAI INSTITUTE
2/25, RAJA MILL ROAD,
MADURAI-1
Cell: 9791352522
9750517739

$$= \frac{56}{10} = 5.6$$

= 5 வது உறுப்பு + 0.6 (6 வது உறுப்பு — 5வது உறுப்பு))

= 65+0.6 (74-65)

= 65+0.6x9

= 65+5.4 = 70.4

நூற்றுமானத் தரம் (Percentile Rank)

$$P_R = 100 - \left(\frac{100R-50}{N}\right)$$

R – தரம்

N – எண்ணிக்கை

நூறாக பிரிக்கப்பட்ட அளவுகோலில், அந்த மாணவருக்குரிய மதிப்பெண்ணின் நிலையே ஆகும்.

எ.கா (1)

P_{60} = 40.83 ≈ 41 எனில் 41 என்ற மதிப்பெண்ணின் நூற்றத்தரம் 60 ஆகும்.

(2) நுழைவுத் தேர்வு ஒன்றில் 150 மாணவர்கள் கலந்து கொண்டனர். அவர்களில் ஒருவரின் தரம் 35 எனில் நூற்றுமானத் தரம் யாது?

தீர்வு

$$P_R = 100 - \left(\frac{100R-50}{N}\right) \qquad N = 150, \; R = 35$$

$$= 100 - \left(\frac{100\times35-50}{150}\right) 100 - \left(\frac{3500-50}{150}\right)$$

$$= 100 - \left(\frac{3450}{150}\right) = 100 - \frac{69}{3} = 100-23 = 77$$

(OR) $100 - \frac{35}{150} \times 100 = 100 - \frac{70}{3} = 100 - 23.3$

≈ 100-23=77

SRI SAI INSTITUTE
2/25, RAJA MILL ROAD,
MADURAI-1
Cell: 9791352522
9750517739

EDUCATION – உளவியல் அறிஞர்கள் மற்றும் அவர்களின் கோட்பாடுகள்

- ஹார்மிக் கொள்கை — வில்லியம் மக்டுகல்
- வடிவமைப்புக் கோட்பாடு (Structuralism) — டிட்ச்னர்
- இயல்பூக்கக் கொள்கை (Instinct) — மக்டுகல்
- நடத்தைக் கொள்கை (Behaviour) — J.B. வாட்சன், டோல்மன், ஹப், கத்தரே, ஸ்கின்னர்
- சூழ்நிலை வாதி — பர்னார்ட்
- முழுமைக் காட்சிக் கோட்பாடு (Gestalt) — கோஹ்லர், வெர்த்திமர், கோஃப்கா, ரூபின்
- உளப் பகுப்பாய்வு கோட்பாடு (or) உள இயக்கக் கோட்பாடு — சிக்மண்ட் பிராய்ட்
- ஈத், ஈகோ, சூப்பர் ஈகோ, ஈராஸ், தானடோஸ், லிபிடோ — சிக்மண்ட் பிராய்ட்
- தனிநபர் உளவியல் — ஆட்லர்
- பகுப்பு உளவியல் (Analytical Psychology) — கார்ல் யூங் (Carl Jung)
- மனிதநேய உளவியல் — கார்ல் ரோஜர்ஸ், மாஸ்லோ
- அறிவார்ந்த உளவியல் கோட்பாடு (Cognitive Psychology) — பியாஜே
- உளவியல் பரிசோதனைக்கு வித்திட்டவர் — E.H. வெபர்
- புலன் நுகர்வுகளை அளவிடும் முறை — வெபர் விதி
- புலன் உணர்ச்சி மற்றும் புலன் காட்சிக்கும் உள்ள தொடர்பை வெளியிட்டவர் — G.T. ஃபெக்னர் (G.T. Fechner)
- உள இயற்பியல் என்ற நூல் — G.T. ஃபெக்னர்
- ஜெர்மனியிலுள்ள லீப்சிக் என்ற இடத்தில் முதல் உளவியல் ஆய்வகத்தை அமைத்தவர் — W. வுண்ட் (W. Wundt)
- அக நோக்கு முறை (Method of Introspection) — W. வுண்ட்
- புள்ளியியல் அடிப்படையில் தனிநபர் வேறுபாடுகளை அளவிட்டவர் — ஃபிரான்ஸிஸ் கால்டன்
- தனிநபர் வேறுபாடுகளை உளவியல் சோதனைகள் மூலம் அளவிட்டவர் — கெட்டல் (Catell)
- மருத்துவ உளவியல் முறை — மெஸ்மர்
- நுண்ணறிவுச் சோதனைகளின் தந்தை — ஆல்பிரட் பினே
- வயது வந்தோருக்கான நுண்ணறிவு அளவுகோள் (WAIS) — வெக்ஸ்லர்
- ஆக்க நிலையுறுத்த மறிவினை (Conditioned Reflex) — இவான் பாவ்லோவ்
- உளவியலில் வினா வரிசை முறை (Questionnaire Method in Psychology) — பிரான்ஸிஸ் கால்டன்
- தீவிர சூழ்நிலை வாதி (Ardent Environmentalist) — வாட்சன்
- முதிர்ச்சியின் அவசியம் பற்றிய ஆய்வு (கற்றல் மற்றும் முன்னேற்றத்திற்கு)
  - (i) W.N. கெல்லாக், L.A. கெல்லாக் ஆகியோர் நடத்திய ஆய்வு
  - (ii) கீஸல், தாம்சன். ஆகியோரின் ஒரு கரு இரட்டையர் சோதனை
- வளர்ச்சிசார் செயல்கள் — ஹேவிகர்ஸ்ட்
- கவனித்தலின் உளவியல் அடிப்படை பற்றிய கோட்பாடுகள் — ஹெப், பிராட்பென்ட்
- கவன வீச்சை அறியும் "டாலிட்டாஸ் கோப்" என்ற கருவியை வடிவமைத்தவர் — R.B. கெட்டல்

- பொதுமைக் கருத்து உருவாதலில் மூன்று நிலைகள்
  செயல்படு நிலை, உருவக நிலை, குறியீட்டு நிலை — புரூனர்
- கிளவுஸ் மெயிர் படிநிலைகள் (Concept Learning and Development) (CLD) 4; — கிளவுஸ் மெயிர்
- பொதுமை கருத்துப் படங்கள் (Ausubel's theory of Advanced Organizers) — நோவாஜ், கோவின் மற்றும்
- பார்வைத் திரியுக் காட்சிகள் — முல்லர்—லைர், ஜோல்னர்
- புலன் காட்சிக் கோட்பாடு: புறக்காரணிகள் — ஏமிஸ்
- புலன் காட்சிக் கோட்பாடு : அகக்காரணிகள் — ஹெப், மூர்பி, புரூனர்
- புலன் கர்ட்சிக் கோட்பாடு : இடைவினை — பியாஜே, வெர்னர்
- சிக்கலான பொதுமைக் கருத்துகளை மூவகையாகப் பிரித்தவர்
  (செயல்படுநிலை, உருவக நிலை, குறியீட்டு நிலை) — புரூனர்
- பொதுமைக் கருத்துகளைக் கற்பித்தலுக்கான உத்திகள் — ஜான் P. ம. செக்கோ
- கருத்து உருவாதல் மற்றும் மொழி வளர்ச்சி — வைகாட்ஸ்கி
- பொதுமைக் கருத்துகள் உருவாதல் & பொதுமைக் கருத்துகளின் பொருள் விரிவடைதல் (Concept formation and Assimilation) — ஆசுபெல்
- குழந்தைகளின் அறிதிறன் வளர்ச்சி — ஜீன் பியாஜே
- பிரச்சனையைத் தீர்த்தல் (or) கிளைவழி நிலை (Problem solving – forked road situation) : 5 படிகள்
  — — ஜான்டுயி
- முயன்று தவறிக் கற்றல் (Trial and Error Learning) — தார்ண்டைக்
- ஆக்க நிலையிறுத்தம் மூலம் கற்றல் (Classical conditioning) (or) எதிர்வினை ஆக்க நிலையிறுத்தம்
  — பாவ்லோவ்
- செயல்படு ஆக்கநிலையிறுத்தம் (Operant conditioning) (or) கருவிசார் ஆக்கநிலையிறுத்தம் (Instrumental conditioning) — B.F. ஸ்கின்னர்
- உட்காட்சி வழிக்கற்றல் (Insight Learning) — கோஹ்லர்
- படிநிலைக் கற்றல் கோட்பாடு (Theory of Hierarchial Learning) — இராபர்ட் காக்னேய்

SRI SAI

COACHING CENTRE

2/25, Raja Mill Road, Madurai – 1.

TRB

STUDY MATERIALS

P.G. ASSISTANT

EDUCATION - II

[UNITS - V, VI, VII] - TAMIL

Unit - V கல்வி உளவியல் (Educational Psychology)

Psychology (உளவியல்)

உளவியல் என்பது மனித நடத்தையை முறையாக ஆய்வு செய்யும் அறிவியலாகும்.

(Psychology is the science of behaviour)

Educational Psychology (கல்வி உளவியல்)

கல்வி உளவியல் என்பது மாணாக்கரின் கற்றல் என்னும் நடத்தையை திட்டமிட்டபடி செம்மைபடுத்தி அவர்களின் ஆளுமையை மேன்மையுறச் செய்தலே ஆகும். (Science of modifying the Learner's behaviour)

- கல்வி மனவியலுக்கு (Educational Psychology) வித்திட்டவர் (Laid the root) – ரூசோ (Rousseau)
- "Psyche" என்பது "Soul" (ஆன்மா) ஆகும். "Logos" என்பது 'to study" ஆகும்.
- "Psyche மற்றும் Logos என்பன கிரேக்க (greek) மொழிச் சொற்களாகும்.
- Psychology என்ற வார்த்தையை உருவாக்கியவர் (wined by) – கோக்கல் (Gockel)

Three Focal areas of Educational Psychology (கல்வி உளவியலின் மூன்று முக்கிய பரப்புகள்)

1. Learner (LtTYo)

   தனியார் வேற்றுமை உண்டு (Individual Difference) மீத்திறன் மிக்கவர்கள் (Gifted), சராசரி (Average), மெதுவாகக் கற்போர் (Slow learner) ஆகிய மூப்பிரிவினரும் பயன்பெறும் வகையில் ஆசிரியரின் கற்பித்தல் அமைய வேண்டும்.

2. Learning Process (கற்கும் முறைகள்)

   — ஒவ்வொரு மாணவருக்கும் ஏற்ற வகையில் கற்பிப்பதே சிறப்பானதாகும் (The instruction is indvidualised) மாணவரது புலன் காட்சி (Perception), சிந்தனை (thinking) ஆய்ந்தறிதல் (Reasoning), நுண்ணறிவு (intelligence), நினைவிருத்தல் (remembering) என்பவை இடம் பெறுகிறது.

3. The Learning situation: (கற்றல் சூழ்நிலைகள்) (or) வகுப்பறை சூழல்

   வகுப்பறையில் கொடுக்கப்படும் புறவசதிகள் (Physical factors), சமூகச் சூழல்கள், ஆசிரியது மனப்பான்மை (attitude), நடத்தை (behaviour) வகுப்பறை இடைவினைகள் (tone of the class) ஆகியவை இடம் பெறுகின்றன.

Significance of Educational Psychology to the Teacher (ஆசிரியருக்கு கல்வி உளவியல் அறிவு தேவைப்படுவதற்கான காரணங்கள்)

1. To understand development characteristic of children (இயல்புகளை தெரிந்து கொள்ளுதல்) குழந்தைகள் குழவிப்பருவம், பிள்ளைப்பருவம், குமரப்பருவம், ஆகியவைகளை கடக்கும் போது அந்தந்த பருவத்திற்கான இயல்புகளை அறிந்து கொள்ளுதல்.
2. Nature of classroom learning (வகுப்பறை கற்றல்)
3. individual Difference (தனியார் வேற்றுமை)யை அறிந்து கற்பித்தல்
4. கற்றல் கோட்பாடுகள், கற்றல் வழிமுறைகள் – தெரிந்து கொள்ளுதல் (Learning Principles and Techniques)
5. மாணவர்களின் பிரச்சனைகளை அறிந்து தீர்வுகாண வழிகாட்டல் (problem of children)
6. மனநலத்தை மேம்படுத்தல் (Knowledge of Mental Health)
7. Curriculum Constructioin (பாடப் பொருளை தேர்ந்தெடுத்தல்)

8. Measurement of Learning Outcome (மாணவர்களின் கல்வி அடைவை மதிப்பிடுதல்.
9. குழு நடத்தையியல் (Group dynamics) மூலம் மாணவர்களின் நடத்தையை மேம்படுத்துதல்.
10. Guidance (வழிகாட்டுதல்)
11. Motivation (ஊக்குவித்தல்)

Concept of Growth and Maturity (வளர்ச்சி மற்றும் முதிர்ச்சி)

Growth (வளர்ச்சி)

ஒரு உயிரியின் உருவ அளவும், எடையும் அதிகரிக்கும் போது வளர்ச்சியடைவதாகக் கருதப்படுகிறது.

Maturity (முதிர்ச்சி)

உயிரியல் மரபினால் பெறப்பட்ட பண்புகளும், இயல்புகளும் முதிர்ந்து மலருவதே முதிர்ச்சியாகும். வளர்ச்சியின் பெரும் எல்லைக்கு பெயர் முதிர்ச்சி ஆகும்.

Development (முன்னேற்றம்)

உயிரியின் செயல்பாட்டுத் தரத்தைக் குறிப்பது முன்னேற்றம். ஆகும். வளர்ச்சி, முதிர்ச்சி, கற்றல், இவைகளின் கூட்டு விளைவால் ஏற்படுவது முன்னேற்றம் ஆகும்.

Principles of Growth and Development

(Growth (வளர்ச்சி) & முன்னேற்றத்தின் இயல்புகள்)

வளர்ச்சி (Growth):

1. வளர்ச்சி தொடர்ந்து நிகழ்வது கொண்டிருப்பதில்லை. முதிர்ச்சிக்குப் பின் நின்றுவிடும். (not continous)
2. வளர்ச்சி விகிதம் ஒரே சீராக இருப்பதில்லை (Rate of Groth is not uniform)
3. தனியாள் வேறுபாடு உண்டு (Individual Difference)
4. வளர்ச்சி ஒரு குறிப்பிட்ட திசையை கொண்டதல்ல (not directional)
5. வளர்ச்சி ஒன்றுக்கொன்று தொடர்பு கொண்டது (Inter related and interdependent)
6. வளர்ச்சி என்பது தலை முதல் கால் நோக்கியும், மையப் பகுதியிலிருந்து விளிம்பு பகுதியை நோக்கியும் அமையும். (from head to trunk, centre to extremities)

Development (முன்னேற்றம்)

1. முன்னேற்றம் தொடர்ச்சியானது (Continuous)
2. முன்னேற்ற விகிதம் சீரான இல்லை (not uniform)
3. தனியாள் வேற்றுமை உண்டு (individual difference)
4. தொடராக உள்ளது. (sequential pattern) வரிசைகிரமம் உடையது (directional)
5. முன்னேற்றம் என்பது பொதுமைத் துலங்கலில் ஆரம்பித்து குறிப்பிட்ட சிற்பத் துலங்கலில் முடிவடைகிறது. (general to specific response)
6. முன்னேற்றம் ஒருங்கிணைப்பு கொண்டது (Integration)
7. முன்னேற்றம் தொடர்பு கொண்டது (Inter-relation)
8. முன்னேற்றத்தை ஊகிக்க முடியும் (Predictable)
9. வளர்ச்சியும், முன்னேற்றமும் மரபு, சுழ்நிலை (heredity & environment) இவைகளின் கூட்டுத் தாக்கத்தால் விளைவது ஆகும்.
10. முன்னேற்றமானது நேர்கோடாக அமையாமல் சுருள் வடிவம் கொண்டது. (Spiral but not linear)
11. முன்னேற்றம் பன்முகம் கொண்டது (Many aspect)

வளர்ச்சி, முன்னேற்றம் ஆகியவைகளின் பல்வேறு அம்சங்கள்

1. உடல் வளர்ச்சி (physical Development)
2. மனவளர்ச்சி (or) அறிவு வளர்ச்சி (Mental or intellectual Development)
3. மனவெழுச்சி வளர்ச்சி (Emotional Development)
4. சமூக வளர்ச்சி (Social Development)
5. ஒழுக்க வளர்ச்சி (Moral Development)

வளர்ச்சிசார் செயல்கள்: (Developmental Tasks)

சமூக எதிர்பார்ப்புகளுடன் கூடிய, பல்வேறு வயதுகளுக்கான வளர்ச்சியினைக் குறிக்கும் நடத்தைகளும் செயல்களும் "வளர்ச்சிசார் செயல்கள்" என ஹேவிகஸ்ட் வர்ணிக்கிறார்.

எ.கா. குழந்தைப்பருவம் முடிவதற்குள் குழந்தையானது தாய்மொழியில் படிக்க. பேச. எழுதக் கற்பது எல்லா சமுதாயத்திலும் பெற்றோர்கள் எதிர்பார்க்கின்றனர்.

வளர்ச்சிசார் செயல்களின் தன்மையை நிர்ணயிப்பதில் எழும் அடிப்படைகள்

1. முதிர்ச்சியடைதலின் விளைவாக் (எ.கா. சிறு குழந்தைகள் நடக்கக் கற்றல்)
2. பண்பாட்டுச் செல்வாக்கு (எ.கா.படிக்க. எழுத. கற்றல்)
3. தனிப்பட்டோரின் மதிப்புகள், அவாக்கள் (எ.கா.வாழ்க்கைத் தொழிலைத் தேர்ந்தெடுத்தல்)

முன்னேற்ற ஈவு (Developmental Quotient) D.Q.

$$D.Q = \frac{\text{(முன்னேற்ற வயது) Development Age}}{\text{Chronical Age (கால வயது)}} \times 100$$

மரபும், சூழ்நிலையும் (Heredity and Environment)

மரபு என்பது ஒருவனிடம் இடம் பெற்றுள்ள பிறப்பால் தோன்றிய தனித்த தன்மைகளின் ஒட்டுமொத்த நிலைதனைக் குறிப்பிடுகிறது. பிறப்பின் போது ஒரு குழந்தை தனது பெற்றோர்களிடமிருந்து பெறுகின்ற உடற்கூறு பண்புகள் அனைத்தும் மரபு நிலைக்கு உரிமைப்பட்டதாகும்.

சூழ்நிலை என்பது அவன் பிறந்தது முதல் இறக்கும் வரை அவனைச் சுற்றியிருக்கும் பல்வேறு விதமான தூண்டல்களின் தொகுப்பாகும்.

மீன்கள் (Gene) மரபுக் கூறுகளை கடத்துகின்றன. மீன்கள் குரோமசோம்கள் சுமந்து செல்கின்றன. (Chromosomes carry genes. Genes are carries of heredity)

கருமுட்டையில் (Zygote) 23 ஜோடி (or) 46 குரோமசோம்கள் உள்ளன. இது குரோமசோம்கள் குறைப்பு (meiosis) என்ற முறையில் ஏற்படுகிறது. இந்த 46 குரோமசோம்களில் ஆண் உயிரணு 23ம் பெண் உயிரணு 23ம் அடங்கும்.

23 ஜோடி குரோமசோம்களில், ஆண் & பெண் ஆகிய இருபாலார்களுக்கும் 22 ஜோடி ஒன்றாகவும், 23வது ஜோடி வித்தியசமாக இருக்கும். ஆண் xy பெண் xx

சினை முட்டை (Ovum) விந்தணுவைவ் (sperm) போன்று 8500 மடங்கு பெரியது.

இருகரு இரட்டையர்கள் (Fraternal Twins)

இரு கரு முட்டைகள் தோன்றி இரட்டைக்குழந்தைகள் பிறக்கின்றன. இவைகள் இரண்டும் ஆணாகவோ. இரண்டும் பெண்ணாகவோ (அ) ஒன்று ஆண் மற்றொன்று பெண்ணாகவோ இருக்கும்.

ஒருகரு இரட்டையர்கள் (Identical Twins (or) Cotwins)

ஒரு கருமுட்டை தோன்றி இரட்டைக் குழந்தைகள் பிறக்கின்றன. இவ்வகை இரட்டையர்கள் ஒரே இனத்தை சார்ந்தவர்கள். இவர்களின மரபு முற்றிலுமாக ஒரே மாதிரியாக இருக்கும்.

மனித வளர்ச்சி = மரபுக்காரணிகள் x சூழ்நிலைக்கூறுகள்

(Human Development) = (Heredity) x (Exnvironment)

மக்கிவர் மற்றும் பேஜ் (Maclever & Page)

என்பவர்களின் கூற்றுப்படி, வாழ்க்கையின் ஒவ்வொரு நிலையும், நிகழ்ச்சியும், மரபு, சூழ்நிலை ஆகிய இரண்டின் செயல்பாட்டின் அடிப்படையிலேயே அமைகிறது.

மரபின் முக்கியத்துவத்தை உணர்த்திய ஆய்வுகள் (Experiment performed by hereditarians)

1 F.N.Freeman Reports based on the calculation of coefficient of correlation of intelligence test score

(மதிநுட்ப சோதனைகளின் மதிப்பீடுகளின் பிணை முறைக்குணகம் (அ) ஒட்டுறவுக் கெழு)

Coefficient of correlation of the intelligence test scores of

Identical twins (ஒரே கரு இரட்டையர்)	: 0.90
Fraternal Twins (இரு கரு இரட்டையர்)	: 0.60
Siblings (brothers or sisters) (உடன்பிறந்தவர்கள்)	: 0.50
Cousines (உடன்பிறவா குடும்ப உறுப்பினர்)	: 0.25

Highest value for coefficient of correlation of intelligence test scores (மதிநுட்ப சோதனைகளின் மதிப்பீடுகளின் பிணைமுறை குணகத்தின் மிக உயர்ந்த மதிப்பு பெறப்படுவது) Identical Twins (ஒரு கரு இரட்டையர்)

2) Study of Family Histories (குடும்பங்களை பற்றிய சோதனை)

V) Kallikak Family (காலிக்காக குடும்பம்) H.H.Goddard (கட்டார்டு) என்பவர் Kallikak (காலிக்காக்) குடும்பத்தை ஆராய்ந்தார். காலிக்காக்கிற்கு மன வளர்ச்சி குன்றிய Feeble minded ஒரு மனைவியும், சாதாரணமான பெண் மற்றொரு மனைவியும்மாக ஒரத்தம் இரண்டுபேர் இருந்தனர். இதில் மனவளர்ச்சி குன்றிய மனைவியின் வழித்தோன்றல்களில் 10% பேர் சாதாரணமாகவும் மற்றவர்கள் குற்றவாளிகள் (Criminals) மனவளர்ச்சி குன்றியவர்கள் etc இருந்தனர். ஆனால் சாதாரண மனைவியின் வழித் தோன்றல்களில் 49% பேர் சாதாரண ஆண்களாகவும், பெண்களாகவும் இருந்தனர்.

b) Juke Family Study (ஜீக் குடும்பம்)

Dugdale (டக்டேல்) என்பவர் ஜீக் என்ற மீன்பிடிப்பவர் குடும்பத்தை ஆராய்ந்தார். ஜீக் மற்றும் இவரின் மனைவி இரண்டு பேருமே பெருங்குற்றவாளிகளாக (cenuupt) இருந்தனர். இவர்களின் வழித் தோன்றல்களில் பெரும்பாலோர் குற்றவாளிகளாகவே இருந்தனர்.

3) கால்டன் பிரான்ஸிஸ் (Galton Fmacis) 977 மேதைகளின் உறவினர்களை ஆராய்ந்தார். இதில் 537 பேர் புகழ் மிக்கவர்களாக இருந்தனர். ஆனால் 977 சராசரி நபர்களை தேர்ந்தெடுத்து அவர்களின் உறவினர்களை ஆராய்ந்த போது 4 பேர் மட்டுமே புகழ்மிக்கவர்கள். அதாவது மேதைகள் மேதைகளிடமிருந்து தோன்றுவது போல் தெரிகிறது.

3) ஒப்புடைமை விதி (Law of Similarity)

4) மூட்ட விதி (Law of closure)

5) தொடர்ச்சி விதி (Law of Continuity)

புலன் காட்சியில் ஏற்படும் தவறுகள் (Errors in Perception)

(1) திரிபுக்காட்சி (Illusion)

தூண்டல் தவறாக புரிந்து கொள்ளப்படுமேயானால் அதனை திரிபுக் காட்சி என்கிறோம். எ.கா. இரவு நேரத்தில் கிணற்றடியல் கிடக்கும் கயிற்றை மிதித்து விட்டு, அச்சம் காரணமாக, பாம்பு என்று எண்ணினால் அது திரிபுக் காட்சியாகும்.

வகைகள்

- இயக்கத்திரிபுக் காட்சிகள் (எ.கா: நிலைத்திருக்கும் ஒர் ஒளித்தூண்டல், தானே நகர்வது போன்று தோன்றுவது)
- பாவைக் கோணத் திரிபுக்காட்சிகள் (இரு இணைகோடுகள் தொலைவில் ஒன்று சேர்வது போன்று தோன்றுதல்)
- மாற்றுத் தோற்றங்கள்
- முல்லர் லையர் திரிபுக் காட்சிகள்

2) இல்பொருள் காட்சி (Hallucination)

எந்தவிதமான தூண்டலும் இல்லாமல், தூண்டல் இருப்பது போன்று உணர்வது இல்பொருள் காட்சி எனப்படும். எ.கா.

- பாலைவனத்து கானல் நீர் (Mirage)
- யாரும் அழைக்காதவை தட்டாத போதும் தட்டியது போன்று உணர்தல்
- நடு நிசியில் பேய்களின் சலங்களை ஒசையை கேட்டல்.

நமது உள்ளத்தில் காணப்படும், அச்சங்கள், போராட்டங்கள், ஆர்வங்கள் போன்றவை இல்பொருள் காட்சிக்கு அடிப்படையாக அமைகிறது.

பொதுமைக் கருத்து உருவாதல் (Concept Formation)

கருத்து என்பது பெருங்கள் (அ) நிகழ்ச்சிகள் பற்றிய பொதுவான தன்மைகளைக் காட்டும். குறியீடுகளை உருவாக்குதலைக் குறிக்கும்.

வகைகள்:

(1) எளிமையான பொதுமைக்கருத்து (Simple Concept) எ.கா. நீல நிறம், சதுரம், முக்கோணம். etc

(2) சிக்கலான கருத்துகள் (Complex concept) எ.கா. சிறிய நீல நிற சதுரக்கட்டை, கால்பந்தாட்டக்குழு, குடியரசு, திருமணம், etc.

(3) பொருள்கள் பற்றியவை (Concept of objects) எ.கா. புத்தகம், வீடு, கார், etc.,

(4) பொருள்களின் கூறுகள் பற்றியவை (Concept pf aspects)

- Qualities (பண்புகள்) எ.கா. நேர்மை, எளிமை, சொரசொரப்பு, etc.,
- Relations (தொடர்புகள்) இதைவிடப் பெரிய (bigger than), அதைவிட உயரமான (higher than) etc.,

புரூனரின் பொதுமைக்கருத்து உருவாகும் படிநிலைக் கோட்பாடு

அ) செயல்படு நிலை (Enactive)

ஆ) உருவக நிலை (Iconic)

இ) குறியீட்டு நிலை (Symbolic)

2) விருப்பமற்ற (அ) தன்னச்சையற்ற (அ) முயற்சியற்ற கவனம் (Involuntary or non-volitional attention) விருப்பமில்லாமல் நடைபெறுகிறது (without the play of will) எ.கா. (1) அழுகின்ற குழந்தையின்பால் தாயின் கவனம் செல்லுதல். (2) திடீர் சத்தம் (3) bright colours (நிறம்) 4) Attention towards the members of the opposite sex, etc

a) Enforced non-volitional attention: (கட்டாயப் படுத்தப்பட்ட விருப்பமற்ற கவனம்) இயல்புணர்வுகளால் (Instincts) ஏற்படுகிறது.

b) Spantaneous non-volitional attention: (தன்னிச்சையான விருப்பமற்ற கவனம்) உணர்ச்சிக்கனிவுகளால் (Sentiments) ஏற்படுகிறது.

3) Habitual Attention (பழக்கக் கவனம்)

இது ஓரளவு முயற்சியற்ற கவனத்துடன் இணைந்தது ஆகும்.

Instincts (Basic Drives) — இயல்புணர்வுகள் (அ) இயல்பூக்கங்கள்.

இயல்பூக்கங்கள் என்பவை இயற்கையான ஊக்கிகள் பிறப்பிலேயே குழந்தைகளிடம் இருப்பதாகவும். இவை ஒவ்வொன்றும் குறிப்பிட்ட மனவெழுச்சியுடன் தொடர்புடையதாகவும் இவையே மனித நடத்தைக்கு அடித்தளங்களாகும். இது சிக்கல் மிகுந்த நடைத்தயாகும். இவைகள் கற்றலால் விளைவது அல்ல.

இயல்பூக்கக் கொள்கை (Instinct theory of McDougall) — மக்டுகல்

மடைமாற்றம் (Sublimation)

இயல்பூக்கங்கள் ஆற்றல் மிக்கவை. சிலவேலைகளில் அழிவிற்கும். ஆபத்திற்கும். நஷ்டத்திற்கும் கூட காரணமாக இருப்பவை. இந்த இயல்பூக்கங்களை அடக்கி ஒடுக்காமல் பயனுள்ள வேறொரு இலக்கை அடைய திசை திருப்பி விடுவது மடைமாற்றமாகும்.

Sensation (புலன் உணர்வு)

மனிதனின் புலன் உறுப்புகள் — அறிவின் வாயில்கள் (Gateway of Human Knowledge). புலன் உணர்வானது புலன் உறுப்புகளால் பெறப்படுகிறது. புலன் உறுப்புகள்: கண். காது. மூக்கு. நாக்கு. தோல்.

புலன்காட்சி (Perception)

புலன் உறுப்புகள் வாயிலாகப் பெற்ற புலன் உணர்விற்கு. நாம் ஏற்கனவே பெற்றிருக்கும் அனுபவங்களின் அடிப்படையில் பொருள் ஊட்டி தூண்டல். பொருளின் தன்மையை அறிதலை புலன்காட்சி என்கிறோம். (அதாவது) புலன் காட்சி = புலன் உணர்வு + பொருள் அறிதல்

புலன் காட்சியை பாதிக்கும் காரணிகள் (Factors of Perception)

தூண்டல்தனை தோற்றுவிக்கும் புறப்பொருள் — புறக்காரணி (தூண்டலால் எழுந்த உணர்வுக்கு பொருள் கொள்ளுதல் — அகக்காரணி

அகக்காரணிகள் (Internal Factors)

(1) மனநிலை (Mental Set), (2) கவர்ச்சி (Interest), (3) தேவை (need), (4) மனப்பான்மை (attitude) (5) கருத்தேற்றம் (Suggestion) (6) எதிர்பார்ப்பு (Expectation)

புலன்காட்சியின் 4 கூறுகள் (மர்பி — Garddner Murphy)

(1) புலன் உணர்வு (Pereption) (2) நரம்பு மண்டலம் (Nervous) (3) முந்தைய அனுபவங்கள் (Past Experince) (4) மனநிலை (Mental Set)

புலன் காட்சியை முறைபடுத்தும் நியதிகள் (Laws)

1) முழுமைக்காட்சி நியதி (Law of Pragnancy)

2) அண்மை விதி (Law of Proximity)

காரணிகள் (Factors)

1) அகக்காரணிகள் (Subjective or internal factors) தனி ஒருவனிடம் இருக்கும் காரணிகளாகும். எ.கா. ஆர்வம் (Interest) தேவை (Need). மனநிலை (Mood). உடல்நிலை (Physiological condition).& ஆயத்தநிலை (Mental set)

2) புறக்காரணிகள் (Obective or External Factors) எ.கா. உருவஅளவு (Size), அடர்த்தி (அ) செறிவு (intensity). மாற்றம் (Change), வேறுபாடு (Contrast), புதுமை (Novelty), இயக்கம் (அ) அசைவு (Movement), திரும்பத்திரும்பத் தோன்றல் (Repetition), முழுமைப்பெற்ற உருவம் (Systematic form)

கவனமின்மை (Inattention)

கவனமின்மை எந்தவொரு தூண்டலையும் கவனிக்காத நிலையினைக் குறிப்பிடும்.

எ.கா. ஆர்வமின்மை. மனநிலை சரியின்மை. போன்றவை கவனமின்மைக்கு காரணங்களாக அமைகின்றன.

கவனக்குலைவு (Distraction)

நாம் மேற்கொண்டுள்ள காரியத்தில் இருந்து தூண்டலிருந்து) நழுது கவனம் விலகி வேறொரு தூண்டலின்பால் செல்கின்ற வினையினை கவனக் குலைவு (அ) கவனச் சிதைவு என்கிறோம்.

எ.கா. (1) வகுப்பறைக்கு வெளியே எழும் சத்தம்

(2) வெகு தொலைவிலிருந்து கேட்கும் இசையொலி

கவனமாற்றம் (Shifting of Attention)

நாம் ஒரு குறிப்பிட்ட பொருளின் (அ) நிகழ்ச்சியில் கவனம் செலுத்திக் கொண்டே இருக்கும்போது, நமது கவனம் இடையில் அந்த நிகழ்ச்சியிலிருந்து விலகி மற்றொரு பொருளின் மீது சென்று மீண்டும் பழைய நிலைக்கே திரும்புவதினைக் குறிப்பிடும்.

Note: தொடர்ந்து ஒரு பொருளின் மீது 10 வினாடிகளுக்கு மேல் நாம் கவனம் செலுத்த முடியாது.

கவனப்பிரிவு (Division of Attention)

"ஒரே நேரத்தில் இரண்டு செயல்களில் கவனம் செலுத்துவதினை குறிக்கும்" — உட்வொர்த் (Woodworth)

எ.கா. அடுத்தவரிடம் பேசிக் கொண்டே கம்பளிச் சட்டை பின்னுதல்

கவன வீச்சு (Span of Attention)

ஒரே பார்வையில் மிகக்குறுகிய நேரத்தில் எத்தனை பொருட்களை அல்லது தூண்டல்களை ஒருவன் உணர்ந்து அறிகிறான் என்பதே அவனது கவனவீச்சு ஆகும். இது புலன்காட்சி வீச்சு (Perception span) எனவும் குறிப்பிடலாம்.

கவனவீச்சுக் கருவி

டாக்ஸிஸ்டாஸ்கோப் (Tachistoscope) என்ற கருவி கவன வீச்சை அறிய பயன்படுகிறது. இக்கருவியினை வடிவமைத்தவர் R.B.Cattell (R.B.கெட்டல்) முதிர்ச்சியடைந்த ஒருவனின் கவனவீச்சு 6 (அ) 7

கவன வகைகள்

1) விருப்ப (அ) முயற்சிசார் (அ) தன்னிச்சையான கவனம் (Voluntary or volitional attention) விருப்பத்தின்படி நடைபெறுகிறது. (play of will)

(a) Implicit volitional attention (தெளிவற்ற விருப்பக்கவனம்) விரும்புதலின் ஒரே செயலையால் பெறப்படுகிறது. (Single act of will)

(b) Explicit volitional attention (தெளிவான விருப்பக்கவனம் விரும்புதலின் திரும்பத்திரும்ப செயல்படும் செய்கையால் பெறப்படுகிறது. (Repeated act of will)

4) பர்ட் & ஹோவார்டு (Burt & Howard) என்பவர்களின் நுண்ணறிவு ஆய்வும் இரதத உறவு அளவு (Blood relationship) பற்றி கூறுகிறது. (பிரிமேன் அறிக்கை போன்றது)

Experiments performed by Environmentalists (சூழ்நிலையின் முக்கியத்துவத்தை உணர்த்தும் ஆய்வுகள்)

1) Newman, Freeman and Holzinger ஆகியோர் 19 ஜோடி ஒருகரு இரட்டையர்களை (19 Pairs of identical twins) பற்றி ஆராய்ந்தனர். ஒரே இடத்தில் வளர்க்கப்பட்ட ஜோடிகளில் (reared together), I.Q. வித்தியாசம் 5.9 வெவ்வேறு சூழ்நிலைகளில் வளர்க்கப்பட்டவர்களின் (reard apart) I.Q. வித்தியாசம் 8.2. இதன் மூலம் தனியாள் வேறுபாட்டை (Individual Difference) நிர்ணயிப்பதில் சூழ்நிலை (Environment) பெரும்பங்கு வகிக்கிறது.

2) Skodak's Analysis (ஸ்கோடாக்கின் பகுப்பாய்வு) இவர் Foster children (ஆதரவு காட்டும் குழந்தைகள்) பற்றி ஆராய்ந்தார். இந்த ஆய்வில் இகுழந்தைகளின் நுண்ணறிவு மற்றும் குண நலன்களன வளர்ச்சியில் Environment (சூழ்நிலை) பெரும்பங்கு வகிக்கிறது.

3) ஸிரில்பர்ட் முதலான மேலை நாட்டு அறிஞர்களும் டெல்கியை சார்ந்த உதய சங்கரும் நடத்திய ஆய்வுகள் இளங்குற்றவாளிகளுக்கும் (Juvenile delinquents) அவர்கள் வளர்ந்த சூழ்நிலைகளுக்கும் உள்ள நேரிடைத் தொடர்பை வெளிப்படுத்துகிறது.

4) IOWA பல்கலைக் கழக சோதனை சூழ்நிலையை முக்கியப்படுத்துகிறது.

I. Important Development Stages (மனித வளர்ச்சியின் சில முக்கிய நிலைகள்)

1. பிறப்புக்கு முந்தைய நிலை (Pre-natal stage) – 0 to 2 yrs
2. குழந்தைப்பருவம் (Childhood) – முன் குழந்தைப்பருவம் (Early child hood) – 3 to 6 yrs பின் குழந்தைப் பருவம் (Later childhood) – 7 to 11 yrs
3. குமரப்பருவம் (Adolescence) – முன் குமரப்பருவம் (Pre-adolescese) – (11 yrs to 13 yrs பின் குமரப்பருவம் – 14yrs to 18/20yrs
4. Adulthood (முதிர்பருவம்) – 20 to 40yrs
5. Middle Age (தளர்வு பருவம்) – 40 to 60 yrs
6. முதுமைப்பருவம் (old age) – 60 வயதிலிருந்து

II. ஃப்ராய்டின் (Freud)ன் 5 நிலைகள்

(Oral (வாய்). Anal (கழிவுறுப்பு). Phallic (பாலுறுப்பு). Latent ஹய்க் Genital stages)

III. எரிக்சன்ன் 8 வளர்ச்சி நிலைகள் (Erikson)

- முதுமைப்பிரச்சனைகளைச் சார்ந்தது.

IV. கோல்பர்க் (Kohlberge) ஒழுக்க வளர்ச்சி நிலைகளை குறிப்பிட்டுள்ளார்.

V. ஹாலாக் 10 வளர்ச்சி நிலைகளை குறிப்பிடுகிறார்.

கவனித்தல் (Attention)

நமது நனவுப் பரப்பில் உள்ள பல்வேறு தூண்டல்களில், ஒரு குறிப்பிட்ட சமயத்தில் நமது தேவையுடன் இணைந்த ஒன்றினைத் தேர்ந்தெடுத்து புலன்காட்சிக்கு ஆட்படுத்துவதையே கவனித்தல் என்கிறோம். கவனம் புலன்காட்சிக்கு அடிப்படையாகும்.

கோட்பாடுகள்:

1. தேர்வு செய்தல் கோட்பாடு (Selection theory of attention)
2. ஹெப்பின் கோட்பாடு
3. பிராட்பென்ட் கோட்பாடு

Note: கண்டறியும் முறையே சிறந்த கற்றல் முறையாகும்.

கிளஸ்டர் மெயிர் படிநிலைகள் 4

1) புலனீடான நிலை (Concrete level)
2) மீண்டும் உணரும் நிலை (identity level)
3) வகைப்படுத்தல் நிலை (Classificatory level)
4) முறையான (அ) கருத்தியல் நிலை (Formal level) Vygotsky கருத்து உருவாதல் பற்றி கூறியுள்ளார்.

பொதுமைக் கருத்துப் படங்கள் (Concept Maps)

தொடர்புள்ள பல கூற்றுக்களை கொண்டு இவற்றில் காணப்படும் பொதுமைக் கருத்துக்களின் இணைப்பினை விளக்க, இப்படங்கள் உதவுகின்றன.

பயன்கள் (1) பாடச்சுருக்கம் தயாரிக்க கருத்துப்படம் உதவுகிறது.

(2) ஆசிரியர் தாம் கற்பிக்கப் போகும் பாடப்பகுதியில் அடங்கியுள்ள முக்கிய பொதுக் கருத்துக்களை தொடர்பு படுத்தி படமான வரைதல் மாணவர்களுக்கு பயனுள்ளதாக அமையும்.

குறிப்பு: 1. கருத்துப்படம் எல்லா ஆசிரியர்களாலும் பயன்படுத்தப்படுகிறது.

2.ஆசிபெல் Ausubels theory of Advanced Irganisers, Novak (நோவாக்) and Godwin (காட்வின்) போன்றோர் கருத்துப்படத்தை உருவாக்கினர்.

பியாஜேயின் அறிதல் வளர்ச்சி படிநிலைக் கோட்பாடு (Jean Piaget's theory of cognitive Development)

- அறிதிறன் வளர்ச்சியானது தொடர்ச்சியானதாக மட்டுமின்றி, வரிசைக்கிரமமாக அமைந்த பல படிநிலைகளில் நிகழ்கிறது. (4 வளர்ச்சி நிலைகள்)
- மனிதனிடம் இயல்பாகவே இரு அடிப்படைப் போக்குகள் இருப்பதாக பியாஜே கூறுகின்றார். இவை ஒருங்கிணைத்தல் & இணங்குதல் ஆகும். (Organisation and adaptation)
- இணங்குதலில், பொருந்துதல் & தன்வயபடுத்தல் (Accomodation & assimilation) ஆகியன காணப்படுகின்றன.
- மாறாச் செயல்கூறுகள் (அ) செயல்படுமாறிகள் (Functional invaiants) பியாஜே என்பவர் ஒருங்கிணைத்தல் மற்றும் இணங்குதல் ஆகிய இரண்டையும் மாறாச் செயல்கூறுகள் எனக்குறிப்பிடுகிறார்.

பியாஜேயின் அறிதிறன் வளர்ச்சியின் 4 படிகள்:

I. புலன் இயக்க நிலை (Sensory- Motor Stage) (0-2 yrs)

- புலன்களை பயன்படுத்தி வெளியுலகை அறிகிறது.
- மொழியை பயன்படுத்தத் தெரியாது (no verbal)
- குறியீடுகளை பயன்படுத்த தெரியாது (no symbols)
- பொருள்களின் நிலைத்த தன்மை பற்றி அறிகிறது. (object performance)

II. முன்னெல்லைபாட்டு நிலை (Pre-operational stage) (2 to 7yrs)

- பிம்பங்கள் (Images) அறிவு வளர்ச்சிக்கு உதவுகிறது.
- மொழி வளர்ச்சி தொடங்குகிறது. (verbal stage)
- Ego-centric (தன்னை மையமாகக் கொண்டே சொற்களுக்கு பொருள் காணுதல்)
- Animism (உயிரற்ற ஜடப் பொருள்களையும் உயிருள்ளவைகளாக பாவித்தல்
- No Coservation (பொருள்களின் அளவு மாறாத் தன்மை உணரப்படாது)
- No Reversebility (முன்பின் மாற்றம் இருக்காது.) இந்த பிரிவின் மற்ற இரு உட்பிரிவுகள்

- முன் கருத்து உருவாதல் நிலை (Preconceptua stage) 2 to 4 yrs. உளக்குறியீடுகளை உணர்கிறது. இதனை பியஜே குறியீடுகள் (Signifiers) எனக் குறிப்பிடுகிறார்.
- உள்ளுணர்வு நிலை (Intuitive stage) 4-7yrs

➢ Centring (ஒரு சமயத்தில் ஒரு பொருளின் ஒரு பண்பினை மட்டும் அறிதல்)

➢ Realism (பொம்மைகளை உண்மையானவை என உணர்தல்)

III. புனைடான செயல்நிலை (Concrete Operational Stage) 7 to 12yrs

➢ Decentring (ஒரே சமயத்தில் பலபண்புகளை பற்றி சிந்திக்க முடிகிறது)

➢ Reversebility (முன்பின் மாற்றம்), Conseration (பொருள்களின் அளவு மாறாத்தன்மை)

➢ வகைப்படுதல், வரிசைப்படுத்தல் (Ordering) இடம் காலம் சார்ந்த தொடர்புகளில் தெளிவு காணப்படுகிறது.

➢ Compensaion (ஈடு செயதல்), Identity (தனித்துவம்)

IV. முறையான செயல்நிலை (பருப்பொருட் நிலை) — Concrete operational stage (12yrs and above)

➢ புனை தொடர்பற்றவை (Abstractness) பற்றி சிந்திக்க முடிகிறது.

➢ ஆய்வுக்கான (Reasoinig) கருது கோள்களை (hypothesis) உருவாக்கும் திறன் எழும்.

சிந்தனையும், மொழியும் (Thinking and Language)

மொழியென்பது தனது எண்ணங்களைப் பிறர்க்குத் தெரியப்படுத்த மனிதனால் வகுக்கப்பட்ட குறிகள் (அ) அடையாளங்களை (signs or symbols) கொண்ட ஒரு தொகுப்பாகும்.

பின்பற்றல் (Imitation), வலுப்படுத்தல் (Reinforcement) போன்றன குழந்தைகளின் மொழி வளர்ச்சியில் முக்கிய பங்கு பெறுகிறது.

மொழிசார் மனவியல் (Psycho Lingusiticvs)

உள மொழியியல் என்பது மொழி மற்றும் உளவியல் முறைகளையும் பயன்படுத்தி மொழித் திறனைப் பெற்று அதனைப் பயன்படுத்துவதற்குத் தேவையான உள்நிகழ்ச்சி (அ) செயல்களைக் குறிப்பிடுவதாக அமைகிறது.

"Psycho linguistic" என்ற சொல்லை ஆஸ்குட் (Osgood) மற்றும் செபியோக் என்பவர்கள் பிரபலபடுத்தினர்.

➢ சோம்ஸ்கி (Neom Chomsky) உளமொழியியலுடன் தொடர்புடையவர்.

➢ எல்லா மொழிகளும் சில குறிப்பிட்ட வோரிமஸ் (Phoremnas) என்ற அடிப்படை அலகுகளைத் தன்னுள் கொண்டுள்ளது.

➢ மொழியில் உள்ள எளிய பொருள் தரக்கூடிய அமைப்பு மார்பீம்ஸ் (Morphemas) எனப்படும்.
எ.கா. வேர், புதுமை. என்பவை தனித்த மார்பீம்கள்

சிந்தனை (Thinking)

அறிதிறனின் செயல்களில் முக்கியமானதாகும்.

சிந்தனையின் கருவிகள் (Tools or Instruments of Thinking)

1. பிம்பங்கள் (Images)
2. கருத்து (Concepts)
3. குறியீடுகள் (Symbols and signs)
4. மொழி (Language)

வகைகள்:

1. புலன் காட்சி சிந்தனை (Perceptual or concrete thinking)
2. பொதுமை கருத்துச் சிந்தனை (Conceptual or Abstract)

3. தர்க்க சிந்தனை (Reflective or logical thinking)

-இதனை குவிசிந்தனை (convergent Thinking) எனலாம்.

4. உருவாக்கும் சிந்தனை (Creative thinking) இதனை Divergent thinking (விரி சிந்தனை) எனலாம்

E.g. விஞ்ஞானிகள், கண்டுபிடிப்பாளர்கள், கவிஞர்கள் etc.

<u>கற்பனை (Imagination)</u>

பிம்பங்கள் (or) சாயல்களின் துணை கொண்டு நிகழும் சிந்தனை கற்பனை (Imagination) எனப்படும். ஆக்கத்திறனுடன் (Creativity) கற்பனை தொடர்புடையது

<u>வகைகள்:-</u>

1. மீள் ஆக்கக் கற்பனை (Reproductive imagination) நினைவுபடுத்திக்கொள்ளுதல் (எந்தவித மாற்றுதல் ஏதுமின்றி)
2. ஆக்கக் கற்பனை (Productive imagination)
   - அ. பின்பற்றும் ஆக்கக் கற்பனை (Imitative imagination)
   - ஆ. படைப்புக் கற்பனை (Creative imagination).
     1. பயன்வழிக் கற்பனை (Pragmatic imagination)
        இது கட்டுப்பாடு கொண்டது எ.கா. விஞ்ஞானி.
     2. அழகுணர் கற்பனை (Aesthetic) கட்டுப்பாடற்றது. எ.தா: கவிஞன், கலைஞன் (இசை, அழகு, ஓவியம் etc...)

<u>ஆய்வுத்திறன் (Reasoning)</u>

ஆய்வு என்பது புதிர் தீர்த்தல் (or) பிரச்சனைக்கு விடை காணல்(Problem solving)

<u>1. Inductive Reasoning (தொகுத்தறிதல் ஆய்வுத்திறன்)</u>

சிறு சிறு நியதிகளிலிருந்து ஒரு பொது (or) கோட்பாட்டை ஊகித்தலாகும்.

எ.கா. Ram is mortal (நாம் சாகக் கூடியவன்)

Karim is mortal (கரீம் சாகக்கூடியவன்)

இவற்றிலிருந்து "All men are mortal" (மனித இனமே சாகக்கூடியது) என்ற பொது விதியை உருவாக்கலாம்.

<u>2. Deductive Reasoning (பகுத்தறிதல் ஆய்வுத்திறன்)</u>

பொது விதியை ஒரு குறிப்பிட்ட பிரச்சினைக்குப் பயன் படுத்துதல்.

எ.கா. All men are mortal.; I am a man.

∴ I am mortal.

<u>Problem Solving</u> (பிரச்சினைக்குத் தீர்வு காணல்)

வான் டூயி 5 படிகளை குறிப்பிடுகிறார்.

1. Awareness of the problem (பிரச்சினை பற்றிய விழிப்புணர்வு)
2. Collecting and organizing (தகவல்களை சேகரித்தல்)
3. Formulating hypothesis (கருது கோள்களை உருவாக்குதல்)
4. Evaluation & Verification (சரிபார்த்தல்)
5. Formulation of a generalization (பொதுமைப்படுத்தல்)

<u>சிந்தனையை பாதிக்கும்க் காரணிகள்:-</u>

1. நுண்ணறிவின் குறைந்த அளவு (Poor intelligence)

2. போதிய பொதுக் கருத்துக்களை பெற்றிராமை (absence of sufficient concepts)
3. தவறாக சிந்திக்கும் பழக்கம்
4. சொற்களஞ்சிய அளவு குறைந்து காணப்படல்
5. சார்பெண்ணங்கள் (Prejudices) சிந்தனையில் குறுக்கிடல் etc.

Aptitude (SôhPm)

குறிப்பிட்டத் துறையில் ஆர்வமும், திறனும் மிகுந்திருத்தல் நாட்டம் (Aptitude) எனப்படும்.

i.e. நாட்டம் (Aptitude) என்பது திறன் (capacity) + ஆர்வம் (Interest)

மேலும், நாட்டம் + பயிற்சி (Training) = தேர்ச்சி அல்லது அடைவு (Achievement)

முன்னறி சோதனைகள் (Prognostic Test)

ஒருவர் ஒரு துறையில் எந்த அளவு வெற்றி பெறுவார் என்பதை முன்கூட்டியே அறிய உதவும் சோதனையாகும்.

அடைவு சோதனை (Achievement test)

பயிற்சியளிக்கப்பட்டபின் கொடுக்கப்படும். அடைவு சோதனையின் மூலம் ஒருவரது நிகழ்கால திறனளவு அறியப் படுகிறது. i.e. பயிற்சிக்குப்பின் எந்த அளவு வெற்றி பெற்றிருக்கிறார் என்பதைக் காட்டுவது அடைவு சோதனை

நாட்டச் சோதனைகள்

1. ஸீ ஷோரின் இசை நாட்டச் சோதனை
2. பொறியியல் நாட்டச் சோதனைகள் (Mechanical Aptitude test)
3. பல் நாட்டச் சோதனை (Differential Aptitude test) 8 உள் சோதனைகள் உள்ளன i.e.

1).சொல் ஆய்வு 2).எண்ணாற்றல். 3).கருத்தியல் ஆய்வு. 4).இடத்தொடர்புகள்.
5).பொறியியல் ஆராய்ந்தறிதல். 6).எழுத்தர்தொழிலுக்கான வேகமும், துல்லியமும்.
7).மொழியை கையாளுதல் (சரியான எழுத்துக்களைப் பயன்படுத்தல்).
8).மொழியை கையாளுதல் (வாக்கியத்தில் தவறை சுற்றிக்காட்டுதல்)

நாட்டச் சோதனையின் பயன்

குறிப்பிட்ட தொழிற்பயிற்சி அல்லது பாடத்துறைக்கான மாணவர்களையும், ஆசிரியர்களையும் தேர்ந்தெடுக்க.

கவர்ச்சிகள் (Interest)

ஒரு பொருளுடனோ அல்லது ஒரு செயலிலோ முழுமையாக ஒருவன் ஒன்றிப்போதல் அதில் அவனது கவர்ச்சியைக் குறிக்கும்.

முதிர்ச்சி (Maturity)

நிலைக்கு ஏற்ப கவர்ச்சிகள் மாணவர்களிடையே காணப்படுகிறது. இவற்றில் பொருள்தார நிலை, இனம் போன்றவற்றின் அடிப்படையில் வேற்றுமைகள் காணப்படுகின்றன.

சோதனைகள்

1. கூடர் என்பாரது விருப்ப வரிசை (Kuder Preference Record)
   - 9 உட்துறைகள் உள்ளன. (எ.கா. பொறியியல், விஞ்ஞானம்)
   - 9 முதல் 16 வயது வரையிளைஞோர்க்கு இச்சோதனையை அளிக்கலாம்.
   - ஒரு தொகுதிச் சோதனையாகும்.
2. பிரெஸ்ஸி என்பாரது கவர்ச்சி மனப்பான்மை சோதனை (Pressyls Interest Attitude scale)
3. ஸ்டிராங் என்பாரது தொழிற் கவர்ச்சிப் பட்டியல் (Strong's vocational Interest Blank)

பயன்

1. மாணவர்களுக்குப் பணி வழி காட்ட
2. பணிகளுக்குப் பொருத்தமானவர்களை தேர்ந்தெடுக்க

மனப்பான்மை (Attitude)

மனப்பான்மை என்பது ஒருவர் தமது சூழ்நிலைக் கூறுகளான மனிதர்கள், பொருள்கள், கருத்துக்கள் ஆகியவைகளுக்கு கற்றலின் விளைவாக, குறிப்பிட்ட துலங்கலை நிகழ்த்துவதற்கான தயார் நிலையைக் குறிக்கிறது.

மனப்பான்மையை அளவிடுதல் (Measuring Attitude)

1. தர்ஸ்டன் முறை (Thurstone)

ஆய்வுகளின் மனப்பான்மை அளவு கோலை உருவாக்கி, ஒரு கருத்து நிறுவனம், செயல்முறை (அ) பொருள் பற்றிய மனப்பான்மையை அளவிடுகிறார்கள்.

2. லிக்கர்ட் முறை (Likert)

பெரிதும் பயன்படுத்தப்படும் முறையாகும். மனப்பான்மை அளவுகோலில் பிரச்சனை பற்றி கொடுக்கப்பட்டிருக்கும்.

அளவுகோல்

மிகவும் ஏற்கிறேன், ஏற்கிறேன், ஒன்றும் சொல்வதிற்கில்லை, எதிர்க்கிறேன், மிகவும் எதிர்க்கிறேன்.

மதிப்பெண்

நேரிடைக் கருத்துகளுக்கு : 5, 4, 3, 2, 1

எதிரிடைக் கருத்துகளுக்கு : 1, 2, 3, 4, 5

மொத்த மதிப்பெண் மூலம் ஒருவரது மனப்பான்மை அளவிடப்படுகிறது.

Unit – VI

(Educational Psychology – II)

குமரப் பருவத்தினரது சிறப்பியல்புகளும் அவர்களது பிரச்சனைகளும்.

(Special characteristics of adolescents and their problems)

Adolescence (இளையோர் பருவம்)

மாறுகின்ற பருவம் (Transition) : குழந்தை முதல் முதிர்ந்த பருவம் (இளையோர் பருவம்)

- 12 to 18/20 yrs (Teen Age)

- "Adolescence" என்ற சொல் லத்தீன் மொழியில் "Adolescence" இருந்து பெறப்பட்டதாகும். இது வளர்கின்ற (to grow) என்ற பொருளினைக் குறிக்கும்.

- இப்பருவத்தில் ஒருவன் முழு உடல் வளர்ச்சியினைப் பெறுகிறான். மேலும் பால் வளர்ச்சி (Sexual maturity), தான் என்ற உணர்வு (Ego), தனக்கு என்ற சில தனித்தன்மைகள் அவனிடம் ஏற்படுகின்றன.
- இந்தப் பருவத்தில் ஒருவனிடம் மிகுந்த மனக் கொந்தளிப்பு, மன அழுத்தம் (Stress) போன்ற பிரச்சினைகள் நிறைந்த பருவம் ஆகும்.
- "இளையோர் பருவம் என்பது மனக்குமறலும் (Period of storm and stress), கொந்தளிப்பு நிறைந்த பருவம்" என்று "ஸ்டான்லிஹால்" குறிப்பிடுகிறார்.

இளையோர் பருவத்தின் குணாங்கள் (Characteristics of Adolescence)

- Adolescence is a transition period (மாறுகின்ற பருவம்)

- Adolescence is a period of change (மாற்றங்களை ஏற்படுத்தும் பருவம்)
- அஞ்ச வேண்டிய பருவம் (Dreaded Age)
- Peer – group relationship (ஒப்பார் குழு)
- உண்மை நிலைக்கு புறம்பான பருவம் (time of unrealism) அதிக ஆசை உணர்ச்சிகள்
- முதிர்ச்சி பருவத்திற்கு உரிய ஆரம்பப் பருவம் (threhold of Adult hood) (முதிர்ச்சி பெற்ற, வளர்ச்சி பெற்ற வாலிபன் என்று காட்டிக் கொள்ளுதல்)

<u>இளையோரின் பிரச்சனைகள் (Adolescent Problems)</u>

- இப்பருவத்தில் தான் ஒருவனுக்கு அதிக அளவில் படபடப்பு (Tension), மனவெழுச்சி மற்றும் உணர்ச்சிகள் (Emotion) கொண்டவனாக இருத்தல்
- No Adjustment – peer group Dominance generation Gap (இளைய தலைமுறைக்கும் பழைய தலைமுறைக்கும் மிகுந்த மன வேறுபாடு உள்ளது)
- No self evaluation (சுயமதிப்பீடு அற்றவனாக இருத்தல்)
- கட்டுப்பாடுகளை எதிர்த்தல் etc.. (Aspiring for Autonomy)

<u>இளையோரின் ஆர்வங்கள் (Interest)</u>

இளையோரின் ஆர்வம் அவனது நுண்ணறிவு, பால் இனம் மற்றும் சூழ்நிலையைப் பொறுத்ததாக அமையும் (Inteligence, Sex, Environment)

<u>வகைகள்</u>

- பொழுது போக்கு ஆர்வம் (Recreational (or) Entertainment Interest)
- தனிப்பட்ட ஆர்வம் (Personal Interest) – பிறர் மதிப்பைப் பெற கவரும் வகையில் ஆடை அணிதல் etc.
- கல்வியில் ஆர்வம் (Educational interest)
- தொழில் ஆர்வம் (Vocational Interest)
- மதம் மற்றும் கடவுள் மீது ஆர்வம் (Religious interest)
- சமூக ஆர்வம் (Social interest)
- விளையாட்டில் ஆர்வம் (Sports interest)


<u>குமரப் பருவத்தினரது குழு நடத்தை (Group Behavious)</u>

- (Peer, Groups) ஒப்பார் குழுவில் உறுப்பினராகுதல் (ஒத்த வயது, நிறை, அறிவு)etc..
- இக்குழுவால் பற்றுறுதி, தன்னலங்கருதாமை, கூட்டு மனப்பான்மை போன்ற நற்பண்புகள் வளர்ச்சியடைகின்றன.
- குழு நடத்தை. 1). பொழுது போக்கு நடவடிக்கை, (Entertainment)
  2) அழிவு நடவடிக்கை (destructive) இப்பருவத்தினரின் பண்பு நலன்களை அவர்களுடைய ஒப்பார் குழுவின் மூலமே அறிந்திட இயலும்.
- (Peer group) குமரப் பருவத்தில் இளையோர் இச்சியாங்களால் (Goal) உந்தப்படுகின்றன. தலைமை தாங்கும் பண்பு இயல்பாகவே தோன்றுகிறது (Leadership). இது ஒருவனது ஆளுமைத் தன்மையாக (Personality) அமைகிறது.

<u>கற்றல் (Learning)</u>

- (Human Behaviour) மனித நடத்தைக்கு அடிப்படையாக கற்றல் (Learning) அமைகிறது.

- கற்றல் என்பது அளவிடக் கூடிய நடத்தையாகும் (Experience).
- கற்றல் அனுபவங்களாலே (Measurable) நடைபெறுகிறது .
- கற்றல் திறன் ஆளுக்கு ஆள் மாறுபட்டு அமைகிறது (Individual Difference).
- (Simple learning) எளிய கற்றலுக்கு அடிப்படையாக அமைவது தூண்டல் – துலங்கள் (Stimulus – Response) . ஆகும் ஆனால் சிக்கலான கற்றலுக்கு (Complex Learning), அறிவுதிறன் (Cognition), புலன் காட்சி (Perception), புரிந்து கொள்ளும் திறன் (understand) இவைகளே அடிப்படையாக அமைகிறது.
- மேலும் கற்றலானது ஊக்கி ஆர்வம் (Motivation), நுண்ணறிவு (Intelligence) இவற்றின் அடிப்படையில் அமைகிறது.




கற்றல் வளைவு (Learning curve)


- கற்றலில் ஏற்படும் முன்னேற்றித்தின்ன வரைபடத்தில் மூலம் விளக்கும் போது அதனை கற்றல் வளைவு என்கிறோம்.
- கற்றுக்கொள்ள எடுத்துக் கொள்ளும் தடவைகள் X அச்சிலும், ஒவ்வொரு தடவையும் கற்றுக்கொண்ட வரிகளின் எண்ணிக்கையைச் செங்குத்துக் கோட்டிலும் (Y-axis) எடுத்துக்கொள்ளப்படுகிறது.
- பிரையன் மற்றும் ஹர்ட்டர் எனும் உளவியல் அறிஞர்கள் மாணவர்களது கற்றலை இக்கற்றல் பாதை கொண்டு ஒப்பிட்டுப் பார்த்துள்ளனர்.

வகைகள்

1. நேரடி முன்னேற்றத்தினைக் காட்டும் கற்றல் வளைவு Positive Accelerated Learning curve) (குழிகற்றல்)

ஆரம்பத்தில் கற்றல் பலன் குறைவாகவும் (Slow), ஆனால் போகப் போக பயிற்சியின் (Practice) காரணமாகக் கற்றல் பலன அதிகரித்துக்கொண்டு செல்லும் நிலையினைக் குறிக்கும்.






2. எதிர் மாறான முன்னேறறத்தினைக்(குவிக்கற்றல் – Convex) காட்டும் (Negatively Accelerated Learning curve)

ஆரம்ப நிலையில் கற்றல் பலன் (Gain) அதிகமாகவும் போகப் போகப் பலன் குறைந்து கொண்டே போகும்.

3. S அமைப்புக் கொண்ட கற்றல் வளைவு (S-Shape Learning Curve)



A). ஆரம்ப சுனக்கம் (Initial Lag)

ஒருவர் பாடம் கற்கும் போது ஆரம்பத்தில் தன்னை தயார் படுத்தவும் (Preparation) மற்றும் பாடம் புதிதாக (New) இருப்பதாலும் கற்க அதிக நேரம் ஏற்படுவதால் ஆரம்ப சுனக்கம் உண்டு.

B). பலன் அதிகரித்தல் (Increasing Gain) Sprut – (After initial slow rate, there will be spurt in learning) (ஏற்ற இறக்கம் உண்டு)

- பயிற்சி மற்றும் பழக்கம் காரணமாக

C). பலன் குறைதல் (Decreasing Gain)

- அதிக நேரம் கற்கும் போது

D) சமநிலை (Platears)

ஏற்ற இறக்கமின்றி ஒரே நிலையில் கற்றலின் பயன் இருக்கிறது. (no progress in learning inspite of continued practice)

E) முடிவில் அதிகரித்தல் (End sprit)

சமநிலைக்குப் பின்னர் கற்றல் பலன் அதிகரித்தல்

SRI SAI INSTITUTE
2/25, RAJA MILL ROAD,
MADURAI-1
Cell: 9791352522
9750517739

F) கற்றல் விளைவு முற்றுப்பெறுதல் (Rearches peak performance or genith)

நம்மால் அதிகபட்ட அளவுக்கு மேல் கற்றுக் கொள்ள முடியாத நிலையினைக் குறிக்கிறது (Cessation of learning).

கற்றல் கோட்பாடுகள் (Learning Theories)

1. Stimulus – Response – Associationist Type of Theories (தூண்டல் – துலங்கல் தொடர்பு கோட்பாடுகள்) - (Change in behavlour) நடத்தை மாற்றம்

A) ஸ்கின்னரின் செயல்பாடு ஆக்க நிலையுறுத்தம் (Skinner's operant conditioning)

B) பாவ்லோவின் ஆக்க் நிலையுறுத்தம் (Pawlovs classical conditioning (வாட்சன் மற்றும் பாவ்லோங்)

C) தார்ண்டைக்கின இணைப்புக்கோட்பாடு (Thorndike's connectionism)

எ.கா. தூண்டல் – துலங்கள் இணைப்புக் கற்றல் (S-R Learning)

2. Gestalt field (or) field cognition Type of theories (அறிவுப் புலக் கோட்பாடுகள்)

- Insight and understanding in the process of learning. (மனித நடத்தையில் ஏற்படும் மாற்றங்களை உணர்தல்)
  - முழுமைக் காட்சி கோட்பாடு (Gestalt theory)
  - உட்காட்சி கற்றல் (Insight learning) – W.Kohler other chief exponents : Max – werthimer, Kurt and Lewin.

Thorndike, Propounded laws of learning தார்ண்டைக்கின் கற்றல் விதிகள்

1. Law of Readiness (ஆயத்த விதி)

ஓர் உயிரி. தூண்டல் துலங்களுக்கு இடையே இணைப்பை ஏற்படுத்த தயாராக இருக்கும்போது, அது அந்த உயிரிக்கு மகிழ்ச்சி அளிக்கிறது. தயாரில்லாத போது, உயிரிக்கு வருத்தத்தை அளிக்கிறது.

2. The law of exercise (பயிற்சி விதி)

இஃது "Law of frequency" (அலைவெண் விதி) என அழைக்கப்படுகிறது.

இதன் இரண்டு உட்பிரிவுகள் (Subparts)

A). Law of use:

Connections strength is increased (மாற்றியமைக்கக் கூடிய இணைப்பு அதிகரிக்கிறது). Practice is continued (பயிற்சி தொடர்கிறது).

B). Law of disuse :

Connections strength is decreased (மாற்றியமைக்கக் கூடிய இணைப்பு குறைகிறது). Practice is continued (பயிற்சி தொடர்வதில்லை)

3. The law of effect (விளைவு அல்லது பயன் விதி)

Effect means rewards and punishments (விளைவு என்பது வெகுமதி, பரிசு தண்டனைகளை குறிப்பிடுகிறது. கூடியவரை தண்டனையை தவிர்த்தல் நல்லது விரும்பத்தக்க விளைவுகளான "பரிசு, பாராட்டு" ஆகியவற்றால் இணைப்பு வலுப்பெறும்.)

கற்றல் மாற்றம் (Transfer of Learning)

நாம் முன்பு படித்த, ஒன்று எவ்வாறு தற்போது படிக்கும் ஒன்றுக்கு உதவுகிறது என்பது "கற்றல் மாற்றம்" ஆகும்.

வகைகள்:

A) நேரடி மாற்றம் (Positive Transfer)

முன்பு கற்ற பாடம் வேறு ஒரு பாடத்தினைக் கற்க உதவினால் அது, நேரடி மாற்றம்

B) எதிர் மாற்றம் (Negative transfer)

முன்பு கற்ற பாடம் வேறு ஒரு பாடத்தினைக் கற்க தடையாக இருத்தல்

C) பூச்சிய கற்றல் மாற்றம் (Zero transfer)

எந்த வித தாக்கத்தையும் ஏற்படுத்தாது

கற்றல் மாற்றம் பற்றிய கொள்கைகள் (Theory of transfer of learning)

A) முறையான கல்விக் கூற்றுக் கொள்கை (Theory of formal discipline)

- சில அடிப்படை இயல்கள்[(Disipline) பயில்வது மற்றவற்றை படிக்க (எளிதில்) வழிகோலுகிறது. இக்கோட்பாட்டை கிரேக்க அறிஞர் பிளாட்டோ முன்வைத்துள்ளார்.

(அ) மனக்கட்டுப்பாட்டுக் கொள்கை (Theory of formal Discipline (or) Mental Discipline) இக்கொள்கை உண்மையென வாதிட்டவர் வில்லியம் ஜேம்ஸ் ஆவார்.

B) ஒத்தக்கூறுகள் கொள்கை (Theory of identical elements)

இக்கோட்பாட்டை உட்வொர்த் மற்றும் தார்ண்டைக் என்பவர்கள் ஆதரிக்கின்றனர்.

C) பொதுமைப் படுத்தல் கொள்கை (Theory of Generalization)

- சி.எச்.ஜட் என்பவரால் இக்கொள்கை வெளியிடப்பட்டது.

D) தொடர்பு மாற்றக் கோட்பாடு (Gestalt theory)

- கெஸ்டால்ட் (Gestalt) என்பவரால் கொண்டுவரப்பட்டது.

E) . குறிக்கோள் கோட்பாடு (Theory of Ideal) – கருத்தியல் கோட்பாடு.

"பேக்லி" என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது.

கற்றலுக்கு துணை செய்யும் காரணிகள் (Factors in Learning)

1. ஊக்குவித்தல் (Motivation)
2. பகிர்ந்து பயிற்சி எடுத்தல் (Distributed Practice) (இடைவெளிவிட்டு கற்றல்)
3. கற்றல் மாற்றம் (Transfer of learning)
4. Intelligence (நுண்ணறிவு)
5. பரிசு மற்றும் தண்டனை (Reward & Punishment)
6. இயைபு (தொடர்புபடுத்திக் கற்றல்) (பெரிதும் நிர்ணயிக்கும் காரணி)
7. Feed – back (முடிவினை அறிந்து கொள்ளுதல்)

கற்றலின் வகைகள் (Types of Learning) – (அ) எதிர்வினை ஆக்க நிலையுறுத்தம்

– 4 வகைகள் உள்ளன.

1. ஆக்க நிலையுறுத்தல் மூலம் கற்றல் (Classical conditioning) – (S – Type)

- பாவ்லாவ் (Pawlov) என்ற ரஷ்யநாட்டு அறிஞர் கண்டறிந்தார் (1904)
- எதிர்வினை ஆக்க நிலையிறுத்தம் என்றும் குறிப்பிடப்படுகிறது.
- செயற்கைத் தூண்டல் இயற்கைத்தூண்டலுக்கு உரிய வலுவினைப்பெறறு அதே எதிர்வினையைப் பெறும் தன்மையாகும்
- பயன்படுத்திய விலங்கு. "நாய்" (Dog)

[Meat => உமிழ் நீர் சுரத்தல்

மணி ஓசை + Meat => உமிழ் நீர் சுரத்தல்

மணி ஓசை => உமிழ் நீர் சுரத்தல்)

SRI SAI INSTITUTE
2/25, RAJA MILL ROAD,
MADURAI-1
Cell: 9791352522
9750517739

- ஆக்க நிலையுறுத்தம் மூலம் பெறப்படுகின்ற கட்டுப்படுத்தப்பட்ட துலங்கள் (Response) தொடர்பின் அடிப்படையில் பெறப்படுகிறது. இது கற்றலின் அடிப்படையில் அமைகிறது.
- இவ்வகை கற்றல். மொழி கற்பித்தலில் (Linguistics) பயன்படுத்தப்படுகிறது.
- இவற்றில் ஆக்கநிலையுறுத்தம் உருவாதல் (Acquisition) ஆக்கநிலையுறுத்தம் அழிந்துபோதல் (Extinction), மீண்டும் கொணர்தல் (spontaneous recovery), பொதுமைப்படுத்துதல் (Generalization) வேறுபடுத்தி அறிதல் (Discrimination), இரண்டாம் நிலை ஆக்க நிலையுறுத்தம், வலுப்படுத்துதல் (Reinforcement) போன்ற செயல்பாடு ஆக்கநிலையுறுத்த விதிகள் அல்லது (உண்மைகள்) உள்ளன.
- தொடர்ச்சி விதியின் அடிப்படையில் அமைகிறது (Process of continuity).

2. செயல்பாடு ஆக்க நிலையிறுத்தம் (Operant conditioning) R – Type

- பி.எஃப் ஸ்கின்னர் 1930-ல் வெளியிட்டார்
- ஒரு உயிரியானது ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் செயல்படுவதன் மூலம் தான் கற்றுக்கொள்கிறது.
- ஸ்கின்னரின் செயல்பாடு ஆக்கநிலையிறுத்தத்தில் எந்தவிதமான தூண்டலும் இன்றியே ஒரு உயிரியிடம் துலங்கள் ஏற்படுகிறது.
- இது கருவிசார் (Operent Condition) ஆக்க நிலையிறுத்தம் என்றும் அழைக்கப்படுகிறது.
- பயன்படுத்தப்பட்ட விலங்கு : "Pigeon", எலி (Rat), பூனை (Cat)
- விளைவு விதியின் (Law of effect) அடிப்படையில் அமைகிறது.
- அடிப்படை உண்மைகள்- வலுப்படுத்துதல், அழிந்துபோதல், பொதுமைப்படுத்தல், வேறுபடுத்துதல்.
- கணினி கொண்டு கற்பித்தல் (Computer), திட்டமிட்டு கற்பித்தல் (Programmed learning) போன்றவை இவற்றால் தோன்றின.

3). உட்காட்சிக் கற்றல் (Insight – Learning)

- உட்காட்சிக் கற்றல் என்பதினை முத்தமுதலாக வெளியிட்டவர். "கோஹ்லர்" (Kohlar) ஆவார். German (ஜெர்மன்)
- மாணவர்கள் சுயமாக சிந்தித்துஅதின்று தனது பிரச்சினைக்கு தீர்வு காண விளைகின்றனர் என்பதை இக்கற்றல் விளக்குகிறது.
- கோஹ்லர் என்பவர் (Geotalist) "கெஸ்டால்ட்" (முழுமை—Whole) உளவியல் பிரிவைச் சேர்ந்த ஜெர்மன் உளவியல் அறிஞர் ஆவார்.
- பயன்படுத்தியவிலங்கு- "சுல்தான் என்ற சிம்பன்சி குரங்கு" (Champanze)
- உட்காட்சி (Insight) என்பது பொருட்கள், நிகழ்ச்சிகள், பிரச்சனை ஆகியவற்றினை ஆழ்ந்து நோக்கல், புரிந்து கொள்ளுதல், தொடர்பு படுத்துதல் போன்ற ஒருவனுடைய உளநிலைகளைக் குறிப்பிடுவதாக உள்ளது.
- இக்கற்றல் அறிவுதிறன் மூலம் நிகழ்வதாகும் (congnitive).

ஆயத்தம், உள்வளர்ச்சி, உள்ளொளி தோன்றுதல், சரிபார்த்தல்

Steps involved: preparation, Incubation, insight (or) illumination, evaluation

4. முயன்று தவறிக் கற்றல் (Trial and Error Learning) (S-R- Learning)

- E.L. தார்ண்டைக் (USA) என்பவர் தன்னுடைய விளைவு விதியில் விளக்கியுள்ளார்.
- பல தவறுகளைப் புரிந்து பின்னர் முயற்சியின் காரணமாகத் தவறுகளின் எண்ணிக்கை குறைந்து இறுதியில் தவறின்றி கற்றுக்கொள்ளுதல்.

- பயன்படுத்திய விலங்கு- "எலி, பூனை"

தார்ண்டைக்கின் கற்றல் விதிகள் "Nothing Succeeds like success"

1). விளைவு விதி (Law of effect)

கற்றல் என்பது முறை மற்றும் விளைவு என்ற இரு நிலைகளில் அமையும். ஒரு உயிருக்கு இன்பம் அளிக்கத்தக்க எதிர்வினை (Response) கல்ல நிலைநிறுத்திக் கொள்ளப்படுகிறது (Stamped out) வேதனைகள் அளிக்கக்கூடிய தள்ளப்படுகிறது (Stamped out). இதுவே விளைவு விதி எனப்படும்.

- விளைவு என்பது பயன் அல்லது வெகுமதி, பரிசு இவற்றினைக் குறிக்கிறது.

2). பயிற்சி விதி (Law of exercise): நாம் கற்றுக் கொள்ளும் எந்தச் செயலும் பயிற்சியின் அடிப்படையிலேயே அமைகிறது (Repetition) "Practice makes a man perfect".

3) தயார் நிலை விதி (Law of Readiness)

"you can lead a horse to water but you cannot make him drink" கற்றல் சிறப்பாக அமைய வேண்டுமானால் கற்க முனையும் ஒருவர் தன்னை அதற்கு தயார்படுத்திக் கொள்ள வேண்டும். தயார் நிலை என்பது ஆர்வம், ஊக்கம், விருப்பம் etc. போன்ற மனநிலைகளைக் குறிக்கும். இருவரின் உடல் மற்றும் உள்ளம் இவற்றின் தயார் நிலைகளைக் குறிக்கும். :

Operant: organism doing something E.g. raising its head (தலைமை உயர்த்துதல்), pushing a lever (கம்பியை தள்ளுதல்) walking about (நடந்து செல்லுதல்)

Reinforce or Rainforcement வலுவேற்றம்

(வலுவூட்டம்) Reinforces is the stimulus தூண்டுகோல்

Positive Reinforcer (நேர் வலுவூட்டம்)

நடத்தையை அதிகரிக்கும் (Increase the likelihood of a particular behaviour)

E.g. Food, Water, Sexual contact, etc — நேர் வலுவூட்டல்

Negative Reinforcer (எதிர் வலுவூட்டம்)

Electric Shock (மின் அதிர்ச்சி), a loud noise (இரைச்சல்) — எதிர் வலுவூட்டங்கள்

பின்பற்றல் வழிக்கற்றல் (Learning by imitation)

- "பாண்டுரா" என்ற உளவியல் அறிஞர் வெளியிட்டுள்ளார்.
- பின்பற்றல் என்பது பிறருடைய (others behaviour) நடத்தையினைப் பார்த்து அதே போன்று தங்களது நடத்தையினை மேற்கொள்ளுதல்
  (எ.கா). குழந்தைகளின் மொழி வளர்ச்சி, கிளி பேசுதல்.

நினைவும் மறதியும் (Memory and forgetting)

- நினைவுத்திறன் இருந்தால்த்தான் ஒருவனால் நன்கு சிந்திக்க கற்பனை செய்யவோ (or) காரணகாரியங்களை ஆராயவோ முடியும்.
- கற்றல் அல்லது நினைவு ஆகிய இரண்டும் ஒன்றோடு ஒன்று நெருக்கிய தொடர்பு கொண்டுள்ளது.
- உட்ஹொர்த் என்பவர் நினைவு கூறுதலானது (Remember) 4 படி நிலைகளைக் கொண்டதாக குறிப்பிடுகிறார்.
- வகைகள் (4)
  1. பகுதிக் குறியீடுகளை வைத்து நினைவு கூறுதல் (Redintgrative memory)
  2. மீண்டும் கொணர்தல் (Recall)

SRI SAI INSTITUTE
2/25, RAJA MILL ROAD,
MADURAI-1
Cell: 9791352522
9750517739

3. அறிந்து கொள்ளுதல் (Recognition)
4. திரும்பக் கற்றல் (Relearning)

- நினைவு கூறும் முறை (3 நிலைகள்)
  1. குறியீடு அமைத்து நினைவு கூறல் (Encoding)
  2. நினைவில் இருத்தல் (Storage)
  3. நினைவு கூறல் (Retrieved)

மறதி (Forgetting)

- நமக்கு மறதி ஏற்படக் காரணம் நாம் கற்ற ஒன்று நினைவில் தங்காததே ஆகும்.
- கற்றலும் மறதியும் ஒன்றுக்கொண்டு தொடர்புடையவை.

மறதியின் இயல்பும் தன்மையும் (Nature of forgetting)

மறதிக்கான காரணங்கள்

1. பயன்படுத்தப்படாததன் காரணமாக ஏற்படும் அழிவு (Decay through disuse) நாட்கள் ஆக, ஆக, நாம் முன்பு கற்றவை நம் மனதை விட்டு அகல்கின்றன. பயன்படுத்தப்படாத செயல்கள் மறந்து விடுகின்றன.
2. குறுக்கீடு காரணமாக, ஏற்படும் மறதி (Forgetting due to interference effect)

   A) பின்னோக்கு தடை: புதிதாக கற்றுக்கொள்ளும் செயல் ஏற்கனவே கற்றுக்கொண்ட செயலினை நினைவு கூற தடையாக இருக்கும். இதனை பின்னோக்குத் தடை என்பர் (Retroactive inhibition) இதை முதலில் விவரித்தவர்கள். முல்லர் மற்றும் பில்சக்கர் ஆவார்.

   B) முன்னோக்குத் தடை (Proactive inhibition)

   ஏற்கனவே கற்றுக்கொண்ட செயல் தற்போது கற்கும் செயலுக்குத் தடையாக இருந்தால் அது முன்னோக்குத் தடை எனப்படும். முன்னோக்குத் தடை பெரும்பாலான சமயங்களில் மறதிக்கு காரணமாக அமைகிறது.

   ஆசுபல் மற்றும் அண்டர்வுட் என்ற அறிஞர்கள் இத்தகையை முன்னோக்குத் தடை நிகழ்ச்சியை சோதனையின் அடிப்படையில் விளக்கியுள்ளார்.


3. ஊக்கத்தின் அடிப்படையில் அமையும் மறதி (motive forgetting)

இதை விளக்கியவர் பிராய்டு (Freud) எனும் உளவியல் அறிஞர் ஆவார். ஒரு தனியவனிடம் ஏற்படும் ஊக்கி (அ) ஊக்கம் (Motive) காரணமாக அவனுக்கு ஒரு சில குறிப்பிட்ட விஷயங்கள் மறந்து விடும். இத்தகைளை மறதி ஒருவனது விருப்பத்தின அடிப்படையில் அமைகிறது.

குறிப்பு

மறதியை ஏற்படுத்தும் தடைகளை பிகேம் எனும் உளவியல் அறிஞர் 2 வகைகளாக பிரித்துள்ளார். (முன்னோக்குத் தடை மற்றும் பின்னோக்குத் தடை)

நினைவு பற்றிய இரு செயல் நியதி (two process theories of memory) தற்காலிக நினைவு குறுகிய கால நினைவு (Short term memory – STM) it lasts for 15 to 30 seconds & நீண்ட கால நினைவு (Long term memory – LTM)



முறைப்படுத்தலும் நினைவும் (org. & memory)

செய்திகளை முறையாக, சீராக அமைப்பதன் மூலம் அந்தச் செய்திகளை நீண்டகாலம் நினைவில் வைத்திருக்க முடியும். இந்த கருத்தினை வலியுறத்தியவர். மாண்ட்லா என்ற உளவியல் அறிஞர் ஆவார்.

சிறப்பாக கற்றல்:

பொருள் உணர்ந்து கற்றல், இடைவெளிவிட்டுக் கற்றல், பகுதி பகுதியாகப் பிரித்துக் கற்றல்.

நினைவும் & மறதியும் (Memory – Remembering and forgetting)

Types of Memory (நினைவின் வகைகள்)

1. Immediate Memory: It is needed when we want to remember a thing for a short time and the forget it. (குறுகிய காலம)
2. Permanent Memory: Under permanent memory it is possible to remember a thing permanently (நீண்டகாலம்)
3. Rote Memory: The things are dearnt without under standing their meaning (புரிந்து கொள்ளாமல் கற்பது)
4. Logical memory: It is based on Logical Thinking. The learner tries to understand what he learns and why he learns (என்ன படிக்கிறோம். ஏன் படிக்கிறோம் என புரிந்து கொள்ளுதல்)
5. Associated Memory (தொடர்பு படுத்தும் நினைவு) individual having this type of memory.
6. Active Memory: To answering the questions in exam hall (தேர்வு மையத்தில், கேள்விகளுக்கு விடையளித்தல்)
7. Passive Memory: The Past experience are recalled spontaneously with any serious attempt. (e.g.கிராமத்திலிருந்து வரும் தெரிந்த நபரை பார்த்தவுடன் நாம் ஏற்கனவே இருந்த இடம், வயல், வீடு, பக்கத்தில் உள்ளவர்கள் etc. பற்றி நினைவு கூறுதல்)

Memory Drum – நினைவு வீச்சினை அறியும் கருவி.


SRI SAI INSTITUTE
2/25, RAJA MILL ROAD,
MADURAI-1
Cell: 9791352522
9750517739

மறத்தல் பற்றிய எபிங்காஸின் சோதனையும், மறத்தல் வளைகோடும் (Ebbinghaus experiment and curve of forgetting)

Forgetting increases with lapse of time, or in otherwords retention forgetting diminishes with time.

எபிங்காஸ் சோதனைப்படி, மறத்தல் விகிதம் தொடக்கத்தில் மிக அதிகமாகும். (in the beginning the loss of forgetting occurs at rapid rate) காலம் அதிகரிக்க அதிகரிக்க மறத்தல் விகிதம் குறைவாகவும் காணப்படும்.

Time Elapsed (நேரம்)	Amount forgotten (மறத்தல்)
20min	47%
1 day (1 நாள்)	66%
2 நாட்கள்	72%
6 நாட்கள்	75%
31 நாட்கள்	79%



Kinds of Forgetting (மறத்தலின் வகைகள்)

1. Passive (or) Natural Forgetting (செயற்பாட்டு (அ) இயற்கையான மறதி)
2. Active (or) Morbid Forgetting (செயல்படு மறதி)

1) Passive (or) Natural Forgetting (செயற்பாட்டு (அ) இயற்கையான மறதி)

- The kind of forgetting in which there is no intention of forgetting on the part of the individual. In this kind of forgetting one has not to make any deliberate efforts. In a quite normal way, with the lapse of time one gradually forgets (ஒருவர் மற்ப்பதற்கு எந்த ஒரு முயற்சியும் எடுப்பதில்லை. நாட்கள் ஆக ஆக தானாகவே மறத்தலாகும்.)

2) Active (or) Morbid Forgetting (செயல்பாடு மறதி)

It is also known as abnormal forgetting. In this forgetting one deliberately tried to forget something (ஒருவர் ஒன்றை மறக்க முயற்சி செய்தலாகும்) பிராய்டின் கூற்றுப்படி இந்த வகை மறத்தல் (Active forgetting) "Repression" (நசுக்குதல்) மூலம் உருவானதாகும்.

- The painful experience and bitter memories are deliberately pushed into the unconscious layer of the mind and are left there for forgetting. (வேதனையான அனுபவங்கள் நனவில் பகுதிக்கு அனுப்பப்பட்டு பின்பு மறக்கப்படுகிறது)

∴ Repression (நசுக்குதல்) is a Active forgetting (செயல்படு மறதி)

அடக்குதல் (Suppression)

வலியை கொடுக்கக்கூடிய அனுபவங்களும், நினைவுகளும் நளவு மனநிலையில் தோன்றும் போதே அவைகளை வலுக்கட்டாயமாக தடை செய்வதே அடக்குதல் ஆகும்.

ராக்னேயின் படிநிலைக் கற்றல் கோட்பாடுகள் (8 வகை)

Robert Gagne's Theory of Hierarchial Learning)

1. Signal Learning குறியீடுகள் (அ) அடையாளங்களை கற்பது)
2. தூண்டல் – துலங்கள் இணைப்பை கற்றல் (SR Learning)
3. உடலியக்கத் தொடர் இணைப்பை (Motor Chaining)
4. சொற்கள் இணைத்தலைக் கற்றல் (Verbal Chaining)
5. வேற்றுமையறிதல் (Discriminative Learning)
6. பொதுமைக் கருத்துக்களைக் கற்றல் (Concept Learning)
7. விதியைக் கற்றல் (Rule Learning)
8. பிரச்சனையைத் தீர்க்கக் கற்றல் (Problem Solving)

பயிற்சி மாற்றத்தில் 2 வகைகள் (காக்னேயின் படி)

1. பக்கமாற்றம் (Lateral Transfer) — நேரடியாக விடை காண்பது.
2. செங்குத்து மாற்றம் (Vertical transfer) — ஏற்கனவே தெரிந்த ஒன்றின் மூலம் புதியவற்றை எளிதாக கற்பது.

UNIT – VII (EDUCATIONAL PSYCHOLOGY – III)

ஊக்கம் (Motivation) (Motivation comes from the Latin root Moveers which means to move)

➢ ஊக்கம் இல்லாமல் கற்க முடியாது. கற்றலுக்கு ஊக்கம் அடிப்படையாகும்.

ஊக்கிகள் (Motivator's)

நடத்தைகள் இயங்குவதற்கு ஆறறல் அல்லது சக்தியினை அளிப்பவை ஊக்கிகளாகும்.

வகைகள் (2)

1) முதல் நிலை ஊக்கிகள் (Primary Motivator's) or (Biogenic Motives)

இவற்ற அடிப்படைத் தேவைகள் (Fundamental Needs) (or) Physiological Needs for Survival (உயிர்வாழத் தேவையானவை) என அழைக்கலாம். உம். பசி. தாகம். பாலுணர்வு. தூக்கம். உடல் கழிவுப் பொருள்களை நீக்குதல். வலியைத் தவிர்த்தல். etc. இவை விலங்குகளிடத்திலும் காணப்படுகிறது. பிறவியிலேயே தோன்றியவை

2) இடைநிலை ஊக்கிகள் (Sociogenic Motives) இவை உளவியல் (Psychological) (or) சமூகத் தேவைகள் (Social Needs) என அழைக்கப்படுகிறது. உம். பாதுகாப்புத் தேவை. குழுசார்புணர்வு. சமூகத்தில் உயர்நிலை அதிகார மோகம். அடைவு ஊக்கி. etc.

Motivation (ஊக்கம்)

Motivation Cycle (ஊக்க சுழற்சி)

The terms of "need" "drive" "tension",, "goal" "incentive' – all express different aspects of motivational behaviour.

"incentive" – desired motive (விரும்பிய ஊக்கம்)

1. Natural motivation (or) intrinsic motivatin (இயல்பான ஊக்கம்)
2. Artificial motivation (or) Extrinsic motivation (செயற்கையான ஊக்கம்)

1. இயல்பான ஊக்கங்கள் (Natural motivation (or) intrinsic motivation)

   இது இயல்பான இயல்புக்காங்கள். தூண்டுதல்கள் சார்ந்தது. — The source of pleasure lie within the task.

2. செயற்கையான ஊக்கம் (Artificial motivation (or) Extrinsic motivation)

   The source of pleasure does not lie within the task.

